# பொன்விழா


## அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி

★

# 1921 - 1971

★

திருச்செங்கோடு,
நாமக்கல் மாவட்டம்.



## கமிட்டி அங்கத்தினர்கள் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| திரு | பரமசிவம் | குசவம்பாளையம் |
| ,, | கனகசபாபதி | புளியம்பட்டி |
| ,, | சுப்பராயன் | சித்தளந்தூர் |
| ,, | நாகமலைக் கவுண்டர் | நெய்க்காரப்பட்டி |
| ,, | ரத்தினம் | ,, |
| ,, | பொன்காளியப்பன் | கைலாசம்பாளையம் |
| ,, | ராஜன் | காட்டுப்பாளையம் |
| ,, | கணேசமூர்த்தி | சங்ககிரி |
| ,, | அப்பாவு கவுண்டர் | மேட்டுப்பாளையம் |
| ,, | K. P. ராமசாமி | குட்டிக்காபாளையம் |
| ,, | கௌரி சங்கர் | சோமணம்பட்டி |
| ,, | முத்துக் கவுண்டர் | சீதாராம்பாளையம் |
| ,, | ராஜு வேலு | தோக்கவாடி |
| ,, | பங்காரு நாயுடு | சங்ககிரி |
| ,, | பெரியசாமி | கரிச்சிபாளையம் |
| ,, | ரங்கசாமி கவுண்டர் | வட்டூர் |
| ,, | முத்துசாமி | ,, |
| ,, | R. V. கோபால் | சேலம் |
| ,, | T. V. N. விஸ்வநாதன் | ,, |
| ,, | R. K. சித்தையன் | ,, |

# உள்ளுரை.


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | வாழ்த்து திரு. சி. சுப்பிரமணியம் | ... | 1 |
| 2 | ,, திரு. நெ. து. சுந்தரவடிவேலு | ... | 2 |
| 3 | ,, திரு. சை. வே. சிட்டிபாபு | ... | 3 |
| 4 | எங்கள் பள்ளி | ... | 4 |
| 5 | Pupil, Then and Now | ... | 7 |
| 6 | பாவை நோன்பு | ... | 8 |
| 7 | பொருநராற்றுப்படை | ... | 12 |
| 8 | Progress of Secondary Education in Salem District | ... | 18 |
| 9 | தமிழ் | ... | 21 |
| 10 | கொங்கும் தமிழும் | ... | 24 |
| 11 | கொடிமாடச்செங்குன்றூர் | ... | 26 |
| 12 | சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை | ... | 28 |
| 13 | தமிழ் வளர — செய்யுள் | ... | 33 |
| 14 | தாஜ்மகலில் ஓர் நாள் | ... | 35 |
| 15 | தமிழகமும் அதன் மின் வளமும் | ... | 38 |
| 16 | பாரதத்தில் ரசாயன உரங்கள் | ... | 42 |
| 17 | விவசாயமும் நம் நாடும் | ... | 46 |
| 18 | தமிழர் மாண்பு | ... | 51 |
| 19 | கோடி பெறும் ஓர் குறள் (செய்யுள்) | ... | 54 |
| 20 | மகண் மறுத்தல் | ... | 56 |
| 21 | நினைவு அலைகள் | ... | 59 |
| 22 | தொழிற் கல்வி | ... | 61 |
| 23 | கூடும் நேரம் | ... | 63 |
| 24 | நீ ஏன் படிக்க வேண்டும் | ... | 66 |
| 25 | உழவனின் பெருமை — செய்யுள் | ... | 69 |
| 26 | வேண்டும் ,, | ... | ,, |
| 27 | முன்னேற்றப் பாதையில் நமது இந்தியா | ... | 70 |
| 28 | வங்கம் தந்த வானொலி | ... | 72 |
| 29 | காடும் நாடும் | ... | 74 |
| 30 | யார் ஞானி | ... | 79 |
| 31 | கூட்டுறவுத் துறையில் பெருந் தொழில்கள் | ... | 83 |
| 32 | நெசவாளர் மத்தியில் கூட்டுறவு | ... | 85 |
| 33 | காலைப் பொழுது — செய்யுள் | ... | 88 |
| 34 | பள்ளிகளில் இன வேற்றுமை | ... | 89 |

# பதிப்புரை.

இப் பொன்விழா மலர் இத்துணை எழில்பெற அமைவதற்குப் பலர் பல்லாற்றானும் துணை புரிந்துள்ளனர். அவர்களுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடு உடையோம்.

இம்மலருக்கு வாழ்த்துரை வழங்கிய சான்றோர்களுக்கு எங்கள் மனமுவந்த நன்றி. சிறப்புக் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதி அனுப்புமாறு சில அறிஞர் பெருமக்களையும் பல பழைய மாணவர்களையும் வேண்டிக் கொண்டதற்கு இணங்க, அவரவர்கள் தாங்கள் வகிக்கும் பதவிக்கேற்ப, அனுபவ பூர்வமான பொருள்களைப் பற்றி எழுதி அனுப்பியமைக்குப் பெரிதும் மகிழ்ந்து உளமார்ந்த நன்றி செலுத்துகிறோம்.

இம் மலரில் இடம்பெற விளம்பரங்கள் ஈந்துள்ள பெருமக்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்துகிறோம்.

இம்மலரை அணிசெய்யும் வகையில், புகைப்படப் பிரதிகளைத் (Blocks) தயாரித்து, அழகுற அச்சிட்டுக் கொடுத்த திருச்செங்கோடு விவேகானந்தா அச்சகத்துத் திரு T. M. காளியப்பனுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

அச்சுப் பிழைகளைத் திருத்தியும், கட்டுரைகளை ஒப்பு நோக்கியும் அச்சகத்தாருக்கு அவ்வப்போது அரிய யோசனைகள் கூறியுதவிய இப்பள்ளியிலிருந்து ஓய்வு பெற்ற தமிழாசிரியர் திரு. E. A. சிரங்க முதலியார் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

இப் பொன்விழா இனிதே நடைபெறவும் இதன் மூலம் இம்மலர் அணிபெற அமையவும் ஒல்லும் வகையால் உதவிகள் புரிந்த ஒவ்வொருவருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

இங்ஙனம்,

**பொன்விழாக் குழுவினர்.**

# கலைமகள் துதி.

பண்: கரகரப்பிரியா. தாளம்: ஆதி.

(எடுப்பு)

வெள்ளைக் கலையுடுத்தும் வித்தகி யேஉன்னை
வேண்டினேன் அருள்புரி வேதவல்லித் தாயே — வெள்ளைக்

(தொடுப்பு)

கள்ளமில் லாதவுந்தன் கருணைப்பெரு நிதியால்
நல்லவகை இந்த நானிலத் தில்வாழ — வெள்ளைக்

(முடிப்பு)

அறிவின் ஒளிபரப்பும் அருமணியே கடைக்கண்
நறவிலே யோர்துளி நானிலத்தில் தெளித்தே
பெறலரும் திருவான பேரன்பு வெள்ளம்போல்
தெருவெலாம் பெருகிடத் திருவருள் புரிதாயே — வெள்ளைக்

எண்ணற்ற நுண்கலையின் இரகசியப் பெட்டகத்தை
இத்தரை மானிடரின் எதிரில்திறந்து வைத்தாய்
பண்பற்ற மாந்தரதைப் பகைக்கள ஞக்கிமற்றும்
பழிச்செயல் புரியவே பாய்ந்துமுன் செல்வதேனோ? — வெள்ளைக்

அன்பினைக் கொலைசெய்யும் அறியாமை இருள்நீக்கி
பண்பினைப் பயிர்செய்யும் பான்மை வளர்ந்தோங்க
வெண்பனி மேனிகொண்ட வித்தகியே உன்னைக்
கண்பனித் திறைஞ்சுகின்றேன் கருணைசெய் அருள்மணியே — வெள்ளைக்

கொலைவெறி கொண்டவையம் கொடுந்தொழில் இடம்மாறிக்
கலைவெறி கொண்டிங்கே கவின்பெற வாழும்வகை
மலைமதி வேதியன் வாயுறை வாணியே நீ
நிலைபெறச் செய்திடம்மா நித்ய கல்யாணித் தாயே — வெள்ளைக்

போட்டிப் பொறாமையுடன் புரையோடும் பொய்கலந்தும்
புரட்டும் திருட்டும்செய்து பொன்குவித் தெளியோரை
வாட்டி வதைக்கும்மாக்கள் மனிதராய் வாழும்வழி
காட்டி யருள்சுரப்பாய் கலைமகளே தேவி — வெள்ளைக்

தி. வெ. வெங்கடாசலம் B. A.,
இன்ஸ்பெக்டர், சென்ட்ரல் எக்சயிஸ், கூடலூர்-நீலகிரி.

போன் 51.                                                    தொடக்கம் 1933.

திருச்செங்கோட்டில் கியாரண்டியுள்ள

* பவுன் நகைகள்
* வெள்ளிப் பாத்திரங்களுக்கு
* நம்பிக்கையான இடம்

# தங்க மாளிகை,

உரிமையாளர்: டி. ஏ. தங்கவேல்

**திருச்செங்கோடு.**

**கிளை: கந்தம்பாளையம்.**

---

# விஜயலக்ஷ்மி கமர்ஷியல் கார்ப்பரேஷன்

**தவணைகளில் ஏலச்சீட்டு நடத்துபவர்கள்**

**26 A. கிழக்கு ரத வீதி, மேல் மாடி, திருச்செங்கோடு.**

ஏலச் சீட்டின் மூலம் வியாபாரிகள் நிறைந்த மூலதனம் பெறவும், சேமிப்பாளர்கள் இலாபகரத்துடன் சேமிக்கவும் ஒரு நல்ல வாய்ப்பு. சிறு துளி பெரு வெள்ளம். பிரதி மாதம் செலுத்தும் தொகைகளினுல் உங்கள் சேமிப்பு அதிகரிப்பதுடன் தொகையை மூலதனமாக்குவதற்கு நிறைந்த வாய்ப்பளிக்கிறது.

ஏலச் சீட்டில் சேர விரும்புகிறவர்கள் எங்கள் ஆபீஸில் நேரில் சந்தாத் தொகை செலுத்தி அங்கத்தினர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

தங்களன்புள்ள,

**T. N.** அருணாசலம், **T. P.** மணி, **T A.** தங்கவேல்

திருச்செங்கோடு.

தமிழ் நாட்டிலேயே "மிகச் சிறந்த சொசைட்டி" என்று சர்க்காரால் பரிசு பெற்றதும், கைத்தறி ஜவுளி போட்டிகளில் முதற் பரிசு பெற்றதும்

# சேலம் அம்மாப்பேட்டை சொசைட்டி

போன்:

ஆபீஸ்: 2433

காரியதரிசி: 2933

டை ஹவுஸ்: 3204

காலனி: 3437

தந்தி: 'சொசைட்டி'

ஸ்தாபிதம்: 1938.

எங்களிடம் 20 ரூ. முதல் 100 ரூ. வரை உங்களுக்குத் தேவையான சேலை, வேட்டி, துண்டு, கர்ச்சீப் மற்றும் ஜரிகை பேட்டு ரகங்களும் கிடைக்கும்,

எங்கள் ஜவுளிகள் இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

A. மாரியப்பன்,
தலைவர்.

அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிமிடெட், S. 532, அம்மாப்பேட்டை, சேலம்-3. (தமிழ்நாடு.)

# எஸ் ஆர் எஸ்

ஜெனரல் & ஸ்டேஷனரி சாமான்கள்
வாங்குவதற்கு சிறந்த இடம்.

**ஸ்ரீ ராம் ஸ்டோர்ஸ்**
உரிமையாளர் : T.S.R. குழந்தவேல்
ஜெனரல் மர்ச்சென்ட்ஸ், திருச்செங்கோடு.


தயாராகிறது!
மாடர்ன்
தியேட்டர்ஸ்
கவிதா
கதை, வசனம்
முரசொலி மாறன்
இசை
K V. மஹாதேவன்
டைரக்ஷன்
T.R. ரகுநாத்

கல்யாண
காலங்களுக்கு

- பட்டுச் சேலைகள்
- பாவாடைத் துண்டுகள்
- சோளி-பீஸ் ரகங்கள்

மற்றும்
பென்னி & மேட்டூர் மில் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்

**டி. எஸ். ஆர். சன்ஸ்,**

திருச்செங்கோடு.

---

மாணவர்களுக்கான
புக்ஸ், நோட் புக்ஸ் & ஸ்டேஷனரி
ஷாப் சாமான்களுக்கும்

சிறந்த இடம்

**டி. எஸ். ஆர். பிரான்சு:**

# சித்ரா ஸ்டோர்ஸ்

திருச்செங்கோடு.

**T.P. அமிர்தலிங்கம் & கோ.**

மில் & கைத்தறி ஜவுளி வியாபாரம்

**வடக்கு ரதவீதி, திருச்செங்கோடு.**

★

கல்யாண விசேஷங்களுக்கான பட்டு & நூல் ஜவுளிகளுக்கும், பென்னி & மேட்டூர் ஜவுளிகளும் மற்றும் எல்லாவிதமான மில் ஜவுளிகளும் கவர்ச்சி யான ரகங்களில் புதிய டிசைன்களில் நியாயமான விலையில் கிடைக்கும்.

பென்னி & மேட்டூர் மில் ஜவுளிகளுக்கு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்.

★



**T.P. அமிர்தலிங்கம் & கோ.**

மில் & கைத்தறி ஜவுளி வியாபாரம்

**வடக்கு ரதவீதி, திருச்செங்கோடு.**



மேன்மை தங்கிய மகாராட்டிர கவர்னர்
**உயர்திரு. டாக்டர் P. சுப்பராயன் அவர்கள்**
*M. A., D. C. L. Bar-at-law*
"ராமலிங்க ஹால் கட்டிடத் திறப்பாளர்"



தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர்,

உயர்திரு. **S. செல்லபாண்டியன் B. A., B. L.,** அவர்கள்

பொன் விழாத் தலைவர்.

C. SUBRAMANIAM,
Minister for
Steel and Heavy Industries.

31—1—62.



சமுதாய உயர்வுக்குக் கல்வி வளர்ச்சி மிக இன்றியமையாதது. அதனால்தான் நம் முன்னோர் கல்வியைக் கண்ணெனப் போற்றி வாழ்ந்தனர். பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோரிடம் பெருகி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். அதற்கேற்பப் பள்ளிகளின் எண்ணிக்கையும் நாள்தோறும் உயர்ந்து வருகிறது அரசாங்கமும் கல்வி வளர்ச்சியில் பெருங்கவனம் செலுத்தி வருகிறது.

இத்தகைய நல்ல சூழ்நிலையில் திருச்செங்கோடு நாட்டாண்மைக் கழகப் பல்நோக்கு உயர்நிலைப்பள்ளி, பொன் விழாக் கொண்டாடுவதை அறிய மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இப்பள்ளியின் புகழ் மேலும் ஓங்கும் வகையில் தொண்டாற்றும் மனநிலையை அனைவரும் பெறப் பொன் விழா உதவும் என்று நம்புகிறேன்.

விழா சிறப்புற அமையவும், விழாவை ஒட்டி வெளிவரும் மலர் கல்வி மணம் கமழும் வகையில் திகழவும் என் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

**(ஒப்பம்) சி. சுப்பிரமணியம்**

நெ. து. சுந்தரவடிவேலு,
சென்னை மாநிலப் பொதுக் கல்வி இயக்குநர்,
சென்னை.

தங்கல்: புதுடெல்லி
5—2—62.



அன்புடையீர்!

திருச்செங்கோடு நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி பொன்விழா நடப்பதறிய மகிழ்ச்சி.

பொன்விழா மலர், வைர விழா நடப்பதற்கான முறையில், வழியும் வகையும் காட்டி, மேலும் கல்விப் பணி புரிய விழைகிறேன்.

அன்புள்ள,
(ஒப்பம்) நெ. து. சுந்தரவடிவேலு

**S. V. CHITTIBABU** M. A., B. T.
DIVISIONAL INSPECTOR OF SCHOOLS
COIMBATORE

Residence:
4/6, Kamraj Road,
Red Fields, COIMBATORE.

9—2—62.

பேரன்புடையீர்,

ஒரு நாட்டின் நாகரிகம் அதன் கல்வி வளர்ச்சியைப் பொருத்திருக்கிறது. அறிவொளியை பரப்பும் கல்விதான் சமுதாயத்தின் பண்பாட்டையும், நல்லொழுக்கத்தையும், கலை உணர்வையும், நிலைக்கச் செய்ய முடியும். இவ்வகையான கல்வி யாவர்க்கும் கிடைக்கும் வண்ணம் துணைபுரியும் பள்ளிகள் உண்மையான கலைக் கோயில்களாக சிறந்து விளங்க வேண்டும். அம்மாதிரியாக விளங்கி முதற்படியில் நிற்கும் சில பள்ளிகளில் ஒன்றாகத் திகழும் திருச்செங்கோடு நாட்டாண்மைக் கழகப் பல்நோக்கு உயர்நிலைப்பள்ளி தனது பொன்விழாவைக் கொண்டாட இருப்பது பற்றி அறிய மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அவ்விழாவையொட்டி ஒரு சிறப்பு மலரை வெளியிட முயற்சி எடுத்துள்ள விழாக் குழுவினரை நான் பாராட்டுகிறேன். அருமையான கட்டுரைகளையும், பொன்னான வாழ்த்துரைகளையும் தன்னகத்தே கொண்டு படிப்போர் உள்ளத்தையும், சிந்தையையும், ஊக்குவிக்கும் மலராக அமைவதாக தாங்கள் வெளியிட இருக்கும் பொன்விழா மலர்! விழா இணையிலா வெற்றியும் சிறப்பும் அடைய என் உளமார்ந்த வாழ்த்துக்கள். தங்களுடைய பள்ளி மேலும் மேலும் பெருமையுற்று நாட்டிற்குச் சீரிய தொண்டைத் தொடர்ந்து ஆற்றுவதாக.

இப்படிக்கு,
தங்கள் அன்பன்,

**(ஒப்பம்) சை. வே. சிட்டிபாபு**

# எங்கள் பள்ளி

**M. சண்முகம்** B. A., L. T. தலைமை ஆசிரியர்.

உலகம் உய்ய உமையொரு பாகனும் எழுந்தருளியிருப்பதும் வேலவன் கோல மயிலூடனும் ஓலக்கம் கொண்டு அருள் வதுமாகிய திருத்தலமாம் இத்திருக்கொடி மாடச் செங்குன்றூரில் வதியும் மக்களுக்கு, அறியாமையிருளைப் போக்கி அறிவுக் கண்களைத் திறக்கச் செய்த பெருமையோடு விளங்கும் முதற்பள்ளி எங்கள் பள்ளியே யாம். இந்நகரில் பல ஆண்டுகட்கு முன் பல சிறு சிறு திண்ணைப்பள்ளிக் கூடங்களே நிலவியிருந்தன. அவைகளுக்கிடையே அரசாங்கப் பள்ளியாக, நம் பள்ளி முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 1912ம் ஆண்டில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்து 1918ம் ஆண்டில் ஓர் நடுத்தரப் பள்ளியாய் மாறிற்று. அவ்வமயம் திரு. K. V. குப்புசாமி ஐயங்கார் B. A., L. T. அவர்கள் தலைமையாசிரியராகத் தொண்டாற்றினர்கள்.

இப்பொழுது தேரடிக்கருகில் நடைபெற்று வரும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, முன்பு வட்டார அரசியலார் அலுவலமாக (Taluk office) இருந்தது. அவ்வலுவலகம் தற்போது நடைபெற்று வரும் இடத்திற்கு மாற்றப்பட்ட பிறகு அக்கட்டிடத்தில் அந்த நடுத்தரப்பள்ளி நடைபெற்று வந்தது. அதே கட்டிடத்தின் ஒரு பகுதியில் நடுத்தரப் பள்ளியும், மற்றொரு பகுதில் 1 முதல் 3 வகுப்புகளையுடைய ஆரம்பப் பள்ளியும் நடைபெற்று வந்தன. அப்பொழுது வட்டாரக் கழகத் தலைவராயிருந்த (Taluk Board) திருவாளர் S. N. பிரபலம் பிள்ளை அவர்களின் ஒத்துழைப்பாலும், இவ்வூர்ப் பிரபல வணிகராயிருந்த திருவாளர், V. V. C. R. கந்தப்ப முதலியார் அவர்களின் பெரு முயற்சியினாலும், நாள் தோறும் வளர்ந்து வந்த அந்நடுநிலைப்பள்ளி 1921ம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக உயர்நிலையடைந்து, நான்காம் படிவம் துவக்கப்பட்டது. நான்கே மாணவர்கள் அப்பொழுது அந்நான்காம் படிவத்தில் பயின்று வந்தனர். மேன்மைமிகு திரு. B. V. இராமசாமி சாஸ்திரியார் அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப் பட்டார். ஓரிரண்டு ஆண்டுகளே அவ்வுயர் நிலைப் பள்ளியும், துவக்கப்பள்ளியும் அப்பழைய கட்டிடத்திலேயே நடந்து வந்தன. பின்பு ஆரம்பப்பள்ளி வேறு இடத்திற்கு மாற்றப் பட்டது. நம் உயர்நிலைப் பள்ளியும், மாவட்ட நாட்டாண்மைக் கழகத்தின் அதிகாரத்திற்குட்பட்டது.

அப்பொழுது மாவட்டக் கழகத் தலைவராயிருந்த திரு. G. F. Foulkes அவர்களும், மாவட்டக் கல்வியதிகாரியாயிருந்த திரு. S. A. Steele துரையவர்களும், இப்பள்ளியின் முன்னேற்றத்திற்கு ஆவன உதவினர். 1923ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இப் பள்ளியிலிருந்து ஏழு மாணவர்கள் முதல் முறையாகப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கு (S. S. L C. Examination) அனுப்பப் பட்டதில் ஏழு மாணவர்களும் கல்லூரிப் படிப்புக்கு வேண்டிய மதிப்பெண்களுக்கும் அதிகமாகவே பெற்றுத் தேர்வு பெற்றனர்.

ஆண்டு தோறும் பள்ளியின் மாணவர்களது எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வந்தது. ஆதலால் அப்பழைய கட்டிடம் இடம் போத வில்லை, மாணவர்களுக்கு விளையாட்டு இடமும் கிடையாது. எனவே இவ்வூர்ப் பொது மக்களின் பெரு முயற்சியால் ரூ. 5000—0—0. (ஐயாயிரம் ரூபாய்) சேகரித்துச் சேலம் நாட்டாண்மைக் கழகத்



அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்.

**உயர்திரு. V. சுப்ரமணியம் B. A., B. L., அவர்கள்**

*பொன் விழா நினைவுக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுபவர்.*



தமிழ் நாட்டுக் கல்வித்துறை இயக்குநர்,

திரு. பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு M. A., L. T., அவர்கள்

பொன் விழாவைத் துவக்கி வைப்பவர்.

தலைவரிடம் நன்கொடையாக அளிக்கப்படவே, தலைவர் G. F. போக்ஸ் துரை அவர்களின் கருணையால் தற்போது இப்பள்ளியிருக்கும் இடம் வாங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் இரண்டிரண்டு அறைகள் உள்ள ஒன்பது கட்டிடங்கள் எழுந்தன. பெருஞ்செலவில் பள்ளியைச் சுற்றிலுமிருந்த கள்ளிப் புதர்கள் களையப்பட்டும், மேடு பள்ளங்கள் சமன் செய்யப்பட்டும் சுமார் 4½ ஏக்கர் நிலம் விளையாட்டு மைதானமாக்கப்பட்டது. 1930ம் ஆண்டு நாட்டாண்மைக் கழகத் தலைவர் திரு. G. F. போக்ஸ் துரை அவர்கள் இப்பொழுது இருக்கும் இக்கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

வளர்மதி போல்வளர்ச்சியுற்று வந்த இப்பள்ளிக்குத் தலை சிறந்த பணி புரிந்து, பல நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு வாழ வழி காட்டிப் பின்பு 1931ம் ஆண்டில் தலைமையாசிரியர் திரு. இராமசாமி சாஸ்திரியார் அவர்கள் ஓய்வு பெற்றார். பின்னர்த்தொடர்ந்து முறையே திரு. S. V. இராமசாமி ஐயங்கார், திரு. A. சுப்பிரமணிய ஐயர், திரு. M. K. சுவாமிநாத ஐயர், திரு. எட்வின் ராஜரத்தினம், திரு. சேஷகிரி ராவ், திரு. T. S. முத்துசாமி, திரு. நாராயணசாமி ஐயர் முதலியோர் தங்கள் சீரிய தொண்டினைச் சிறப்புற ஆற்றிப் பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றனர்.



1947ம் ஆண்டு ஜூன் மாதம் நான் இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். அப்பொழுது இப்பள்ளியில் சுமார் 400 மாணவர், மாணவிகளேயிருந்தனர். அடுத்த சில ஆண்டுகளில் பள்ளியின் வளர்ச்சி விரைவாக வளர்ந்து வந்தது. ஆண்டு தோறும் 200 அல்லது 300 மாணவர்கள் அதிகரித்து வந்தனர். ஒவ்வொரு ஆண்டிலும் பள்ளி திறக்கும் போது புது மாணவர்களைச் சேர்க்க இடவசதியின்றி நெருக்கடி நேரும்பொழுதெல்லாம் இவ்வூர்ப் பெற்றோர் சங்கத்தார், மனமுவந்து முன் வந்து, போதிய பணம் வசூல் செய்து, தேவையான கட்டிடங்களைக் கட்டியுதவினர். 14 அறைகள் கொண்ட ஐந்து வில்லைக் கட்டிடங்கள் பெற்றோர் சங்கத்தாரால் கட்டிக் கொடுத்தவை. மற்றும் இப்பள்ளியின் வசதிக்கான, மின்சார வசதியும், கிணற்று நீரை இறைக்கும் பொறியும் (Pump set) அமைத்தனர் இவ்வூர்ப் பொதுமக்கள்.

1956 ஆம் ஆண்டில் பள்ளிக்குப் பக்கத்தில் திரு. முத்துசாமி முதலியார் திரு. அண்ணாமலை முதலியார் அவர்களால் இலவசமாக அளிக்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் இருபதினாயிரம் ரூபாய் செலவில் மாணவர்கள் உண்டுறை விடுதியொன்று கட்டப்பட்டது. அப்பொழுது சேலம் மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவராயிருந்த திரு. K. S. சுப்ரமணிய கவுண்டர் அவர்கள் இவ் விடுதி கட்டப் பெரிதும் உதவியாயிருந்தார்கள். அவர்களுடையஆதரவால் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலிருந்து ரூ. 4000—0—0 நான்காயிரம் நன்கொடை கிடைத்தது. இவ் விடுதிக் கட்டிடம் நமது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய சென்னை மாநிலக் கல்வித்துறை இயக்குநர், நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் திறந்து வைத்தனர். கல்வியை ஊட்டிய இப்பள்ளிக்கு உண்டுறை விடுதியும், உறு துணையாக அமைந்ததால், இது மென்மேலும் வளர்ச்சியுற்று மாணவமாணவிகளின் எண்ணிக்கை

சுமார் 1500க்கு அதிகரித்து விட்டது. மீண்டும் போதிய இடம் இல்லாத காரணத்தால் நெருக்கடி ஏற்பட்டது. அவசமயம் மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவராயிருந்த திரு. T M காளியண்ணன் அவர்களுடைய பேராதரவினாலும், பெரு முயற்சியினாலும், பெண்களுக்குத் தனிப் பள்ளி ஒன்று இவ்வூரில் தனியே அமைக்கப்பட்டது. அதனால் இவ்வூர்ப் பெண்கள் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கம் ஏற்பட்டதோடு நம் பள்ளிக்கு இட வசதியும் ஏற்பட்டது. அதுமட்டுமன்றி, நம் பள்ளியில் சேருவதற்கு இடமில்லாது ஏமாற்றமடைந்து போவதைக் கண்ணுற்ற, கருணையுள்ளம் படைத்த கொடை வள்ளல் திரு. V. V. C. R. வையாபுரி முதலியார் அவர்கள் இதுபோழ்து மேன்மை தங்கிய கவர்னர் திரு. டாக்டர் சுப்பராயன் அவர்களால் திறக்கப்படும் இப்பெரிய கட்டிடத்தைக் கட்ட ஏற்பாடு செய்தார்.

இங்ஙனம் வளர்ச்சி பெற்று வளமுற்ற நம்பள்ளியில் தற்போது சுமார் 1500 மாணவாகள் கல்வி பயின்று வருகின்றார்கள் 60 ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர். விவசாயம், பொறியியல் துறையில் பயில விரும்பும் மாணவர்களுக்கு ஏற்ற வசதிகளும் அரசினரால் அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகின்றன. கீழ் வகுப்பு மாணவர்கள் தச்சு வேலை கற்கவும் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

A. C. C உதவிப்படையில் 300 மாணவர்களும், N. C. C. படையில் 45 மாணவர்களும் பயிற்சி பெறுகின்றனர். ஆண்டு தோறும் நடக்கும் மாவட்ட விளையாட்டுப்





போட்டிகளில் நம் மாணவர்கள் பெரும் பங்கு கொண்டு பெருமைக்குரிய நல்ல பரிசுகளைப் பெற்று வருகின்றனர். விவசாய பொறி இயல் போட்டியிலும் வெற்றிக்கான பரிசுகள் பெற்றனர். பொதுமக்களின் ஆதரவால் நாள் தோறும் 45 மாணவர்களுக்கு மதிய உணவும் அளிக்கப்பட்டு வருகின்றது. கல்வித்துறையிலும் மாணவர்கள் நல்லூக்கம் பெற்று நன்கு பயின்று முன்னேறி வருகின்றனா. இப்பள்ளியில் பயின்ற பல மாணவர்கள் அரசியல், சமூக சமுதாயப் பணிகளில் பெருந் தொண்டாற்றிப் பெருமைக்குரிய உயர் நிலையில் இன்றும் இருந்து வருவது மகிழ்ச்சிக் குரியதாகும்.

ஒவ்வொரு ஆண்டிலும் பள்ளியிறுதித் தேர்வுக்குச் செல்லும் S. S. L. C. மாணவர்களை Selection தேர்வில் நிறுத்தாமலேயே எல்லோரையுமே அனுப்பி வருகிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் 50 சத விதத்திற்கும் குறையாமல் 50 முதல் 80 சத விதம் வரை மாணவர்கள் தேர்ச்சியடைந்து வருகிறார்கள். சென்ற ஆண்டிலுங் கூட 70 சத விதம் மாணவர்கள் தேர்ச்சி பெற்றார்கள்.

இப்பெரிய பள்ளியின் நிர்வாகத்தை ஏற்று வந்த எனக்கு பள்ளியின் முன்னேற்றத் துறையில் ஒத்த மனத்துடனும், ஒத்த உழைப்புடனும் 15 ஆண்டுகளாக உற்றுழியுதவியும், உறு பொருள் கொடுத்தும், நல்லுரை கூறியும் உதவி செய்து வந்த இவ்வூர்க் கொடைவள்ளல்கள் அனைவர்க்கும், பெற்றோர் சங்கத்தினருக்கும், மற்ற ஆதரவாளர்களுக்கும் என் நன்றி என்றும் உரித்தாகுக. என்னுடன் உழைத்த அருமைத் தோழர்களாகிய ஆசிரியர்கள் அனைவர்க்கும் என் நன்றி.


★



திரு. சை. வே. சிட்டிபாபு M. A., B. T., அவர்கள்

கோவை, பெருமாவட்டக் கல்வி அதிகாரி.

பொன்விழா மலரை வெளியிடுபவர்.



திரு. C. பத்மநாபன் B. A., L. T.,
மாவட்டக் கல்வி அதிகாரி, சேலம்.

# THE PUPIL, THEN AND NOW

(C. PADMANABAN B. A., L. T., District Educational Officer, Salem.)

A pupil of the High School fifty years ago was a pleasing contrast to the pupil of the present day. He was generally dressed in dhotie and coat with a felt cap on his head, sometimes with a modest tuft hanging behind below the cap. He would walk to school in all humility typical of a good citizen under foreign rule, discussing with his friends a problem in mathematics or a theorem in geometry or the causes for the decline of the Moghul Empire or nothing is lost when a candle burns or quoting lines from Gray's Elegy or lines from Shakespeare. At school he was faithful and obedient to his teachers whom he adored and respected for his wide learning and often wondered 'how that one small head carried all that he knew'. He listened with rapt attention to what the teacher said and faithfully recorded all that he needed. He was able to sift the important from the unimportant and made a judicious selection of the important points for preparation for the examination His aim was to learn much, to read more and gather as much knowledge as possible knowledge for knowledge sake. He had a settled hand, the result of regular copywriting in the lower classes and the script of all his friends was of the same form - it was upright and steady with all the loops and with the t's crossed and i's dotted, legible and clear.

The pupil of the pressent day is generally seen in shorts, white, blue or khaki, and a shirt, bush shirt or slacks. Hs generally carries his books in a handbag and walks with an air of freedom. On the way to school he discusses with his friends the latest picture, the wonderful acting of Sivaji Ganesan or Gemini Ganesan, the beauty of the heroine and the make-up, the excellent love scene in the picture, the wonderful direction of the picture, the good or bad recording of sound and he hums or sings one or two of the favourite song hits. At school he sits in his class listening to his master with the fervent hope that questions and answers will be dictated and he need not bother about enriching his knowledge. He develops a peculiar skill of copying down anything written on the black board with a few mistakes of his own perhaps a display of some originality. He crams the questions and answers and finds himself at sea when questions are modified or diffierently worded at the examination. The hand writing is unsettled, often illegible and clumsy.

He is eager to play his part as a democratic citizen and is highly conscious of his freedom.

“பாவை” என்ற சொல் நம் செவியிற் படும் பொழுதே திருப்பாவை — திருவெம்பாவைப் பாடல்களும், விழாக்களும் நம் நினைவுக்கு வருகின்றன.

# பாவை நோன்பு




ஆச்சாரியப் பிரதமரான ஸ்ரீநாதமுனிகளின் பிரிய சீடரும், அவரையடுத்து அப்பீடத்தில் வீற்றிருந்தவருமான உய்யக்கொண்டார் என்பார், “தொல்பாவை பாடியருள வல்ல பல்வளையாய்!” என ஆண்டாள் பெருமகளைப் பாராட்டிப் பேசுகின்றார். ஆண்டாளுக்குத் “திருப்பாவைச் செல்வியார்” என்ற திருப்பெயரும், புகழும் உண்டு.

திருப்பாவையின் இரண்டாம் பாசுரத்தில் “நாமும் நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ” எனக் கூறப்பட்டதிலிருந்து, “பாவை வணக்கம்” - பாவை நோன்பின் ஒரு பகுதியை உடையதாம் என்றும், பாவைப் பாடல்களின் இறுதிகளில் வரும், “எம்பாவாய்” என்ற தொடரினின்றும், ஈர நுண் மணலால் தேவியின் திருவுருவைச் சமைத்து வழிபட்ட பான்மையும் இலை மறைகாய்போல் ஐயத்திற்கு இடம் பெற்றுள்ளன. இஃது உண்மையெனின் “பாவை” என்பது பெண் தெய்வத்தின் பிரதிமையைக் குறிப்பதாகும். மேலும், “பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்” என்ற திருப்பாவைத்தொடர், அப்பிரதிமையை வைத்து மக்கள் வழிபடுவர் என்ற குறிப்பைத் தொனிக்கச் செய்கிறது. பண்டித மு. இராகவய்யங்கார் தனது ஆராய்ச்சிக் கட்டுரையில் இக்கருத்தைத் தெளிவுறக் கூறுகின்றார்.

டி. எம். காளியண்ணன், M.A. B.com. M.L.A

சங்க காலத்தில் மார்கழித் திங்களில் இப்பாவை நோன்பு. “தைந் நீராடல்” என்ற பெயரில் வழக்கத்தில் விளங்கியதை திரு. மு. இரா. அவர்கள் கட்டுரையிலேயேயறியலாம். இம்மைப் பயன் கருதிக் கன்னிப் பெண்களால் பயிலப்பட்டு வந்த இந்நோன்பு, மறுமைப் பயன் கருதி அடியார்களால் ஈஸ்வரபரமாகப் பாடப்படும் பெருமை நிலையை எய்திற்று என்பதற்குத் திருப்பாவையும் திருவெம்பாவையுமே தக்க சான்றுகளாகும்.

ஆண்டாளையும் திருப்பாவையையும் அறியாதார் தமிழ் நாட்டில் இல்லையென்றே கூறலாம். “தவங்கிடந்து, மனத்தகத்து மாசைப் போக்கி, யோகத்தால் ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் முனிவர் பெருமக்களைக் காட்டிலும், “மயர்வற



திரு T. M. காளியண்ணன் M. A., B. Com., M. L. A.,
தலைவர், பொன்விழாக்குழு.



திரு. T. P. நடேசன் B. A., B. L.
செயலாளர், பொன்விழாக் குழு.

மதிநலம்'' அருளப்பெற்று, எம்பெருமானையே தஞ்சமென்றடைந்த ஆழ்வார்களின் ஞானம் தனிப் பெருஞ் சிறப்புடைத்து'' என்பது வைணவப் பெருமக்களின் சிறந்த கொள்கையாகும்.

உலக மாயையில் உழலுகின்றவர்களை எழுப்பி, எம்பெருமானுர், ''தானே தன்னைக் காட்டக்'' கண்டனர் ஆழ்வார்கள். ஆனல் நம் திருப்பாவைச் செல்வியரோ அவனுடைப் பெருமானைத் தானே சென்று எழுப்பி, தன் குறையைக் கூறி நிறையருளைப் பெற்றவராவார். ஆதலின் ஆழ்வார்கள் அனைவரினும் ஆண்டாள் பன் மடங்கானும் உயர்ந்தவள் (விலக்ஷணை) என்பார் வியாக்கியானகர்த்தா ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை.

''புருஷன் புருஷனைக் கண்டு ஸ்நேகிப்பதிலுங் காட்டில், ஸ்திரீ புருஷனைக் கண்டு ஸ்நேகிக்கை, பள்ளமடையாகையாலே, ஆழ்வார்களிற் காட்டில், எம்பெருமான் பக்கல் பரமபக்தியுடையளான ஆண்டாள்'' என்று குறிப்பிட்டு வியாக்கியான சக்கரவர்த்தி இவரது ஒப்பற்ற பக்திப் பெருங் காதலை வற்புறுத்தியுள்ளார். இங்ஙனம் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாம் இவள், நமக்குப் பாடிக்கொடுத்தாள் நற்பாமாலையாம் திருப்பாவைப் பல்பதியம்.''

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தின்வளர்ப் புத்தாயாம் இராமநுஜ முனிவரோ, ''திருப்பாவைச் சீயர்'' எனத் தம்மைப் பிறர் கொண்டாடும் முறையில் இப்பிரபந்தத்தில் ஈடுபட்டிருந்தாரெனில், இப்பாவைப் பாடல்களில் பண்டையோர் கொண்டிருந்த ஈடுபாடு என்னென்பது!

இப்பாவைப் பெருவிழா தமிழ் நாட்டில் வாழ்ந்த பண்டைப் பெருமக்களால் நோற்கப்பட்டு வந்த ஒரு பெருவிழாவாகும். ஆசிரியர் நல்லந்துவனர் இவ்விழாவை, ''அம்பாவாடல்'' எனக்குறிப்பிடுகின்ருர். அநாவது மணமாகாத கன்னி மகளிர் தத்தம் தாய்மார்களைத் துணையாகக் கொண்டு, மார்கழி நீராடிப்பாவை நோன்பு நோற்றதாகக் கூறியிருத்தலால், இது ''அம்பாவாடல்'' எனப் பெயர்பெற்றதென்று உரையாசிரியர் பரிமேலழகர் யூகிக்கிருர். ''அம்பாவாடல்'' என்பதை, ''அம்பாவையாடல்'' எனக் கொள்வதும் பொருந்தும்.

''அம்பா'' என்ற தொடர் தேவியைக் குறிப்பதாகும். நீர்த்துறையில் பாவையமைத்துப் பெண்கள் நீராடி விளையாடிய பான்மையை இத்தொடர் குறிப்பாகக் காட்டி நிற்கின்றது என்று மு. இராகவையங்கார் கருதுகிருர். இதற்கு ஆதாரமாகப் பாகவதத்தில் மார்கழி நோன்புபற்றி வரும் செய்திகளையும் அவர் குறிப்பிடுகின்ருர்.

சமணர்களின், ''அருகக்கடவுளையோ'' பௌத்தர்களின், ''புத்தபகவானையோ''— ''அறிவன்'' என்று குறிப்பிட்டுப் பாடிமிருக்கும் ஒரு பழைய பாவைப் பாட்டு உலக வழக்கில் இருந்ததற்குச் சில ஆதாரங்களைக் கண்டுள்ளனர், தத்துவராய சுவாமிகள் அத்துவைதபரமாக இயற்றிய பாவைப் பாடல்கள் பலவற்றைத்தான் படித்திருப்பதாக, திரு, அட்டாவதானம் முத்துசாமிக் கோனர் அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். ''மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்'' என்ற திருப்பாவைத் தொடரும் இந்நோன்பின் தொன்மையைக் குறிக்கின்றது. உய்யக் கொண்டார் அவர்களும் இக்கருத்தை உட்கொண்டே ''தொல் பாவை'' என்று விளக்கியுள்ளார்.

எனவே இப்பாவை நோன்பு தொன்று தொட்டுப் பயிலப்பட்டு வந்துள்ள ஒரு பெரு நோன்பு என்பது ஒருவாறு புலனாகிறது. அங்ஙனமாயின் இப்பாவை நோன்பு, அடியார்களால் மறுமைக்குரிய ஈஸ்வரபரமாக மாற்றப்படும் முன்பே, அஃதாவது இம்மைப் பயன் கருதி நோற்கப்பட்ட காலத்தில் நந்தமிழ் நாட்டில் இப்பாவையைத் தொழும் கோயில்கள் பல இருந்தமையும் யூகிக்கலாம். இலக்கியங்களும் இக்கருத்தினை வலியுறுத்தும் சில சான்றுகளைக் கூறுகின்றன.

## சிரிக்கும் பாவை.

சேரர்க்குச் சிறந்தமலை கொல்லிமலை. அங்கு ஒரு பாவைக் கோயில் இருந்தது. ''கொல்லிப்பாவை'' யென வாழ்த்தப்பட்ட இப்பாவை அழகாய்ச் சிரிக்கும் பான்மையுடையதாம். அதன் சிரிப்பழகில் மயங்கி

நிற்பாரைக் கொல்லும் வல்லமை அது பெற்றிருந்தது. ''மலர்ப்பாணன் முதலெவ ராலும், கொல்லியம்பாவை முல்லை வாள் நகையால் உள்ளுருக்குவதுங் கொங்கு மண்டலமே'' என்று கொங்கு மண்டல சதகம் சிறப்பித்துக் கூறுகிறது. சிரித்துச் சிரித்துக் கொல்லும் தன்மைபெற்ற அப் பாவை இருந்ததையும், திரிபுரமெரித்த விரி சடைப் பெருமானின் சிரிப்பினுக்கு இதன் சிரிப்பு இணையாம் என்பதையும் - திரிபுரத்'' தைச் செற்றவனும் கொல்லிச் செழும்பாவை யும் நகைக்கக் கற்றதெலாம் இந்த நகை கண்டாயோ'' - என வரும் சித்திர மடல் அடிகளாலும் அறியக் கிடக்கின்றது.

இப்பாவை மாயங்கள் பலவற்றைச் செய்ய வல்லதும், புதுமைகள் பல புரியும் இயல்புகளைப் பெற்றதும் என்பதை, ''திரு நல உருவின் மாயாவியற்கைப் பாவை...... புதிதியல் பாவை என்றும் நற்றிணை கூறு கிறது.

''கொல்லிக் கருங்கண் தெய்வம் குட வரை யெழுதிய நல்லியற்பாவை'' என்பது குறுந்தொகைக் கூற்று. பாம்பண்ண கவுண்டர் குறவஞ்சியிலும், குறத்தியைப் பழிக்கும் பான்மையில் தலைவி, ''நிலந் திகழும் கொல்லிமலைப்பாவைக்கு மோடி'' எனக் கூறப்படுகிறது. இப்பாவைக் கோவில், அறப்பளீஸ்வரர் ஆலயத்துக்கு மேற்றிசையில் இருந்தது என்பதைத் திரு. கோனர் அவர்கள், பழைய ஏடுகளைப் பார்வையிடும்பொழுது தான் கண்டதாகக் கூறியதைக் கேட்டுள்ளேன். இக்கோவில் இக்காலத்துக் காணப்படவில்லை.

## அழும் பாவை.

''அரசு கோல் கோடினும் அறங்கூற
வையத்து
உரை நூல் கோடி ஒருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீர் உகுத்து
பாவை நின்றழும் பாவை மன்றமும்''

என்ற சிலப்பதிகார அடிகளால் சோழ நாட்டின் தலைநகரிலே அழும் பாவை ஒன்றிருந்தது அறியக் கிடக்கின்றது.

மனுநெறி தவறு மன்னனது செங்கோல் வளைந்தாலும், அறங்கூறும் அவையம் நடுவு நிலை தவறி ஒருசார் புடை நீதி வழங்கினும், பாவை மன்றத்தே நின்ற பாவை, நாவினால் பேச்சொன்றும் நவி லாது, கண்களில் தாரைதாரையாய் நீரை வடித்துக் கொடுங்கோன்மையைக் குறிப்பில் காட்டி நிற்கும், என்று மேற்குறித்த அடி களுக்குப் பொழிப்புரை கூறுகிறார், திரு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

## வாயிற் கதவால் வழியடைக்கும் பாவை

பாண்டி நாட்டுப் பழம்பதியில் ''ஐயை'' என்னும் பாவைத் தெய்வம் கோவில் கொண்டிருந்தது. அரசு கோல் கோடினும், அறநெறி வழுவினும், தம் கோவில் வாயிலை யடைத்து நின்று, முறை தவறிய மன்ன னுக்கு நெறியிடை நிற்கும் உணர்வை உணர்த்துமாம் அப் பாவை. உணர்ந்த மன்னன் திருந்தி நேர்மையைக் கடைப் பிடிப்பானும்.

வார்த்திகனைச் சிறையிலிட்ட பொழுது, அவனது மனைவி அழுது புரண்டு அலற ஐயைப் பாவை, பையவே கதவடைத் துக் கொண்ட செய்தியையும், நீதியில் பழுது நிகழ்ந்து விட்டதையுணர்ந்த மன்ன னும், அவளது வாழ்விற்குரிய வழியமைத் துக் கொடுத்த வகையையும், சிலப்பதிகாரம் கட்டுரைக்காதை,

''வார்த்திகன் மனைவி கார்த்திகை
என்போள்
அலந்தனள், ஏங்கி அழுதனள், நிலத்தில்
புலந்தனள், புரண்டனள், பொங்கினள்
அதுகண்டு,
மையறு சிறப்பின் ஐயைக் கோயில்
செய்வினைக் கதவம் திறவா தாகலின்—

என்ற இவ்வடிகளால் விளக்கிக் கூறு கின்றது.

## பாவைக் கூத்து.

சங்கச் சான்றோர் வாழ்ந்த காலத்தில் ''பாவைக் கூத்து'' என்றோர் நாட்டியம் நாட்டிடைப் பழக்கத்தில் பயிலப்பட்டு வந்துள்ளது. கடலாடு காதை 60-வது வரியில், ''செருவெங் கோலம் அவுணர்

நீங்கத் திருவின் செய்யோள் ஆடிய பாவையும்'' என்று வந்துள்ள தொடரால் இவ்வுண்மை புலப்படுகின்றது. அவுணர்கள் சினங்கொண்டு வெவ்விய போர் செய்தற்குச் சமைத்த போர்க்கோலத்தோடு மோகித்து வீழும்படி செய்யவளான திருமகளால் ஆடப்பட்ட பாவைக் கூத்து இதுவாம் என்று உரைபாசிரியர் ந. மு. வே. நாட்டார் அவர்கள் உரை கூறுகின்ரூர். மேலும், சீற்றம் கொண்டு எழும் பேரரசர்களைக் காண அஞ்சி நிற்கும் குறுநில மன்னர்கள், நயங்கொண்ட பாவைக் கூத்தாட வல்ல பாவையரை அவ்வரசர்கள்பால் ஏவிக் கூத்தாடச் செய்தும் நாட்டியத்தில் மோகமுற்று மயங்கிக் களி கொண்ட மன்னரின் சினந்தணிந்தமை கண்ட பின்னரே அவர்களை நேரில் சென்று காண்பதும், பண்டைய வழக்கமாம். இங்ஙனம் அரசியல் வாழ்விலும் இப்பாவைக் கூத்துமக்களுக்குப் பயன்பட்ட செய்தியைப் பண்டை நூல்கள் நமக்குத் தெளிவுறுத்துகின்றன.

## பாகம் பிரியாப்பாவை.

இதுகாறும் நாம் கண்ட பாவைகள் அழிந்து பட்டவையாம். பால் வண்ணப் பாவை ஒன்று மட்டும் கொங்கு நாட்டின் திருக்கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளியிருக்கும் செய்தியைச் சைவப் பெரியார் கூறுவர்; அதையே, ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரத் திருவுருவம் என்பர். இங்கு கோயில் கொண்டிருக்கும் இத்திருப்பாவையை வழிபட வரும் மக்கள் ''பாவம் பெரியாயி (பாகம் பிரியாய்) பாவாயி-பாவாய் என்று தேவியையழைத்துப் பேசும் வழக்கத்தை இன்றும் நாம் காண்பது கண்கூடாம். ''பாவை'' என்ற சொல்லே, காலத்தால் மருவி, ''பாவாய்—பாவாயி'' என்று திரிபடைந்துள்ளது என்பதும் பெறப்படும்.

இவ்வாருகப் பாவை வணக்கம், பாவைப் பாடல்களாகப் பரிணமித்துப் பாவை நோன்பாற்றிய உண்மை ஒருவாறு புலனுகின்றது. தொன்மை தொட்டு நம் பெருமக்களால் நோற்கப்பட்டு வரும் இப்பெருநோன்பை, வழிவழிவரும் நம் நாட்டு மக்கள் பரம்பரையினரை இனியும் நன்கு போற்றி, இருமைப்பயன்களையும் அவர்கள் ஒருங்கே பெற்று உய்வார்களாக!

பூமியைக் காண விரும்பி ஒருவன் இங்குமங்கும் நடந்து திரிவதற்கு ஒப்பாகிறது கடவுளைக் காண ஒருவன் இங்குமங்கும் யாத்திரை போவது.

★

நீ பணியும் அளவு கடவுள் உன்னைப் பெரியவன் ஆக்குகிருர்.

★

தனக்கென நாடுவது பற்றுதல். பிறர்க்கென நல்குதல் அன்பு. அவ்வன்பு அனைத்தையும் தன்னகத்து அணைத்துக் கொள்ள வல்லது.

★

பல தடவைகளில் உண்மை கசக்கிறது. பின்பு மெய்யோ தித்திக்கிறது. ஆனல் கசக்கும் உண்மையானது தித்திக்கும் மெய்யினும் பெரியது. கசப்பதெல்லாம் கேடுடையதல்ல. இனிப்பதெல்லாம் நலமுடையதல்ல.


—தர்மசக்கரம்.

★

# பொருநராற்றுப் படை

சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,
தலைமை ஆசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, கருச்சிபாளையம்


பண்டைத் தமிழ் நாட்டில் வள்ளல்கள் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தம்மை நாடி வந்தவர்க்கு (புலவர்க்கும், பாணர்க்கும், பொருநர்க்கும்) வரையாது ஈத்துவக்கும் இயல்பினராய் வாழ்ந்து வந்தனர். பழுமரத்தை நாடிச் செல்லும் பறவைகள் போலப் பாணர்களும், பொருநர்களும், கூத்தர்களும், விறலியர்களும் அவ்வள்ளல்களை நாடி அவர் கொடுக்கும் வரிசைகளைப் பெற்று வருவது வழக்கமாக இருந்து வந்தது.




யாழ்

யாழைக் கையிலேந்தியவராய் பாடிப் பிறரை மகிழ்விப்பவர் பாணர்கள். ஏர்க்களத்தையும், போர்க்களத்தையும் சிறப்பித்துப் பாடுபவர்கள் பொருநராவர். அரசன் முன்னிலையில் ஆடிக் காட்டுபவர்கள் கூத்தர்கள், கூத்தநட் பெண்பாலோர் விறலியர் எனப்படுவர். இவர்கள் வள்ளல்களிடத்திலிருந்து பரிசில் பெற்று வரும்போது தங்களை ஒத்த மற்றையோரைக் காணின், தாங்கள் பரிசில் பெற்று வந்த இடத்தை அறிவித்து அவர்களையும அவ்விடத்திற்குச் சென்றால் பரிசில் பெறலாம் எனக் கூறி அனுப்பி வைப்பது (ஆற்றுப்படுத்துவது) ஆற்றுப்படையாகும். பொருநர், பாணர், கூத்தர், விறலியர் ஆகிய நான்கு வகையினரும் வள்ளல்களிடம் சென்று பரிசில் பெறத் தகுதியுள்ளவர்கள் எனக் கருதப்பட்டமையினால், ஆற்றுப்படை, பொருநராற்றுப் படை, பாணராற்றுப்படை, கூத்தராற்றுப் படை, விறலியாற்றுப்படை என நான்காயிற்று. பிற்றை நாளில் இயற்றமிழ்ப் புலவர்களையும் ஆற்றுப்படுப் போராகக் கொண்டமையின் புலவராற்றுப் படை என்ற ஒன்றும் சேர்ந்து ஆற்றுப்படை ஐந்தாயிற்று. பொதுவாக ஆற்றுப்படை என்பது, புலவர்பெருமக்கள் தாம் விரும்பிய வள்ளல்களைப் போற்றிப் பாட எடுத்துக் கொண்ட ஒரு துறையாகும். புலவர்கள், வள்ளல்கள் தங்கட்குத் தந்த பொருள்களை எண்ணித் தமது செய்ந்நன்றி மறவாத் தன்மையைக் காட்டப் பொருநர், கூத்தர், பாணர் ஆகியோரைப் பாடல்களில் படைத்து அவர்கள் வாயிலாக அவ்வள்ளல்களின் பெருமையினை விதந்தோதுவதை ஆற்றுப் படைகளில் காண முடியும். பத்துப் பாட்டினுள் ஐந்து பாட்டுக்கள் ஆற்றுப்படைகளாக அமைந்திருப்பதை நோக்கும் போது அக்காலப் புலவர்கள் அத்துறைக்கு எத்துணை மதிப்பளித்தனர் என்பதை உணர முடிகிறது. அப்பத்துப் பாட்டினுள் ஒன்றாகிய பொருநராற்றுப் படையைப்பற்றி ஒரு சிறிது காண்போம்.

ஆற்றுப்படையில் பாட்டுடைத் தலைவனாகிய ஒரு வள்ளலையும், அவ்வள்ளலிடத்தே பரிசில் பெற்ற ஒருவனையும், அவன் வறுமையால் வாடும் தன்னையொத்த ஒருவனை அவ்வள்ளலிடம் செல்லுமாறு கூறுவதையும் காண முடியும். பொருநராற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாற் பெருவளத்தான். அவனிடம் பரிசில் பெற்ற ஒரு பொருநன் மற்றொரு பொருநனிடம் தான் கரிகாலனை அணுகுமுன் இருந்த நிலையினையும், கரிகாலனிடம் சென்றபோது



காலஞ்சென்ற உயர்திரு. V. V. C. R. வையாபுரி முதலியார் அவர்கள்
"ராமலிங்க ஹால்" கட்டிட நன்கொடையாளர்



"ராமலிங்க ஹால்"

அவன் தன்னை வரவேற்று உபசரித்த விதத்தினையும், பிறகு அவனளித்த பரிசிலின் தன்மையினையும் கூறி, ''நீயும் அக்கரிகாலனை அடைந்தால் உன் வறுமைத் துயர் நீங்கும்'' என்று கூறி ஆற்றுப்படுத்துகின்ற காட்சியினைப் பொருநராற்றுப்படை சித்தரிக்கின்றது.

வறுமையால் வாடிய பொருநன் ஒருவன் ஒரு ஊரில் நடைபெற்ற விழாவினைச் சிறப்பித்துப் பாடுகிறான். அடுத்த நாள் அவ்வூரில் உள்ள இரவலர்கட் கெல்லாம் நிறையச் சோறு கிடைக்கும். அச்சோற்றையும் விரும்பாது அப்பொருநன் தன் மனைவியோடு வெளியேறிச் செல்லுகின்றான். விழாவில் கிடைக்கும் சோறு ஒரு நாளைய பசியைத்தானே நீக்கும்! நாள்தோறும் தன்னையும் தன் சுற்றத்தையும் வருத்தும் பசிப்பிணியை நிரந்தரமாய்ப் போக்க, ஒரு பெருவள்ளலை நாடிப் பெரும்பொருள் சேர்க்க வேண்டுமென்று எண்ணியவனாய் அப்பொருநன் வெளியேறினன் போலும்!



அவன் கையிலே பாலை யாழ் ஒன்று இருந்தது. யாழின் அடியில் குடம் போன்று உள்ள உறுப்பிற்குப் 'பத்தல்' என்று பெயர். ஏறத்தாழ வட்ட வடிவமான அதன் மேற் பரப்பில் இடையே விட்டம் போலச் சற்று உயர்ந்த கட்டை பொருத்தப்பட்டிருந்தது. அப்பத்தல் மானினுடைய குளம்பு தரையில் பதிந்த இடத்தில் இருமருங்கும் தாழ்ந்து நடுவிடம் சற்று உயர்ந்திருப்பதைப் போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கிறது. இப்பத்தல் மரத்தினால் செய்யப்பட்டதாகும். இதனை ஒரு தோலால் போர்த்து அத்தோலின் இரண்டு தலைப்புகளையும் இணைத்துத் தைத்திருக்கின்றனர்.

பத்தலை இணைப்பதற்காகத் திறந்த துளை மறையும்படி ஆணிகள் முடுக்கப்பட்டுள்ளன. பத்தலின் பரப்புக்கு மேலே சிறிது நீட்டிக் கொண்டிருந்த அந்த ஆணிகள் நண்டின் கண்களை ஒத்திருக்கின்றன. பத்தரின் மேற்பரப்பில் எட்டாம் பிறைச் சந்திரன் வடிவில் ஒரு வாய் வெட்டப்பட்டிருக்கிறது. பத்தரோடு பொருத்தப்பட்டு நீண்டிருக்கும் கரிய தண்டு கரும் பாம்பு ஒன்று தலையெடுத்து நிற்பது போலிருக்கிறது. தண்டின் மேல் நெருங்கியிருக்கும் கரிய வார்க்கட்டு, கருநிற முள்ளா மங்கையின் முன் கையில் இருக்கும் கருநிற வளையல்களை ஒத்துள்ளது. யாழில் இருந்த நரம்பு, குத்திய தினையரிசியை நெருங்க வைத்தது போன்று இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. பொதுவாக யாழின் முழுத்தோற்றம் ஒப்பனை செய்யப்பட்ட மணமகளை ஒத்திருக்கிறது. அதனின்று எழும் இனிய ஒலி, வழிப்பறி செய்து கொலைத் தொழில் செய்யும் ஆறலைக் கள்வர்களையும் தங்கள் கையிலிருந்து வில் வேல் முதலியவற்றைக் கீழே விட்டொழிக்குமாறு செய்யும் ஆற்றல் மிக்கது.

பொருநனின் அருகில் உள்ள பாடினியோ எழிலுருக் கொண்ட ஓவிய மெனத் திகழ்ந்தனள், கரிய மணலிலே தோன்றியுள்ள நெளிவுகளைப் போன்ற கருங்கூந்தல்; மூன்றாம் பிறையை ஒத்த நெற்றி; வில்லினையொத்த புருவங்கள்; குளிர்ச்சி பொருந்திய கொழுவிய கண்கள்; இனிய சொற்கூறும்

பண்பும். இலவின் இதழை ஒத்த சிவப்பும் பூண்ட வாய்; முத்தொத்த பற்கள்; பூங் குழைகள் தொங்குகின்றமையால் கத்தரிக் கோலில் கைவிரலை உள் நுழைந்துக் கொள் வதற்காக உள்ள குழைச்சு போன்று நீண்ட தொளை கொண்ட காதுகள்; நாணம் வருத்துதலான் பிறரை நோக்காது முன் புறம் வளைந்த கழுத்து; பருத்துத் திரண்ட மூங்கிலையொத்த தோள்கள்; காந்தள் மெல் விரல்; கிளி மூக்கினையொத்துச் சிவந்த நகங்கள்; ஓடிக் களைத்த நாயின் நாவைப் போன்ற அடிகள்.

இத்தகு கவின்பெறு விறலி அரக்கினை உருக்கி விட்டது போன்று செந்நிறமும் வெப்பமும் கொண்ட நிலத்தினூடே செல் லும்போது கூரிய கற்கள் கால்களில் உறுத்துகின்றன. மென்மைமிக்க அவள் கால்களில் அதனால் கொப்புளங்கள் தோன்றுகின்றன. துடிதுடித்த அவள் எதிரே இலையுதிர்த்த மராமரம் ஒன்றின் வலைவிரித்தாற்போன்ற மென்னிழலைக் கண்டு மகிழ்வு கொண்டு அந்நிழலில் தங்கி இளைப்பாறினள். இளைப்பாறியதும் தன் யாழைக் கையிலெடுத்துக் கானுறை தெய் வங்கள் மகிழும் வண்ணம் பல பாடல்களைப் பாடுகிருள்.

அப்போது அவ்வழியே வேறொரு பாணன் சுற்றத்தாருடன் வருகிறன். அவன் வள்ளல் ஒருவரை நாடி வறுமை நீங்கி வளம் பெற்றுத் திரும்புபவன்.

அவன் மர நிழலில் பாடினியோடு தங்கியுள்ள மேற்கூறப்பட்ட பாணனை நோக்கிக் கீழ் வருமாறு கூறுவான்.

"யாழின் தலைவனைய பாண! பசியால் வருந்தும் உன் சுற்றத்தோடு உன் வறுமை நீங்க வேண்டுமாயின் உடனே நான் கூறு மிடம் நோக்கிப் புறப்படு. பழ மரங்களை நாடி அலையும் பறவை போல நானும் வள்ளல்கள் பலரைத்தேடி வாட்டமுற்றேன், இறுதியில் ஓர் அரண்மனை வாயிலை அடைந் தேன். வாயில் காவலன் அனுமதியின்றி உள்ளேயும் நுழைந்து விட்டேன். அரண் மனையினுள் நுழைந்தவுடன் களைப்பு நீங்கி விட்டது. இளைத்திருந்த என் உடல் கூட மகிழ்ச்சியால் தேறி விட்டது. வெள்ளி முளைக்கும் இருள் செறிந்த விடியற்காலையில் பாம்பின் படத்தின் கண்ணுள்ள பொறி போன்று கைவடுப்பட்டுக் கிடந்த எனது உடுக்கைத் தோலினை அடித்து ஒரு பாட் டினைப் பாடலுற்றேன். அது கேட்ட அரசன் என்னோடு நெடுநாள் பழகியவன் போல் என்னை வரவேற்றுத் தன்னருகே ஆசனத்தில் இருக்கச் செய்து என் என்பும் உருகுமாறு இனிய பார்வையைச் செலுத்தி னன். எனது உடைகள் கிழிந்து போயிருந் தன; அவற்றைத் தைத்து உடுத்தியிருந் தேன். வேர்வையினால் நனைந்து ஈரும் பேனும் கொண்டிருந்த கந்தலாடை அது. அதனை அகற்றி மிக மெல்லியதான இழை சென்ற வழியைக் கண்டறிய முடியாத நுண்மை வாய்ந்த பூத்தொழில் செய்யப் பட்ட ஆடைகளைக் கொடுத்து உடுக்குமாறு செய்தான். மழை போன்ற கூந்தலோடு அணிகலன்கள் பூண்டவராய், இன்நகை தோற்றிய வண்ணம் பணிப் பெண்கள் பொன்னால் செய்த கலங்கள் நிறையக் கள்ளை வார்த்தனர், வழி நடந்த வருத்தம் தீர நிறையப் பருகினேன். அன்று இரவு அரண்மனையின் ஒரு புறத்தே கள்ளுண்ட தால் உண்டான உடல் நடுக்கமேயன்றி வேறு மனக்கவலை ஒன்றுமில்லாதவனாய்த் துயின்றேன்.

மறுநாள் காலைத் துயிலெழுந்த நான், முந்தைய நாளின் எனது வறுமையினையும், அன்றைய செல்வ நிலையினையும் கண்டு இது ஒருகால் கனவாக இருக்குமோ என்று கவலையுற்றேன். அருகிருந்த இளைஞர்கள் அது கனவல்ல! நனவே என்பதற்குரிய ஏதுக்களை எடுத்துக் காட்டி நின்றனர். அப்போது மன்னன் அழைப்பதாக ஏவலர் வந்து கூற நானும் எனது சுற்றமும் ஆங்குச் சென்றோம். எம்மைச் சேய்மையில் கண்ட அளவிலேயே வருக! வருக!! என ஆர்வத்தோடு அரசன் வரவேற்க, யாங் களும் அரசனைக் காணும்போது செய்ய வேண்டிய முறைகளைச் செய்து முடித்து அருகே அமர்ந்தோம்.

உண்ணுதற்குரிய காலமறிந்து எம்மை அழைத்துச் செம்மறியாட்டின் பருத்த தொடைச்சதையினைப் புழுக்க வைத்த உண வினையும், இரும்புக் கம்பியிற் கோத்துச்

கூடப்பட்டுப் பக்குவப்படுத்தப்பட்ட கொழுத்த தசைத் துண்டுகளையும் ஏராள மாக அளித்தனர். தசைகளை வெம்மை யோடு வாயில் போட்ட நாங்கள் அவ்வெம் மையை நீக்குவதற்காகத் தசைகளை வாயி னது வலத்தினும் இடத்தினும் மாறி மாறி ஒற்ற ஆற்றித் தின்று வந்தோம். அவற்றை உண்டு உண்டு யாங்கள் அலுத்துப்போய் விட்டோம். அதை உணர்ந்த அரசன் வெவ்வேறு வகையான பண்ணியாரங்களைக் கொணர்ந்து அவற்றை உண்ணச் செய் தனன். இவ்வாறு உண்பதும் பிறகு மகளி ரது ஆட்டத்தைக் காண்பதுமாய்ப் பல நாட்களைக் கழித்தோம்.

ஒருநாள் அரசன் எங்கட்குச் சோற் றுணவும் படைத்தனன். முல்லை அரும்பு போன்று முனை முறியாத அரிசியால் சமைக் கப்பட்ட சோற்றையும், நன்கு பொறிக்கப் பட்ட கறிகளையும், கழுத்து வரை உண்டு அவ்வள்ளலோடு இனிது உறைந்து வந் தோம். இரவும் பகலும் இறைச்சியைத் தின்றதால் எம் பற்கள் கூட கொல்லை நிலத்தை உழுத கொழுப்போல முனை மழுங் கின. மிகுதியாக உண்டமையின் மூச்சு விடக் கூட முடியாது தடுமாறினேம்.

இவ்வாறு பல நாட்கள் கழிந்த பின்றை ஒரு நாள் அரசனிடம் "அரசே! நாங்கள் எங்கள் ஊருக்குச் செல்ல நினைக்கிறேம்" என்று தயக்கத்தோடு கூறிய அளவிலே "எம்மை விட்டு நீங்க நினைத்தீரோ" என்று வெகுண்டவன்போல் கூறினன். பிறகு "கன்றுகளோடே பிடியானைகளையும், களிற்றுயானைகளையும், நீவிர் விரும்பும் ஆடை அணிகலன்களையும் வேண்டுமளவு கொள்க" என்று அவன் கொடுக்க, நாங் களும், எங்களை வறுமை நிலை என்றும் தீண்டாத அளவுக்கு, வேண்டியவற்றை எல்லாம் வாரிக்கொண்டு இனிது வந்தோம். எங்களை அந்த அளவுக்குப் போற்றி உதவிய அவ்வள்ளலின் பெருமையும் கூறுகின்றேன் கேட்பாயாக!

அவன் செம்மை மிக்க வேலினையும், அழகிய பல தேர்களினையும் உடைய இளஞ் சேட் சென்னியின் திருமகன்; முருகன் போலும் சீற்ற முடையவன். பெயர் கரி காற்பெருவளத்தான். அவன் தாய் வயிற் றில் கருவிலிருக்கும் போதே, தந்தை மாண் டாராகையால், தாய் வயிற்றிலிருந்தபோதே தரணியாளும் உரிமையைப் பெற்றவன். பிறந்து தவழ்ந்த நாள் தொட்டு நாட்டைத் தன் தோளிலே சுமக்கும் பேறு பெற்றவன். ஆளியின் குட்டி தன் தாயிடத்தே பால் உண்ணும் நிலையைக் கைவிடாத இளம் பருவத்திலேயே வலியுடைமையால் செருக் குக் கொண்டு, தனது முதல் வேட்டையி லேயே யானை மீது பாய்ந்து அதைக் கொன்று வீழ்த்திநிற்போன்று இம்மன்னன் தனது இளைய வயதிலேயே வெண்ணி என்ற இடத்தில் பனந்தோட்டு மாலை சூடிய சேரனையும், வேப்பமாலை சூடிய பாண்டி யனையும் ஒருசேர வென்று கொன்ற வெற் றியையுடையவன்.


நீங்கள் சென்று அவனது தாளைத் தொழுதால் நும் வறுமை நும்பால் இல்லை யாகிவிடும். உங்களைக் கண்ட அளவி லேயே, ஈன்றணிமையுடைய பசு தன் கன்றினைப் பரிவோடு நோக்குவதுபோல நோக்கி, பாசி வேரைப் போன்று மாசடைந் துள்ள உமது ஆடையை நீக்கித் தூய பட்டுடை கொடுத்து உடுக்கச் செய்வான். பெறுதற்கரிய பொற்கலங்களில் பூ மணக் கும் கள்ளைப் 'போதும் போதும்' என்று நீங்கள் மறித்தாலும் உங்கள் கையைத் தடுத்து நிறைய வார்த்து நாள்தோறும் உண்ணச் செய்வான். பாடினியின் கூந் தலிற் பொற்றாமரை மலரை அணிவிப்ப தோடு பொன் காசு மாலைகளும், முத்து மாலைகளும் அவள் அணியத் தருவான். நெடிய தேரில் உயர்ந்த நான்கு குதிரை களைப் பூட்டி ஏழடி பின்னே வந்து, ஒட்டுங் கோலில் உள்ள தாற்றுக் கோலை நீக்கி, 'இங்ஙனம் ஏறுக' என்று ஏறும் முறையைக் காட்டி உம்மைத் தேரில் ஏற்றி உமக்கு வேண்டிய மற்றப் பரிசில்களையும் கொடுத்து அனுப்புவான். அவன் தந்த பரிசல்களை நீங்களும் பிறர்க்கீந்து மகிழ்வுற்று "யாங்கள் சென்று வருகின்றேம்" எனறு கூறுவீரா யின் உங்களை எளிதில் விட மாட்டான். புணர்ந்தவர்கள், பிரிந்து ஆக வேண்டும் என்ற உலக இயற்கை நிலையினை அவன் அப்போது எண்ணுவன். என்றும் நீங்கள் தன்னுடனேயே இருக்க வேண்டுமென்று

எண்ணுவானே தவிர எளிதில் உங்களைப் பிரியுமாறு கூறமாட்டாதவன். அவனது பெருமையைக் கூறிய நான் அவனது நாட்டு வளப்பத்தையும் கூறுகின்றேன் கேட்பாயாக!

கடற்கரை சூழ்ந்த அவனது நாட்டில் திடல் தோறும் நெற்கூடுகள் பொருந்தியிருக்கும். அங்குள்ள மக்கள் குருதி கலந்த சோற்றைக் காக்கைக்கு உணவாக இடுவார்கள். அதனையுண்ட காக்கை அவ்வுணவை வெறுத்ததாயின், மனையைச் சூழ்ந்த நொச்சியின் நிழலில் கிடக்கும் ஆமையினது பார்ப்பைப் பின்னர் பசி தோன்றும்போது உண்ணலாம் என்று காவல் காத்து நிற்கும். மருத நிலத்து மகளிரெல்லாம் நெய்தல் நிலத்து மணற்குன்றிலே வண்டலிழைத்து விளையாடுவர். முதியவர்கள் தம்முள்ளே மாறுபட்டு முரண் கொண்டவர்களாய், நீதி வேண்டி அரசனது அவைக்களம் புகுவராயின், புகுந்த அளவிலேயே தம் மாறுபாடு நீங்கி நட்புக் கொள்வார்கள். காஞ்சி மரத்திலும், மருத மரத்திலும் உள்ள மயில்கள், பாகற்பழங்களையும் பலாப் பழங்களையும் தின்று ஆரவாரிக்கும். மருத நிலத்தில் கரும்பு வெட்டுவோரும் நெல்லரிவோருமாகிய உழவர்கள் எழுப்பும் ஒலிகண்டு நாரைகள் வெருவி அந்நிலத்தைத் துறந்து அடும்பு, பகன்றை முதலியன படர்ந்தும், புன்கு ஞாழல் முதலிய மரங்கள் குழீஇயதுமான இடத்தை அடையும். அதனையும் வெறுத்ததாயின் முல்லை மலரினையும், காந்தள் மலரினையும், பொன்னிறம் போன்ற கொன்றை மலரினையும், மணி போன்ற காயா மலரினையும் கொண்ட முல்லை நிலத்தை அடையும். அம்முல்லை நிலத்தே வாழ்வதையும் வெறுத்ததாயின் சுறுமீன் திரியும் கடற்கரையின் கண்ணுள்ள புன்னையின் கொம்புகளில் தங்கும். அங்கும் கடலொலி கேட்டுப் பயந்ததாயின் அங்கே உயர்ந்து வளர்ந்துள்ள பனையினது உச்சியிலே சென்று தங்கும். மருதநில மக்கள் கரும்பையும் அவலையும் விற்று மாறாகக் குறிஞ்சி நிலப் பொருள்களாகிய கள்ளையும் மான் தசையையும் பெற்றுச் செல்வர். குறிஞ்சிப்பண்ணைப் பரதவர் பாடுவர்; நெய்தற் பூவாற் புனைந்த கண்ணியைக் குறவர் சூடுவர்; கானவர் மருதப் பண்ணைப் பாடுவர்; உழவர்கள் முல்லைக் கொடி படர்ந்த காட்டு நிலத்தைக் கொண்டாடுவர். முல்லை நிலக் காட்டுக் கோழி மருத நில நெற்கதிரைத் தின்னும், மருத நில மனைக்கோழி குறிஞ்சி நிலத் தினையைத் தின்னும். மலையிலே உள்ள மந்திகள் கழியிலே மூழ்கி விளையாடும்; கழியிலே திரியும். இவ்வாறு ஒன்றோடொன்று மயங்கும் நான்கு வகை நிலங்களையும் நெறி தவறாது, அறத்திற்கோர் எடுத்துக்காட்டாய் காக்கும் அம்மன்னவன் இனிதே வாழ்வானாக!

அவன் வள்ளலாக வாழ்வதுபோலவே அவன் நாட்டில் ஓடும் காவிரியும் வரையாது மக்கட்குச் செல்வத்தை வழங்குவதாக இருக்கிறது. வெம்மைமிக்குக் கதிரவனின் சுடு கதிர்களினால் கஞ்சங் கொல்லை தீயவும், மரங்களின் கொம்புகள் நெருப்புப் பற்றவும், பெரிய மலைகளில் அருவிகள் இல்லையாகவும் முகில் கடலினிடத்தே முகத்தலை மறக்கவும், பெரிய பஞ்சம் உண்டாகிய காலத்திலும் காவிரி நீர் நிரம்பியதாய் நுரைக்கொடு, நரந்தம்புல், அகில், ஆரம் ஆகியவற்றைச் சுமந்து வந்து துறைதோறும் அவற்றை ஒதுக்கிச் செல்லும்; குளங்களிலும், வாவிகளிலும் புகுந்து செல்லும்; நீராடும் மகளிர் நீரைக் குடைந்து விளையாடுவர். மாரி பொய்ப்பினும் தான் பொய்யாது நீர் சுரந்து ஊட்டும் காவிரியின் தன்மையால் எங்கும் செந்நெல் விளை நிலங்கள். மக்கள் ஓயாது நெல்லை அறுத்துக் கட்டுகளை மலைபோல அடுக்கிக் கட்டடித்துக் கடாவிட்டு நெல்லை மேருவெனக் குவித்து வைப்பர். அந்நெல்லை இட்டுத் தைத்து வைத்த மூட்டைகள் அந்நிலத்தில் வெற்றிடம் சிறிதும் இல்லை என்ற அளவுக்கு யாண்டும் கிடக்கின்றன. காவிரியாற்றால் பாதுகாக்கப்படும் கரிகாற் பெருவளத்தானது நிலம் ஒருவேலி ஓராயிரம் கலத்தை விளைவிக்கிறது.

மேற்கண்டவாறு கூறி வளப்பம் மிக்க நாட்டுக்குத் தலைவனும், வீரம் மிக்கவனும், பரிசிலர்க்கு முகம் மலர்ந்து ஈபவனுமான கரிகாலனை அடைந்தால் வறுமை தொலையும் என எதிரே தோன்றிய பொருநனை பரிசில் பெற்ற பொருநன் ஆற்றுப் படுத்தல் காட்




திரு. M. சண்முகம் B. A., L. T.
தலைமை ஆசிரியர்.

## முன்னாள் தலைமை ஆசிரியர்கள்.



திரு. B. V. இராமசாமி சாஸ்திரிகள்



திரு M. K. சுவாமிநாத ஐயர்



திரு K. சேஷகிரி ராவ்



திரு. R. நாராயணசாமி ஐயர்

சியைப் பொருநராற்றுப் படையில் காணலாம்.

கருத்து நலம் மிக்க இக்கவின் பெறு பாடலைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார் என்ற அறிவு நலம் சான்ற பெரும் புலவர். இவர் பெண்பாற் புலவர் என்று கூறுவாருமுளர். இவரது பெயரில் 'முடம்' என்ற சொல் முன்நிற்றலால் இவர் உறுப்புக் குறைபட்டவர் என்று கொள்ள இடமுள்ளது. இவர் யாழை உறுப்புறுப்பாக விவரித்தலும், பாடினியை முடி முதல் அடிவரை வருணித்தலும் கற்றோர் நெஞ்சைக் களிப்புறச் செய்வதாகும். இவர் காட்டும் உவமைகள் மிகப் பொருத்தமாக அமைவதோடு இயற்கையை நன்கு துருவி ஆராய்பவர் எனவும் தெரிகிறது. இவரது செய்யுள் நலத்தை ஆய்ந்து காணும்போது அவரது புலமைக்கோர் பெருமை தருவதாக அது அமையும் என்பது திண்ணம்.

★ ★ ★

குழந்தாய், நாம் வேண்டுவன யாவை தெரியுமா? இரும்பினையொத்த தசைநார்கள் எஃகினையொத்த நரம்புகள், இவற்றுள்ளே இடியேறு போன்ற வலிவுள்ள மனம். இவையே நமக்கு வேண்டும். ஆண்மையும் வீரமும் நமக்குத் தேவை.

★

எப்பொழுதும் தன்னம்பிக்கையை வளர்த்துங்கள். தீரச் சிறுவர்களே நீங்கள் அரும்பெருங் காரியங்களைச் செய்யப் பிறந்தவர்களென்று நம்புங்கள். இந்தியாவை மட்டுமன்று, உலகம் முழுவதையும் நாம் எழுப்பியாக வேண்டும்.

—ஸ்ரீ விவேகானந்தர்.

★ ★

## RANDOM THOUGHTS

Collection by:

T. P. NATESAN B.A., B.L.

The Art of conversation does not consist in unmeaning in terrogatories.

**Dr. Johnson.**

★

To live is to learn, No one lives or learns who never quits respectability.

**Disraeli.**

★

"The most loser in politics is the man with a grievance — a grievance against elector, a grievance against his collegue, a grievance against his chief who has passed him over or given an unsuitable office. His complaints may be perfectly legitimate but the fatal thing is to be complainant. In no profession is it more important to conceive a wound or more dangerous to endeavour to retaliate on those who have offended you."

**J. A. Spencer.**

★

# Progress of Secondary Education in the Salem District During the Fifty Years 1912-1962.

(The year of the Golden Jubilee of the Board High School Tiruchengode.)

(R. NARAYANASAMI B. A., L. T., Head Master, Retired)

When I was asked to contribute something for the Golden Jubilee commemoration volume of the Board High School, Tiruchengode, I was at a loss to find a theme. After pondering over for long, I could not think of any weighty subject fit to adorn the pages of the volume. It struck me that I could scribble a few lines about the progress of Secondary Education during the period 1912—62. My reason for the choice of the subject is that I entered service as a teacher in the Board High School, Namakkal, in 1917 and has been almost continuously connected in some way or other with Secondary Education in the District.

In 1917 there were only two Secondary Schools in Salem town and one in the mofussil, the Board High School, Namakkal. There was a Middle School sprouting in Velur. The High Schools at Salem were run by the Municipality and the London Missionary Society (The C. S. I. now). The High School at Namakkal was run by Taluk Board. Two years after, Lord Pentland, the Governor of Madras who held the Education portfolio conceived the idea of expanding Secondary Education and four incomplete Secondary Schools were opened two in the North at Dharmapuri and Krishnagiri and two in the south Rasipuram and Tiruchengode. A year after Secondary Education was transferred to the District Board. More High Schools were started by the District Board during the time of the stewardship of the last three Presidents of the District Board. There was a phenomenal rise in the number of High Schools in the District. In the private sector also three more schools the Litlle Flower School, Gokulnatha Hindu Mahajana High School, Bharathi Vidyalaya High

School were started, not to speak of a number of Municipal Branch High Schools. High Schools at Taramangalam and Urigam were also opened. So Salem which had been considered an Educationally backward District can boast of more than a hundred High School both for Boys and Girls, thanks to the liberal Educational policy of Madras Government during the Second Five Year Plan.

**Buildings:** Excepting the few schools which were started within a year or two, all the High schools are housed in spacious buildings. When Sri Nachiappa Goundar, of revered memory, was the president of the District Board, he stipulated only two conditions, whenever people approached him for opening a high school in their locality, of a pucca building to house the classes and other necessary rooms, and a minimum of five acres of land suitable for play ground. The District Board supplied the furniture, equipped the laboratory, appointed and paid the staff. Private managements were not behind hand in providing buildings and play-grounds for their schools.

**Strength of the schools:** In 1917 there were only twenty pupils in the sixth Form in the High school at Namakkal, that is the number of pupils who had the benefit of the secondary education in the mofussil, were only twenty Fifteen years after the high school Krishnagiri had a strength under four hundred, was considered uneconomic, and instead of the Head Master being a supernumerary L T was made to work as one of the L T. assistants. But since then the educational policy has tended to become more and more liberal. For instance the High School at Bargur had only one class, the Fourth Form, as the American Missouri mission who ran a higher elementary school objected to the opening of the lower forms. Yet Bargur High School had all the paraphernalia of staff a Tamil Pandit, a Physical Education Teacher, a Drawing Master, an Attender, peons, besides a Head - Master, the strength of the school being a dozen. Again we have a high school at Bandehalli with the strength less than a hundred. That the policy of the Government has been most liberal is

manifest from the fact that the Secondary Eduction is almost free now, there were days when high schools remitted collections amounting to Rs. 4000/- per month. While now the maximum remittances fall short of Rs. 40/- per mensem.

**Staff:** All the Secondary schools have their full complement of staff, though in the last decade there was some shortage.

**General Conditions of the High Schools:** Salem Secondary Schools have earned a name for efficiency during the years. All the high Schools are well equipped; they provide for all the extra curricular activities; scouting, A C C. and N. C C. groups. They have won laurels in the presidency sports meets. All this is due to the fostering care of the management, who have bestowed the most loving care upon educational institutions. The Inspectorate over the half century have almost all of them very helpful in rendering proper advice to the progress of the institutions.

Before concluding, I must make mention of the latest facilities available for school going children which help very large number of children taking to education. The present Director of Public Instruction has successfully launched upon two schemes, the mid-day meals and free clothing for the poor pupils. These schemes have enabled children from very poor strata of society to take to studies. Children whose ancestors for generations past had been illiterate, are now thronging the highest classes of the Secondary Schools. This present head of education will be gratefully remembered by miliions of children for he is feeding their hungry stomachs, covering their nakedness, and providing them with sight எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

I am sure that the next few years may see a net work of high schools within distances of less than a mile-all humming with the noise of hundreds of children so that in the next census, the literacy percentage may rise up to more than ninety. May we all do our bit to realize that dream.


★

கை உந்து பந்து

விளையாட்டுப் பகுதியின்

தோற்றம்.





மாணவர்கள் அன்றாட


விளையாட்டுப் பகுதியின்

காட்சிகள்.

பள்ளி மாணவர்களின்

குழு உடற்பயிற்சி

(Mass Drill)





கை உந்து பந்துப் போட்டியில் வெற்றி பெற்ற நம் பள்ளி ஆசிரியர்கள் 1962.

# தமிழ்

சீ. ஞானப்பிரகாசம், திருச்செங்கோடு.

வையம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. காலம் கணக்கின்றிக் கழிந்தது. பின்னரே மனிதன் தோன்றினான். ஞாலம் அவனுக்குப் பல பொருள்கள் அளித்தது. உடையும் உணவும் உண்டாக்கி உவந்தான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று இன்னல் தந்தது. அது நெஞ்சத்தை உறுத்தியது. அதனால் அவன் தவித்தான். தவிப்பு தோன்றுங்கால் தானே புதுமை தலையெடுக்கும். உள்ளத்தை உறுத்திய தனை வெளியிட்டுச் சொல்ல மொழி தெரியாது ஓவியங்கள் பல தீட்டினான். சிற்பங்கள் பல செய்தான். அதன் மூலம் தன் எண்ணங்களைப் புலப்படுத்த எண்ணினான். அவற்றாலும் அவன் நினைவு நிறைவேறவில்லை. எண்ணத்தை வெளியிட வழியறியாது ஏங்கி, ஏங்கிக் காலம் கழித்தான். பின் இயற்கையில் தோன்றிய ஒலியை அடிப்படையாகக் கொண்டு எண்ணத்தை அறிவிக்க முயன்றான். காலம் நீட்டித்தது. உணர்வு ஊக்கம் பெற்றது. அழகிய ஒலி வடிவால் எண்ணத்தை உணர்த்தினான். மேலும் உணர்வு தோன்ற வரி வடிவம் அமைத்தான் அவ்வரிவடிவம் திருத்தி அமைக்கப்பட்டுத் தற்கால உருவம் பெற்றது. மனிதன் உணர்வினால் மொழி ஒன்று அமைத்தான்.

பூமியின் வெப்பதட்பங்கள், மேடு பள்ளங்கள், நீருள்ள நிலம், நீரற்ற பாலை முதலிய இடங்களில் மக்கள் வாழ்ந்தனர். தத்தம் நிலைகட்கு ஏற்ப வாழ்க்கை நடத்தினர். ஒவ்வும் மொழிகளை ஆக்கிக் கொண்டனர். உறைவிடமாய நிலங்களின் தன்மைக்கேற்ப எண்ணங்களும் தோன்றின. இனிமையும், மென்மையும், வன்மையும் அம் மொழிகளிலே எண்ணங்களுக்கு ஏற்ப அமைந்தன. உணர்வு பெற்ற அம் மொழிகளே முதன் மொழிகளாகக் கருத்துப் பெறலாயின. அவைகளில் தான் உணர்ச்சி மிகுதி. அவ்வுணர்ச்சியை வெளியிடும் ஆற்றல் மிகுதி. ஆனால் அளவு கடந்த செழிப்புமிக்க இடங்களில் நடுத்தர மொழிகள் பிறந்தன. நம் தமிழ் மொழியும் முதலில் உணர்வு கொண்டு தோன்றிய மொழியே ஆகும். "வடவேங்கடம் தென்குமரியிடை வழங்கி வந்தது. நாம் தமிழர் என்று மொழியால் பெயர் பெற்றோம்."

உணர்வுகொண்டு தோன்றிய தமிழ் மொழி அழகாக அமைந்துவிட்டது. உணர்வுகள் பலவிளக்க, இலக்கியங்கள் பல பிறந்தன. ஆகையால் இந்த உணர்வுகளை ஆள இலக்கணவரம்பு அவசியமாயிற்று. அதன்படி சொற்களின் விகுதிகள் வகுக்கப்பட்டு அவை மிகவும் திரியாதவாறு அமைக்கப்பட்டன. தமிழறிஞர் அதனைக் கருத்திற்கொண்டு தங்கள் கருத்தினைக் காலம்கருதி. உணர்வினை உள்ளிருத்தி. எண்ணத்திற்கு ஏற்ப நூல்கள் பல யாத்தனர்.

பிறமொழிகளும் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் பெற்றன. அவை சில சொற்களின் திரிபை எண்ணிப் பார்க்கவில்லை. வருங்காலம் பற்றி எண்ணாது. தம் காலம் பற்றி மாத்திரமே அறிஞர் சிலர் எண்ணினர். ஆகவே அழகாய் அமைந்த மொழிகளும், கடுமையாய் உருவான மொழிகளும், இலக்கணத்தை எண்ணிப்பார்த்தால் குறையிருக்கப் பெற்றன. சிலர் சொல்லையும் வினையையும், பெயரையும்

அவற்றின் உறுப்புக்களையும் உயர்வாக உன்னிப் பொருளினை மறந்து விட்டனர். உள்ள உணர்வையும் புறத்தின் ஒழுக்கத்தையும் அறியவில்லை. தமிழ் மொழியோ உவமை பல உட்கொண்டு அருளும், அன்பும், வீரமும், பாவின் பண்புகளும், மரபு முறைகளும் முற்ற முடிய எடுத்துக்கூறும் பொருளியலை மேற்கொண்டு மேம்பாடுற்றது. தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்று பொருள். கற்போர் கேட்போர் உள்ளத்தையும் உணர்வையும் ஈர்த்து இன்புறச் செய்யும் தன்மையுடையது.

ஆண்டுகள் பல அகன்றன. அழகு தமிழ் விம்மிதம் அடைந்தது. சங்கம் அமைத்து சேர சோழ பாண்டியரும் குறுநில மன்னரும் தமிழ் தழைக்கச் செய்தனர் நாள்தோறும் வளர்ந்தது. இசையும் நாடகமும் சேரவே தமிழ் முத்தமிழாயிற்று பிற மொழிகள் கலக்க நாடின. அம்மொழிகளின் வேறுபாட்டினையும் தன்மையையும் தன் இலக்கணத்துக்கு ஒப்ப அன்பொலி கொடுத்து ஏற்றுக்கொண்டது தமிழ். இதுபோழ்துதான் கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் தமிழிலிருந்து அழகுச் செல்வங்களாய்த் தோன்றலாயின. ஆயினும் தமிழின் இனிமையும் அழகும் குன்றவில்லை பன்மடங்கு அதிகமாகப் பொலிந்தது.

சில வேறு மொழிகள் போலல்லாமல் தமிழானது பழம்நிலை குலையாது. நயம் மிகுந்து இலக்கியத்தில் இன்ப நடை பெற்றது. அழகுப் புலனுக்கியது வீறு கொண்ட நடையினால் போரினைச் சாற்றியது. காதற் கருத்தைக் காட்டியது. இசையால் நெஞ்சத்தைக் குளிர வைத்தது. மழலைச் சொல்லாடும் குழவி போல் இன்பமளித்தது. இந்நிலையிலே தமிழ்க் கன்னியை அழகுபடுத்தலாயினர் பலரும். சிலம்பணிந்து மகிழ்ந்தார் சேரர் இளங்கோ. மேகலை கொடுத்தார் அவர் நண்பர் சாத்தனார். தவத்தவராகிய திருத்தக்க தேவர் சிந்தாமணிமுடி தந்து "கடந்த ஞானியரும் கடப்பரோ மக்கள் மேல் காதல்" என்ற கூற்றை மெய்ப்பித்தார். மற்றுமொருவர் வளைபூட்டினார். காதணி இட்டார் வேறொருவர். இவ்வாறு தமிழ்க் கன்னி தலை, காது, கை, இடை, பாதங்கள் அழகுபடுத்தப்பட்டு அழகாக விளங்கினாள். தமிழ்க் கன்னி பூரிப்படைந்தாள்.

கவிஞர் அகநூலால் அன்பைப் பாடினர்; அறமும் அறப்போரும் புறநூலால் பாடப்பெற்றன; பரிபாடலால் பண்ணமுதை இசைத்தனர்; அறநூல்கள் தோன்றின. தமிழ் உன்னத நிலையினை அடைந்தது. பெரும் இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் தோன்றின. பாவின் வேந்தர் பூவின் வேந்தரை ஏத்தினர்; கொடை பெற்றனர். வள்ளல்கள் கொள்ளை கொள்ளையாய்க் கொடுத்துப் புகழடைந்தனர். புலவர்க்கு நாடு கொடுத்தும், ஊர் கொடுத்தும், அரசு கொடுத்தும் தமிழை வளர்த்தனர். அரசியலிலும் பொருளியலிலும் தமிழ் கொழுத்துச் செழித்தது. சங்கப் புலவர்கள் பாடிவைத்த சில நூல்கள் இன்றைய தமிழர்க்குக் கிடைக்காதது ஒரு பெருங்குறை. மறைந்த நூல்களுக்காக இரங்காமல் கிடைத்துள்ளனவற்றைப் பாதுகாத்துப் பயன்பெறுவது அன்னார் கடமை.

காலம் மாறுகிறதன்றோ? அந்நியர் ஆளுகையில் நாடுபட்டது. அந்நியர் மொழி கற்றவர் மேனிலை பெற்றனர். தமிழ் தாழ்ந்தது. தலையெடுக்க வாய்ப்பில்லை ஆங்கில ஆட்சியும் புகுந்தது. சிலர் அவர் மொழி தாவிச் சென்றனர். அம்மொழி மோகம் எங்கும் தங்கியது. அம்மொழி நாடிச் சென்றவர், மீண்டு அழகுத் தமிழில் அவர் மொழியைக் கலந்தனர். சில அறிஞர் தமிழை அழகுபடுத்த எண்ணினர்; உழைத்தனர்; ஆனால் நினைத்த அளவு சேவை புரிய இயலவில்லை அக்காலம் தமிழ்க் கவிதைகளும் செழிக்கவில்லை. பல காவியங்களும் பல்கவில்லை. ஆராய்ச்சியாளர் அவதியுற்றனர். ஊதியமும் இன்றி, பொருள் ஈட்டவும் இயலாமல் தமிழ் வளர்த்த ஆசிரியர்கள் வறுமையில் உழன்றனர்.

ஞாலம் புகழும் அமைதிப்போர் அந்நியரை அகற்றியது. நாமும் உரிமை பெற்றோம். தமிழின் தள்ளாட்டம் தவிர்ந்தது. தமிழர்களது தமிழ் மொழி வளரத் தடையில்லை என உவந்தோம்.

"ஆங்கிலம் மட்டும் நல்லது." "தமிழ் தனித்து வழங்க இயலாது" என்றவர் எண்ணங்கள் இரிந்தன. இன்று தமிழ் தமிழகத்தின் முதன் மொழியாகிவிட்டது. அரசியலில் சில பகுதிகள் தமிழிலேயே தங்கள் அலுவலை அன்றாடம் நடத்துகின்றன. கல்லூரிகளும் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே போதிக்க முனைந்துள்ளன. சில தினசரிப் பத்திரிக்கைகளும் வாரப் பத்திரிக்கைகளும் மாதப் பத்திரிக்கைகளும் தூய தமிழில் எழுதி வருவது மகிழ்ச்சிக்குரியதே.

இனி வருங்காலம் தமிழுக்கு இனிதோ, இனிதல்லையோ? என எண்ணம் எழுகின்றது "நன்மை தருவது குடியரசு, செம்மை பெற்றது செந்தமிழ். இனிய தமிழில் இலக்கியம் பல இயற்ற என்ன தடை" என்போம். ஒரு மொழி வளர அதன் இலக்கியம், இலக்கணம், அதனை வழங்கும் மக்கள் மனப்பாங்கு, நம்மிடை வாழும் மற்ற மொழியாளர் எண்ணம், நாம் கூடி வாழும் நாடு இவற்றை நோக்கவேண்டும். வகையாய் வளர்ந்த மொழி ஒன்று நிலை குலைந்து அழிய எந்தக் குடியரசும் இடம் தராது.

தமிழின் இலக்கிய, இலக்கணங்களைத் தெளியுங்கால் ஒரு தனிக் கட்டுக்கோப்புக் காணப்படுகின்றது. அந்நிய மொழிகள் தமிழ் இலக்கண வரம்புக்குட்பட்டே, தமிழின் இனிமை பெற்றே தமிழில் வர இயலும். ஒரு மொழி அழியாமல் இருக்க அதனை அளவுபடுத்திக் காப்பது அதன் இலக்கணம். அது நலிந்து மாறினால் மொழி ஒழியும். தமிழிலுள்ள வினையின் தன்மை, பெயரின் பாங்கு, தன்மை முன்னிலை படர்க்கை விகுதிகள், விளியேற்கும் பெயர்கள், விளியேலாப் பெயர்கள், குறுகும் சொற்கள், நீளும் ஒலிகள், என்பன ஏற்றபடி வரம்புபடுத்தப்பட்டுள்ளன. இவை மாறினால் தான் தமிழுக்கு அழிவு நேரும் இவை மாறும் நாள் இல்லையென இலக்கியங்கள் நிலைத்து நின்று அவ்வச்சத்தைப் போக்குகின்றன. குடியரசின் கீழுள்ள பல மாகாணங்கள் மொழிவாரியாக உள்ளன. மொழியுணர்வு பலமற்றது அல்ல. தமிழர் உணர்வில் உயர்ந்தவர். எனவே இனிய தமிழ் தமிழர் உள்ளத்தினின்று நீங்காது; எனவே அழியாது; அழிக்கவும் ஆகாது.

கல்வி நிலையில் இனி தமிழ் உயரும். அறிவியல் முதலிய கலைகள் தமிழில் கற்பிக்கும் வளம் பெறும். பெரும் இலக்கியங்கள் பல தோன்றும். பலமொழிகள் பயின்றோர் வேற்று மொழிகளிலுள்ள உயர்ந்த கலைகளையும், கருத்துக்களையும் நம் பண்பிற்கு ஒப்ப மொழி பெயர்த்து அளிப்பர். தமிழ் மணத்தைப் பிற நாட்டாரும் நுகர தமிழ் நூல்கள் மொழி பெயர்க்கப்படும். தமிழ்பற்றி, தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ச்சிகள் பலகோணங்களில் நடைபெறும்.

எங்கும் தமிழொலி தமிழ் எண்ணம், தமிழ்மணம் ஓங்குக!!

★ ★ ★

தீய காற்று வீட்டை விட்டு வெளியே போகவேண்டுமானால் நல்ல காற்று வீட்டுக்குள் நுழையவேண்டும். அதுபோல் தீய எண்ணங்கள் நம் உள்ளத்தை விட்டு அகலவேண்டுமானால் தூய கருத்துக்கள் உள்ளே புகுதல் வேண்டும்.

--காந்தியடிகள்.

# கொங்கும் தமிழும்

ஏ. அ. சிரங்க முதலியார்.

"கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்" என்ற பொருளுரை தமிழ் நாட்டில் வழங்குகிறதல்லவா? கொங்கு என்பது நாட்டைக் குறிக்கின்றது. கொங்கு என்ற சொல்லுக்கு "பூந்தாது, மணம், தேன்" என்ற பல பொருள் உண்டு. கொங்குநாடு முழுவதும் மலையும் குன்றுகளும் ஆறுகளும் நிறைந்தது. இயற்கை எழிலைத் தன்னகத்தே கொண்டது. மரம் செடிகள் மிகுந்து தழைத்துப் பூத்து மணம் கமழ்ந்ததாலும், தேன் மிகுதியாக இருந்ததாலும் முன்னோர்கள் இந்நாட்டுக்குக் கொங்குநாடு என்று பெயர் சூட்டினர். அருமையான காரணம்! அழகான பெயர். கம்பர் கொல்லி மலைத்தேன் சொரியும் கொற்றவ; என ஒரு அரசனை விளிக்கின்றனர்.

"நாடு என்ப நாடா வளத்தன" என்ற இலக்கணத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு இக்கொங்கு. பிற நாட்டையோ பிறரையோ தன் வாழ்க்கைப் பொருள்களுக்கு நாடிச் செல்லாமல் வேண்டும் வளங்களை எல்லாம் தன்னகத்தே பெற்று விளங்குகிறது இக்கொங்கு நாடு.

இக்கொங்கு நாட்டினைப் பற்றியும் இதன் அரசர்களைப்பற்றியும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க நூலாகிய பதிற்றுப்பத்தின் 22, 27 வது செய்யுட்கள் கூறுகின்றன. புறநானூற்றின் 330, 333 வது செய்யுட்களும் செப்புகின்றன. சேரன் செங்குட்டுவன் கண்ணகித் தெய்வத்துக்குக் கோவில் சமைத்துக் கொங்கிளங்கோசரோடு விழாக் கொண்டாடினான் எனச் சிலப்பதிகாரத்தில் காணலாம். கோசர் என்பார் துளுவ நாட்டை ஆண்ட வீரமரபினர். அவர்களது பின் தோன்றல் கொங்கின் ஒரு பகுதியை ஆண்டிருக்கலாம். அவர்களே இளங்கோசர் ஆவர் என ஆராய்ச்சி வல்லுநர் அறிவிக்கின்றனர்.

கேரளோற்பத்தி என்ற மலையாள வரலாற்று நூலும், திருசங்குண்ணி மேனன் எழுதிய திருவாங்கூர்ச் சரித்திரமும், (Wilkes) என்பவர் இயற்றிய மைசூர் வரலாறும் கொங்கு நாட்டினைப் பற்றிக் கூறுகின்றன. ஆகையால் கொங்குத் தனி நாடு பழமையுடையது என அறியலாம்.

இந்தப் பழமையான கொங்கு நாட்டின் எல்லைகள் பழைய நூல்களிலிருந்து தெரியவருவது:—

கிழக்கு:- கல்ராயன்மலை, சேர்வராயன்மலை, கொல்லிமலை, பச்சைமலைகள் ஆகியவை.

(கிழக்கிலே கொங்கு நாடும் சோழ நாடும் சந்திக்குமிடம் இப்பொழுது குளித்தலை என வழங்கப்படும் குளித்தலை மதிற்கரையாகும்.)

தெற்கு:- ஆனைமலையும் வராகமலைத் தொடரும் ஆம்.


(தெற்கிலே பாண்டியநாடும் கொங்கு நாடும் சந்திப்பு பழனியில்.)


மேற்கு:- நீலகிரியும் வெள்ளிமலையும் ஆகும்.

(மேற்கிலே கொங்கு நாடும் சேர நாடும் சந்திக்குமிடங்கள் வாளையாறும் மதுக்கரையுமே.)

வடக்கு:- தொப்பூர் மலைகள், பருகூர் மலைகள், தலைமலைகள், வெள்ளாறு ஆகியவை,

(வடக்கிலே வெள்ளாற்றினருகே கொங்குநாடும் கங்கநாடும் சந்தித்தன. முன்னர், இப்பொழுதுள்ள மேட்டூர்த்






மேலிருந்து கீழ்:

1. சென்டர் ஹால்.
2. பள்ளி மாணவர் கட்டபொம்மன் நாடக மன்றம்.
3. பெற்ருேர் சங்க நன்கொடைபதினுன்கு வகுப்பறைகள்.





நாச்சியப்பா மாணவர் இல்லக் கட்டிடக் குழுவினர் 1957.

தேக்கம் இருக்குமிடத்திலே இவ்வாறு காவிரியோடு கலந்தது சங்கமும் அதன் அருகே இருந்த சோழபாண்டி என்னும் இடமும் அத்தேக்கத்தில் மூழ்கியுள்ளன.)

இந்த எல்லைகளுக்குள் அமைந்து,

**கோவை மாவட்டத்தில்** கொள்ளேகாலம் வட்டம் (தாலூக்கா) தவிர அம் மாவட்டத்தின் ஒன்பது வட்டங்களும்;

**சேலம் மாவட்டத்தில்** தர்மபுரி, ஓமலூர், ராசிபுரம், சேலம், நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய ஆறு வட்டங்களும்;

**திருச்சி மாவட்டத்தில்** கரூர் வட்டமும்;

**மதுரை மாவட்டத்தில்** பழனி வட்டத்தின் மேற்குப் பகுதியும் தென்கிழக்குப் பகுதியும்;

அடங்கிய பெரும் பரப்பினையுடையது கொங்குநாடு என அறியலாம்.

இப்பரப்பினிடையே மழைவளங் குன்றினும் தன்வளங்குன்றாத காவிரியும் அதனிடம் கலக்கும் பவானி, அமராவதி, நொய்யல், திருமணிமுத்தாறு முதலிய பல சிற்றாறுகள் கொங்கின் சிறப்புக்குக் காரணமாகின்றன. மாமலைகளில் மழைபெய்து அவை வளம் பெறுகின்றன. அம்மலைகளிலிருந்து இழியும் சிற்றாறுகளால் நிலம் வளம் பெறுகிறது. இக்கொங்கு ஆகிய குறிஞ்சிநாடு வளமலியத்தடையுமுண்டோ? மலையும் மலைசார்ந்த இடமுமே குறிஞ்சி. அதனால் இந்நாடு மலைவளம் மிகுதியும் பெற்றது. மழைவளம் குன்றிய காலத்தும் தன்வளம் தப்பாத கிணறுகள் நீர் வளத்தைச் சுரக்கின்றன. இந்த நாட்டில் உள்ள கிணற்று வளம் வேறு எங்கணுமில்லையெனலாம்.

உலகப் புகழ்பெற்ற கால்நடைச் செல்வத்தை மிகுதியாக உடையதும் கொங்கு நாடே. கொங்கின் உழவர்கள் உழைப்பின் செல்வர்கள். உலையா முயற்சியுடையவர். உழைப்பையே உயரியதாகக் கொண்டவர். இலம் என்று இராதவர். இதனாலும் கொங்கு மலிவதில் வியப்பில்லை.

கொங்கு தேச ராஜாக்கள் என்ற கையெழுத்துப் பிரதி பழைய நூல் ஒன்று உளது. அது கொங்கின் அரசர்கள் சரிதம் சாற்றுகிறது. அதன்படி முதல் நூற்றாண்டில் இரட்டகுல வேந்தன் வீரராஜ சக்ரவர்த்தியும் அவனுக்குப்பின் அவ்வம்சத்து அரசர் அறுவரும் இந்நாட்டை ஆண்டதாகத் தெரிகிறது. தொடர்ந்து கங்கர், நொளம்பர், பாண்டியர் ஒய்சாளர், சோழர், மைசூர் உடையார்கள், மகம்மதியர், விஜயநகர ராயர்கள் மதுரை நாயக்கர், ஆங்கிலேயர் ஆண்டனர்.

முற்காலக் கொங்குநாடு, வடகொங்கு, கீழ்கொங்கு, மேல்கொங்கு, மழகொங்கு என்று நான்கு பெரும் பிரிவுகளாகவும், 24 சிறு பிரிவுகளாகவும் பிரிந்திருந்தது. பழங்காலக் கொங்கு அரசர்கள் அவற்றிற்குத் தனித்தனியே தலைவர்களை ஏற்படுத்தி, அவர்கள் மூலம் நாடு காவல் வரி தண்டல், நியாயம் வழங்குதல் முதலியன நடைபெறச் செய்தனர்.

இக்கொங்கு நாடு தனி நாடாயினும் சேர, சோழ, பாண்டிய, தொண்டை, நடு முதலிய நாடுகளோடு தொடர்பு உடையதாய் இருந்து வந்ததால் அறிவிற்சிறந்த தமிழ்ப் புலவர் பலர் இங்கிருந்து மற்ற நாடுகளுக்கும் சென்று வந்தனர். அங்கங்கிருந்தும் இங்கு வந்தனர். அதனால் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்ப் புலவர்கள் பூக்களை நாடிச் செல்லும் வண்டினங்களைப் போல் புரவலர்களை நாடிச் சென்றனர். தமிழ்ப்பாக்களால் புரவலர் புகழ் பாடினர். கொடை பெற்றனர். கொடை கொடுத்தவர் பெற்றவரை நூல்கள் பல இயற்றத் தூண்டினர் புலவர்க்கு நாடு கொடுத்தும், ஊர் கொடுத்தும், அரசுப் பதவி கொடுத்தும் தமிழ் வளரச் செய்தனர். இவ்வாறு தமிழ் பரவியது.


சோழ நாடு சோறுடைத்து; பாண்டியநாடு முத்துடைத்து; சேரநாடு வேழமுடைத்து; தொண்டைநாடு சான்றோர் உடைத்து என்ற பொருளுரைகளோடு கொங்குநாடு கொடையுடைத்து என்பதனையும் சேர்த்துக் கொள்வதே பொருத்தமுடைத்து.



# கொடிமாடச் செங்குன்றூர்

"கு. கந்தசாமி"
டிப்டி தாசில்தார் திருச்செங்கோடு

குன்றம் அமரும் முருகன் கோவில் கொண்டருளிய இடங்கள் பல. நீண்ட மலைகளும் நெடிய சோலைகளும் வளம் பொருந்திய வயல்களும் அவன் வாழ் இடங்களாம். எங்கு அழகு உண்டோ அங்கெல்லாம் முருகன் உண்டு. அவன் இல்லாத இடமே இல்லை. இப்படி அவன் வாழும் இடங்கள் பற்பலவாயினும் எங்கே நினைக்கினும் அங்கே முன் வந்து நிற்பவன் செங்கோட்டு வேலவன். நம் சொந்தக் கடவுளாம் கந்தக் கடவுளின் புகழ்பாடும் கந்தரனுபூதியில் அருணகிரியார் வேறு எத்தலங்களையும் பாடாது நாகாசல வேலவனையே நாவாரப்பாடுகின்றார். அருணகிரியார் செல்லாத் தலங்கள் இல்லை. ஆறு திருப்பதிகள் கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறும் அடியவரது மனத்தில் நாகாசல வேலவனே குடிகொண்டிருத்தல் வேண்டும். அதனாலன்றோ அனுபூதியில் அவனை மட்டும் பாடியுள்ளார். "தேவரும் மறையும் இன்னமும் காணாச் செஞ்சடைக் கடவுளைப் பாடிய" மூவரில் முருகனே முதல்வராய்த் (சம்பந்தராய்த்) தோன்றியவர் என்பர் முந்தையோர். அத்தகைய சிறப்பினை உடைய நம் சம்பந்தப் பெருமானது சம்பந்தம் பெற்ற தலம் செங்கோடு. (வானாகவும், மண்ணாகவும், வளியாகவும், ஒளியாகவும், நீராகவும் விளங்குபவன் சிவபெருமான். அவன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிற்பவன். அம்மையாகவும் அப்பனாகவும் விளங்குபவன். அத்தகைய சிறப்பினையுடைய சிவன் எனும் செம்மேனிச் செல்வனது கோவில்கள் பல தனிச் சிறப்புடையனவேனும் அம்மை அப்பனாகக் காட்சி தரும் கோலம் செங்கோட்டைத் தவிர வேறு எங்கும் இல்லை.



மலைமேல் கோபுரம்.

தோலாடை ஒரு புறம், துகிலாடை ஒரு புறம், குழையணி ஒருபுறம், சுருள் தோடு ஒரு புறம், பால் வெள்ளை நீறு ஒருபுறம், பசுஞ் சாந்து ஒரு புறம், சூலம் ஒரு புறம், பைங்கிளி ஒரு புறம். இத்தகைய இரு வடிவங்களையும் ஒருருவில் கண்டு திளைத்தவர் சம்பந்தப் பெருமானும், மணிவாசகரும். சம்பந்தப் பெருமான் ஞானப் பால் உண்டதுமே மதி சூடியாம் விடைமேல் ஏறிய விகிர்தனைப் பாடிய முதல் தேவாரத்திலேயே அம்மையையும் அப்பனையும் புகழ்ந்து பாடுகின்றார். அம்மையை முதலிலே கண்டார். அதனால் அவரது கண்களுக்கு முதலில் தெரிந்தது "தோடு" தோடு பெண்களுக்கே உரிய காதணி. "அதனால் தான் தோடுடைய செவியன்" என்று பாடினார். ஆகவே ஞான சம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய தெய்வ மணக்கும் தேவாரத்தில் முதல் பாசுரத்திலேயே அம்மை அப்பனாகிய நம் அர்த்தனாரியைப் பாடினாரெனின் செங்கோட்டிற்கு இதனினும் வேறு சிறப்பு வேண்டுமோ?

இத்தகைய அருங்காட்சியைக் கண்டு கண்டு திளைத்தவர் மணிவாசகப் பெருந்தகை. "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்றார் பிடித்த பத்தில். தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும் பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும், சூலமும் தொக்கவளையுமுடைத் தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி" என்று கோத்தும்பியில் அம்மை அப்பன்கோலத்தைச் செம்மையாக வருணிக்கிறார் வாதவூரார்.

"ஓதும் நம் தாய் மொழிக்குயிரை ஒத்த நூல், பூதல முழுதும் புகழ்ந்து போற்று நூல்" நம் திருக்குறள். அக்காலத்திற்கும் இக்

காலத்திற்கும் எக்காலத்திற்கும் ஏற்புடைய நூல் திருக்குறள். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட நூல் திருக்குறள். ஐம்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்ட நூல் திருக்குறள். இத்தகைய சிறப்பினை உடைய திருக்குறளில் முதல் குறட்பாவிலேயே வான்புகழ் வள்ளுவர் அம்மை அப்பனையே பாடியுள்ளார். "ஆதி பகவன் முதற்றே யுலகு" என்ற குறட்பாவில் ஆதியாம் அம்மையையும் பகவனும் அப்பனையுமே பாடினரெனின் செங்கோட்டிற்குச் சிறப்பு இதைவிட வேறு என்ன வேண்டும்?

செங்கோடு தேவாரத்தில் "கொடிமாடச் செங்குன்றூர" என்று பேசப்படும். சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் மலை வளம் காணச் சென்ற இடம் செங்குன்றூர். அது பேரியாற்றங்கரையில் உள்ளது. அதனின்றும் வேறு படுத்தவே கொடிமாடச் செங்குன்றூர் என்றார் தேவார ஆசிரியர். இக் கொடிமாடச் செங்குன்றூர் சம்பந்தர் காலத்தில் கோ நகராய் இருந்தது என்பதனைச் சேக்கிழார் "இம்பரும் உம்பரும் ஏத்த இன்னிசை வண்டமிழ் பாடிக் கும்பிடும் ஆதரவுடன் அக் கோ நகரில் இனிதமர்ந்தார்" என்று பாடியுள்ளார். கொங்கு நாட்டின் கோ நகராய் விளங்கியது நம் செங்கோடு என்பது பெரிய புராணத்திலிருந்து தெரிகிறது.

ஞான சம்பந்தப் பெருமான் செங்கோட்டிற்கு வந்த காலையில் அவரது உடன்வந்த அடியார்களெல்லாம் குளிர் சுரத்தினால் வாடினார்கள். குளிர் சுரத்தைப் போக்க "அவ்வினைக்கிவ்வினை" என்ற பாசுரத்தைப் பாடினார். இப்பாடலைப் பாடுவோர் எவ்விடத்திலுள்ள அடியார்களாயினும் அவர்களது இடர் தீரும் என்பது உறுதி "எவ்விடத்தும் அடியார் இடர் காப்பது கண்டம்" "செய்வினை தீண்டா திரு நீலகண்டம் எனச் சம்பந்தர் செப்பினார்" என்ற தெய்வச் சேக்கிழார் அடிகளால் தெள்ளிதின் அறியலாம்.

சம்பந்தப் பெருமான் செங்கோட்டில் பாடிய "திருநீல கண்டப்பதிகம்" எவ்விடத்தும் உள்ள அடியாரது இடரைத் தீர்க்கும் என்றால் செங்கோட்டில் உறையும் மாதொரு பாகனரின் பெருமையை என்னென்பது?

கோ நகராய் விளங்கிய செங்கோடு. செஞ்சாலி கஞ்சம் ஒன்றாய் வளர்ந்த வளப்பம் உடையதாய் விளங்கியது. தெய்வ மணம் கமழ்ந்து விளங்கும் செங்கோடு அரசியலிலும் முதன்மை பெற்று விளங்குவது அரசியலறிஞர் மட்டுமன்றி அனைவரும் அறிந்ததே.



திருச்செங்கோடு மலையின் தோற்றம்.

★ ★ ★ ★

# சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை

சு. சுந்தரம். பி.ஏ. (ஆனர்சு) பி.டி.,

வாளும் வேலும் தாங்கிய காவலர்கள் சொல்லாலும் செயலாலும் அச்சுறுத்தும் அரக்கியர்கள். அவர்களிடையே சிறைப் பட்ட மங்கை சீதை. அரக்கியர்கள் வெம் புலிக்குழாம் எனின் சீதை மானிளம்பேடை. அவர்கள் எரிக்கும் வெயில் எனின் அவள் வெயிலிடை விளக்கு. அவர்கள் கல்லினைப் போன்றவர்கள் என்றால் அவள் கன்மருங்கு எழுந்த நன்மருந்துச் செடி.

அரக்கர்களிடையே சீதை இலங்கையில் அசோகவனத்தில் சிறைவைக் கப்பட்டுள்ளாள். இராவணன் இலங்கை யில் தன் பொழுதுபோக்குக்காக அமைத் துக்கொண்ட பூங்காவே அசோகவனமா கும். அப்பூங்காவிற்குப் பொலிவூட்டுவது அங்கு மலர்ந்து மணம் வீசும் பலவண்ணப் பூக்கள். பூங்காவினிடையே தாமரைத் தடா கம் இருப்பது இயற்கை. அசோகவனத்தில் தாமரை பூத்துக் குலுங்கும் தடாகங்கள் பல விருந்தன என்று சொல்லித்தெரிதல் மிகை.

இராமனைப் பிரிந்த சீதை அசோக வனத்து இருக்குங்காலை அங்கு, பொய்கை யில் பூத்த செந்தாமரை ஒன்றைக் கண்ணுற் றாள். செந்தாமரையின் மலர்ச்சி அவள் மனத்தைத் தன்பால் ஈர்த்தது. சீதையின் மனத்தில் இராமனின் நினைவே எந்நேரமும் நிறைந்திருந்தது எனச் சொல்லவேண்டா. ஆதலின் தடாகத் தாமரையினைக் கண்ட வள் அதன் மலர்ச்சியோடு தன் கணவனின் முகமலர்ச்சியைப் பொருத்திப் பார்த்தாள். அவள் மதிப்பீட்டில் தடாகத் தாமரை தரங் குறைந்ததாகத் தோற்றிற்று. ஆதலின் இரா மனின் மாறாத முகமலர்ச்சிக்கு ஒப்பாகக் கூடிய ஒரு தாமரை மலர் எங்கேனும் உண்டா என்றெண்ணினள். அவள் நினை வுக்குச் சித்திரத் தாமரைக்கு இழுத்துச் சென்றது. சித்திரத் தாமரையினை ஒத்திருக் கும் இராமனின் முகத்தினை மீண்டும் காணும் நாளைக் காண விழைந்தாள்.


இனி, இக்கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் கம்பரின் பாடலைக் காணு வோம்.

"மெய்த் திருப்பதம் மேவு என்ற
போதினும்
இத்திருத் துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்"

இப்பாடல் இரண்டு வினாக்களை இங்கு எழுப்புகிறது. "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும்" முகம் என்றது ஏன்? "திருத்துறந்து ஏகு என்ற போதி னும்" சித்திரதது அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகம் என்றது எப்படி? இவையே அவ்விரண்டு வினாக்கள்.

இராமனின் முகமலர்ச்சிக்குக் கம்பர் சித்திரத் தாமரையை ஒப்பிடுவானேன் என் பதற்கு முதலில் விளக்கம் காண்போம்.

மெய்த்திருப்பதம் மேவு என்ற போதில் இராமனின் முகம் தாமரையின் மலர்ச்சியை ஒத்திருந்தது. திருத்துறந்து ஏகு என்ற போதிலும் இராமனின் முகமலர்ச்சி, தாமரை யின் மலர்ச்சி போன்றேயிருந்தது. இரு வேறு நாளில், இருவேறு நிலையில் இராமன் கொண்ட மலர்ச்சிக்கு -- மகிழ்ச்சிக்கு ஒப் பாகக் கூறப்படுவது தாமரையின் மலர்ச்சியே யாகும். ஆனால் இருவேறு நிலையிலும் அவன் தன் முகம் படிந்த மலர்ச்சிக்கு ஒரேயொரு பொய்கைத் தாமரை மலரின் மலர்ச்சியினைக் கவிஞனால் ஒப்புச் சொல்ல இயலவில்லை; இயலாது. ஏனெனில் "மெய்திருப்பதம்



பள்ளி ஆசிரியர் குழு 1962.

மேவு'' என இராமனிடத்து வேண்டப் பெற்ற நாள் ஒருநாள். அந்நாள் அவனடைந்த மகிழ்ச்சிக்கு அன்றலர்ந்த தாமரையின் மலர்ச்சியினை எளிதில் உவமித்து விடலாம். ஆனால், 'திருத்துறந்து ஏகு' எனக் கூறப்பெற்ற நாள் பிறிதொரு நாள். அந்நாளிலும் அவன் மகிழ்ச்சியே யடைகிறான். அம்மகிழ்ச்சியும், 'மெய்த்திருப் பதம் மேவு' என்றதால் விளைந்த மகிழ்ச்சியும் எள்ளளவும் வேறுபாடின்றி ஒத்தேயிருந்தன. ஆதலின், மெய்திருப்பதம் அடைந்த நாள் மலர்ச்சிக்கு ஒப்புக்கூறப்பெற்ற தாமரை மலரையே மெய்த்திருப்பதம் இழந்த நாள் மலர்ச்சிக்கு ஒப்புச்சொல்ல இயலாது. ஏனெனில் தாமரை மலர் காலை மலர்ந்து மாலை உலர்ந்து விடும். அதன் மலர்ச்சிக்கு வாழ்வு ஒரு பகல் தான். ஆனால் இராமனின் மாறாத முகமலர்ச்சிக்கோ சிலநாள் வாழ்வு. பல நாள் வாழ்வுக்கு ஒரு பகல் வாழ்வினை எங்ஙனம் ஒப்புச்சொல்ல முடியும்?

இருவேறு நிலையில் அவன் கொண்ட மலர்ச்சிக்கு இருவேறு தாமரை மலர்களை ஒப்பாகக் கூறலாமே எனலாம். அதுவும் இயலாதவொன்று. ஒரு நாள் அலர்ந்த தாமரை மலரின் மலர்ச்சி இன்னொரு நாள் அலர்ந்த தாமரையின் மலர்ச்சியோடு முற்றிலும், பொருந்துவதில்லை. இருவேறு தாமரை மலர்களின் மலர்ச்சி, ஒன்றனோடு ஒன்றினை ஒப்பிடும்பொழுது சிறிதளவேனும் மிகுந்தோ, அன்றிக் குறைந்தோதானிருக்கும். இராமன் இருவேறு நிலையில் கொண்ட மலர்ச்சியோ ஒன்றுக்கொன்று துளியேனும் வேறுபாடு கொண்டதாகவில்லை. ஆகவே அத்தகு மகிழ்ச்சிக்கு இருவேறு தாமரை மலர்களின் மலர்ச்சியினை உவமையாகச் சொன்னால் அவ்வுவமை பொருத்தமுடையதாக இராது. ஆகவே, கம்பர் பொய்கையில் பூத்து, அன்றலர்ந்து அன்றேயுலரும் செந்தாமரையினைச் சொல்லாது ஓவியத் தாமரையினை உவமையாக்கினார்.

சித்திரத்தில் தீட்டப்பெற்ற செந்தாமரை ஓவியனின் கைவண்ணத்தால் ஒரு நாள் மலர்ந்ததுண்டு ஆனால் அத்தாமரை உலர்ந்ததையோ, உதிர்ந்ததையோ கண்டதில்லை. இரவு, பகல், நாள், திங்கள், ஆண்டு - இப்படிக் காலம் கழிந்ததுண்டு. ஆனால் காலக்கழிவால் சித்திரத் தாமரையின் ஒரே தன்மைத்தான மலர்ச்சி மறைந்ததில்லை. அதனாற்றான் கவிஞர், எக்காலத்தும், இன்பத்திலும், துன்பத்திலும் மாறுபடாத மலர்ச்சியினைக் கொண்ட சீதை கேள்வனின் முகத்திற்குச் சித்திரத் தாமரையினை உவமை சொன்னார்.

ஒரு புதிருக்குத் தெளிவு பிறந்தது. அடுத்த புதிர் ஒன்று நம்மை எதிர்நோக்குகிறது.

இன்பத்தில் இராமன் முகம் மலர்ந்தது எனின் உண்மை. ஆனால் துன்பத்திலும் அவன் முகம் இன்ப வேளையினை ஒத்தே மலர்ந்தது என்றால் எங்ஙனம் நம்பவியலும்?

கம்பர் நம்மை நம்பவைக்கிறார். அதற்கு அவர்காட்டும் ஓரிரு பாடல்களை அறிவது நலம்.

தயரதன் இராமனைத் தழுவி நின்று கோசல நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்க வேண்டுகிறான். இராமன் தன்னை மறுக்காது மகுடம் புனைய வேண்டி, மறுவற்ற தந்தைக்கும் மகனுக்கும் இடையேயிருக்கின்ற உறவுத் தன்மையை எடுத்துச் சொல்கிறான். ''தன் சொல்லினை மறுத்துரைக்காது ஏற்கும் மகனைப் பெற்ற தந்தையே உலகில் துயர் நீங்கியவன் ஆவான்'' என்பதனை,

''சொல் மறா மகப் பெற்றவரே
துயர் துறந்தார்''

என்ற அடியில் புலப்படுத்துகிறார்.

இதனாலும் தயரதனின் மனம் நிறைவு பெறவில்லை. ஆதலின் மேலும் இரக்கும் பாவனையில் இராமனிடத்துப் பேசுகிறான். ''இராம! நாட்டினை ஆளுதல் அறத்தின்பாற் பட்டதாதலின் நீ மறுக்காது கோசல நாட்டின் அரசிருக்கையில் அமர வேண்டும். நான் உன்னைப் பெற்றதால் பெற விழைவது இதுவொன்றேயாகும்'' என்று இரந்து நிற்கிறான். இதனைக் கம்பர்,

''இந்தநல் அறம் புரக்க நினையல்
வேண்டும்;
யான்நின்வயின் பெறுவது ஈது என்றான்''

என்கிறார்.

தயரதன் இவ்வாறெல்லாம் வேண்டி நிற்க, இராமனின் மனப்பாங்கு எப்படியிருந்தது என்பதனையும் கம்பர் விளக்குகிறார்.

வளம் கொழிக்கும் கோசல நாட்டின் மகுடத்தினை ஏற்கத் தயரதன் வேண்டிய பொழுது, மகுடம் சூடி மன்னனாவதில் இராமனுக்குக் காதலும் இல்லை; அம்மகுடத்தின்மீது அவனுக்கு இகழ்ச்சியும் இல்லை. கோசல நாட்டின் அரசிருக்கையில் அமர அவன் விரும்பவும் இல்லை;

ஆர்வத்தை அவன் வெறுக்கவுமில்லை. விருப்பு வெறுப்பு அற்ற உள்ளம் இராமனின் திருவுள்ளம்.

இராமன் முடிவில் மகிழ்வோடு முடிசூட இசைந்தமைக்குக் காரணங்கள் இரண்டு. அரசு குடும்பத்தில் தயரதனின் தலைமகனாகப் பிறந்தமையால் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுத் தன் கடமையைச் செய்தல் வேண்டும் என்ற கடமையுணர்வு ஒன்று. தந்தை சொல்லினைத் தட்டாது ஏற்று நடப்பதே மகனின் அறம் என்ற அறவுணர்வு மற்றொன்று. இவ்விரு காரணங்களும் உள்ளிருந்து தூண்டவே, அரசிருக்கையில் அமர இராமன் விருப்பு வெறுப்பற்ற முறையில் இசைகிறான்.

இதனைக் கம்பர்,

''தாதை அப்பரிசு உரை செய, தாரைக்
கண்ணன்
காதல் உற்றிலன், இகழ்ந்திலன்
''கடன் இது'' என்று உணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவியது, அது
செயல் அன்றோ
நீதி எற்கு ''என நினைந்தும், அப்பணி
தலைநின்றான்''

என்று கூறுகிறார்.

விதி குறுக்கிடுகிறது. நாடாளத் தூண்டிய தந்தை தயரதன் பெயரால் காடாளக் கட்டளையிடுகிறாள் தாய் கைகேயி. நாடாள இசைந்த ராமன் உடனே நாடு விட்டுக் காடாளவும் இசைகிறான். இத்துணை விரைவில் இராமன், ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்கருந்தவம் மேற்கொண்டு, கானம் நண்ணி, புனல்கள் ஆடி, ஏழ் இரண்டு ஆண்டின்வர மகிழ்வோடு இசைந்தமைக்கு மூன்று காரணங்கள் உள.

அங்கு, ஆட்சிப் பொறுப்பினை ஏற்று தன் கடமையினைச் செவ்வனே செய்து மக்கட்கு நன்மை பல விளைக்க விழைகிறான் இராமன்.

இங்கு, கானம் நண்ணி, புண்ணியப் புனல்களாடி, தான் நன்மை பல பெற விரும்புகிறான். இஃது ஒன்று.

இக்கருத்து,

''மாதவர்க்கு வழிபாடு இழைத்து, அரும்
போதம் முற்றி, பொரு அரு விஞ்சைகள்
ஏதம் அற்றன தாங்கி, இமையவர்
காதல் பெற்று, இந்நகர் வரக்
காண்டியால்''

என்ற பாடலாலும்

''நாயகன், எனை நல்நெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டு, ஓர் பணி என்று
இயம்பினன்''

என்ற அடிகளாலும் வலியுறக் காண்கிறோம்.

ஆண்டு, தந்தையின் விருப்பத்தினை மறுக்காது ஏற்றலே அறம் என்று எண்ணுகிறான்.

ஈண்டும் அதே அறமே இராமன்பால் முனைந்து நிற்கிறது. ''ஆதலின் வெங்கானம் நண்ண இயம்பினன் அரசன்'' எனக் கைகேயி கூறவும் இராமன் தந்தை சொல் மீறாது அறவழிநின்று அதற்கு உடன்படுகிறான்.

இக்கருத்தினைக் கவிஞர்,

''விண்ணும் மண்ணும் இவ்வேலையும்
மற்றும் வேறு
எண்ணும் பூதம் எலாம் அழிந்து ஏகினும்,
அண்ணல் ஏவல் மறுக்க, அடியனேற்கு
ஒண்ணுமோ இதற்கு உள் அழியேல்''
என்றான்,

என்ற பாடலால் புலப்படுத்துகிறார்.

இராமன் வெங்கானம் செல்லுவதால் பங்கமில் குணத்து பரதனே ஆட்சியினை ஏற்கிறான். அது மட்டுமன்று. தயரதன் 'பொய் இலன்' ஆக்கப் பெறுகிறான். இவ்வெண்ணங்களும் இராமன் உள்ள நிறைவோடு தவம் மேற்கொள்ள உதவுகின்றன.

இக்கருத்தும்

சிறந்த தம்பி திருஉற, எந்தையை
மறந்தும் பொய் இலன் ஆக்கி,
வனத்திடை
உறைந்து பேரும் உறுதி பெற்றேன்,
இதின்
பிறந்து யான் பெறும் பேறு என்பது
யாவதோ?

என்ற பாடலால் விளக்கம் பெறுகிறது.

இம் மூன்று காரணங்கட்கும் அரணாக மாறு இராமன் அறத்தத்துவம் குறித்தும், விதிவலி குறித்தும் இலக்குவனிடம் உரையாடுகிறான்.

இராமன் கானம் செல்லலாகாது என்ற இலக்குவனுக்கு அறம் பற்றிய ஒரு விளக்கம் தருகிறான். ஒருவன் தனக்குப் பொருளும் புகழும் ஆய இன்பம் விளைகின்ற இடத்து மட்டும் அறவழி நிற்பதும், துன்பம் நேருமிடத்து அறத்தினைக் கைவிட்டு மறநெறி செல்வதும் அழகன்று; அறமுமன்று.

தயரதன் வேண்டுகோட்கிணங்க முடிசூடின் இன்பம் விளைகிறது. ஆதலின் இங்கு தந்தை சொல் மறுக்காமையே அறம் என்பதும், தயரதன் ஆணைக் கிணங்கிக் கானம் செல்லின் துன்பம் விளைகிறது ஆதலின் இங்கு தந்தை சொல் மறுத்து நிற்றல் அறப்பிழையாகாது என்பதும் நன்றன்று. இன்பத்திலும், துன்பத்திலும் அறவழி நிற்பதே சீரிய அறமாகும்; நிற்பவனே சிறந்த அறவோன் என்கிறான் இராமன்.

இதனைக் கம்பர்,

"முன்பு நின்று இசை நிறீஇ, முடிவு
முற்றிய
பின்பும் நின்று, உறுதியைப் பயக்கும்
பேரறம்
இன்பம் வந்து உறும் எனின்
இனியதாய், இடைத்
துன்பம் வந்து உறும் எனின்
துறக்கல் ஆகுமோ?

என்ற பாடலால் காட்டுகிறார்.

தனக்கு நேருகின்ற துயரத்திற்குப் பிறரைப் பொறுப்பாக்காது தன் விதியினையே காரணமாக்குபவன் இராமன்.

நதியில் நீர்வற்றுவது நதியின் பிழையாகாது. அது மழையின்மையின் பிழை.

அதனைப்போன்று தனக்கு நேர்ந்ததாக இலக்குவன் கூறுகின்ற துன்பத்திற்கும் தயரதனோ, கைகேசியோ, பரதனோ பொறுப்பாகார். உடலைத் தொடரும் நிழல்போல், தன்னைச் சார்ந்து நிற்கும் விதியே பொறுப்பு என்கிறான்.

இதுவே அக்கருத்துடைப் பாடல்

"நதியின் பிழை அன்று நறும்புனல்
இன்மை; அற்றே,
பதியின் பிழை அன்று; பயந்து நமைப்
புரந்தாள்
மதியின் பிழை அன்று; மகன் பிழை
அன்று; மைந்த!
விதியின் பிழை; நீ இதற்கு என்கொல்
வெகுண்டது?" என்றான்.

விதியினிடத்து மாறாத நம்பிக்கையும், விதிப்பயனைத் துய்த்தேயாக வேண்டும் என்ற உறுதியும், கொண்டவன் இராமன். அதனாற்றான் தான் கானம் நண்ண நேர்ந்தமைக்குப் பிறர்பால் அவன் சினம் கொள்ளவில்லை. அகத்தில் சினம் தோன்றாமையால் இராமன் முகத்தில் மலர்ச்சி குறையவில்லை அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் அல்லவா!

இராவணனைக் கொன்று வாகை சூடி நிற்கிறான் இராமன். அப்பொழுது அவன் முன் தோன்றிய தசரதனிடத்து இராமன் கூறுவதாக அமைந்த பாடல் ஒன்று நம் கவனத்திற்குரியது.

இதுவே அப்பாடல்

ஊன் பிழைக்கிலா உயிர் நெடிது
அளிக்கும் நின் அரசை
வான் பிழைக்கு இதுமுதல் எனாது,
ஆள்வுற மதித்து,
யான் பிழைத்தது அல்லால், எனை ஈன்ற
எம் பிராட்டி
தான் பிழைத்தது உண்டோ? என்றான்;
அவன் சலம் தவிர்ந்தான்.

இராமன் அயோத்திப் பேரரசினைக் கைவிடுவதை ஒரு பெருந் துயர நிகழ்ச்சியாகக் கருதவில்லை. ஏனெனில் இராமனுடைய உள்ளத்தில் ஆட்சிப் பொறுப்பு ஏற்பது பல்வேறு பிழைகட்கு வித்திடுவது போன்றதாகும் என்ற எண்ணம் அவன் ஆள இசைவதற்கு முன்னும் இசைந்த பின்னும் இருந்திருக்கிறது. அதனாற்றான் ஆட்சி பரதனுக்குச் சொந்தம் என்றவுடனேயே அவனால் மும்மடங்கு பொலிந்த முகத்தினனாக மாற முடிந்தது.

இராமனுடைய முகத்தில் சினக்குறியைக் காண்பது அரிது. சினத்திற்குத் தான் அடிமையாகாமல், சினத்தினைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்ட பண்பினன். இப்பண்பு தான் தனக்குக் கொடுக்கப் பெற்ற அரசு மீண்டும் தன்னிடமிருந்து எடுக்கப்பெற்ற பொழுது அவன் மலர்ந்த முகத்துடனிருக்கச் செய்தது போலும். இராமனைப் பற்றி இராவணன் கூறுவதாக அமைந்த பாடலொன்று இதற்குத் துணையாகிறது.

நூறாயிரக்கணக்கான அரக்கர்களைக் கொன்று குவிக்கின்றான் இராமன். அதனால் போர்க்களத்தில் இராவணனுக்குச் சொல்லொணாத் துயர் விளைவிக்கின்றான். போர்க்களத்தினைப் பிணக்களமாக்கும் அந்நிலையிலும் இராமன் முகத்தில் சினக்குறியே தென்படவில்லை. தன் உயிரோடு இணைந்த மனைவியைப் பல்லாண்டுக்காலம் தன்னிடமிருந்து பிரித்து வைத்தவன் இராவணன். அவனையும் அவனுக்குச் சார்பான அரக்கர்களையும் எதிர்த்துப் போரிடும்பொழுது இராமன் சினத்தை அறியாதவனாய் இருந்தான் எனின் நேற்றுக் கொடுத்து இன்று கேட்கும் அரசினை இழப்பதில் அவன் சினமடையக் காரணம் இல்லை. அகத்தில் சினமின்மையால் முகத்தில் சித்திரத் தாமரையின் மலர்ச்சி மாறாதிருந்தது.

"எறிந்தபோர் அரக்கர் ஆவி என்
இலா வெள்ளம் எஞ்சப்
பறிந்தபோது, என்னை அந்தப் பரிபவம்
முதுகில் பற்றப்
பொறிந்தபோது, அன்னன் அந்தக் கூனி
கூன்போக உண்டை
தெறித்தபோது ஒத்தது அன்றி, சினம்
உண்மை தெரித்ததில்லை"

என்பதாகும்.

ஆதலின், கானம் நண்ணக் கட்டளை பிறந்தபோது இராமன் முகம் செந்தாமரையின் மலர்ச்சியோடு திகழ்ந்ததில் புதுமை இல்லை. அம்மலர்ச்சி தயரதன் ஆட்சியினை அளித்தபோது இராமன் முகத்தில் படிந்த மலர்ச்சிக்குச் சிறிதும் மாறுபடவில்லை.

இவைகளையெல்லாம் ஒருசேரப் சூர்க்கின்ற பொழுது இராமனை முடி படத் தூண்டிய காரணங்களினும் கானம் நண்ண இசைவித்த காரணங்களே அழுத்தம் நிறைந்தவை; மிகுதியானவை என அறியலாம்.

ஆதலின் நன்றாயினும் தீதாயினும் இராமன் மாறாத முக மலர்ச்சியோடு ஏற்ற செயலைக் கம்பன் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையின் அழியாத, குறையாத மலர்ச்சிக்கு ஒப்பிட்டதில் வியப்புமில்லை; புதுமையுமில்லை அல்லவா!

செந்தாமரை மலர் தனக்குத் தானே அழகு செய்து கொள்வதோடு தான் இருக்கும் பொய்கைக்கும் பொலிவூட்டுகிறது. இதனை ஆங்கிலப் பேராசிரியன் ஒருவன், "A Lotus which adorns itself adorns the pond also" எனக் கூறினன்.

இராமனும் தனக்குத்தானே அன்பாலும் அறத்தாலும் அழகூட்டியதோடன்றி, தான் பிறந்த நாட்டிற்கும் தன்னோடு உறவாடும் மக்கட்கும் அழகு ஊட்டுகிறான்.

★ ★ ★

அம்பின் தோற்றம் நேரானது, ஆனால் கொடியது. துன்பம் விளைவிப்பது. மானின் கொம்போ வளைந்து அழகற்றது ஆனால் நன்மையானது. இன்பம் பயப்பது அதுபோல மக்களின் பண்புகளையும் அவர்களின் செயல்களினாலே உணர்ந்துகொள்ள வேண்டும்

★

வலிய சக்கரங்களையுடைய பெரிய தேர்கள் கடலில் செல்லாது. கடலில் ஓடும் கப்பல்கள் நிலத்தில் ஓடாது. எனவே இடனறிந்து செயலாற்றுவதே அறிவுடையோன் செயல்.

—வள்ளுவனார்.

★

காரியம் கைகூடும் காலத்தில் கொக்கு போல் அமைதியாக இருக்கவேண்டும். காலம் வாய்த்தபோது அதன் குத்துப்போல் தவறாமல் செய்து முடிக்கவேண்டும்.

★

பிற உயிர்களுக்குச் சிறிதும் தீங்கு நேராதபடி சொல்லப்படும் பொய்யும் உண்மையின் மதிப்பையே பெற்று நிற்கும்.

—குறள்.



விவசாயம்,
பொறி இயல்
கட்டிடத்தின்
தோற்றம்.







விவசாயம்,
பொறி இயல்
மாணவர்கள் அன்றாட
பணியில் ஈடுபடும்
நிலையின்
சில காட்சிகள்.

# "தமிழ் வளர............"

வித்துவான் மா. கணபதி.
தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.

1. ஆசிரியப் பெருந்தகையீர்! அருந்தமிழைப்
புரந்திடும்பேர் ஆற்றல் மிக்கீர்
மாசிரியத் தமிழ்மொழியை மாணவர்க்குக்
கற்பிக்க வல்லீர்! பாரோர்
பேசிடுந்தென் மொழியதனிற் பிறமொழியைப்
புகுத்தாது பேணு வீரேல்
காசினியோர் மிகப்புகழ்வர் கலைவளரும்
மொழிவளரும்; கவலை நீங்கும்.

2. மாணவச் செல்வங்காள் நீர்
வளமிகும் தமிழை மாய்க்கக்
காணவும் உள்ளங் கன்றிக்
கண்கள்நீர் சொரியும் அந்தோ!
வீணராய் வாழ்தல் வேண்டாம்
விருப்பொடு தமிழை நாளும்
பேணவே உறுதி கொள்வீர்,
பெருகிடும் மேன்மை கொள்வீர்!

3. அரசியல் மன்றந் தன்னில்
அலுவல்மேற் கொண்ட நல்லீர்!
பரசிடும் புகழால் மிக்கீர்!
பைந்தமிழ் தன்னைக் காக்க
முரசினை யார்த்து நீவிர்
முந்துமின்; தமிழ்ச்சொல் லாலே
அரசியல் நடந்தால் அன்னை
அரியணை அமர்வாள் கண்டீர்.


4. அச்சகம் நடத்து கின்ற
அன்பரீர்! பிழையொன் றின்றி
மெச்சிட யாரும் நும்பால்
மேவிடும் அறிக்கை யெல்லாம்
அச்சிட வேண்டும்; இன்றேல்
அருந்தமிழ் மொழிதான் வீழும்
இச்சகம் போற்ற நந்தம்
இயற்றமிழ் காப்பீர்! காப்பீர்!

5. கூத்தயர் அன்ப ரேனீர்
கொழிதமிழ் மொழியை நன்கு
காத்திட வேண்டி னேமால்,
கடனென வுளத்திற் கொள்வீர்;
பூத்திடும் இன்பம் யாண்டும்
புவியெலாம் களிக்கும் மாந்தர்
ஏத்திடும் புகழை யெங்கும்
இசைத்திட விழைவர் மாதோ.

6. திரைப்படக் கலையைப் பாரிற்
றிறமுறக் காக்கும் மேன்மைப்
புரையறு சான்றோ ரெல்லாம்
பூந்தமிழ் மொழியைக் காக்க
விரைந்தெழ வேண்டும்; தூய்மை
விளங்குறுந் தமிழால் நல்ல
உரைநடை யமைத்தல் வேண்டும்
உலகெலாம் புகழ்தல் வேண்டும்.

7. செந்தமிழ் மொழியை வாழ்வின்
திருக்களர் கண்க ளாகச்
சந்ததம் கருதி மண்மேல்
தழைத்திடச் செய்தல் வேண்டும்
மூந்துறு தமிழென் றேநம்
முன்னையோர் மொழிந்தார் அந்நாள்
வந்திட வுழைத்தல் வேண்டும்
வான்புகழ் பெறவே வேண்டும்.

★ ★ ★



# தாஜ்மஹாலில் ஒரு நாள்

வித்துவான். மோகனம் அர்த்தநாரி

ஆம் இன்று பார்ப்பதுபோல் கண்ணெதிரே நின்று களி நடம் புரிகின்றது அக்காட்சி. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றும் ஆண்டு ஜூலைத் திங்கள் 6, 7-ஆம் நாட்களில் ஆக்ராவில் நடந்த அனைத்திந்திய காங்கிரஸ் பேரவையிற் கலந்து கொண்டு அவண் வரும் தலைவர்களைச் சந்தித்து அளவளாவச் சென்றிருந்தேன் என் நண்பர் ஒருவருடன். எனது வடபுலச் செலவுக்குக் காரணமான பல அம்சங்களில் இதுவும் ஒன்று. அத்துடன் உலக அதிசயங்களில் ஒன்றே என வியக்கக் கூடியதும், இந்தியாவின் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதுமான தாஜ்மகல் அங்குதானே உளது.

அன்று எதிர்பார்த்தபடியே பல தலைவர்களைக் கண்டும் சிலருடன் அளவளாவியும் இருந்தோம். மாலை நேரம் நெருங்க நெருங்க மகலைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் வளரவே மாலைக் கூட்டத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டுக் கிளம்பினேன் நண்பருடன். ஆக்ரா நகர எல்லையிலிருந்து அழுக்கடைந்த தெருக்களையும் நாற்றம் பிடித்த யமுனையையும் ஒட்டி ஏறத்தாழ இரண்டு கல் நடந்தோம். ஆயினும் தொலைவிலிருந்தே காட்சியளித்த தாஜ்மகலைக் கண்டதும் எங்கள் கால் வலியும் மனச்சுமையும் மெதுவாக மறையத் தொடங்கின. மாலை ஐந்து மணியளவில் தாஜ்மஹலையடைந்தோம்.

தாஜ்மஹல் தூய வெண் பளிங்காலான ஓர் கட்டடம் என்பதை அக்கற்களிலுள்ள கறுப்பும், மஞ்சளும், பழுப்பு நிறமுமுடைய ரேகைகள் பொய்ப்பித்தன. எனவே தூய வெண் பளிங்கென்றது சொல்லளவே என்ற முடிவுக்கு வரும் வேளையில் தாஜ்மஹலின் வாயில் அடைந்தோம்.

இதுவே கனவுலகின் வாயில் போலும்! சினிமாப் படங்களிற் பார்ப்பதுபோல் தூரத்தில் சிறியதாகக் காட்சியளித்த அவ் வெள்ளிய விமானம் சிறிது சிறிதாக எங்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது close up ல் பார்க்கும் காமிராக் காட்சியைப்போல். இல்லை! இல்லை!! நாங்கள் தான் தாஜ்மஹலை நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.

அழகிய ஓவியத்துக்கு அற்புதமான பின்னணியமைத்து அதன் அழகை அழகு படுத்திக் காட்டுவது போலவும் அழகுக்கு அழகு செய்வது போலவும் இவ்வற்புதக் கட்டடத்தைச் சுற்றிலும் அழகிய பரந்த தோட்டத்தை நிருமித்துள்ளது மகலின் அழகைப் பதின்மடங்கு உயர்த்திக் காட்டுகிறது. மரகதப் போர்வை போர்த்த பரந்த வெளியிலே வீரர்களைப்போல் வரிசை வரிசையாக அணிவகுத்து நின்று காவல் புரியும் இளமரக்காவின் ஊடே மெதுவாக நடக்கிறோம். கூம்புபோல் அழகாக வெட்டி விடப்பட்டு வானளாவ நிற்கும் அசோக மரங்களும், மெல்லிய காற்றிலே அசைந்தாடி வருவோரை வா, வா, என வரவேற்கும் பூங்கொம்புகளும், இடையிடையே உயர்ந்தோங்கி நிற்கும் கொடிவீடுகளும் நமது மனத்தைக் குளிர வைக்கின்றன. செய் குளங்களிலுள்ள நீர்ப் பூக்களும் அவற்றின் அருகே அமைக்கப்பட்டுள்ள வழவழப்பான கற்பீடங்களும் நம்மைச் சிறிது நேரமாமது அமர்ந்து ஓய்வெடுத்துப் பின் செல்லக் கூடாதா என்று கெஞ்சிக் கேட்பனபோல் காணப்படுகின்றன. இங்ஙனம் ஏறத்தாழ இரண்டு பர்லாங் சென்றால் 6 அடி உயரமுள்ள பளிங்கு மேடையை அடையலாம்.

உடனே ''மஹராஜ் யஹா ரக்கியே'' என்ற இந்திக் குரல் கேட்கிறது. அதன்

பின்னர்த்தான் நாம் இருப்பது மக்கள் நிறைந்த இப்பூவுலகமே என்ற சுய நினைவு வருகிறது. ஒன்றும் மறுமொழி கூறாது, மிதியடிகளைக் கழற்றிவிட்டு மெதுவாகப் பதினொரு படிகள் ஏறினால் விசாலமான பளிங்குமேடையும் அதன் மீது மூன்றடி உயரமுள்ள மற்றொரு சதுரமான மேடை மீது தாஜ் மஹாலும் காணலாம். நான்கு மூலைகளிலும் கலங்கரை விளக்கம் போன்று உயர்ந்து விளங்கும் **Minaret** என்ற தூபிகள் நிற்கின்றன. இவற்றைப் பார்த்துக்கொண்டு, உயரத்தை மனதால் கணித்துக்கொண்டு வியந்து நிற்கும் வேளையில், தூய வெள்ளை உடுப்பும், வெள்ளைத் தலைக் குல்லாயும், வெள்ளிப் பட்டயத்தோடு கூடிய வெல்வெட் தோள் பட்டையும் அணிந்த ஒருவர் வருகிறார். வந்து சலாம் போட்டு, "மஹாராஜ் இதர் ஆயியே" என்ற பின்னர்த்தான் அவர் நமக்கு உதவ வந்த ஓர் வழிகாட்டி (Guide) என அறிகிறோம்.

உடனே அவர் போகின்ற வழியெல்லாம் கால் செல்ல, மனம் கட்டடக் கலையிலே ஈடுபட்டிருக்கப் பேச வாயெழாமல் தெய்வ சந்நிதியில் போவதுபோல் பயபக்தியோடு மெதுவாக நடக்கிறோம். ஆ! அக்காட்சியை என்னென்பது? கட்டடத்தை வியப்பதா? அதிலமைந்த நுண்கலையை ரசிப்பதா? விலையை மதிப்பதா? செய்வது இதுவெனத் தெரியாது திகைத்துச் சிலையாகி விடுகின்றோம்.

ஒரே அளவுள்ள சதுரக்கற்களில் குழியிட்டுப் பல வர்ணக் கற்களை ஒன்றினுள் ஒன்றாகப் பதித்து, இலையும், பூவும், ரேகையும் மகரந்தமும் அமைத்து ஒரே இழைப்பாக இழைத்து மயிர் நுழையும் இடை வெளியின்றி மழ மழவென்றாக்கிச் கண்ணச் சாந்தும் தெரியாதவாறு ஒன்றோடொன்றைப் பொருத்திச் செய்யப்பட்டுள்ள நுண்ணிய வேலைப்பாட்டை எவ்வளவு பாராட்டினாலும் தகும். முன்னூறு அடி உயரமும், அதன்மேல் முப்பத்தாறடி உயரமுள்ள கலசமும் கொண்டு விளங்கும் மிகப் பெரிய அமைப்பேயாயினும் அதன் வெண்ணிறமும் வேலைப்பாடும் அவற்றைச் சுருக்கியே காட்டுகின்றன.

இவ்வளவும் தாண்டி மெத்த ஆவலோடு தாஜ்மஹாலில் நுழைகிறோம். ஆனால் அங்கு நாம் பார்ப்பது என்ன? சித்திர வேலைப் பாடமைந்து அல்லும் பகலும் அணையாது எரிகின்ற ஓர் அழகிய வெள்ளித் தொங்கு விளக்குத்தான். ஆம் அதற்குக் கீழே பார்வையைச் செலுத்தின பின்னர்த்தான் நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட வெண் பளிங்குக் கற்களால் ஆன பெரிதும் சற்றுச் சிறிதுமான இரு சமாதிகளைப் பார்க்கிறோம். ஆனால் அவை மும்தாஜினுடையதோ அன்றி அவளது ஆருயிர்த் துணைவனான ஷாஜஹானுடையதோ அல்ல!

இது உங்களுக்கு வியப்பாக இருக்கிறதல்லவா? இருப்பினும் உண்மையைக் கூறாமல் இருக்க முடியுமா? அவைகள் சமாதிகள் அல்ல. சமாதி போன்ற போலி அமைப்புக்களே. பிற்காலத்தில் வெளியாரோ அல்லது மாற்றாரோ புகுந்து மகமதியர்கள் இந்தியக் கோவில்களிற் செய்ததுபோலத் தங்கள் சமாதிகளை அப்புறப்படுத்தி விடுவார்களோ என ஐயுற்ற மொகலாய மன்னனின் முன் யோசனையே இப்போலி அமைப்புக்கள்.

தான் இறந்த பின் தன் பெயர் என்றும் மறவாது நினைவில் இருத்த ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்பதே மும்தாஜின் வேண்டுகோள். அவள் இறந்தது டில்லி மாநகரில். மகமதிய வழக்கப்படி அன்றே அங்கேயே அவளது சடலம் யமுனை நதிக்கரையில் அடக்கம் செய்யப்பட்டது. தாஜ்மஹால் கட்டுவதற்கு ஆக்ராவே ஏற்ற இடம் எனத் தெரிந்தெடுக்கப்பட்ட பின் அவளது சவப்பெட்டி மீண்டும் எடுக்கப்பட்டு தாஜ்மஹால் கட்டி முடிக்கப்படும் வரை அதனருகே அமைக்கப் பட்ட தனியான கல்லறையிலே வைக்கப் பட்டது. இருபது ஆண்டுகளுக்குப் பின் தாஜ்மஹால் கட்டட வேலை முற்றுப்பெற்ற பின்னர் அதனடியில் 12 அடி ஆழமுள்ள பாதாள அறையிலுள்ள சமாதியில் வைக்கப் பட்டதாம்.

வெள்ளையர்கள் வெளியேறிய பின்னர் அங்கு சென்றவர்களே இவ்வுண்மையான பாதாள அறையிலுள்ள சமாதிகளைப் பார்த்திருக்க முடியும் ஏனெனில் பாரதநாடு விடுதலை பெற்ற பின்னர்தான் இவ்வுண்மை அறியப்பட்டுப் பாதாள அறையும் திறக்கப் பட்டதாம். இறுதியில் விசாரித்த பொழுது நான் முதலில் காணப்பட்ட தொங்கு விளக்கு ராபர்ட் கிளைவால் பரிசாகக் கொடுக்கப்பட்டது என்பது தெரிந்தது.

பாதாள அறையிலிருந்து மீண்டும் மேலே வருகிறோம். வெண் பளிங்குக் கற்களில் விதவிதமாக அமைக்கப்பட்ட சிற்பங்களைப் பார்த்துக் கொண்டே சுற்றி வருகிறோம். நாற்புறமும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்ட வாயில்களும், கதவுநிலைகளும் கண்களை மயக்கி விடுகின்றன. நாம் முன்னர் நுழைந்த வாயில் எது என அறிய முடியாமல் திகைக்கிறோம். நமது

பார்வையைச் சிறிது சிறிதாக மேலேற்றிச் சமாதியின் பிரானம் வரை செலுத்துகிறோம்! திடீரென ஏமாற்ற மடைகிறோம். இத்தகை வேலைப்பாடுகளும் அலங்காரங்களும் கொண்ட தாஜ்மஹாலிலே மிக முக்கியமான சமாதியின் மேற்புறமுள்ள பிரானம் வெறிச் சென்றிருக்கின்றது. என்ன பரிதாபம்! உற்றுநோக்குவோரே இதனை உணர்தல் இயலும். பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டு நவமணிகள் பதிக்கப்பெற்று பிரானத்தை விளக்கம் செய்து நின்ற அவ்வுருவங்கள் எல்லாம் நாளடைவில் களவாடப்பட்டனபோலும்.

இவ்வழகிய மஹாலைச் சுற்றி 3 தொழுமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஐந்து காலமும் தவறாது வணங்கும் சீரிய வழக்கத்தைக் கொண்டுள்ள சான்றோர்களின் உபயோகத்திற்காக ஏற்படுத்தப் பட்டவைகளே அவைகள். மும்தாஜின் சவப்பெட்டி வைக்கப்பட்டிருந்த அந்தப் பழைய கல்லறையிலும் தொழுகைகள் நடை பெறுகின்றன.

இவ்வழகிய சிற்ப உலகினைப் பிரிய மனமின்றி வழி காட்டியைத் தொடர்ந்து சென்று மேடையை விட்டிறங்குகிறோம். ஆம். வழிகாட்டியதற்குக் கூலி கொடுத்தபின்னர் தான். மாதாமாதம் முதல் தேதி பிறந்ததும் பிறக்காததுமாக 150 ரூபாய் சம்பளமும் அதற்குமேல் படியும் பெறுகின்ற அந்த மத்திய சர்க்காரின் ஊழியர் கேவலம் இந்த இரண்டணாவைப் பெறுவதால் அடையும் இன்பத்தைப் பார்த்தால்தான் மனிதனின் பண ஆசை எவ்வளவு அற்பமானது எனத் தெரிகிறது.

கால் கற்றரையில் பட்டபின்னர்த்தான் மிதியடிகளின் நினைவு வருகிறது. ஆனால் அவற்றைக்கழற்றிவிட்ட இடத்தில் காணமற் போகவே ஏமாற்றமடைகிறோம். உடனே ஒருவன் ஓடி வந்து ஒரு சோடி மிதியடிகளை வைக்கிறான். ஆமாம்! நம்முடையவைதான்! பழுது பார்க்கப்பட்டு பாலீஷும் செய்யப் பட்டதால் அடையாளம் காண்பது அரிது தானே. அவனுக்கும் ஏதாவது இனாம் கொடுக்கத்தான் செய்கிறோம். இப்படி வருவோரது மிதியடிகளைப் பாதுகாப்பதோடு கேட்காமலே பழுதும் பார்த்து இத்தகைய அன்பளிப்பால் பிழைப்போர் பலர் உளர்.

நேரம் ஆகிறது 8 மணிக்குள்ளாக 3 மைல் தூரத்தைக் கடந்து சப்ரு ஹாஸ்டலில் உள்ள எங்கள் விடுதியை அடைந்தால் தானே இரவு உணவு. பசி வந்திடப் பத்தும் பறக்குமல்லவா? எனவே மெதுவாகத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே வருகின்றோம். திடீரென வாசல் அருகே ஒரு சிறு கூட்டம் உள்ளே நுழைவதைப் பார்த்தவுடன் கால்கள் நடக்க மறுக்கின்றன. காரணம் அக்குழுவில் உள்ள இரு முக்கிய உருவங்களே! எதிரில் மிக நெருங்கி நின்று "நமஸ்தே ஜீ" என்றவுடனே மறுமொழி பிறக்கிறது. "ஜீ நமஸ்கார்! க்யா ஆய் டமில்நாட்சே ஆயே ஹை?" ஜவஹர்லால் நேருவின் வாயிலிருந்து புறப்பட்ட இவ்வினாவிற்கு "ஜீ, ஹா" என்ற இரண்டெழுத்துக்குமேல் பதில் கூற இயலவில்லை இந்தியில். ஆபத்துக்கு உதவ ஆங்கிலம் வந்தது. நாங்கள் வடநாடு வந்த காரணமும் தமிழ்நாட்டின் தனிப்பெரும் காங்கிரஸ் தலைவராக விளங்கிய ராஜாஜி ஆக்ரா மாநாட்டுக்கு வராத காரணமுமே எங்களது ஐந்து நிமிடப் பேச்சின் முக்கிய அம்சங்கள் ஆயின. அதற்கு அரிய சந்திப்பை உலகப் புகழ் பெற்ற தாஜ்மகல் தோட்டத்திலே பாரதத்தின் தனிப்பெரும் தலைவராம் நேருவுடன் நெருங்கிப் பேச நேர்ந்த வாய்ப்பை போட்டோ எடுக்கலாமென விரும்பித் தயாராகக் காமிராவுடன் காத்திருந்த என் உடன் வந்த நண்பருக்கு சமிக்ஞை காட்டியும் அவர் அந்நேரத்தில் என் குறிப்பைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லாமையின் இயலாத போயிற்று. போட்டோ எடுக்கவில்லை என்றாலும் கையிலுள்ள நாட்குறிப்பில் அவரது கையெழுத்தையாவது பெற்றோமா என்றால் அதுவும் இல்லை. பின்னர் நேருஜீ தம் தங்கையுடன் தாஜ்மகலை நோக்கிப்போக நாங்களும் எதிர்த் திசையில் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

தாஜ்மகலைக் கண்ட காட்சியோடு, நேரு, விஜயலக்ஷ்மி பண்டிட் ஆகிய இருவருடன் எங்களுக்கேற்பட்ட சந்திப்பும் எங்கள் வடநாட்டுச் செலவில் என்றும் மறக்க முடியாத அம்சங்கள் ஆயின. மாலை வேளையில் கண்ட காட்சியே இவ்வாறு எங்களை மயக்கிவிட்டதென்றால் முழுமதி நாளிலே அங்கிருந்து அத் தாஜ்மஹாலைக் கண்டு அனுபவித்தவர்கள் எவ்வளவு இன்பம் அடைந்திருப்பார்கள் எனக் கூறவும் வேண்டுமோ? "தாஜ்மஹாலுக்கு இணை தாஜ்மஹாலேதான்" என்று கூறி முடிப்பதை விட்டு மேலும் வருணிக்க முயல்வது வெற்றியளிக்குமா என்பது ஐயமே.

★ ★ ★



# தமிழகமும் அதன் ... மின்வளமும்.

தி. கா. கோபாலகிருட்டிணன், பி. இ.
நெய்வேலி.

எல்லா உயிர்களின் நல்வாழ்வுக்குக் காற்று எவ்வாறு தேவையானதோ, அவ்வாறே மின்சாரம், தொழில் வளம் செழித்தோங்க மிக மிக இன்றியமையாத தொன்றாகும். நம் தமிழகத்தில் அன்று இருந்த தொழில் நிலைமையையும் இன்றுள்ள தொழில் வளத்தையும் நோக்குங்கால் வியத்தகு மாறுதல்கள் பல காண்கிறோம். இதன் காரணம் என்ன?

நமது பள்ளிக்கு அருகே அமைந்துள்ள நூல் ஆலையில் பல்லாயிரக்கணக்கான நூற்கதிர்கள் இயங்குகின்றனவே, அவைகள் எதன் துணை கொண்டு இயக்கப்படுகின்றன? நம் கிராமங்களிலுள்ள ஒவ்வொரு தோட்டத்திலும் இயந்திரத்தின் மூலம் இடைவிடாது தண்ணீர் இறைக்கப்படுகின்றதே அதன் மூல சக்தி எங்கிருந்து கிடைக்கின்றது? நகரெங்கும் விளக்குகள் ஒளி வீசுகின்றனவே அவை எவ்வாறு எங்கிருந்து பெறப்படுகின்றன? இவையெல்லாவற்றிற்கும் தலையாய காரணம் மின்சாரமே என்பது யாவரும் அறிந்ததொன்றாகும். இத்தகைய அரும் பெரும் செல்வம், தமிழகத்தில் எவ்வாறு எங்கெங்கே உற்பத்தி செய்யப்படுகின்றது என்பன போன்றவைகளை அறிய ஆவல் கொள்வது இயல்பே.

பொதுவாக மின் உற்பத்தியை, மின் உற்பத்திக் கருவியோடு (Generator) இணைக்கப்பட்டுள்ள சுழலும் சக்கரங்களுக்குப் (Turbines) பயன்படுத்தும் மூல சக்தியான நீர் அல்லது நீராவியைப் பொறுத்து இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகளில் ஒன்று நீர் வீழ்ச்சி போன்ற இயற்கை சாதனத்தில் உள்ள தண்ணீரின் மிகுந்த அழுத்தத்தையோ (Preasure head) அல்லது குறைந்த அழுத்தத்தில் மிகுந்த அளவில் நீர்த் தேக்கங்களிலிருந்து கிடைக்கும் தண்ணீரையோ பயன்படுத்தும் மின் நிலையங்கள். இவைகள் நீர் மின் நிலையங்கள், (Hydro Electric Power stations) எனப்படும்.

நீர் வீழ்ச்சிகளினால் இயங்கும் இத்தகைய நீர் மின் நிலையங்களில் உயரத்தில் கிடைக்கும் நீரை "பென்ஸ்டாக்ஸ்" (Penstocks) எனப்படும் குழாய்கள் மூலம் அடிவாரத்திற்குக் கொண்டு வந்து, நீரின் அழுத்தத்தைப் பயன்படுத்தி, சுழலும் சக்கரங்களைச் (Water Turoines) சுழல வைக்கிறார்கள். மேட்டூர் போன்ற வேறு சில இடங்களில் குறைந்த அழுத்தத்தில் (low head) உள்ள நீரை மிகுந்த அளவில் பயன்படுத்தி இச்சக்கரங்களைச் சுழல வைக்கிறார்கள். இச் சக்கரங்களோடு இணைக்கப்பட்டுள்ள மின் உற்பத்திக் கருவி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. பைக்காரா, பாபநாசம், மோயாறு, பெரியாறு குந்தா முதலிய தமிழ்நாட்டு மின் நிலையங்கள் இவ்வகையைச் சார்ந்தன.

இனி மற்றொரு வகை நிலையம் "அனல் மின் நிலையம்" (Thermal power stations) எனப்படுவதாகும். இதற்கும், முன்பு குறிப்பிடப்பட்ட நீர் மின் நிலையங்களுக்கும் உள்ள வேறுபாடு, சுழலும் சக்கரங்களை இயக்கப் பயன்படுத்தும் மூல சக்தியினாலேயாகும். இத்தகைய அனல் மின் நிலையங்களில் நிலக்கரி போன்ற எரி பொருளைப் பயன்படுத்திக் கொதிகலன்களில் (Boiler) நீராவியை உற்பத்தி செய்து, பின்னர் இதன் துணை கொண்டு நீராவியினால் சுழலும் சக்கரங்களை (Steam Turbines) இயக்குகிறார்கள். தமிழ் நாட்டில் சென்னை, மதுரைக்கு அருகே அமைந்துள்ள சமயநல்லூர் ஆகிய இரு இடங்களில் மட்டுமே இத்தகைய அனல் மின் நிலையங்கள் இயங்குகின்றன. இன்னும் சிறிது காலத்திற்குள் இயங்கப்போகும் நெய்வேலி மின் நிலையமும் இவ்வகையின் பாற்படும்.

இனித் தமிழ் நாட்டில் உள்ள நீர், அனல் மின் நிலையங்கள், அவைகள் வெளிப்படுத்தும் மின்சாரத்தின் அளவு, தமிழகத்தின் தேவைக் கேற்ப அவைகளை விரிவடையச் செய்யும் திட்டங்கள், நமக்கு அருகிலுள்ள மாநிலங்களின் கூட்டுறவால் ஏற்படப்போகும் புதிய மின் நிலையங்கள் பற்றிய குறிப்புக்கள் சிலவற்றை நோக்குவோம்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே மின் உற்பத்தி பற்றிய முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் அது மக்களுக்குப் பயன்பட்டது 1925-ல் அரசினர் மின்துறை துவக்கப்பட்ட பின்னரே என்று சொல்லலாம். அந்த அரும்பெரும் முயற்சியில் முதலிடம் பெற்றது 1929-ல் ஆக்க வேலைகள் தொடங்கப் பெற்று 1933-ல் மின் உற்பத்தியைத் துவக்கிய பைக்காரா நீர் மின் திட்டமே (Pykkara Hydro-Electric scheme) யாகும்.

மேட்டூர், பாபநாசம் ஆகிய இரு நீர் மின் நிலையங்களும், இதைத் தொடர்ந்து விரைவில் உயிர் பெற்றன. ஆனால் 1947க்குப் பிறகே, அதாவது சுதந்திர இந்தியாவின் தோற்றத்திற்குப் பின்னரே, தமிழகத்து மின் துறையில் போற்றத்தக்க மாறுதல்கள் பல உருவெடுத்தன. அதன் விளைவே பெரியாறு, மோயாறு, குந்தா முதலிய மின் திட்டங்களாகும்.

இத்திட்டங்களிலெல்லாம், தலையாயதும் இன்றியமையாததும் குந்தா மின் திட்டமே. கனடா நாட்டினரின் பேருதவியோடு, தமிழ்நாட்டு மின்சாரத் துறையின் (Madras State Electricity Board) தலைமைப் பொறியாளர், திரு. வி. பி அப்பாதுரை அவர்களின் அரும் பெரும் முயற்சியில் உருவான இத்திட்டமானது அதன் ஆக்க வேலையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழில் மகனும் பெருமைப்பட வேண்டிய திட்டமாகும்.

இத்திட்டத்தில், "எமரால்டு", "அவலஞ்சி", ஆகிய நீர்த்தேக்கங்களில், நீலகிரித் தொடரில் பொழியும் ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரும் தேக்கப்பட்டு மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படுகிறது எனில் அது மிகையாகாது. தமிழ் நாட்டின் மற்ற நீர் மின் நிலையங்களிலெல்லாம் பெரும்பாலும் நீர்ப்பாசனத் தொடர்புடையன. ஆதலின், நீர்ப்பாசனத் தலையீட்டால், மின் உற்பத்திக்காக ஆண்டு முழுதும் தேவையான அளவு தண்ணீர் இட்டுவதில்லை. அதற்கு முற்றிலும் மாறாக இக்குந்தாத் திட்டத்தில் நீர்ப்பாசனத் தொடர்பேயில்லாததால், ஆண்டு முழுதும் மின் உற்பத்திக் கருவிகளை இயக்கும் வாய்ப்பு அமைந்துள்ளது.

இத்திட்டத்தில் மொத்தம் ஐந்து நீர் மின் நிலையங்கள் உள. தற்போது முதலிரண்டு மட்டுமே முடிவுற்று இயங்குகின்றன எனினும், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் இது முழுதும் முடிக்கப்பட்டு சுமார் 420 "மெகாவாட்" (Mega watt) சக்தியை அளிக்கவல்ல, தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் பெருமைப்படக் கூடிய, ஒரு மாபெரும் சாதனையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை

இத்தகைய நீர் மின் நிலையங்கள், பெரும்பாலும் பருவமழையை எதிர் நோக்குவதால், ஆண்டு முழுதும் இயங்கவல்ல அனல் மின் நிலையங்களின் தோற்றங்கள் இன்றியமையாதன

வாயின. அதன் விளைவே சென்னையில் அமைந்துள்ள "பேஸின் பிரிட்ஜ்" அனல் மின் நிலையமாகும். 1909-ல் "சென்னை மின்சாரம் வழங்கும் ஸ்தாபனத்தாரால்" (Madras Electric Supply Corporation) துவக்கப்பட்ட இந் நிலையம், 1947 முதல் அரசினர் மேற்பார்வைக்குட்பட்டு, இன்றுள்ள நிலையில் சுமார் 98.5 'மெகா வாட்' மின் சக்தியை உற்பத்தி செய்யும் நிலையமாக விரிவடைந்து இயங்குகிறது. தமிழ் நாட்டில் இயங்கும் மற்றுமொரு அனல் மின் நிலையம் மதுரையில் சமயநல்லூரில் அமைந்துள்ளதாகும். 1947ல் இயக்கப்பட்ட இம் மின் நிலையம் தென் பகுதி மாவட்டங்களின் வேனிற்காலத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்கின்றது.

அடுத்த சில நாட்களில் இயக்கப்படும் நெய்வேலி அனல் மின் நிலையம், முழுதும் முடிவுற்ற நிலையில் சுமார் 400 'மெகாவாட்' சக்தியை அதாவது தமிழ்நாட்டின் தற்போதைய உற்பத்தியில் 75 சத விகிதத்தை வெளிப்படுத்தும் ஒரு மாபெரும் அனல் மின் நிலையமாக, சோவியத் பெருங்குடி மக்களின் நட்புறவை வெளிப்படுத்தித் திகழும்.

இவ்வளவோடு அமையாது கேரள அரசினரின் கூட்டுறவால் 95 'மெகா வாட்' சக்தியை அளிக்கவல்ல, பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம் உருவாகி அதற்கான ஆக்க வேலைகளும் தொடங்கப் பெற்றுள்ளன. மைசூர் அரசினரின் நட்புறவால், 'ஒகனகல்' என்னுமிடத்தில் சுமார் 800 'மெகா வாட்' சக்தியை அளிக்கவல்ல மின் திட்டம் குறித்து ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.

இன்று மின்சாரம் உற்பத்தி செய்யும் 7 நீர் மின் நிலையங்களும் இரண்டு அனல் மின் நிலையங்களும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு மின் உற்பத்தியில் மிக மிக முன் அணியில் பீடு நடையுடன் செல்லுகிறது என்பது மிகையாகாது. தமிழ் நாட்டில் சுமார் 10000 நகரங்களும், கிராமங்களும் 14713 மைல் நீளமுள்ள மிகுந்த அழுத்தக் கம்பிகளாலும் (High tension Lines), 20975 மைல் நீளமுள்ள குறைந்த அழுத்தக் கம்பிகளாலும் (Low tension lines) ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒளி பெற்றுத் திகழுகின்றன.

ஆனால் நாள்தோறும் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியினால் இவ்வளவு மின் நிலையங்கள் இருந்தும், நமது தேவை முழுவதற்கும் மின் சக்தி கிட்டாமல் வாடுகிறோம் எனில் அது வியப்புக்குரியதாகவே தோன்றலாம். மத்திய நீர்ச் சக்திக் குழுவின் (Central water and power commission) துணை கொண்டு, தமிழ்நாடு சேகரித்த குறிப்புகளிலிருந்து தமிழ் நாட்டில் சுமார் 1448 'மெகாவாட்' மின் சக்தி 1965—66 லும் 2194 'மெகாவாட்' மின் சக்தி 1970—71 லும் தேவைப்படும் என அறிகிறோம்.

கீழுள்ள அட்டவணையிலிருந்து நமக்கு, இன்னும் தேவையான மின் சக்தியின் அளவு தெள்ளிதின் விளங்கும்.

★ ★ ★

உடம்பை மறைக்குமளவும் அம்புகளால் புண்பட்டு வருந்தும் நிலையிலிருந்தாலும் யானை தன் பெருமையையே நிலை நிறுத்தும். அதுபோல ஊக்கம் நிறைந்தவர்கள் தங்களுக்கு அழிவு வந்தவிடத்திலும் மனந்தளரமாட்டார்கள்.

—குறள்.

| மின் நிலையங்கள். | தற்போதைய உற்பத்தியின் அளவு "மெகாவாட்" | திட்ட விரிவாலோ அல்லது ஆக்க வேலைகள் முற்றும் முடிவதாலோ கிடைக்கும் மிகுதி "மெகாவாட்" | முற்றும் முடிந்த நிலையில் கிடைக்கும் மொத்த சக்தி "மெகாவாட்" | குறிப்புக்கள். |
|---|---|---|---|---|
| **நீர் மின் நிலையங்கள்:** | | | | |
| 1. பைக்காரா ... | 70.20 | ... | 7.20 | |
| 2. மேட்டூர் ... | 40.00 | 100.00 | 140.00 | |
| 3. பாபநாசம் ... | 28.00 | ... | 28.00 | |
| 4. மோயாறு ... | 36.00 | ... | 36.00 | |
| 5. பெரியாறு ... | 105.00 | 35.00 | 140.00 | |
| 6. குந்தா முதல் மின் நிலையம் ... | 40.00 | 20.00 | 60.00 | திட்ட விரிவுக்கான வேலைகள் நடைபெறுகின்றன |
| 7. குந்தா 2-வது " ... | 70.00 | 105.00 | 175.00 | |
| 8. குந்தா 3-வது " ... | ... | 120.00 | 120.00 | புதிதாக நிறுவ இருப்பன |
| 9. குந்தா 4-வது " ... | ... | 50.00 | 50.50 | |
| 10. குந்தா 5-வது " ... | ... | 15.00 | 15.00 | |
| 11. பரம்பிக்குளம் ... | ... | 95.00 | 95.00 | ஆக்க வேலைகள் நடைபெறுகின்றன |
| **அனல் மின் நிலையங்கள்:** | | | | |
| 12. சென்னை ... | 98.50 | ... | 98.50 | |
| 13. மதுரை ... | 14.00 | ... | 14.00 | |
| 14. நெய்வேலி ... | ... | 400.00 | 400.00 | ஆக்க வேலைகள் நடைபெறுகின்றன |
| | 501.70 | 940.00 | 1441.70 | |

குறிப்பு:- ஒரு மெகாவாட் (Mega watt) = 1000 கிலோவாட் (Kilowatt)
ஒரு கிலோவாட் = 1000 வாட் (watt)

ஆயிரம் வாட் சக்தியுள்ள ஒரு மின் விளக்கு ஒரு மணி எரிவதற்குத் தேவையான சக்தி ஒரு யூனிட் (Unit) எனப்படும்.

மேலே உள்ள குறிப்புக்களிலிருந்து தமிழ் நாட்டில் அமைந்துள்ள எல்லா நீர் வளங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகும். இதற்கு மேலும் மின்சக்தி நமக்குத் தேவைப்படுவதால் அதை அளிக்கவல்ல ஒரே ஒரு வழியான "அணு மின் நிலையம்" அதாவது அணுவைப் பிளப்பதால் (Nuclear fission) கிடைக்கும் சக்தியைப் பயன்படுத்தி நீராவி உண்டாக்கி, பின்னர் மின்சாரம் எடுப்பது - ஒன்று 1970க்குள் நிறுவப்பட வேண்டும். இதையே தான் தமிழ்நாட்டு அரசினரும் மத்திய அரசினரிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

அது நமக்குக் கிடைத்து, ஒகனகல் நீர் மின் திட்டமும் வெற்றியோடு நிறைவேற்றப் பட்டால், பல தொழில் வளம் பெற்று, தமிழகத்தில் ஒவ்வொரு சிறு கிராமமும், புத்தொளி பெறும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பு:- இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள் தமிழ்நாட்டு மின்சார போர்டாரின் (Madras State Electricity Board) வெளியீடுகளிலிருந்து பெறப் படுகின்றன.

# பாரதத்தில் இரசாயன உரங்கள்

தி.ரா. அர்த்தநாரி M.Tech; B.E.chem

**உரத்தின் அவசியம்:**

நாம் வசிக்கும் உலகத்தில் நிலப்பாகம் மட்டும் 55.000,000 சதுர மைல்கள், உறை பனியால் மூடப்பட்டதும், பாலைவனமுமான பிரதேசங்கள் தவிர, மக்களின் ஆகாரத்திற்கு ஆதாரமானது 22.500,000 சதுர மைல்களாகும். இது சராசரி ஒரு மனிதனுக்கு ஒரு ஏகர் நிலம் ஆகிறது. அந்தந்த தேசத்து ஜனத்தொகையுடன், அங்கு கிடைக்கக் கூடிய நிலத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒரு அமெரிக்கனுக்கு 9 ஏகர் நிலமும், இந்தியன் ஒருவனுக்கு 0.73 ஏகரும் அமைகின்றன. உலகத்தில் நிமிடம் ஒன்றுக்கு 4.4 மனிதர்கள் விதம் ஜனத்தொகை அதிகரிக்கையில், இந்த விகிதம் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, காலம் செல்லச் செல்ல, பூமி வாழ் மானிடரின் தேக நலமும், சமூக நலமும் வளமுற வேண்டுமெனில், இந்தக் குறைந்த நிலத்தை சீரிய முறையில் பயன்படுத்த வேண்டியதின் அவசியம் புலப்படும்.

பாரதத்தின் நிலவளத்தைப் பற்றிச் சற்று கவனிப்போம். பல ஆண்டுகளாக நம் நாட்டு நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்பட்டு வந்தமையால், லக்ஷக்கணக்கான டன்களாக தாவர உணவு நிலத்தினின்று நீக்கப்பட்டு வந்தது. விசாயிகள் தங்களுக்குக் கிடைத்த உரங்களைப் பூமியில் இட்டு வந்த போதிலும் நீக்கப்பட்ட அளவிற்கு ஈடாகத் தாவர உணவு இடப்படவில்லை. எனவே, இந்நிலங்களிலிருந்து கிடைக்கும் விளைபொருள்கள் ஆண்டு தோறும் குறைந்துகொண்டு வருவதில் ஆச்சரியமில்லையல்லவா?

1901 முதல் 1910ம் ஆண்டு வரை ஏகர் ஒன்றுக்கு 920 ராத்தல்கள் அரிசி கிடைத்த நிலத்தில், 1941 முதல் 1950-ம் ஆண்டு வரை ஏகர் ஒன்றுக்கு 745 ராத்தல்கள் அரிசியே கிடைத்தது. ஜப்பானில் 1901 முதல் 1910ம் ஆண்டுவரை ஏகர் ஒன்றுக்கு 2123 ராத்தல்களும், 1941 முதல் 1960ம் ஆண்டு வரை ஏகர் ஒன்றுக்கு 2694 ராத்தல்களும் கிடைத்தன. இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நம் நிலங்களின் ஏகர் ஒன்றின் தற்போதைய விளைச்சல், ஜப்பானில் 70 ஆண்டுகளுக்கு முன் ஒரு ஏகரிலிருந்து கிடைத்ததைவிடக் குறைவு. இது நெல் விளைச்சலில் மட்டுமல்ல, மற்ற விளைபொருள்கள் விஷயத்திலும் அப்படியே.

1947ம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததிலிருந்து பாரத அரசாங்கம் விவசாய முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றது. உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்க, நீர்ப்பாசன திட்டங்களின் உதவியைக் கொண்டு புதிய நிலங்களை சாகுடி செய்வதோடன்றி, பழைய நிலங்களின் விளைச்சலையும் அதிகப்படுத்த வேண்டியது முக்கியம். உரங்களே நில வளத்தை அதிகரிக்கச் செய்யும்.

**தாவர உணவு:**

தாவரங்களின் வளர்ச்சிக்கு ஏறக்குறைய 15 மூலப்பொருள்கள் (Elements) தேவை. அவற்றில் பெரும்பாலானவை மிகக் குறைந்த அளவிலேயே தேவை. ஆனால் மூன்று தாவர உணவுகள் ஆகிய (1) நைட்ரஜன் (Nitrogen) (2) பாஸ்பரஸ் (phosphorus). (3) பொடாசியம் (potassium) மிகவும் இன்றியமையாதவை. எனவே, நிலவளத்தைச் செழிக்கச் செய்ய இவ்வுணவுகள் தனியாகவோ, அல்லது மற்றவைகளுடன் கலந்தோ நிலத்தில் இடப்படுகின்றன.

**நைட்ரஜனின் அவசியம்:**

மேற்கூறிய மூன்று உணவுகளிலும், நைட்ரஜன் பூமியிலிருந்து வெகு சீக்கிரத்தில் குறைக்கப்படுகிறது. நைட்ரஜன், தாவரங்களால் எளிதில் பயன்படுத்தக் கூடிய நைட்ரேட்டாகவும், மெதுவாக பயன்படுத்தக் கூடிய அம்மோனியாவாகவும் உரங்களில்

உள்ளது. இதில் பாசனத்திற்கு உபயோகிக்கும் நீரின் மூலமாகவும், செடிகளின் மூலமாகவும் நைட்ரேட் நைட்ரஜன் விரைவில் குறைகிறது. இவ்வாறு இழக்கப்படும் நைட்ரஜனை உரங்களின் மூலமாகத் திரும்பவும் நிலத்திற்கு அளிப்பதால் நிலத்தின் செழிப்பு அதிகரிக்கிறது. நாம் சுவாசிக்கும் காற்றில் 79% நைட்ரஜன், 21% ஆக்ஸிஜன் அல்லது பிராணவாயு உள்ளன. இவ்வளவு எளிதில் கிடைக்கும் நைட்ரஜனைத் தாவரங்கள் நைட்ரஜன் ரூபத்தில் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆகவே, மற்ற மூலப் பொருள்களுடன் கலந்த அம்மோனியாமாகவோ, அல்லது நைட்ரேட்டாகவோ உரங்களின் மூலம் இடப்படுகிறது.

நைட்ரஜன் கலந்த இரசாயன உரங்களில் சிந்திரியில் தயாரிக்கப்படும் அம்மோனியம் சல்பேட்டை (Ammonium Sulphate) நம் விவசாயிகள் நன்கு அறிவர். கீழே சில நைட்ரஜன் உரங்களும் அவற்றிலிருந்து கிடைக்க கூடிய நைட்ரஜன் சதவிகிதமும் தரப்பட்டுள்ளன.

| | % நைட்ரஜன் |
|---|---|
| அம்மோனியம் நைட்ரேட் | 33.54 |
| ஸல்பேட்-நைட்ரேட் (அம்மோனியம்) | 20.5 |
| அம்மோனியம் ஸல்பேட் | 21.0 |
| அம்மோனியம் பாஸ்பேட் | 11.0 |
| ஸோடியம் நைட்ரேட் | 16.0 |
| யூரியா | 42.44 |
| கால்ஸியம் ஸையனமைட் | 21 |

ஆனால் நைட்ரஜன் உரங்களைத் தவறாமல் உபயோகிப்பதால் நிலத்தின் அமில சக்தி (Acidity) அதிகரிக்கிறது. ஓரளவு அமில சக்தி உபயோகமுள்ளதாயினும், அதிக அளவில் அமிலசக்தி இருந்தால், கால்ஸியம், மக்னீஷியம் போன்ற சில இதர உணவுப் பொருள்கள் நிலத்தினின்று நீக்கப்படுகின்றன. கால்ஸியம், மக்னீஷியம் போன்ற பொருள்களின் அளவைச் சரிக்கட்ட, சுண்ணாம்புடன் கலந்த நைட்ரேட் உரங்கள் நங்கலிலும், ரூர்கேலாவிலும் உள்ள உரச்சாலைகளில் தயாரிக்க ஏற்பாடாகியுள்ளன.

### பாஸ்பேட் உரங்கள்:

தாவர வளர்ச்சிக்கு முக்கியமான மற்ற உணவான பாஸ்பரஸ், எலும்புகள், இரும்புத் தாது, இரும்பு எஃகு ஆலைகளின் கழிவுப் Blast Furnace Slag என்னும் கழிவுப் பொருள், இயற்கையில் கிடைக்கும் ராக் பாஸ்பேட் எனப்படும் பொருள்களில் இருக்கின்றது. எலும்புகளில் கிடைக்கும் பாஸ்பரஸ் குறைந்த அளவானதால் இது அதிக அளவில் உபயோகப்படுத்த முடிவதில்லை. ராக் பாஸ்பேட்டிலிருந்து சூபர் பாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட், கால்ஸியம் மெடபாஸ்பேட் போன்ற உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. தற்சமயம் தேவைக்கு வேண்டிய அளவு சூபர் பாஸ்பேட் தயாரிக்கப்படுவதால், இனி தயாரிக்கப்படும் பாஸ்பேட் உரங்கள் அம்மோனியம் பாஸ்பேட்டாகத் தயாரிக்கப்படும்.

### பொடாஷ் உரங்கள்:

பொடாஷ் (K₂O) உரங்கள் இதுகாறும் நம் நாட்டு நிலங்களுக்குத் தேவையில்லை எனக் கருதப்பட்டு வந்தது. இதற்குக் காரணம் நம் நாட்டின் நிலங்களில் பொடாஷின் அளவு அதிகம் என்று கருதப்பட்டதே. ஆனால் தீவிர பயிரிடுதலின் காரணமாக, முக்கியமாக, தென்னிந்தியாவில், நிலங்களிலிருந்து தாவரங்களின் மூலம் அவற்றின் உணவாக பொடாஷ் வெகு எளிதில் இழக்கப்படுகிறது. எனவே மற்ற உரங்களுடன் கலந்து நிலத்திற்கு இட வேண்டி, நம் நாட்டில் அதிகமாகக் கிடைக்காத இப்பொருளை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### கலப்பு உரங்கள்: (Mixed Fertilizers)

தாவர வளர்ச்சிக்குத் தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஷியம் இவை அடங்கிய ஒரே உரம் தயாரிப்பதற்குப் பதிலாக, பல இடங்களில் பல முறைகளில் தயாரிக்கப்பட்ட உரங்களை, பயிரிடும் வினை பொருள்களுக்கும் நிலத்திற்கும் தக்கவாறு, கலந்த உரங்களே கலப்பு உரங்கள். கலப்பு உரங்கள் N. P. K. உரங்கள் என்றும் கூறப்படும்.

### பாரதத்தின் உரத் தொழிற்சாலைகள்:

இவற்றில் பெரும்பாலானவை நைட்ரஜன் உரங்கள் தயாரிப்பவை. பம்பாய்க்கருகிலுள்ள ட்ராம்பே, கேரளத்தில் ஆல்வாய், தமிழ் நாட்டில் எண்ணூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் பாஸ்பேட்டுடன் கலந்த அம்மோனியா உரங்கள் தயாரிக்கப்படும். தேவைக்கு

வேண்டிய பொடாஷ் இறக்குமதி செய்யப்
படும்.

மத்திய அரசாங்கத்தினரால் நிறுவப்
பட்டுள்ள "பாரத உரக் கார்ப்போ
ரேஷனின் கீழ் ரீ ஹா ரில் சிந்திரியிலும்,
பஞ்சாப்பில் நங்கலிலும் தொழிற்சாலைகள்
இயங்கிக் கொண்டிருக்கின்றன.
மஹாராஷ்டிரத்தில் ட்ராம்பேயில் அமெரிக்
காவின் உதவியுடன் ஒரு தொழிற்சாலை
நிறுவப்பட்டு வருகிறது. மேலும் அஸ்ஸா
மிலும், உத்தரப் பிரதேசத்திலும்,
மங்களூரிலும் கார்ப்பொரேஷனைச் சேர்ந்த
தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான திட்ட
மிடப்பட்டு வருகின்றது.

நம் தமிழ் நாட்டில் நெய்வேலியில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகின்றது. இது 1965-ம் ஆண்டில் இயங்கத் தொடங்கும். ரூர்கேலா (ஒரிஸா) வில் இரும்பு எஃகுத் தொழ்ற்சாலையின் உபரிப் பொருள்களிலிருந்து ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. கேரளத்திலுள்ள ஆல்வாயில், சென்னை, கேரள அரசாங்க மூலதனத்துடன் இயங்கி வரும் தொழிற்சாலை சென்ற பத்து ஆண்டுகளில் பெரிதும் வளர்ச்சியடைந்திருக்கிறது. மற்றும் தமிழ் நாட்டில் எண்ணூரிலும், தூத்துக்குடியிலும் ஆந்திரத்திலும் விசாகப்பட்டினத்திலும் உரத் தொழிற்ற்சாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இவை தவிர சிறிய அளவில் உரம் தயாரிக்கும் சூபர் பாஸ்பேட் தொழிற்சாலைகளும், உரம் கலக்கும் தொழிற்சாலைகளும் அநேகம் உள்ளன.

நம் நாட்டில் உரத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களும், அங்கு தயாரிக்கப்படும் உரங்களும், உரம் தயாரிக்க உபயோகப்படும் பொருள்களும், 1965-66ம் ஆண்டில் இத் தொழிற்சாலைகள் தயாரிக்கக் கூடிய உர அளவும் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

மேற்கூறிய திட்டங்களின் மூலம், மூன்
றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில்
1,000,000 டன் நைட்ரஜனும், 400,000
டன் பாஸ்பரஸ் பென்டாக்ஸைட்டும்,
(**Phosphorus Pentoxide, $P_2O_5$**), 2000,000
டன் பொடாஷ் உரங்களும் தயாரிக்கப்
படும். சர்க்கார் துறையிலேயே அமைக்கப்
படவிருந்த இந்த உரத் தொழிலை, தனியார்
துறையிலும் அமைக்க அனுமதித்ததால்
மேற்கூறிய சாதனைகளை அடைவோம்
என்பதில் ஐயமெழ இடமில்லை.

நம் எண்ணங்களே நம் நன்மை
களை உண்டாக்குகின்றன. சம்
பட்டி, இரும்பில் அடிக்கும் ஒவ்
வொரு அடியும் அதன் உருவைத்
தீர்மானம் செய்வது போல, நம்
ஒவ்வொரு எண்ணமும் நம் நன்
மையைத் தீர்மானம் செய்கிறது.
சொற்களைவிட நம் எண்ணங்களே
முக்கியமானவை. அவற்றிற்கே
ஆழ்ந்த சக்தி உண்டு. ஆதலால்
நாம் நினைக்கும் நினைவுகளைப்பற்றி
ஜாக்கிரதையாக இருக்க
வேண்டும்.

★

ஒருவன் அல்லும் பகலும் "நான் துக்கப்படுகிறவன், தாழ்ந்தவன், சக்தியற்றவன்" என்றே நினைப்பானால் சக்தியற்றவனாகவே ஆகிறான். "நான் சகல சக்தியும் பெற்றவன், எதையும் செய்யக்கூடியவன்" என்று நினைக்கும்போது அப்படியே ஆவான். நாம் அனைவரும் எல்லாம்வல்ல மகாசக்தியின் பிள்ளைகள். நாம் எப்படி சக்தியற்றவர்களாக முடியும்.

★

நம்மை நாமே வெறுக்காமலிருப்பது நமது முதற்கடமையாகும். முன்னேற்றமடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும் இரண்டாவதாக இறைவன் மேல் நம்பிக்கையும் வேண்டும். சுயநம்பிக்கையற்றவன் இறைவன் மேல் நம்பிக்கை வைக்கமாட்டான்.

—ஸ்ரீ விவேகானந்தர்.

இவை எல்லாம் எதற்காக, நாற்பது கோடி மக்களின், ஒரு சாண் வயிற்றுக்காகவே.

## பாரதத்தின் உரத் தொழிற்சாலைகள் பற்றிய சில விவரங்கள்.

| எண் | இடம் | உரம் தயாரிக்க உதவும் முக்கிய பொருள்கள் | தயாரிக்கப்படும் உரங்கள் | 1965—66ம் ஆண்டில் அடையும் உர அளவு | |
|---|---|---|---|---|---|
| | | | | டன்கள் நைட்ரஜன் | டன்கள் பாஸ்பரஸ் பென்டாக்ஸைட் |
| 1 | சிந்திரி (பீகார்) | நிலக்கரி, ஜிப்ஸம் | அம்மோனியம் ஸல்பேட், யூரியா, ஸல்பேட் - நைட்ரேட் | 110,000 | — |
| 2 | நங்கல் (பஞ்சாப்) | நீர், காற்று, மின்சாரம் | கால்ஸியம், அம்மோனியம் நைட்ரேட் | 70,000 | — |
| 3 | ட்ராம்பே (மஹாராஷ்டிரம்) | எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைகளின் வாயுக்கள் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் | நைட்ரோ—பாஸ்பேட் | 80,000 | 45,000 |
| 4 | நெய்வேலி (தமிழ் நாடு) | லிக்னைட் (பழுப்பு நிலக்கரி) | யூரியா | 70,000 | — |
| 5 | ரூர்கேலா (ஒரிஸா) | கோக் ஓவன்கள் என்னும் கரி அடுப்புகளின் வாயு (COKE OVEN GAS) | கால்ஸியம், அம்மோனியம், நைட்ரேட் | 60,000 | — |
| 6 | ஆல்வாய் (கேரளம்) | மரம், நீர், காற்று, மின்சாரம், கந்தகம், ராக் பாஸ்பேட் | அம்மோனியம் ஸல்பேட், அம்மோனியம் களோரைட், அம்மோனியம் பாஸ்பேட் | 62,000 | 30,000 |
| 7 | எண்ணூர் (தமிழ் நாடு) | நாப்தா (NAPHTHA) என்னும் பெட்ரோலிய எண்ணெய் | அம்மோனியம் பாஸ்பேட் | 8,000 | 10,000 |
| 8 | விசாகப்பட்டினம் (ஆந்திரம்) | நாப்தா (NAPHTHA) என்னும் பெட்ரோலிய எண்ணெய் | அம்மோனியம் பாஸ்பேட் | 80,000 | 80,000 |

# விவசாயமும் ...
# ... நம் நாடும்.



கே. கே. கிருஷ்ணமூர்த்தி, M. Sc, (Ag)
வேளாண் கல்லூரியும், ஆய்வுக்கூடமும், கோவை 3.

நம் பள்ளியின் பொன்விழா நினைவு மலருக்குக் கட்டுரையொன்று வரைந்துதவக் கேட்டிருந்த அன்பான அழைப்பிற்கிணங்கி, எப்பொருள்பற்றிக் கட்டுரை வரையலாம் என்று சிந்திக்குங்கால் பொன்விழாக் குழுவினர் 'தங்கள் விருப்பம்போல் ஒரு கட்டுரை' எழுதக் கேட்டிருந்தது நினைவுக்கு வந்தது. ஆதலின் மற்றப் பொருள்பற்றி எழுதுவதைக் காட்டிலும் நான் தற்போது மேற்கொண்டிருக்கும் துறையான விவசாயம் பற்றி எழுதுவதே சிறப்பென எண்ணி இக்கட்டுரையை எழுதலானேன்.

> சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம். அதனால்
> உழந்தும் உழவே தலை

என்பது பொய்யான் வகுத்த வாக்கு.

நம்முடைய பாரதநாடு முக்கியமாக ஓர் விவசாய நாடு. இங்கு சுமார் எழுபத்தைந்து விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மக்கள் விவசாயத்தையே தங்கள் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இவ்வுண்மை யாவருக்கும் தெரிந்ததே. இருப்பினும் நம் நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் போதிய உணவு கிடைக்கிறதா என்றால் 'இல்லை'ப் பதிலும், நாட்டில் உணவுப் பற்றுக்குறை எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கிறது என்ற பதிலும்தான் கிடைக்கின்றன. உணவுப் பற்றுக் குறை திடீரென இன்றோ, நேற்றோ உண்டாகி விடவில்லை. பல ஆண்டுகளாகக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகிக் கொண்டே வருகிறது. நம் முன்னோர்களும் இப்படித்தான் துன்பப்பட்டார்களா? அப்பொழுதும் இதேபோல்தான் உணவுப் பற்றுக்குறை இருந்ததா என்று நோக்குமிடத்து, முன்பு மக்கள் இப்படித் துன்பப் பட்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் என்னவென நாம் சிறிது ஆராய்வோமானால் பின்வரும் உண்மைகள் சில வெளிப்படுகின்றன.

முதற்கண் மக்கள் தொகை முன்பிருந்ததை விட தற்போது பன்மடங்காகப் பெருகியிருக்கிறது. இன்னும் பெருகிக் கொண்டேயிருக்கிறது. அதற்கேற்றாற் போல் அதே அளவில் உணவுப் பெருக்கம் ஏற்படவில்லை. அடுத்தபடியாக, குறிப்பிட்ட பருவ மழை பல சமயங்களில் தவறி விடுவதாலும் பயிர் விளைச்சல் குன்றி விடுகிறது. தொன்றுதொட்டுப் பல காலங்களாகப் பயிரிடப்பட்டு வந்ததால் நம்முடைய நிலத்தின் வளம் குறைந்துள்ளது. அதற்குச் சரியானபடி இழந்த வளத்தை ஈடு செய்வதற்கு வேண்டிய உரங்கள் நிலத்திற்கு இடப்படுவதில்லை. பண்டைக் காலத்து மக்கள் அறிந்திராத, புதுப்புது நோய்களால் இக்காலத்தே தாக்கப்படுவது போல், உணவுப் பயிர்களும் தற்காலத்தில் முன்பு கண்டறியாத புதுப்புது வகையான நோய்களால் தாக்கப்படுவதால் உணவுப் பொருள்களின் விளைச்சல் குறைகிறது. மேலும் நம்முடைய வேளாண் குடிமக்கள் பண்டைக்காலத்தே நமது முன்னோர் கடைப்பிடித்து வந்த, தற்காலத்திற்கு ஒரு சிறிதும் ஒவ்வாத, அதே பழைய விவசாய முறைகளையே இன்னும் பின்பற்றி வருகிறார்கள். அமெரிக்கா, ருஷியா போன்ற வெளி நாடுகளைப் போல விஞ்ஞான முறையில் விவசாயம் இங்கு செய்யப்படுவதில்லை. விஞ்ஞான முறையில் விவசாயம் செய்யப் படுவதற்கு வேண்டிய, போதிய கருவிகளையும் அவற்றை இயக்கும் அறிவையும் மக்கள் இன்னும் பெறவில்லை.

மற்ற எல்லாத் தொழில்களையும் போலவே விவசாயத் தொழிலிலும் சில அறிவியல் நுணுக்கங்கள் உள்ளன. எல்லோரும் எப்படியும் நல்ல முறையில் விவசாயம் செய்து விடலாம் என்று நினைப்பது தவறு. மற்றத் தொழில்களைச் செய்வதற்கு அத்தொழில்களைப் பற்றிய அறிவியல் நுட்பம் எவ்வளவு முக்கியமோ, அதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது விவசாயத்தைப் பற்றிய அறிவியல் நுட்பமும்.

விவசாயம் ஓர் அடிப்படைத் தொழிலாகும். இத்தொழிலின் வளர்ச்சியின்றேல் கச்சாப் பொருட்களின் உற்பத்தி குறைந்து பெருந் தொழில்களான பஞ்சாலைத்தொழில் சர்க்கரைத் தொழில், காப்சி, தேயிலை, சணல் தொழில்கள் ஆகியன பெரிதும் பாதிக்கப்படும். இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைப்படும். அத்தியாவசியமான உணவுப் பொருள்களான நெல், சோளம், கம்பு போன்றவற்றைப் பயிரிடாது நீர்ப்பற்றுக்குறையை முன்னிட்டும் அதிக இலாபம் அடைய எண்ணியும் மக்கள் வணிகப்பொருட்களான புகையிலை, பருத்தி போன்றவற்றை அதிகமாகப் பயிரிடுவதால், உணவுப் பெருக்கம் குறைந்து நாட்டின் வளம் குறைகிறது. உணராமல் இருந்து விட்டதால்தான் உணவு நெருக்கடி நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. ஆனால் சமீப காலத்தில், மேலைநாடுகளைப் போலவே நம்முடைய அரசாங்கமும் விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மேற்கண்ட குறைகளை நீக்கி, விவசாயம் வளம் பெற்று உணவு உற்பத்தி பெருக ஆவன செய்து வருகிறார்கள்.

விவசாயத்துறை என்ற தனிப்பட்ட துறையின் மூலம் விவசாய மக்களுக்குப் பலவிதமான நன்மைகள் செய்யப்படுகின்றன. நம்முடைய விவசாய முறைகளில் உள்ள குறைகளைக் களைந்து, விவசாயத்தை நன்கு அபிவிருத்தி செய்வதற்காகக் கோவையில் அரசாங்க வேளாண்கல்லூரியும் ஆய்வுக் கூடமும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இங்கு விவசாயத்துறையின் பலவேறு பிரச்னைகளைப்பற்றி ஆராய்ச்சி நடத்தப்படுகின்றது. நவீன விவசாய முறையில் முன்னேற்றமடைந்து, நாடு வளம்பெற ஆவன செய்யப்படுகின்றன. வேளாண் மக்கள் அனைவரும் இங்கு என்னென்ன செய்யப்படுகின்றன என்பதை அறிந்துகொள்ள வேண்டியது மிக மிக அவசியம். கோவை வேளாண் கல்லூரி ஆய்வுக் கூடத்தில் கீழ்க்கண்ட பல பிரிவுகளில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

1. உழவியல் பிரிவு (Agronomy Section)
2. மண்ணியல் (இரசாயனப்) பிரிவு (Agricultural - chemistry and Soil Science Section.)
3. தாவர நூல் பிரிவு (Agricultural-Botony section.)
4. பயிர்ப் பெருக்குத்துறைப் பிரிவு (Plant Breeding and Geneties section
5. பழக்கலைப் பிரிவு (Horticulture section)
6. பூசணப் பிரிவு (Plant Pathology section)
7. பூச்சிப் பிரிவு (Agricultural Entornology section)
8. விவசாயப் பொறியியல் பிரிவு (Agricultural Engineering section)
9. விவசாய விஸ்தரிப்புப் பிரிவு (Agricultural Extension section)

ஒவ்வொரு பிரிவும் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக உழவியல் பிரிவை எடுத்துக்கொண்டால் அதில் அதன் தலைவராக உழவியற்பேராசிரியரும் (Professer of Agronomy) அவருக்கு உதவியாக உழவியற் கூட்டுப் பேராசிரியர் (Agrnomist and Associate Professor of Agronomy), உதவி உழவியல் ஆராய்ச்சி அதிகாரிகள் (Assistant Agronomists or Lecturers in Agronomy), உழவியல் ஆராய்ச்சி உதவியாளர்கள் (Assistants in Agronomy) ஆகியோர் இப்பிரிவு சம்பந்தப்பட்ட பிரச்னைகளைக் குறித்து ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள். இதுபோலவே மற்ற எல்லாப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவற்றையெல்லாம் இயக்கும் பொறுப்பை கல்லூரி முதல்வரும் கூட்டு விவசாய இயக்குனரும் (Dean and Additional Director of Agriculture) ஏற்று நடத்தி வருகிறார்கள். இனி ஒவ்வொரு பிரிவிலும் என்னென்ன செய்யப்படுகின்றன என்பதைக் கவனிப்போம்.

### 1. உழவியல் பிரிவு:

உழவின் தன்மை பற்றி இங்கு ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. நிலத்தை உழுகின்ற முறை - அஃதாவது எவ்வெவ்

பயிருக்கு எவ்வளவு ஆழம் எப்பருவத்தில் உழ வேண்டும் என்பதையும், பல்வேறு பயிர்களுக்குத் தகுந்தாற்போல் முறையாக எங்ஙனம் எருவிடல் வேண்டும் என்பதயும் பயிர்களை மண்ணிற்குத் தகுந்தாற்போல் சீரிய முறையில் (சில சமயங்களில் அயல் நாட்டு முறைகளிலுங்கூட, ஜப்பான் முறை நெல் சாகுபடி போல) எங்ஙனம் நடுவது என்பதையும், பாசன நீரை அளவாக வீணாக்காமல் எத்துணை முறை பயிர்களுக்கேற்றவாறு எம்முறையில் பாய்ச்ச வேண்டும் என்பதையும் அறிவதோடு பயிர் வளர்ச்சிக் காலத்தே அதனூடே களை எடுக்கும் பலவித முறைகளையும், வளர்ந்த பின் பயிரை அறுவடை செய்யும் முறைகளையும் நன்கு அறிந்து பயனுற இப்பிரிவின் ஆராய்ச்சி உதவுகிறது. கல்லூரி மத்தியப் பண்ணை (Central farm) (சுமார் 400 ஏக்கர் பரப்பளவு கொண்டது) நிலங்களில் பல விதான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இதைச் சேர்ந்தார்போல் ஓர் பால் பண்ணையும், கோழிப் பண்ணையும் உள்ளன. பால் பண்ணையில் மாடுகளை விஞ்ஞான முறையில் பால் கறத்தல், பாலிலிருந்து வெண்ணெய் எடுததல் ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம். கோழிப் பண்ணையில் பல உயர்தரக் கோழி இனங்கள் வளர்க்கப்படுகின்றன. கோழிகளுக்குச் சிறந்த உணவைப்பற்றியும், கோழிகளை நோய் தாக்காமல் விஞ்ஞான முறையில் வளர்க்கும் முறைகளைப்பற்றியும் இங்கு தெரிந்து கொள்ளலாம். உழவியற்பிரிவைச் சேர்ந்தார்போல் விவசாயப் பொருளாதாரப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது. இப்பிரிவில் விவசாயப் பொருளாதாரத்திற்கு வேண்டிய பல குறிப்புகள், அஃதாவது நாட்டில் விவசாயம் செய்யப்படும் நிலத்தின் மொத்த பரப்பளவு, தரிசாகக் கிடக்கும் பூமியின் பரப்பளவு, ஒவ்வொரு உணவுப் பயிரும் மொத்தப் பரப்பளவின் எத்துணை சதவிகிதத்தில் பயிரிடப்படுகிறது என்பது பற்றிய விவரம், உணவுப் பொருளின் விலைவாசிகள், விவசாய மக்களின் பொருளாதார வாழ்க்கைத்தரம், அதை உயர்த்த வேண்டிய வழிகள் ஆகியவற்றைப்பற்றி புள்ளி விவரம் சேகரித்து உதவுகிறார்கள்.

### 2. மண்ணியல் (இரசாயனப்) பிரிவு:

இப்பிரிவினர் தம் நாட்டிலுள்ள மண்ணைப் பல வகைகளாகப் பிரித்து, (கரிசல் மண், செம்மண், வண்டல் மண் போன்றவை) அவற்றின் தரங்களையும் (குணாதிசயங்களையும்) அவற்றிற்கேற்ற பயிர் வகைகளையும், பாசன நீரின் தரங்களையும் (குணாதிசயங்களையும்) பரிசோதனை செய்கிறார்கள். மண்ணுக்கேற்ற உரங்களையும் (அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட், பொட்டாசியம் சல்பேட் போன்றவை) அவற்றை இடும் அளவையும், பருவத்தையும், உரமிடுவதனால் மண்ணிற்கேற்படும் நன்மை தீமை ஆகியவற்றையும், மண்ணிலிருந்து பயிர்கள் உணவு கொள்ளும் தன்மையையும் ஆராய்ந்தறிகிறார்கள். மேலும் நல்ல வளமான நிலம் எங்ஙனம் கெட்டுவிடக்கூடும் என்பதையும், குறிப்பாக நிலத்தில் களர் எவ்வாறு உண்டாகிறது என்பதையும் களர் நிலத்தை நல்ல நிலமாக்குவது எவ்வாறு என்பதையும் பற்றி ஆராய்ந்து விளக்கம் தெரிவிக்கிறார்கள். நம் நாட்டில் நீர்ப்பாசனத்திற்காகப்பல அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். சில சமயங்களில் நீர் பாயாத நிலங்களில் புதிதாக அணை நீரைப் பாய்ச்சும்போது நிலம் களராகி, பயிர் விளைச்சலுக்குத் தகுதியற்றதாகி விடுகிறது. ஆதலின் ஓர் அணையைக் கட்டுவதற்கு முன்பும் பின்பும் நீர்ப்பாசனத்தால் நிலத்தில் ஏற்படக்கூடும் மாற்றங்களையறிந்து, அதற்குத்தகுந்தவாறு நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்யவும், பயிரிடவும், உரம் முதலியன இடவும் ஆலோசனை கூறுகிறார்கள். கோவையில் இலவச மண் பரிசோதனை நிலையம் ஒன்று நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது. இங்கு விவசாயிகள் தங்கள் நிலத்திலிருந்து எடுத்து அனுப்பும் மண்ணையும் சில சமயங்களில் கிணற்று நீரையும் இலவசமாகப் பரிசோதனை செய்து, நிலத்தில் எந்த வளம் குறைந்திருக்கிறது. உரம் எந்த அளவில் நிலத்திற்கு இட வேண்டும் என்று விவசாயிகளுக்கு இலவசமாக ஆலோசனை கூறி உதவுகிறார்கள். விவசாயிகள் எல்லோரும் தங்கள் நிலத்தின் மாதிரி மண்ணை இங்கு அனுப்பி, இலவசமாக ஆலோசனை பெற்று நன்மையடைகின்றனர்.

### 3. தாவர நூல் பிரிவு:

இப்பிரிவு பயிர்களின் தன்மைபற்றி ஆராய்ந்தறிகிறது. விளை பொருள்கள் அனைத்தும் எந்தெந்த பயிர்க் குடும்பத்தைச் (Family) சேர்ந்தன என்பதையும், ஒவ்வொரு பயிரினுடைய, விதை உற்பத்தி, முளைவிடும் முறை, வளர்ச்சி, உள்அமைப்பு உடற்கூறு, உணவு சேகரிக்கும் முறை ஆகிய தன்மைகளையும் கண்டறிகிறார்கள். விதைகளின் முளைக்கும் தன்மையை பரிசோதித்து (Seed testing) நல்ல விதைகளைப் பொறுக்கி யெடுக்க உதவுகிறார்கள். பயிர்களினூடே தோன்றி வளவைக் கெடுக்கும் வேண்டாத செடிகளின் (Weeds) (புல், பூண்டு முதலியவை) வகைகளையும் அவற்றை அழித்துப் பயிர்களைக் காக்கும் பல முறைகளையும் எடுத்துக் கூறுகிறார்கள்.

கால்நடைத் தீவனங்களில் முக்கியமான புல் வகைகளைப் (கொழுக்கட்டைப் புல், கினியா புல்) பயிரிட்டு, பரிசோதனை செய்து எவ்வகைப் புல் வகை சத்து நிறைந்தது? மாட்டிற்குச் சிறந்த தீவனமாகிறது என்று ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஒரு அழகான பூந்தோட்டம் அமைத்துக் கண்காணித்து வருகிறார்கள். அழகிய பூச்செடிகளையும், மரங்களையும் நட்டுப் பாதுகாக்கும் முறைகளையும், தோட்டங்களை அழகாக அமைக்கும் முறைகளையும் எடுத்துரைப்பதோடு, முக்கியமான பூச் செடிகளின் விதைகளையும் வேண்டுவோருக்குக் கொடுத்துதவுகிறார்கள்.

## 4. பயிர்ப்பெருக்குத்துறைப் பிரிவு:

மனிதர்களுக்குள் பாரம்பரியத்தன்மை (Heredity) எவ்வாறு வழிவழி அவர்களுடைய குழந்தைகட்கு வருகிறதோ அது போலவே தாவரங்கட்கும் பாரம்பரியத் தன்மை உண்டு. எடுத்துக்காட்டாக நெற்பயிரை எடுத்துக்கொண்டால் ஒரு வகை (Variety) நெற்பயிர் அதிகக் கதிர் விளைச்சலைக் கொடுக்கும் தன்மையுடையதாகவும் எளிதில் சாய்ந்து, நெல்மணிகளைச் சேதம் செய்யும் தன்மையுடையதாகவும் இருப்பதாகக் கொள்வோம். மற்றொரு வகை நெற்பயிர் (another variety) குறைந்த கதிர் விளைச்சலைக் கொடுக்கும் தன்மையுடனும் நன்றாக நிமிர்ந்து நிற்கும் தாளுடனும் இருப்பதாகக் கொள்வோம். இவ்விருவகை நெற்பயிர்களையும் ஒட்டுப் போடுவதன் மூலம் (Crossing) ஒரு புது வகை நெற்பயிர் உண்டாகிறது. இதில் கதிர், விளைச்சலும் அதிகமாகி, தாளும் நேராக நின்று, கதிர் மணிகளைச் சிந்தாது, தீவனத்திற்கும் நன்கு உபயோகப்படுவதாக இருக்கிறது. இது போலவே நமக்கு நன்மை தரக்கூடிய பயிர் வகைகளை, வேறு பயிர் வகைகளை ஒட்டுப் போடுவதன் மூலம் உண்டாக்கி, அவற்றைப் பெருக்கிக் கொள்ளலாம். இவ்வாறு பயிர்ப்பெருக்குத்துறையில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இத்துறையினுள் பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு பயிரைப்பற்றி விரிவான முறையில் ஆராய்ச்சி செய்து வருகிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் அதன் தலைவராக அப்பயிரின் நிபுணரும் (எடுத்துக்காட்டாக நெற்பயிர் நிபுணர், எண்ணெய்வித்து நிபுணர்) அவருக்கு உதவியாக உதவிப்பயிர் நிபுணரும், ஆராய்ச்சி உதவியாளர்களும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். பயிர்ப் பெருக்குத்துறைப் பிரிவுகளாவன:- (ஒவ்வொரு பிரிவுக்காகவும் தனித்தனியே ஒரு பண்ணை நிறுவப்பட்டு, அதில் அப்பயிரைப்பற்றிய ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.) நெல் ஆராய்ச்சிப் பண்ணை, சிறுதானிய (கம்பு, சோளம், ராகி, தினை, வரகு ஆகியன) ஆராய்ச்சிப் பண்ணை, பருப்பு ஆராய்ச்சிப் பண்ணை, பருத்தி ஆராய்ச்சிப் பண்ணை, எண்ணெய்வித்து ஆராய்ச்சிப் பண்ணை ஆகியன. எடுத்துக்காட்டாக நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் உலகின் பல்வேறு பாகங்களில் விளையும் நெல் வகைகளைப் (சுமார் இரண்டாயிரம் வகை) பயிரிட்டு அவற்றில் நமது நாட்டிற்கும் நம்முடைய சூழ்நிலைக்கும் தகுந்த நெல் வகைகளைப் பெருக்கிறார்கள். மேலும் நம் நாட்டின் பல வேறு பகுதிகளுக்கு, எவ்விடத்திற்கு எவ்வகை நெற்பயிர் சிறந்தது என்பதையும், அவற்றைப் பயிரிடும் முறைகளையும் எடுத்துக் கூறி, அவ்வகை நெற்பயிரின் வித்துக்களைப் பெருக்கி, விவசாயிகளுக்குக் கொடுத்துதவுகிறார்கள். இதைப் போல மற்றப் பயிர்ப்பண்ணைகளும் இயங்கி வருகின்றன.

## 5. பழக்கலைப் பிரிவு:

இப்பிரிவு நம் நாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் பயிரிடப்படும் பழ வர்க்கங்கள் எவை என்பதையும் (எடுத்துக்காட்டாக, மாம்பழத்தில் கிளிமூக்கு, நடுச்சாலை, பீத்தர் மல்கோவா, ஜஹாங்கீர் போன்றவை, திராட்சைப் பழத்தில் பச்சை திராட்சை, பெங்களூர் புளு, அனப்-இ-ஷாகி போன்றவை.) அவை ஒவ்வொன்றிலும் எத்தனை வேறுபட்ட வகைகள் உள்ளன என்பதையும், எச்சூழ்நிலைக்கு எவ்வகைப் பழம் நன்கு வளரும் என்பதையும் அவற்றைப் பயிரிட்டு வளர்க்கும் முறைகளையும் ஆராய்ந்து அறிவிக்கிறது. பழங்களைக் கெடாமல் பாதுகாக்கும் முறைகளையும் பழங்களிலிருந்து பழச்சாறு, ஜாம், ஜெல்லி முதலியவைகளைத் தயாரிக்கும் முறைகளையும் எடுத்துக் கூறுகிறார்கள், பலவகைக் காய்கறி, கிழங்கு ஆகியவற்றையும் அவற்றைப் பயிரிடும் முறைகளையும் எந்த நிலத்திற்கு எவ்வகை சிறந்தது என்பதையும் ஹார்மோன் (hormone) மூலம் காய்கறி பழங்களின் விளைவைப் பன்மடங்காக எவ்வாறு பெருக்க முடியும் என்பதையும் ஆராய்ந்து விளக்குகிறார்கள். மேலும் விவசாயிகள், விரும்பிப் பழங்களைப்பயிரிட்டு அவற்றின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கருதி, அவ்வாறு பயிரிட விரும்புவோருக்குப் பண உதவியும் அளித்து ஆலோசனைகளும் கூறி ஊக்கம் ஊட்டி நன்மை செய்கிறார்கள்.

## 6. பூசணப் பிரிவு:

மனிதனுக்கு எங்ஙனம் காலரா, அம்மை ப்ளேக் போன்ற நோய்கள் நுண்கிருமிகளால் ஏற்படுகின்றனவோ, அதுபோலவே பயிர்களும் பல வகையான நோய்களால் பீடிக்கப்படுகின்றன. இப்பிரிவில் பயிர்களுக்கு நோய் எவ்வகைக் கிருமிகளால்

(காளான், பாக்டீரியா, வைரஸ்போன்றவை) எப்படி உண்டாகிறது. நோயினால் பயிர் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பவற்றையும், நோய்க்குக் காரணமான கிருமிகளை எவ்வாறு கிருமி நாசினிகளால் அழித்துப் பயிர்ச் செடிகளைக் காப்பாற்றுவது என்பதுபற்றியும் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் ஏற்படும் பலவித நோய்கள் என்னென்ன என்பதையும் அவற்றை நீக்கும் முறைகளையும் எடுத்துக் கூறி விவசாயிகளுக்கு உதவுகிறார்கள்.

### 7. பூச்சிப் பிரிவு:

இப்பிரிவினர் பல் வேறுபட்ட பூச்சி இனங்களால் பயிர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதையும் அப்பூச்சிகளை எவ்வாறு ஒழித்துப் பயிர்களைக் காப்பாற்ற முடியும் எனபதையும் ஆராய்ந்தறிகிறார்கள். எடுத்துக்காட்டாக, நிலக்கடலைச் செடியைத் தாக்கிச் சேதப்படுத்தும் கம்பளிப் பூச்சியை தக்க பருவத்தில் டி.டி.டி. அல்லது பி.எச்.சி. அல்லது பாலிடால் ஆகிய மருந்துகளைத் தெளிப்பதன் மூலம் அழித்துப் பயிர்களைக் காப்பாற்றலாம். இதுபோலவே ஒவ்வொரு பயிரும் எத்தனை வகைப்பூச்சி இனங்களால் தாக்கப்படுகின்றது என்பதையும், அதனால் பயிருக்கு ஏற்படும் சேதத்தையும், தக்க மருந்துகளை (பூச்சி கொல்லி மருந்துகளை) உபயோகித்து, பூச்சிகளைக் கொன்று பயிர்களைக் காக்கும் முறைகளையும் இப்பிரிவினர் ஆராய்ந்து எடுத்துக் கூறி நன்மை செய்கிறார்கள். பூணசப் பிரிவு, பூச்சிப் பிரிவு, ஆகிய இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பயிர்ப் பாதுகாப்புப் பிரிவு எனக் கூறலாம்.

### 8. விவசாயப் பொறி இயல் பிரிவு:

இப் பிரிவினர் பல முக்கியமான நன்மைகளை விவசாயிகளுக்குச் செய்து வருகிறார்கள். இயந்திரக் கலப்பையால் நிலத்தை ஓரிரு முறை உழுதல் நாட்டுக் கலப்பையால் பன்முறை உழுதலை விடச் சாலச் சிறந்தது. ஆனால் விவசாயிகள் ஒவ்வொருவரும் தாங்களாகவே ஒவ்வொரு இயந்திரக் கலப்பையைச் சொந்தமாக வாங்கி வைத்துக் கொள்வதென்பது இயலாத காரியம். ஆதலின் இப்பிரிவினர் விவசாயிகளுக்கு இயந்திரக் கலப்பைகளையும் மற்றும் நிலத்தைத் திருத்துவதற்காகவும் உபயோகப்படுத்தப்படும் புல்டோசர்களையும் வாடகைக்குக் கொடுத்துதவுகிறார்கள். மேலும் விதைகளை நிலத்தில் வரிசையாக விதைப்பதற்கு வேண்டிய கருவிகள், மஞ்சளுக்கு வண்ணமிடும் கருவி, நெல் வயலில் களையெடுக்கும் கருவி, நிலக்கடலைத் தோலுரிக்கும் கருவி போன்ற கருவிகளைச் செய்து சீரான விலைக்கு விவசாயிகளுக்குக் கொடுத்துதவுகிறார்கள். நம் நாட்டில் மண் அரிப்பினால் பல லட்சக்கணக்கான ஏக்கரிலுள்ள வளம்நிறைந்த மண் அரித்துச் செல்லப்பட்டு மண் வளம் குறைந்து பயிர்களின் விளைச்சல் மிகவும் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க மண் அரிப்புத் திட்டம் (Soil conservation scheme) ஒன்றை ஏற்படுத்தி நாட்டின் பல பாகங்களிலும் விவசாயிகளுக்கு நன்மை செய்து வருகிறார்கள்.

### 9. விவசாய விஸ்தரிப்புப் பிரிவு:

இப்பிரிவு புதிதாக அண்மையில் துவக்கப்பட்ட ஒன்றாகும். இப்பிரிவினர் கோவை ஆராய்ச்சிக் கூடத்தில் நடக்கும் பலவித ஆராய்ச்சிகளின் முடிவை விவசாய மக்களுக்கு எடுத்துக் கூறியும், மக்களுடைய பிரச்சினைகளையும், குறைகளையும் ஆராய்ச்சியாளர்களிடம் கூறியும், அதற்குத் தகுந்த பரிகாரம் தேடி அதை விவசாயிகளுக்குக் கூறியும் நன்மையளிக்கும் பணியைச்செய்து வருகின்றனர்.

மேற்கண்ட பணிகளைக் கோவை வேளாண் ஆராய்ச்சிக்கூடம் (Agricultural Research Institute) மேற்கொண்டு விவசாயப் பெருமக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து வருகிறது. இங்குள்ள வேளாண் கல்லூரியில் ஆண்டுதோறும் நூற்றறுபது மாணவர்கள் மேற்கண்ட பல துறைகளிலும் பயிற்சி பெற்று வெளி வந்து வேளாண் மக்களும், வேளாண்மையும் சிறந்து நாடு வளம்பெறப் பணி புரிகிறார்கள். கோவை வேளாண் கல்லூரியும் ஆய்வுக் கூடமும் உலகிலுள்ள உன்னத ஆய்வுக் கூடங்களில் ஒன்றாகச் சிறந்து விளங்குகிறது என்பதும் உலகின் பல்வேறு நாட்டினராலும் பெரிதும் பாராட்டப்பட்டு இயங்கி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த உலகின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து பயிற்சி பெறுகிறார்கள். வேளாண்மை ஆராய்ச்சித் துறையின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை உணர்ந்து 1958ம் ஆண்டில் இருந்து இங்கு ஆராய்ச்சி மேற்துறைப் படிப்பான எம். எஸ்ஸி. (விவசாயம்) [M. Sc., (Ag)], பிஎச். டி (Ph.D.) ஆகிய இவை துவங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இக்கட்டுரை குறிப்பாகப் பல்நோக்கு உயர்நிலைப்பள்ளிகளில் விவசாயப் பிரிவு மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என எண்ணுகிறேன். விவசாயப் பெருமக்கள் அனைவரும் நன்கறிந்து, பயன்படுத்தி, உணவு உற்பத்தியைப் பெருக்கவும் (நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடித்து) நாட்டை மேலும் வளமாக்கவும் ஆவன செய்வார்களாக.

# தமிழர் மாண்பு

வித்துவான் - சி. தங்கவேலு
புகைவண்டி நிலையத் தலைவர், கொடுமுடி.

'தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு' என்று தமிழனின் தனி மாண்பை வியந்து பாராட்டுகிறார் ஒரு கவிஞர் பெருமான். "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று மார்தட்டிக் கூறினான் தமிழன். "கங்கையும் காவிரியும் எங்கள் நதியே" என்று இறுமாந்து பாடினான் தமிழன். "பஞ்ச நதி பாயும் பழனத் திருநாடு எங்கள் நாடே" என்று நெஞ்சம் நிமிர்ந்து பேசினான் தமிழன் அத் தமிழினத்தார் யாவர், அவர் தம் மாண்பு எத்தகையது என்பனவற்றை ஆராய்தலே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

பழம் பெருமையை ஏன் அறிதல் வேண்டும்? அதனால் யாது பயன் என வினவுவாரும் உண்டு. நிறைபயன் நல்கும் என்பது ஒருதலையான விடை. பழம் பெருமையை உணர்ந்தால்தான் தாழ்வுற்றிருக்கும் தமிழர் பழநிலை யெய்த மனங்கொள்வர். சிந்திப்பர். சிந்தனை செயற்படும். மக்கள் மாண்புறுவர். நாடு நலம் பெறும். இக்கருத்தை உளங்கொண்டன்றோ "எங்கள் தந்தையர் நாடென்ற போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்றார் மகாகவி பாரதி.

பூவுலகின்கண் முதன் முதல் தமிழ் நாட்டில்தான் மக்கள் தோன்றினர் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். விஞ்ஞானிகள் கண்ட முடிபும் அஃதேயாகும். உயிர்கள் தோன்றுதற்கு உஷ்ணம் தேவை. பூமத்திய ரேகையையடுத்த நாடுகளே வெப்பமிகுந்த பகுதியாகும். எனவே, உயிர்த் தோற்றத்திற்கு உறுதுணையான வளம்மிக நிறைந்த வெப்பநாடாகிய நந் தமிழ் நாட்டிலேயே முதன்முதல் மக்கள் தோன்றினர் என்பது வலியுறுகின்றது. இன்றைக்குக் கானூற்றாண்டிற்கு முன்னர்த் திருச்செங்கோட்டினின்றும் அச்சிடப் பெற்று வெளிவந்த கொங்குமண்டல சதகச் சிறப்புப்பாயிரத்தில் ஆராய்ச்சியறிஞர் திரு. வி. க. அவர்கள் நமது கொங்கு நாட்டைச் சிறப்பித்துக் கூறுங்கால் "மக்கடமை முதலளித்த மாண்புடைய தமிழ் நாட்டில்" மன்னுநாடு, குக்குடத்தான் கோயிலொடு குழைக்காதன் கோயில் கொளுங் கொங்கு நாடே" என்று குறிக்கின்றார்.

எங்கு மக்கள் தோன்றினர்களோ அங்குத்தான் மொழியும் தோன்றியிருக்க வேண்டும். எனவே, தமிழ் மொழிதான் உலகம் கண்ட முதல் மொழியாகும். மொழிச் சிறப்புத்தான் மக்கட் சிறப்புக்குக் காரணமாகின்றது. தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்பது பொருள். "தமிழ் தழீஇய சாயலவர்" என்ற சிந்தாமணி அடிக்கு உரை கண்ட நச்சினார்க்கினியரும் தமிழ் என்ற சொல்லுக்கு இனிமைப்பொருள் கூறியுள்ளார்.

தமிழ்மொழி, மொழிநூலார் கண்ட பத்துவகை அழகும் நிரம்பப்பெற்ற ஒரு உயர்தனிச் செம்மொழியாகும். (**A classical language**). எம்மொழிக்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு நம்மொழிக்கு உண்டு. அஃது யாதெனில், தமிழில் எல்லாச் சொல்லுக்கும் பொருளுண்டு. ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்பது தொல்காப்பியர் கூற்று. தமிழிலக்கிய இலக்கணப் பயிற்சி குன்றிய பிற்காலத்தே பொருள் தெரியாத வார்த்தைகளை இடுகுறியாக்கிக் கூறினர் நன்னூலார்.

இச் சிறந்த மொழி பேசப்படும் நிலவெல்லை

''வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந் நான் கெல்லை தமிழது வழக்கே''
-(சிகண்டியார்)

''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம்படுத்த தண்புனல் நன்னாட்டு''
-(இளங்கோவடிகள்)

என்று குறிக்கப்படுகின்றது. மேற்குறித்த நிலவெல்லையையுடைய நிலமெல்லாம் செந்தமிழ்நாடு என்று சிறப்பித்துக் கூறப்படும். இதில் தோன்றியவரெல்லாம் தமிழர்.

தமிழர்கள் கல்வி, வீரம், நீதி, கொடை, வாணிகம் முதலியவற்றிற் சிறந்து விளங்கினர்.

பழம்பெரும் இலக்கியங்களை நோக்குமிடத்து நம் தமிழகத்தில் கல்வி நன்னிலையில் இருந்ததெனத் தெரிகிறது. ஆடவரும் பெண்டிரும் கல்வியில் மேம்பட்டு விளங்கினர். பன்னூற்றுக்கணக்கான சங்ககாலப் புலவர்களும், கம்பர் வள்ளுவர் இளங்கோ போன்ற இடைக்காலப் புலவர்களும், ஔவையார், இளவெயினி, முதுவெயினி, காக்கைபாடினியார், நச்செள்ளையார் போன்ற பெண்பாற் புலவர்களும் நம் தமிழகத்தை அணி செய்துள்ளனர்.

வீரம் மக்களுக்கு வேண்டிய சிறந்த பண்புகளுள் ஒன்று. அரசனுக்கு வேண்டிய அருங்குணங்களுள் ஒன்று. அன்றைய மக்களும் அரசர்களும் வீரஞ்செறிந்தவராய் விளங்கினார்கள். அக்காலத்திலிருந்த புலவர்களும் வீரமுடையவர்களாய்த் திகழ்ந்தார்கள். இவர்கள் பாடல்களும் வீரச்சுவையுடையனவாயுள்ளன. பல நூற்றாண்டுகட்குமுன் வாழ்ந்த தண்டமிழ் மக்கள் பெருங்குணங்களையும் அருஞ்செயல்களையும் பழக்க வழக்கங்களையும் அந்நல்லிசைப் புலவர்கள் சொல்லியுள்ள பாடல்களால் திரைப் படத்தில் காண்பதைப்போல் கண்டு களிக்கிறோம்.

அவர்தம் போர்முறை நீதிநெறியிற் பொருந்தியது. ஒரு அரசன் மாற்றானொடு பொருதநேரின், காலமும் இடமும் குறித்தே போருக்கு வருவர். போரில் புறங்காட்டி ஓடுவராயின் அதனைக் கண்டு மகிழாமல், இம்மனத்திட்பமில்லாரோடு பொருதோமே என்று நாணமடைவர். போரில்படும் புண்களைப் பூண்களாக மதிக்கும் மாண்பு அவர்கள்பால் இருந்தது. தன்னை நோக்கி அம்பு வரினும் கண் இமையாதிருக்கும் திண்மை பெற்றுத் திகழ்ந்தனர். மாற்றான் படைக்கலமிழந்த வழியும் களைப்புற்ற வழியும் அவனோடு போர் செய்ய மாட்டார்கள். படைக்கலமெல்லாமிழந்து தன்னந் தனியனாகப் போர்க்களத்தில் நின்ற இராவணனை நோக்கிய இராமபிரான்,

''ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை; இன்று போய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்''

என்று கூறும் கம்பர் பாட்டு இதற்குச் சான்றாகும்.

நமது தமிழகத்தைப் புரந்த சேர சோழ பாண்டியரான மூவேந்தரும் வீரத்தாற் பொலிவுற்று விளங்கினர். சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கனகவிசயர் தலையில் கல்லேற்றி வந்து கண்ணகிக்குப் படிவம் சமைத்தான் என்பதிலிருந்து சேர வரசர்களின் வீரம் செவ்விதிற் புலனாகின்றது. தம் வீரத்திற்கு நிகரில்லையென இமயத்திலே புலிக்கொடி பொறித்த ஒரு சோழ அரசனைச் சிறப்பித்து

''இமையவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றி''

என்று சிலப்பதிகாரம் பேசுகின்றது. கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களால் வெற்றி பெற்றோரைப்பற்றிச் சிறப்பித்துப் பிரபந்தங்கள் பாடும் வழக்கம் உண்டெனத் தெரிகிறது. பாண்டியர்தம் வீரமோ பகரவொண்ணாதது.

வீரர்கள் படுகளத்தில் இறந்து கிடப்பினும் அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியும் கம்பீரமும் வீரப்பொலிவும் இறையளவும் குறையாதிருக்கும் என்பதை இரகுநாதனால்கொல்லப்பட்டு இரணகளத்திலே வீழ்ந்து கிடக்கின்ற பெருவீரனாகிய இராவணனது திருமுகங்களைப்பற்றி நமது கம்பர்

"வெம்மடங்கல் வெகுண்டனைய
சினமடங்க மனமடங்க வினையம் வியந்
தெம்மடங்கப் போருதடக்கைச்
செயலடங்க மயலடங்க ஆற்றல் தேயத்
தம்மடங்கு முனிவரையும் தலையடங்க
நிலையடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன அம் முறை
துறந்தான் உயிர் துறந்த முகங்களம்மா!

என்று கூறிய இவ்வருமைப் பாடல் இனிதுணர்த்துகின்றது.

பண்டைப் பெண் மக்களும் வீரத்தின் விளைநிலமாய் விளங்கினர். தம் குழந்தைகளுக்கு உணவூட்டும்பொழுதே வீரத்தைப் புகட்டினர்; நேர்மையை நினைவூட்டினர். இன்சொல், ஈயுந்தன்மை இவற்றை இன்பமுடன் கையாளப் பயில்வித்தனர். எவ்வகையினும் தம் மைந்தர் சான்றோரால் புகழப்படும் சான்றோராய் விளங்க வேண்டும் என்ற எண்ணத்தை மனத்தில் நிலைநிறுத்தி நல்லுணர்வுகளையே அவர்களுக்கு ஊட்டிய பெருமை, இன்பத் தமிழ்த்தாய்க் குலத்திற்கே உரியதன்றோ,

நீதிக்கு நிலைக்களன் நம்நாடு. பாண்டியன் நெடுஞ்செழியன் கற்பரசி கண்ணகிக்கு அறியாமல் இழைத்த தவற்றை உணர்ந்து "பொன்செய் கொல்லன் தன் சொல்கேட்ட யானோ அரசன்? யானே கள்வன். கெடுக என் ஆயுள்" எனக்கூறி அரியாசனத்தினின்றும் விழுந்து உயிர் நீத்து நீதியை நிலைநாட்டினான். மனுநீதிச் சோழன் தன் ஒரே மகனைத் தேர்க்காலிலிட்டுக்கொன்று நீதி வழங்கிய முறையை உலகம் நன்கு அறியும்.

முதலிடைகடை வள்ளல்கள் வாழ்ந்து கொடைக் குணமிக்க சந்ததியார் பல்லாயிரவரைத் தோற்றுவித்த பெருமை நம் நாட்டுக்கே உரியதாகும், பேகன் மயிலுக்குப் போர்வையும், பாரி முல்லைக்குத் தேரு மீந்த வரலாறுகள் இவற்றை விளக்கும். குமணன் என்ற கொடைவள்ளல் தலைகொடுத்த தன்னேரிலாப் பெருங்குணத்தைத் தரணி அறியும்,

தஞ்சமென வந்தோரைத் தாங்கும் பெருந்தகைமை நம்மவர்பால் இருந்தது. ஒரு சிறு புறாவின் பொருட்டுத் தன் சதையையே அரிந்து துலையிலிட்ட சிபிமன்னனைப்பற்றி,

"காக்கும் சிறுபுறவுக்காகக் கனிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும்"

என விக்கிரம சோழனுலா வியந்து போற்றுகின்றது.

நம் பண்டைத் தமிழகம் செல்வம், தொழில், வாணிகம் முதலியவற்றிற் சிறந்து விளங்கியது. நம் தமிழக நிலையினை மனத்திலே நிறுத்தி, கோசல நாட்டைக் கூற வந்த கம்பர், "எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வம் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையாருமில்லை மாதோ" என்று ஒரு சமத்துவநிலை நிலைபெற்றிருந்தமையைக் குறிப்பாக உணர்த்துகின்றார்.

தமிழ்நாட்டவர் ரோமாபுரி முதலிய மேலை நாடுகளுடன் வாணிகம் புரிந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. மதுரைக்குப் பக்கத்தில், சமீபத்தில் கண்டெடுக்கப் பெற்ற கிரேக்க ரோம எகிப்து நாணயங்கள் இதனை வலியுறுத்துகின்றன.

இதுகாறும் கூறியவற்றால் உலகத்தின்கண் நம் தமிழகத்திற்றான் மக்கள் முதன் முதல் தோன்றினர் என்பதும், மொழி பிறந்ததென்பதும், தமிழர் கல்வி, வீரம், நீதி, கொடை, வாணிகம், ஆகியவற்றில் மேம்பட்டுப் பெருமாண்புடன் விளங்கினர்கள். என்பதும் அறிகிறோம். தமிழகத்தின் இன்றைய நிலையோ மிகவும் தாழ்வுற்றிருக்கிறது. காரணம், அந்நிய ஆட்சியின் நெடுநாட்பிடியினால் நாம் மொழி வளர்ச்சி, வாழ்க்கைநலம், அரசியல் ஆகியவற்றில் பின்னடைந்துள்ளோம். மாண்புமிக்க பண்டைப் பெருநிலை எய்துதற்கு நம் சுதந்திரத் தமிழ்நாட்டைப் புரக்கும் அமைச்சர் பெருமக்களும், அறிவுச் சான்றோர்களும், செல்வத்திற் சிறந்தோரும் ஆவன செய்வார்களாக!

★ ★ ★

5. தெள்ளு தமிழ்மொழியில், சின்னஞ் சிறுஅடியால்
கொள்ளும் அறம்பொருளைக் கூறியே, — உள்ளத்தைச்
சாடி அறிவுதரு சாகரமாய் நின்றதனுல்
கோடி பெறுமோர் குறள்.

6. நாடி உழைத்தாலும் நல்லபொரு ளில்லையென
ஆடி அயர்ந்துவீ ழ்ன்பர்காள்! — கூடிநிதம்
தேடித் தமிழின் திருக்குறளைத் தேர்ந்தீரேல்,
கோடி பெறுமோர் குறள்.

7. தேடாமல் வாழ்வுதரு செல்வந் தெளியாமல்
மாடாக வேயுழைக்கும் மாந்தர்காள்! — நீடாமல்
பாடி வுணர்ந்துகுறள் பண்புவழி நின்றீரேல்,
கோடி பெறுமோர் குறள்.

8. முப்பாலு முண்டிளமை மூவா நலங்காட்டித்
தப்பா திரண்டடியில் தாவியே — இப்பாரில்
ஆடி நடைபயிலு மான்ற திருக்குறளில்
கோடி பெறுமோர் குறள்.

9. நிலையாமை நோய்மூப்பு சாக்காடு நோக்கி
நிலையாய்வார் நேரல்ல நேரார் — நிலைமாறித்
தேடும் பொருள்தானே தேய்ந்தழியும் தேயாது
கோடி பெறுமோர் குறள்.

10. கரவா துவந்தீயும் கண்ணன்னர் கண்ணும்
இரவாமை கோடிபெறு மென்று — அரும்பொருளைத்
தேடி அறமுரைக்கும் தேவர்முப் பாலில்,பல்
கோடி பெறுமோர் குறள்.

# மகண் மறுத்தல்

தி. செ. குப்புசாமி...

ஓர் இலக்கியக் காட்சி. உயர்ந்த மரங்கள் செறிந்த ஓர் மலைச்சாரல். பிடியும் களிறும் பின் தொடரும் சிறு வழி. அவ்வழியே ஓடித்திரியும் மாவினங்களை நாள் முழுதும் தேடித்திரிந்து அலுத்துப்போன உடல்; எனினும் கட்டமைந்த அவ்விளைஞன் கையில் கொண்ட வில்லோடு தனது களைப்பைப் போக்க ஆங்கோரிடத்தே இளைப்பாறி நின்றான். வேட்டைக்கு வந்த அரசிளங் குமரன் போலும்! வேட்கையின் மிகுதியால் அவனது கண்கள் சுனை நீரை நாடிச் சுற்றும் முற்றும் பார்க்கின்றன.

அவ்வமயம் உருவும் திருவும் ஒருங்கேயமைந்த நல்லணங்குபோல்வாள் ஒருத்தியை அக்கண்கள் கண்டன; ஆனால் நம்பவில்லை. வழிதவறி வந்து அலையும் வனமாதோ! அன்றித் தினைப்புனத்தைக் காத்து நிற்கும் தெரிவையோ! இவள் யாரெனத் தெரிய விழைந்தன. இவளை நண்ணி நம் நீர் வேட்கையைப் போக்குவோம் என எண்ணினான் அவ்வரசிளைஞன். எழுந்து "புழைக்கை நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடைகற்கும்" அவளது நடையழகைச் சுவைத்தவாறே அவ்வழிச் சென்றான். "வேல்விழியளாகி நின்று வேந்தனையும் வியப்பூட்டிய அம் மங்கையின் முகம், இளைஞன் ஒருவன் தொடர்வதைக் கண்டு நாணித் தாழ்வுற்றது.

"பெண்ணே! வேட்டைக்கு வந்த யான் நீர் வேட்கையால் துன்புற்றேன். நீர் கிடைக்கும் இடங்காட்டின், இப்பார் முழுதும் உனக்கு அளிப்பேன்" என்ற அவனது சொல் காதில் படவே, குனிந்த தலையோடு விரைந்து நடந்தாள். வாய் மறுமொழி கூறவிடினும் உள்ளம் கருணை வெள்ளம் பொழிய நினைத்தது. மருங்கே விரைந்தனன் வேந்தனும், ஆயினும் ஓர் குடிலை நெருங்கினர் இருவரும். வாயிற் புறத்தே வந்து நின்ற இளைஞன், விரைவில் தேனும், தினையும், தெளிந்த நீரும் உண்டு மகிழ்ந்தான். மகிழ்ச்சிப் பெருக்கோடு, "செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்" என்று காற்றில் அலைந்து வந்த இன்னமுதையும் செவியால் பருகினான். இது குறவர் வாழும் குடிசைபோலும் என்பதை நன்குணர்ந்தான். செம்புலப் பெயல்நீர் போல ஆங்கே அன்புடை நெஞ்சம் கலந்து நின்றது. அக்குறக்குலக் கொடியிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து வெற்றுடம்பினனாய் விடு திரும்பினான். பொழுதும் மறைந்தது. இருளும் வந்தடைந்தது.

மறுநாள். தேனும் தினையும் உண்ட வாயும் கையும் இன்னும் இனிப்பதைக் கண்டான். எனினும், வேட்கை மட்டும் தணிவதைக் காணான். ஓலையொன்றை எடுத்துத் தன்மனக் கருத்தைத் தீட்டினான். தூதனையழைத்து அக் குறக்குலத் தலைவனின் குறிப்பறிந்து வரும்படி ஓலை போக்கினான்.

காற்றினும் கடிது நடந்த தூதனும் அரசனது திருமுகத்தோடு குறவனைக் காண்கின்றான். "யார் நீ? என்ன அது" இது குறவனின் கேள்வி. "அடுத்துள்ள நாட்டின் அரசனது தூதன் யான். இது அவரனுப்பிய திருமுகம்" தூதன் ஓலையை நீட்டினான். வெகுண்ட குறவனின் உடல் வியர்த்தது. "என்ன தூதனே! இக்கிறுக்கோலையா அரசனது திருமுகம்! எனின், இதற்குக் கண்ணெங்கே? காது எங்கே? காணக்கிடக்கும் மற்றைய உறுப்பெங்கே? காட்டும்" என்றான். தூதனுக்கு ஒன்றும் புரியவில்லை. "ஐயா, திருமுகம் என்பது இவ் அரசனது ஆணையை ஏற்றுவரும் இவ் வோலையேயாகும்" இதுதான் விடை.

"அப்படியா! சரி சரி. உன் அரசனுக்கு என்னால் இங்கு ஆவது யாதுளது?"

"ஐயா, நேற்றுக் காட்டையடைந்த எங்கள் அரசனின் உள்ளத்தை வேட்டையாடினளாம் உன் மகள். உன்னைக் கேட்டறிந்து அதைப் பெறுதற்கே இன்று





பள்ளி தேசிய மாணவர் படையின் வாத்தியக் குழு 1962.

இங்கு என்னைக் கூட்டி வந்தது இத்திருமுகம்.'' என்று தூதன் வினயமாகக் கூறினான்.

''என்ன தூதரே! யாது கூறினீர்'' மீண்டும் குறவன் கேட்கிறான்.

''உன்மனம் அறிந்த பின்பே, மண விளைக்கு ஏற்பாடு.........'' தூதன் சொல்லி முடிக்கும் முன்பே குறவன்,

''சரி நிறுத்து. மணத்தை விழைந்ததா உன் மன்னனது உள்ளம்! அதற்குரிய ஏற்பாடு வேறா! நன்று நன்று! அத்தனையும் வெறுங்கூப்பாடு என்பதை அறிவித்துவிடு. இருக்கட்டும். எங்கள் குலத்தில் பெண் கொள்ள உங்கள் மன்னனுக்கு என்ன தகுதியுள்ளது?'' சிவந்த கண்களோடு குறவன் கேட்கிறான்.

தூதன் திடுக்கிட்ட உள்ளத்தோடு. ''என்ன தலைவனே! இப்படிக் கேட்டு விட்டாய்! மன்னரை மணக்க மங்கையர் மறுப்பரோ! அன்றியும் மற்றெவரேனும் இதைத் தடுப்பரோ! இது விந்தையினும் விந்தை ஐயா! மன்னன் இங்ஙனம் மனங் கொண்டது உங்கள் குடி செய்த பெரும் பேறு அன்றோ? உங்கள் குறக்குடிக்கும், குவலயம் ஆளும் மன்னர் குடிக்கும் மடுவுக்கும் மலைக்கும் உள்ள வேற்றுமையன்றோ! இவ்வித வாய்ப்பைப் பெறுவது அரிது! சரி சொல்லியனுப்பும்'' தூதன் சற்றுத் தெளிவுறப் பேசினான்.

''போதும் நிறுத்து உன் வார்த்தையை. வீண் பெருமைய ஏன் அளக்கின்றாய்? உங்கள் மன்னர் குலப் பெருமை மாநிலம் நன்கறியும்! அரசர்களின் ஆற்றல்களைப் போற்றுபவன் நீதான்' தூற்றுபவர் பலர் உளர்! என்பதயும் நீ தெரிந்துகொள்.''

''செங்கோலோச்சி மங்காப்புகழ்பெறும் மன்னரின் பெருமையையும் மதியாதவர் உளரோ? இது என்ன விந்தை ''ஐயா'' தூதன் கேட்கிறான்.

''விந்தைதான்! கேள். ''இப்பாரை, வார்த்தையால் தரலாகுமோ? தாரை வார்த்துத் தா.'' எனக் கேட்ட முனிவடம் கோட்டையை விட்டுச் சென்றானே! அவன் யார்? வெள்ளிக்காசு வழங்கிய கையால் கொள்ளிக்காசு வாங்கி வாழ்ந்தவனின் பெருமையை நீயே போற்று. புலையனிடம் விலை பேசிப் பெண்டை விற்ற சண்டாளன் பரம்பரைதானே உங்கள் அரசர்குலம்!'' -

குறவனுக்குக் கோபத்தால் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன.

''பொறுமை வேண்டும் பெரியவரே! நீர் அறியாது கூறினீர். உண்மையின் உயர்வை உலகுக்கு உரைக்க அந்த உத்தமன் மெத்த துயரை அனுபவித்தான். அதனால் இன்று உண்மையின் உறைவிடமாக அவன் இவ்வுலகில் வாழ்கின்றான். சத்திய நெறியை ஊட்டிய அவனை நாம் பத்தியோடு பாராட்ட வேண்டாமா? - இது தூதனின் சமாதானம்.

மீண்டும் ஆரம்பித்தான் குறவன், ''சரிசரி. உன் மன்னனுக்கு மன்னிப்பு வேண்டுமா? இருக்கட்டும். அடுத்தவன் ஒருவனும் உன் குலத்தரசனே! ''கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டுப் போனதுவும் அத்தகைய வேந்தர்க்குப் போதுமோ?'' சூதும் வாதும் கொண்டு, மக்களையும், மனைவியையும் வேதனைக்கு ஆளாக்கிய பாதகனல்லவா அச்சூதன்? அவனும் உங்கள் அரசர் வழிதானே! - தூதனுக்கும் விடைகூறத்தடை ஏற்பட வில்லை.

''குறவர் பெருமானே! யான் கூறுவதைப் பொறுமையுடன் கேட்க! அது விதியின் பயன். விதி செய்யும் வினை வினுக்கே இங்கு வேறு செய்வார் புவி மீதுளரோ? உற்ற காலத்தே ஊழ்வினை வந்துறுத்தின் மற்று எத்தகைய பேறும் மாறி விடுவது உலகில் கண் கூடு. பிரிந்த மன்னனின் மனதைத் தெரிந்து கொள்ள வில்லையே! ஊர்ந்து சென்ற நண்டைக் கண்ட அம்மன்னன் தேர்ந்துசொன்னதைக் கேள். ''காரிருளில் காதலியைக்கானகத்தே கைவிட்ட பாதகனும் என்னைப் பார்க்கலாகாதென்று எண்ணினையோ?'' மேலும், கடலின் அருகே சென்ற அவன், ''அலை கடலே! நீயும் என்னைப்போல் காதலியைக் கைவிட்டலைகின்றனையோ'' என்று கேட்டதை நீயறியாயோ?'' - மனைவியன்பால் கொண்டுள்ள இவ்வன்பின் பிணிப்பை மற்றெவனொருவன்பால் நீ கண்டாய்? சொல்!'' - இது தூதுவனின் துணிந்த பேச்சு.

குறவன் தூதனுக்கு இளைத்தவன் அல்ல வெட்கித் தலை குனியுமாறு, ''தூதனே! உன் சொல்வன்மைக்கு நான் மயங்கி விட்டேன், மற்றொன்றும் கேள். பெற்ற பெண்டை உற்ற முறையில் வைத்து வாழத் தெரியாது, மற்றவன் மனைபுகச் செய்தானே! அவன், வில்லைத் தோளிலே மாட்டி, வினைரையும் கூனரையும் வீணே அழைத்துக் கானக

மெங்கும் கலங்கித்திரிந்த உங்கள் அரசனின் குலம் நான் அறியாததல்லவே!''

தூதன் ஏதோ சொல்ல முற்படுகிறான். குறவன் தடுத்துக் கூறும் சொல் இது.

''ஐயா! இதையும் ஏதோ மழுப்பப் பார்க்கிறாய். போகட்டும் இன்னொரு வேடிக்கை யறிந்தீரா? ''கற்றைக் குழல் பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்தோன், பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்'' எனத் தம் பெண்டைப் புலம்ப வைத்த பேதையரைத் தெரிந்தீரா? உங்கள் தண்டும், வில்லும் கொண்ட பெண்டிரைக் காக்கவில்லையே! இக் குலப்பெருமையை என்னிடமா பலப்படுத்தப் பார்க்கிறாய்! நன்று! நன்று! இவர்களை நம்பிப் பெண் கேட்க நல்லவன் போல் வந்து விட்டாய்!''

தூதுவன் என்ன செய்வான்? ''பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே! மெய்போலும்மே'' - இம்முதுமொழி எவ்வளவு உண்மை! அரசர்க்கும் குறவர்க்கும் உள்ள வேறுபாடு, மலைக்கும் மடுவிற்கும் ஒத்தது. அதனை இக்குறவன் மடுவிற்கும் மலைக்குமாக மாற்றியமைத்துக் காட்டி விட்டான். சொல்லவும் அறியாது, செய்வதும் தெரியாது மெல்ல நழுவத் தொடங்கினான் தூதுவன். குறவன் விட்ட பாடில்லை. ''நில்! அப்பனே! என் வினா எங்கே? உன் விடை எங்கே! நல்லவனுக்கடையாளம் சொல்லாமற் செல்லுவதா? ஒன்று சொல்கிறேன் கேள்.''

தூதன் நின்றான். குறவன் கூறுகின்றான் - ''எங்கள் குடியிலே பெண்ணெடுக்க முன் வந்த மன்னவனை நீ தெரிந்துகொள்''

''மன்னவன் அல்ல. அவன் விண்ணவன். சிரித்துப் புரமெரித்த செஞ்சடையான் திருக்குமரன். ஓங்கி உலகளந்த உத்தமனின் திருமருகன். ஒரு கை மூகன் தம்பி......''

''குறவர் தலைவனே! ஒருவனின் குடிப் பெருமையை யார் கேட்டார்? செயல் திறனைச் சொல்லாயோ? - தூதுவனின் கேள்வி.

''வீரத்தில் தாழ்வுண்டோ?வெற்றிவேல் அவன் பெயர். வேலங்கைக் கொண்டு, அமரர் வெஞ்சிறை விடுத்து, இந்த ஞாலந்தனைப் புரந்த நாயகனும் அவன்......''

''குறவர் பெருமானே! அவனை நானும் அறிவன். வள்ளியை மணந்த வல்லவனின் பெருமையை நீ சொல்ல வேண்டியதில்லை!''

''அவ்வள்ளி யார் என்பதை அறிய வேண்டாமா? எங்கள் குறவர் குலத்தில் வளர்ந்த பெண்ணல்லவா அவள்! அவளை மணங்கொள்ள மணங்கொள்ள முருகன், கெஞ்சினான், கூத்தாடினான். அவனது எச்சிலையும் மிச்சத்தில் விடவில்லையே! இருந்தும் எங்கள் உளங்கொண்ட பின்பன்றோ மணங்கொண்டான்.''

''அறிந்தேன்! அறிந்தேன்! எங்கள் மன்னவன்பால் இதை மதித்துரைப்பேன்''. வேறு ஒன்றும் கூறவியலாத நிலையில் தூதுவன் கூறிய விடை இது.

''வளர்ப்புப் பெண்ணை மணக்கவந்த விண்ணவனுக்கே இப்பாடு! நாங்கள் பெற்ற பெண்ணைப் பெறவிரும்பும் உங்கள் மன்னவனின் பெருமையை யாரே மதிப்பர்? பேய்பிடித்திடும் தூதரே! செல்லரித்த இவ்வோலை செல்லுமோ? சொல்''

சொல்லுவதொன்றும் அறியாத தூதன் உள்ளத்தே நாணி மெல்ல நடை பயின்றான்.

அழகிய இந்த நிகழ்ச்சிச் சித்திரம் நந்தமிழ் மொழியில் உள்ள சிற்றிலக்கியம் ஒன்றில் காணக்கிடக்கின்றது. ''கலம்பகம்'' என்பது அவ்விலக்கியம். ''மகண் மறுத்தல்'' என்பது இதில் காணும் ஒரு துறை. ''வேடர் குலத்திலே பெண் விரும்பி ஓலை போக்கிய மன்னனுக்கு, வேடன் தன் குலப் பெருமையையும், அரசர் குலச் சிறுமையையும் எடுத்துக் கூறிப் பெண் தர மறுத்தல்'' என்பது இதன் விளக்கமாகும்.

அத்தகைய ஒரு பாடலின் கருத்தைத் தான் நாம் இங்கு கண்டோம். சொல்வன்மைக்கும் கவிச் சுவைக்கும் ஒருங்கே எடுத்துக் காட்டாக விளங்கும் அந்த அழகிய செய்யுளைப் படித்துச் சுவைப்போம்.

''விற்றது யார்? கலை பாதியோடு
வனத்திலே அழ விட்டது யார்?
வெஞ்சிறைப் புக விட்டது யார்?
துகில் உரிய விட்டு விழித்தது யார்?
உற்ற தாரமும் வேண்டுமென்று
இனிமன்னர் பெண் கொளல் ஆகுமோ?
உமியடா மணம் என்ற வாய்-கிழித்து
ஓலை காற்றில் உருட்டடா.

எங்கள் மிச்சில் மிசைந்த பின்
பெற்ற வேலர் தமக்கு யாம் ஒரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்பரோ? இது என்?
பேய் பிடித்திடு தூதரே!''

# நினைவு அலைகள்

T. N. அர்த்தநாரி, பி.ஏ., பி.டி.,

கொள்கைதான் முக்யம். மனிதனல்ல. இதுதான் இன்றைய ருஷ்யத் தலைவர் குருச்சேவ் எழுப்பும் குரல். இதன் விளைவு தான் ஸ்டாலினின் சவம் செஞ்சதுக்கத்திலிருந்து நீக்கப்பட்டது. இறந்தவரையும் இழிவு படுத்துவது ருஷ்யரின் பண்பு போலும்! ஆனால் இந்தியராகிய நமக்கோ, கொள்கைக்கு எவ்வளவு சிறப்போ அவ்வளவு அதனைப் பரப்பியவர்க்கும் அளிப்பது பண்பாகும். எனது பள்ளி, கல்லூரி, பயிற்சிக் கல்லூரிப் படிப்பு நிலைகளிலே, அந்தத் துறைகளிலே சிறப்புமிக்க பெரியோர்களை ஆசிரியர்களாகப் பெறும் பேறு பெற்றேன். இப்பெரியார்கள் கல்வித்துறையின் வெவ்வேறு படிகளில் நின்று பணியாற்றி வரும்போதும் இவர்கள் கொள்கை ஒன்றே. ஆம். நமது தாய்த்திரு நாடான இந்தியா மனதாலும் செயலாலும் ஐக்யப்பட்டுப் பல்வேறு துறைகளில் குறிப்பாகக் கல்வித் துறையில் முன்னேற வேண்டுமென்பதே!

மாணவனாக, உடன் பணியாற்றிய ஆசிரியனாக, தற்போது வேறு பள்ளியில் பணியாற்றும் ஆசிரியனாக, தலைமையாசிரியர் திரு. M. சண்முகம் அவர்களை நான் நோக்கும்போது ஆசிரியர்களில் ஓர் ரத்தினமாக அவர் திகழ்கின்றார். 1949-ஆம் ஆண்டு அவர் நடத்திய பாடம், பள்ளியை விட்டுப் பிரியும் போது மாணவர்களாகிய எங்களுக்கு அளித்த அறிவுரையாவும், ஆண்டுகள் பல கழிந்தும், மாறுதல்கள் பல நேர்ந்தும் மனதை விட்டு அகலாதிருக்கின்றன என்றால் அவர் சத்தான முறையில் பாடம் நடத்துவார் என்பதுதானே பொருள்?



''ஆன் தி ரூல் ஆப் தி ரோட்'' என்பது ஓர் ஆங்கிலப் பாடம். அப்பொழுது நமது ஊர் தியேட்டர்கள் ஒன்றில் மட்டரகமான ஓர் சினிமா இசைத்தட்டைத் தினமும் ஒலி பரப்பிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பாடத்தில் ஒருவர் தனக்குச் சுதந்திரமிருக்கிறதென ஓர் பழைய காலத்து இசைத்தட்டைத் தினமும் வைத்துப் பக்கத்து விட்டுக்காரனுக்குத் தொல்லை கொடுப்பதாக வருகிறது. புள்ளி வைத்தாற்போல் தலைமையாசிரியர் தியேட்டரில் தினமும் ஒலிபரப்பப்பட்டு வந்த சினிமா இசைத்தட்டைப்பற்றிக் கூறினார் பாருங்கள்! நாங்களும் சிரித்தோம். அவரும் சிரித்தார்! நேரம் செல்வதே தெரியாது. அவர் 2 அல்லது 3 மணி நேரம் நடத்தும் 'தனி' வகுப்பிலும்! அன்றாட வாழ்க்கையில் காண நேரிடும் சம்பவங்களை மேற்கோள் கூறிப் பாடத்தை நடத்துவார். இது மட்டுமல்ல - பாடம் நெஞ்சில் பதிய அவர் ஆபீஸிலிருந்து இரண்டொரு வேளை வகுப்புக்குக் கொண்டு வரும் பிரம்பும் ஓர் காரணமாகும். பிற்போக்கு மாணவர் சிலர் பெறும் பிரம்படிகளே போதும் மற்றவர் பயந்து ஒழுங்காகப் படிக்க! ஆசிரியனாக நான் அவரிடம் கண்ட பண்புகள்- பாரபட்சமற்ற தன்மை, நேர்மை, ஒழுக்கம், இரக்கம், கடமையுணர்ச்சி முதலியனவாம்.

''இதனை இதனால்
இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்.''

என்ற குறளுக்கேற்ப ஆசிரியர்களுக்கு ஏற்ற பொறுப்புக்களையளித்து ஆண்டுவிழாக்களையும், மற்றப்பள்ளிப் பணிகளையும், சிறப்பா

கச் செய்திருக்கின்றார். தோட்டியும் சங்கம் வைத்து அவன் காரியத்தைச் சாதித்துக் கொள்கின்றான்; ஆசிரியர்களாகிய நமக்கு நமது உரிமைக்குரல் அரசாங்கத்திற்கு எட்ட சங்கம் வேண்டாமா? ஒற்றுமை வேண்டாமா? எனக் கேட்கிறார். அவர் பேசுவதைக் கேட்பதே கல்வியாகும். இந்தி போன்ற இந்திய மொழிகளைக்கற்க ரோமன் லிபியைப் பயன் படுத்த வேண்டும். தற்போதைய கல்வி முறையில் மொழிப்பாடங்களுக்கே அதிக வகுப்புக்கள் உள்ளன; அது மாறி அணுயுகத்திற்கேற்றாற்போல் கணக்கு, விஞ்ஞான பாடங்களுக்கே அதிக வகுப்புக்கள் வேண்டுமென்கிறார்.

சோம்பேறி யார்?

ஒரு வேலையும் செய்யாமல் சும்மா கிடப்பவன் மட்டுமல்ல. இப்போது செய்துகொண்டிருப்பதைக் காட்டிலும் சிறப்பாகப் பணியாற்றுவதற்குத் திறமையும் வாய்ப்பும் இருந்து, அப்படிச் செய்யாமல் இருக்கிறானே அவனும் "சோம்பேறி தான்."

—சாக்ரடீஸ்.

இன்று லயோலாக் கல்லூரி முதல்வராக விளங்குபவர் அருள் தந்தை செகியூரா சுவாமிகள் ஆவார். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்களின் சிறப்பிற்கு அவர்களின் விடுதி வாழ்வே காரணம் என்பவர். அன்று திருச்சியில் அவருடைய கண்காணிப்பில் எங்கள் ''நியூ ஹாஸ்டல்'' வாழ்வு ஓர் கல்வியாகவே நிகழ்ந்தது. ஒவ்வொரு இரவும் தவறாமல் எங்களைக் கண்டு நலன் விசாரிப்பதுடன் நற்பழக்கங்களையும் சொல்லிக் கொடுப்பார். இரவு 10 மணி வரை படித்தபின் நன்றாகத் தூங்கிக் காலை 5 மணிக்கே எழுந்து படிக்க வேண்டும். எந்த தேர்வுக்கும் நான் இம்மாதிரிதான் படித்துள்ளேன் என்பார்! படிப்பதற்கு முன் தினமும், மாணவர் மாலையில் வியர்வை வர விளையாட வேண்டும் என்பார். இரவு 8 மணிக்குமேல் மாணவர் விடுதிக்கு வெளியே செல்லக்கூடாது என்பது ஓர் விதி. இவ்விதியை மீறிய ஓர் மாணவரை அவர் தண்டித்த விதமே தனி ரகம். 'குற்றவாளி' கண்டுபிடிக்கப்பட்ட மறுநாள் காலை ஓர் குதிரைவண்டி விடுதி முன் வந்து நின்றது; அதில் அவரே முன்னின்று அம்மாணவரின் உடைமைகளை ஏற்றி 'நீ வேறிடம் பார்த்துக் கொள்' என்று அம்மாணவரை அனுப்பி விட்டார். தவிர்க்க முடியாத காரணமின்றி விதியை மீறி நடந்த மாணவர்களுக்களித்த தண்டனையைத் தளர்த்த மாட்டார். முதலில் ஒவ்வொருவரும் தன்னை இந்தியன் எனக்ருத வேண்டும்; வேலை செய்து சம்பாதிக்கும்போதுதான் தருமமோ, மற்றச்செலவோ செய்ய வேண்டும் என்பார். அவர் நடத்திய எந்த விழாவும் இரவு 9-30 மணிக்குமேல் நீடித்ததில்லை! அவருடைய மாணவரில் பலர் பெரிய வேலைகளில் இருந்தபோதிலும் அவர் போற்றுவது நாட்டுக்குப் பயன்படும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர்களையே!

சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் மாணவர்களாகிய எங்களுக்கு தற்போது ஈரோடு மாவட்டக் கல்வ்யதிகாரியாக விளங்கும் திரு. சங்கரன் பிள்ளையவர்களின் வகுப்பென்றால் சிறிது வயிற்றைக் கலக்கும்! திங்கட்கிழமை காலை 10 மணிக்குள் அவரது மேஜைமேல் நோட்டுப் புத்தகம் வைக்க வேண்டுமானால்; வைத்தே ஆக வேண்டும். யாரும் அவரை ஏமாற்ற முடியாது! அவர் கொடுத்த வேலைகளினால் எளிமையான குடிமைப் பயிற்சிப் பாடமே எங்களுக்குக் கடினமாகத் தோன்றியது. எங்களைத் திருப்பதிக்கு உல்லாசப் பயணமாக அழைத்துச் சென்றார். அதில் உல்லாசத்தைத் தவிர மற்றதையெல்லாம் அனுபவித்து விட்டோம். ஏனெனில் நடந்தே திருப்பதி மலை ஏறியதுடன் நடந்தே அருவிகளுக்கும் சந்திரகிரிக்கும் (அப்போது எமகிரிக்குச் செல்வது போல் தோன்றியது) சென்றோம். தூங்கும் நேரத்தைத் தவிர வேறு ஓய்வு நேரத்தைக் காண விரும்பாத இவரது கடமையுணர்ச்சிபற்றி இவரது சக ஆசிரியர் கூறியது நினைவிற்கு வருகிறது. ஆவடி குடிமைப்பயிற்சி முகாமில் ஓரிரவு விளக்குகள் எல்லாம் அணைந்து விட்டனவாம். உடனே இவர் தனது 'டார்ச்' விளக்கை எரித்துக் கொண்டு மாணவர் நோட்டுப் புத்தகங்களைத் திருத்த ஆரம்பித்துவிட்டாராம்! வாழ்க இப்பெரியோர்! வளர்க அவர் தம் தொண்டு!



# தொழிற் கல்வி.

B. பெருமாள்ஜெயராஜ்.

ஒரு நாட்டின் தொழில் வளத்தைப் பொறுத்தே அதன் முன்னேற்றமும் இருக்கும். தொழில்வளம் பெருகாதநாடு, பின் தங்கிய நாடாகவே இருந்து வரும். மேலை நாடுகளில் தொழில்வளம் பெருகி வருவதற்கு முதற் காரணம் தொழிற் கல்விதான். நம்நாடு தொழில் துறையில் இப்போதுதான் முயன்று முன்னேறிக் கொண்டு இருக்கிறது இதற்கு ஆக்கம் தரும் வகையில் தான், கல்வி வளர்ச்சியில் நமது அரசாங்கம் அதிக அளவில் அக்கறை காட்டி வருகிறது! அரசாங்கம் என்னதான், திட்டங்கள் தீட்டித் தீவிரம் காட்டினாலும், பொது மக்களின் ஒத்துழைப்பும், உதவியும் இல்லாவிட்டால், அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறாது.

கல்வியைக் கற்றுக் கொள்கிற மாணவர்கள் 'ஏட்டுக் கல்வி கற்றால் மட்டும் போதுமானது என்றோ, அல்லது அரசாங்கப் பணிமனைக்குப் போக வேண்டும் என்பதற்காகவோ கல்வியைக் கற்றார்களேயானால், எதிர்காலத்தில் அவர்கள் வாழ்வு இன்ப வாழ்வாக இருக்காது; என்பது மட்டும் அல்ல, நாட்டில் புதிய புதிய தொழில்கள் ஏற்பட முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையும் உண்டாகிவிடும்! இன்றைய தினம் ஜப்பான் போன்ற சிறிய நாடுகள் கூடத் தொழில் துறையில் வெகுவாக முன்னேறிவிட்டன என்பதை நாம் அறிவோம்! அங்கு அவ்வாறு தொழில்கள் வளரக் காரணம் என்ன? என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்நாட்டு மக்கள் "தங்கள் கையாலேயே பொருள் செய்து, தங்கள் நாட்டினர் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்ற கருத்தில் புதிய தொழில்களைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்! இந்த ஆர்வத்தைத்தான் மூலமாகவும், முதலாகவும், வைத்துத் தொழிலைப் பெருக்கி வருகிறார்கள்!

இத்தகைய ஆர்வத்திற்கு ஆக்கம் அளிக்கும் வகையில்தான் தொழிற்கல்வியும், விஞ்ஞானமும் அவர்களுக்கு உதவி வருகின்றன. நாம் ஒரு கட்டிடத்தை ஒரு ஆண்டில் கட்டி முடிப்போம் என்றால், அவர்கள் ஒரே மாதத்தில் கட்டி முடிக்கும் திறன் பெற்றிருக்கிறார்கள்! போக்குவரத்து வசதிக்காக ஒரு பாலத்தை நாம் நிறுவ இரண்டு ஆண்டுகளைச் செலவிட வேண்டி இருக்கிறது! அவர்களோ ஒரு சில மாதங்களில் அதைக் கட்டி முடித்துவிடும் வாய்ப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்! நமக்கு, கட்டிடத்திற்கும் பாலத்திற்கும் முதலில் பயிற்சி பெற்ற இன்ஜினியர் தேவை! அடுத்து இரும்பும், சிமிண்டும் தேவை. இவை இல்லாமல் குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடிக்க முடியாது!

பயிற்சிபெற்ற இன்ஜினியர்கள் நம் நாட்டில் குறைவு. இரும்பும் சிமிண்டும் நமது தேவையைப் பூர்த்தி செய்யும் அளவு நாம் உற்பத்தி செய்யவில்லை. இந்தக் காரணத்தால்தான் மற்ற நாட்டார் வேகமாகச் செய்து முடிக்கின்ற பணியினை நாம் காலம் தாழ்த்திச் செய்து முடிக்கிறோம். தற்பொழுது தான் நம் நாட்டிலும் கனி வளங்களைக்கண்டுபிடிப்பதிலும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதிலும் ஊக்கம் காட்டி வருகின்றார்கள்! இரும்பு கிடைத்தால் தான் எந்திரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும்! எந்திரத் தொழிற்சாலைகள் இருந்

தால்தான் எந்திரக் கருவிகள் தயார் செய்ய முடியும். அக்கருவிகளின் உதவியால் பல தொழில்களைச் செய்ய நமக்கு வகை பிறக்கும். இவ்வசதிகள் போதிய அளவு இல்லாத காரணத்தால்தான் நமது பொன்னான காலம் பயனற்றதாகி, உழைப்பும் வீணாகி விடுகின்றது. இதனால் உற்பத்திக் குறைபாடும் இருந்து வருகின்றது!

இக்குறைபாட்டினை நீக்கி, நாட்டைத் தொழில் மயமாக்கத்தான் ஐந்தாண்டுத் திட்டங்களை அரசியலார் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்! திட்டங்கள் பலனளிக்க வேண்டுமானால் தொழிற் பயிற்சி பெற்றவர்கள் தேவை. அதற்குப் பள்ளியில் பயிலும் மாணவர்கள், நாட்டின் வளத்தில் நாட்டம் கொண்டு, தொழிற் கல்வியினைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். படித்துப்பட்டம் பெற்றால் போதுமானது என எண்ணுவது பேதைமை! கற்ற கல்விக் கேற்பப் பயனுடையவர்களாக விளங்க வேண்டும். சிலர் படித்து விட்டதின் காரணமாகத் "தொழில் செய்வது கேவலம்" எனக்கருதுகிறார்கள்! இத் தவறான கருத்து தகர்த்தெரியப்பட வேண்டும். தொழில் செய்வதில் தாழ்வு மனப்பான்மை கூடாது. அவரவர் தகுதி, திறமை, அறிவு-ஆற்றலுக் கேற்ற வகையில் முயன்றால் செய்து முடிக்கலாம். இதைத் திருவள்ளுவர் கூடத் தெளிவு படுத்தி இருக்கிறார்!

"பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை
யான்."

கலப்பையைப் பிடித்துக் காட்டை உழுவது கஷ்டமாக இருக்கலாம்! 'ட்ராக்டர்' வைத்து நிலத்தைப் பண்படுத்தலாமல்லவா! மாடு பூட்டி ஏற்றம் இறைப்பது சிரமமாக இருந்தால், 'மோட்டார்' வைத்து தண்ணீர் இறைக்கலாமே!

கட்டை வண்டியில் போனால் காலம் அதிமாகிறது என்பதால் தானே காரில் செல்கிறோம். கார் ஓட்டுவதை யாரும் கேவலமாகக் கருதுவதில்லை அல்லவா? அதே போல்தான் எல்லாத் தொழிலும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பதற்கு இலக்கணமாகும்! எனவே கல்வி அறிவு பெற்றவர்கள் தொழில் செய்வது கேவலம் என்றோ மதிப்புக் குறைவானது என்றோ எண்ணத் தேவை இல்லை! வளர்ந்து வரும் விஞ்ஞானத்தை வகையாகப் பயன்படுத்திக் கொண்டால், நாடு வெகுவிரைவில் தொழில் துறையில் முன்னேறிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

இதனால்தான் அரசாங்கத்தார் உயர் நிலைப்பள்ளியில் இருந்தே தொழிற் கல்வியைக் கற்றுத்தர வகை செய்து இருக்கிறார்கள்! மேலும் அதற்கான புதிய பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக்கொண்டால்தான் நாம் நலமுடன் எதிர்காலத்தில் வாழ முடியும்! ஒரு தொழிலும் கற்றுக் கொள்ளாமல் வெறும் ஏட்டுக் கல்வியுடன் இருந்து விட்டோமேயானால், தமிழ்ப் புலவர் ஒருவர் தொழில் கற்றுக் கொள்ளாமல் வருந்திய நிலையில்தான் நாமும் வருந்த நேரிடும்!

அந்தத் தமிழ்ப் புலவர், தமிழ்மொழி ஒன்றைக் கற்றுக் கொண்டாலே, எல்லாம் நமக்குக் கிட்டிவிடும், அது ஒன்றே உலகத்தில் எல்லாவற்றிற்கும் மேலானது; என எண்ணித் தமிழ்க் கல்வி ஒன்றையே கற்றுக் கொண்டு கொஞ்சம் கர்வத்தோடு இருந்தார்! இப்புலவரின் கவிதை கேட்டுப் பொருள் கொடுக்க யாரும் முன் வரவில்லை, இதன் பயனாக வறுமைவாய்ப்பட்டார்! உடல் மெலிந்து, எலும்பும் தோலுமானார்! இரந்து வாழ வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளானார்! அப்போதுதான் புலவர் 'தான் எந்த ஒரு தொழிலையும் கற்றுக் கொள்ளாத காரணத்தால் தானே இத்துன்பத்திற்கு இலக்கானேம்' என வருந்தி ஒரு பாட்டைப் பாடினார்.

அடகெடுவாய் பல தொழிலும் இருக்கக்
கல்வி,
அதிகமென்றே கற்றுவிட்டோம்;
அறிவில்லாமல்
திடமுளவோ கனமாடக் கழைக்கூத்தாடச்
செப்பிடுவித்தைகள் ஆடத் தெரிந்தோம்
இல்லைத்
..........................................
சனியான தமிழை விட்டுத் தையலர்தம்
இடமிருந்து தூது சென்று பிழைத்தோம்
இல்லை;
என்ன சென்மம் எடுத்து உலகில்
இரக்கின்றோமே!

இப்பாட்டு தனிப்பாடல் திரட்டில் உள்ளதாகும்!

இதிலிருந்து நமக்கு நல்லதொரு பாடத்தைப்புலவர் வெகு அழகாக எடுத்துக் காட்டிவிட்டார்! ஆகவேதான் மாணவர்கள் தொழிற் கல்வியை விரும்பிக் கற்றுக் கொண்டு, நாட்டின் வாட்டம் போக்க நல்லிதயம் கொண்டு, உழைக்க முன்வர வேண்டும் என்பதை இந்த மலரின் மூலம் நினைவு படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்! வளர்க கல்வி! பெருகுக தொழில்!

# கூடும் நேரம்

கா. சு. இராமசாமி சாஸ்திரி.

வளம் மிகுந்த வடநாட்டின்கண் வனப்பிலே சிறந்த ஓர் நகர். அங்குக் கலையில் கலைமகளெனும் வாசவதத்தை விலைமகளாய்ப் பிறந்து வளர்ந்தாள். அழகில் இணையற்ற அவளைப்பணங்கொடுத்துத்தன்வயப்படுத்த முயன்றனர் பலர். ஆயினும், வாசவதத்தையின் உளம் தன் குலத்தொழிலை வெறுத்தது. சாத்திர முறைப்படி மனதிற்குகந்த ஓர் வாலிபனை மணந்து இன்பமாய் இல்லறம் நடாத்த விரும்பினாள் நங்கையர் குலத்திலகம். அப்பொன்னான நன்னாள் என்று வருமோ என ஏங்கி நின்றாள் எழில்மிகு நங்கை.

இளவேனிற்காலம். பரிதி பொன்மயமான கதிர்கொண்டு புவனப் பொருள்களுக்குப் பொன்முலாம் பூசிக்கொண்டிருந்தது. பூங்காவில் புள்ளினங்கள் கூவிக்கொண்டிருந்தன. மயில்கள் ஆடிக்கொண்டிருந்தன. வனிதாமணி வாசவதத்தை அதிகாலையில் புனிதப்புனலாடிப் பூங்குழலை இளம் வெயிலில் உலர விட்டவாறு தன் இல்லத்தின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்தார்.

மனதைக்கவரும் அவ்வேளையில் "புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்ற இனிய குரல் அவள் செவிகளில் நுழைந்தது. உடனே மான்விழியாளின் மருண்ட பார்வை ஒலி வந்த வழியே பாய்ந்தது. உபகுப்தர் என்ற ஓர் பௌத்தபிட்சு திருவோட்டைப்பற்றிய திருக்கரங்களுடன் மனைவாயிலில் வந்து நின்றார்.



இளமையும் அழகும் தவழும் அவரது உருவத்தைக்கண்டு மங்கையின் உளம் பூரிப்படைந்தது. கொள்ளைபோன உள்ளத்தைப்பற்ற விரும்பியவன்போல விரைவாகப் படிகளில் இறங்கி வாயில் அருகில் வந்தாள் வாசவதத்தை. உபகுப்தர் தன் எதிரில் நிற்கும் எழில்மிகு நங்கையைக் கண்டதும் தானாகவே தலையகுனிய நின்றார். சிறிது மௌனம். மறுபடி தன் மத மந்திரமாகிய "புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்ற சொல்லை ஓதினார். "அம்மையே! இச்சிறு வயிறு வாழச் சிறிது உணவுப் பொருள் தேடி வந்தேன்" என்றார்.

வனப்பெனும் வலையிலே வீழ்ந்த வனிதையின் உள்ளம் அம்மை என்ற சொல்லைச் செவியுற்றதும் என்னே எனது அழகு! ஓர் வாலிபனை மயக்கும் வலிமை இதற்கு இல்லாது போயிற்றே எனச் சிறிது வருந்தியது. ஆயினும் வலிமையை நழுவ விடாது வாசவதத்தை புன்னகை பூத்த முகத்துடன் அமுதத்தினுமினிய மெல்லிய குரலில் "அழகிற் சிறந்த அன்பே! அடியாளின் கருத்தையேற்று என்னையேற்க வேண்டும்." என் நெடுநாளைய விருப்பம் இன்றே நிறைவேறிற்று. பொன்னுடையணிந்து பொலிவுடன் விளங்க வேண்டிய இவ்வுடல்காவி

யாடை கொண்டு கண்களை வருத்துவதா? இந்நாள் முதல் என் ஆசைத் துணைவர் ஆகி, என் இல்லத்திலே தங்கி, இல்லறம் நடத்த வேண்டுமென அடி பணிந்து வேண்டுகிறேன்'' என்று தன் இரு மலர்க் கரங்களை முன் நீட்டினாள்.

உபகுப்தர் அவளது உள்ளக் கருத்தை உடனே உணர்ந்து கொண்டார். தலை குனிந்தவாறே ''பெண்ணே! உன்னை இன்னும் இருபது நாட்களில் கூடுவேன். உன்னைக் கூடும் நேரம் இதுவல்ல. கவலை வேண்டாம்.'' என்று கூறி விரைவாக அவ்விடம் விட்டகன்றார்.

உபகுப்தரின் ஒவ்வொரு உறுப்பும் அபலையின் உள்ளத்துட் புகுந்து கொண்டது. இடைவிடாது அவரைப் பற்றிய நினைவில் ஒவ்வொரு விநாடியும் சென்று கொண்டிருந்தது.

மெள்ள மெள்ளப் பதினைந்து நாட்கள் கழிந்தன. பதினாறாம் நாள் மாலையில் உபகுப்தர் ஓர் காட்டின் வழியில் தன் மடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். கதிரவன் மேற்குக் கடலில் மூழ்குகின்ற நேரம். புதரில் ஒளிந்திருந்த சிங்கம் ஒன்று உபகுப்தரின் மீது தருணம் பார்த்துப் பாயப் பதுங்கி நின்றது. இதைக் கண்ட வேடுவன் ஒருவன் எடுத்தான் வில்லை; தொடுத்தான் அம்பை; விடுத்தான் அச் சிங்கத்தின் மீது. அம்பு உடலிற் பயவே, வீறிட்டு வீழ்ந்தது அந்த வனவிலங்கு.

அதைக் கண்ணுற்ற பிட்சுவின் உள்ளம் படபடத்தது. அவரது கருணை நிறைந்த கண்களிலிருந்து நீர்த்துளிகள் தரையிலே வீழ்ந்தன. அவர் விரைந்து அச்சிங்கத்தின் அருகிற் சென்றார். உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த அவ்விலங்கின் முதுகைத் தடவிக் கொடுத்தார். இதற்கிடையில் அவ் வேடன் உபகுப்தரின் அருகில் வந்து ''ஐயனே இது என்ன செய்கை? தன்னைக் கொல்ல வந்த விலங்கிடமா கருணை காட்டுவது!'' என வியப்புடன் வினவினான்.

அது கேட்ட, உபகுப்தர் புன்னகை செய்து ''அப்பா, உலகில் இச்சிங்கத்தை விடக் கொடுந்தன்மையுடையவர் உளர். சிங்கம் உணவுக்காக மட்டுமே வேட்டையை மேற்கொண்டுள்ளது. நீ மனிதனாய்ப் பிறந்தும் பகுத்தறிவு பெற்றிருந்தும் விலங்குகளைக் கணை கொண்டு கொல்கின்றாயே, இது மட்டும் எவ்வாறு நியாயமாகும்? பொதுவாகப் புகலுமிடத்து அன்பினால்தான் உலகம் வாழ முடியும். எல்லோரும் ஓர் குலம் எல்லாம் ஓர் இனம் என்ற எண்ணமே எல்லோரும் இன்புற்றிருக்க வழி வகுக்கும்''

உபகுப்தரின் சொல்லைக் கேட்டதும் கொடுந்தொழில் புரிந்து வந்த வேடன் உள்ளம் மாறி விட்டது. சிறிது மௌனமாய் நின்றான். ஏதோ சிந்தித்தான். உடனே வில்லையும் அம்புகளையும் முறித்து நதியில் வீசினான். ''புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி.'' என்று கூறிய வண்ணம் அடிகளார் அடிகளில் பணிந்தான். ஒன்றும் பேசாது அவ்விடம் விட்டகன்றான்.

உபகுப்தர் உயிர் துறந்த சிங்கத்தை நினைந்து நினைந்து வருந்தியவாறே மடத்தை நோக்கி நடந்தார். தன் உயிருக்காக ஓர் உயிர் மாய்க்கப்பட்டதே என்ற எண்ணம் அவர் உள்ளத்துள் துன்ப மூட்டிக்கொண்டிருந்தது.

பதினேழு நாட்கள் கழிந்து விட்டன. இன்ப நாள் வர இடையே இரண்டு நாட்களே குறுக்கிட்டுக் கொண்டிருந்தன. வாசவதத்தைக்கு அவ்விரு நாட்களைக் கழிப்பது மிகவும் முடியாததாயிற்று.

பத்தொன்பதாம் நாள் அரச சபையில் வாசவதத்தை வரவழைக்கப்பட்டாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் வாசவதத்தை இல்லத்தில் நடந்த ஓர் செல்வந்தரின் கொலை வழக்கைப்பற்றிய முடிவு நாள் அது. அரசன் வாசவதத்தை அக்கொலைக்கு உடந்தையாய் இருந்தாள் என்பதை யறிந்து, அவளது இரு கைகளை வெட்டி, விழிகளை வெளியே எடுத்துத் தெருவில்விடும் படி உத்தரவிட்டான்.

ஆரணங்கு, அரசன் அடிபணிந்து கொஞ்சும் குரலில், ''வேந்தே! தங்களது ஆணைப்படி நான் தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன். அடியாளுடைய ஆசையொன்று நிறைவேறாது கிடக்கின்றது. நான் விரும்பிய காதலர் நாளை இரவிற்குள் வந்து விடுவார். அவருடன் சிறிது நேரம் இன்ப வாழ்வு கொள்ள அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டாள். விம்மினாள்; வெதும்பினாள்; பெருமூச்சு விட்டாள்; புலம்பினாள்; கண்ணீருகுத்தாள். ஆயின், அரசன் மனம் சிறிதும் இரங்கவில்லை. அரசன் அவையைக் கலைத்துச் சென்றான்.

வாசவதத்தையின் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இருகரங்களும் துண்டிக்கப்பட்டன. விழிகள் வெளியே எடுக்கப்பட்டன. கைகள் துண்டிக்கப்படும் வரை தன் உள்ளம் கவர்ந்த காதலன் வருகையை எதிர்பார்த்து ஏங்கி நின்றாள் வாசவதத்தை. ஆயினும், ஏமாற்றம், பெரிய ஏமாற்றம்.

கைகளையும் கண்களையும் இழந்த வாசவதத்தை தெருவில் விடப்பட்டாள். முன் எவளைப் பெரும் சீமான்கள் பின் தொடர்ந்தனரோ அவர்களில் ஒருவரேனும் இப்பொழுது தென்படவில்லை. கண்டவர் அவளது விகாரமான உருவத்தைக் கண்டு கண் பொத்தி விலகிச் சென்றனர். ஈக்களும் இரத்த மோப்பங்கொண்ட நாய்களுமே, அவளைப் பின் பற்றிச் சென்றன. பாவம்! முன் உள்ளம் சிதைந்தது; இப்பொழுது உடலும் சிதைந்தது. இனி, அவள் யாருக்காக வாழ்வது? கதறிய வண்ணம் காரிகை தெருவிலே தட்டுத்தடுமாறிச் சென்று கொண்டிருந்தாள்.

அச்சமயம் அவளது தோளின் மீது மிருதுவான ஓர் கரம் பட்டது. வாசவதத்தை திடுக்கிட்டு யாரது என்று வினவ உபகுப்தர், "பெண்ணே! அஞ்சாதே. உன்னைக் கூடுவதாகச் சொல்லிய நேரம் வந்துவிட்டதால் வந்துவிட்டேன்" என்றார்.

குரலைக்கேட்ட மங்கை வந்தவர் யார் எனப் புரிந்து கொண்டாள். விம்மியவாறே "ஐயனே! வெள்ளம் வெளியேறிய பின் அணைகட்ட வந்தீர். நேற்றே வந்திருக்கக் கூடாதா? என் வனப்பு அடியோடு அழிந்த பின் நான் எதைக்கொண்டு உங்கள் உள்ளத்தைக் களிப்பிப்பேன்? இதுதானா "கூடும் நேரம்" என்று வினவினாள்.

"பெண்ணே! நான் தக்க நேரத்தில் தானே உன்னைச் சந்தித்திருக்கிறேன். உதவியற்றவர்களுக்கு உதவி செய்வது தானே மனிதனின் கடமை. நீ சமூகத்தால் விலக்கப்பட்டவள். கரங்களையும் கண்களையும் இழந்து கதியற்று விட்டாய். இப்பொழுதுதானே உனக்கு உதவி தேவை. உள்ளிருளை நீக்கி என்னைப் பின் பற்றி என் மடத்திற்கு வா" என்று உபகுப்தர் அழைத்தார்.

வாசவதத்தையின் வெளிப் பார்வை நீங்கி விட்டது. உபகுப்தரின் உபதேச மொழிகளால் அவளது அகக்கண் பேரொளி பெற்றது. அவளது காமவுணர்ச்சி மங்கி மறைந்தது. உபகுப்தரை நன்கு வாழ்த்தினள், அவர், அவள் தோள் பற்றி அழைத்துச் செல்ல, "புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்று இருவருடைய இனிய குரல்களும் ஒன்று கலந்து நீல வானிலே நீண்ட நேரம் ஒலித்துக்கொண்டிருந்தன.

★ ★ ★

### கயவர் கற்ற வித்தை.

தூரத்தில் கண்டதுமே உச்சியில் கையை உயர்த்துவர். மகிழ்ச்சியால் கண்ணிலே நீர் சொரிவர். மார்புறத்தழுவ ஆயத்தமாவர். நலன்களை அன்பொழுகக் கேட்பர். ஆனால் உள்ளத்திலே நஞ்சு நிரம்பியிருக்கும். உதட்டிலே அன்பொழுகும். கயவர் கற்ற வித்தை இது தான்.

கடலைக் கடக்கத் தோணி. இருளை நீக்க விளக்கு. புழுக்கம் தீர விசிறி. யானை மதத்துக்கு அங்குசம். ஆனால் இத்தனையும் படைத்த பிரம்மாவாலும் கயவரின் உள்ளத்தை மாற்றமுடியாது.

—ஹிதோபதேசம்.

★

### தியாகம்.

யாருடைய நன்மைக்காக நாம் பாடுபடுகின்றோமோ, தியாகம் செய்கின்றோமோ, அவர்களே நமக்குக் கேடுகள் நினைக்கின்றார்கள். யாருக்கு நாம் உதவ நினைக்கின்றோமோ, அவர்களே நமக்குப் பகைவராய் மாறி விடுகிறார்கள்.

சட்டம் தன் இரும்புப் பிடியில் இறுக்க வரும்போதும், வெஞ்சிறை நம்மை விழுங்கத் தயாராகக் காத்திருந்தாலும், நியாயத்துக்காக உழைக்கும் மாசற்ற தேசபக்தியுள்ள இரண்டொருவர் நம்மிடையே தோன்றிக் கடைசி வரையில் நின்று போராடுவர். அவர்களது அரிய தியாகமே நம் அனைவரையும் ஒற்றுமைப்படுத்த வல்லது.

—இரவீந்திரர்.

# நீ ஏன் படிக்க வேண்டும்?



இரா. சண்முகம், பி.ஏ., பி.டி.,


[செல்வம், அரசு என்ற இரண்டு மாணவர் திருச்செங்கோட்டு மலைச் சரிவில் மாலையில் உரையாடுகின்றனர்.]

செல்வம்: அரசு! மாலை வேளையில் இந்த மலைச்சரிவில், தென்றல் வீச இன்ப கீதம் கேட்க, இந்த ரேடியோ எவ்வளவு பயன் படுகிறது, பார்த்தாயா?

அரசு: இதன் பெயரென்ன?

செல்வம்: ஏதோ, டிரான்சி............

அரசு: ட்ரான்சிஸ்டர் என்று சொல்கிறார்களே. அதுதானா இது? பெயர் கூட வரமாட்டேன் என்கிறது. இருந்தாலும் அதன் பயனை அனுபவிக்கிறோம்.



செல்வம்: பணம் மட்டும் இருந்தால் எதை வேண்டுமானாலும் பெறலாம்; நுகரலாம்.

அரசு: என்றாலும் முழுப் பயனையும் அனுபவிக்க இயலாது.

செல்வம்: என்ன! அப்படிச் சொல்லி விட்டாய்?

அரசு: உலகின் ஒரு கோடியிலிருந்து ஒருவர் பேசுகின்ற பேச்சை! எழுப்புகின்ற ஒலியை, மின் ஆற்றலைச் சேர்த்து விண்ணிலே நீக்கமற நிறைந்திருக்கும் காற்றோடு காற்றாகக் கலந்து விடுகிறார்கள். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கானமைல்களுக்கப்பால் மற்றொரு சாதனத்தைக் கொண்டு, மின்னலைகள் ஏற்றப்பட்ட அவ்வொலியினைத் தனியே வடித்து, உள்ளது உள்ளபடியே நம் செவியில் விழும்படி செய்திருக்கிறார்கள். வெறும் பணம் மட்டும்தான் இதற்கு முதலீடு என நினைக்கிறாயா? அது தவறு. மார்க்கோனியின் உழைப்பு, அவனது அறிவாராய்ச்சித் திறன், அவனுக்கு முன் பலர் கண்ட விஞ்ஞான அறிவியல், கண்டு பிடிப்புகள் - அனைத்தும் இச்சாதனத்தில் கலந்திருக்கின்றன. வீட்டிலே வைத்துக் கேட்கும் ரேடியோவுக்கும், கையில் ஏந்திவரும் இந்த ரேடியோவுக்கும் வேறுபாடு உண்டல்லவா? மின்சாரம் நீண்ட ஏரியல் கம்பியில்லாமலேயே சின்னஞ்சிறு பேட்டரியைக் கொண்டு இந்த சிறு ரேடியோவை இயக்க முடிகிறது. மலை உச்சியிலும், வறைந்தரத்திலும், ஓடிக்கொண்டும் இந்த ரேடியோவைப் பயன்படுத்த முடிகிறது. மார்க்கோனிக்குப் பிறகும் ரேடியோ பற்றிய ஆராய்ச்சி ஓயாமல் வளர்ந்ததன் விளைவு இது போன்ற சாதனங்கள். இன்னும் ட்ரான்சிஸ்டர் டெலிவிஷனும் வரலாமல்லவா?

செல்வம்: அதுவும் வந்துவிட்டால் எவ்வளவு குஷியாக இருக்கும் தெரியுமா?

அரசு: ஏன்? உடுக்கை அடித்துக்கொண்டு கரகம் எடுத்து ஆடும் காட்சியைக் காணவா?

செல்வன்: ஏன், உனக்கு இதில் இவ்வளவு வெறுப்பு.

அரசு: வெறுப்பல்ல; விசாரம். நல்லமுறையில் பயனை அனுபவிப்பதில்லை என்று அப்பொழுதே சொன்னேனே. இப்பொழுது கேட்டோமே ஒரு பாட்டு.

செல்வம்: "அத்தானும் நீ தானே சட்டைப் பொத்தானும்........"
இந்தப்பாட்டா? இது நன்றாகத்தானே இருக்கிறது?

அரசு: எனக்கு வெட்கமாக இருக்கிறது. அனுபவிப்பதில் கூட நாம் எவ்வளவு பிற்போக்கான நிலையில் இருக்கிறோம். இதுபோன்ற பாடல்களுக்கும், பஜனை மடத்து கதாகால க்ஷேபத்திற்குமா ரேடியோவைப் பயன் படுத்துவது? விமானத்தைக் கருட சேவைக்குப் பயன் படுத்தலாமா? இதெல்லாம் தெளிவான கல்வியறிவில்லாத நிலையால் அல்லவா?

செல்வம்: உன்னிடம் ஒரு ரேடியோ இருந்தால் அதை எவ்வாறு பயன்படுத்துவாய்?

அரசு: வேறு இடத்திற்கு மீட்டரைத் திருப்பு.

[Voice of America......மீண்டும் திருப்புகிறான்......Radio Moscow... B. B C. Radio Australia. ]



செல்வம்: இங்கெல்லாம் பேசுவது எனக்குப் புரியவே இல்லையே. உனக்காவது புரிகிறதா?

அரசு: புரிரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமாவது இருக்கிறதா? இந்த மலைச் சரிவில் உட்கார்ந்து கொண்டு அமெரிக்கா, ரஷ்யா இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து ஒலிபரப்பாகும் ஆங்கிலச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கேட்டறியக் கூடிய அரிய சாதனம் நம் கைக்குக் கிடைத்தும் பயன்படுத்தாத நிலை...........அவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத நிலை.........!

செல்வம்: ஆசை இல்லாமலா? இருந்து...?

அரசு: அதற்குத்தான் கல்வி வேண்டும் என்பது. நீதான் பள்ளிக்கு ஒழுங்காக வருவதில்லையே? உலகத்தை நல்ல முறையில் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவாவது கல்வி பயில வேண்டாமா? உலகின் பல முனைகளிலிருந்து ஒலிபரப்பாகும் ஆங்கில நிகழ்ச்சிகளையும் பேச்சுக்களையும் புரிந்து கொள்ளும் அளவுக்கு ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது.

செல்வம்: இப்பொழுதுதான் அந்த ஆசை எனக்கும் ஏற்படுகிறது. எங்கள் கடையிலும் வீட்டிலும் விலையுயர்ந்த ரேடியோக்களும், என் கையில் இந்த ரேடியோவும் இருந்து என்ன பயன்? நீ சொல்வது போல் நல்ல முறையில் பயன் படுத்த இயலவில்லையே.

அரசு: நீ தான் பள்ளிக்கு வராமல் இந்த ஊரைச் சுற்றிக் கொண்டு வருகிறாயே! உனக்கு ஊர் சுற்றுவதில் ஆர்வம் இருக்கிறது என்றால் சென்னை போன்ற பெரிய நகரங்களுக்குச் சென்று அலைந்தாலும் எவ்வளவோ கண்டு களிக்கலாமே?

செல்வம்: போகலாமா? நான் உன் செலவுக்கும் போட்டுக்கொள்கிறேன். அப்படியே ஜாலியா சென்னையில் முகாம் போட்டு வரலாம். நீ வருகிறாயா? ......ஆமாம்!... நீ ஏன் நான் பேசப்பேசச் சிரிக்கிறாய்?

அரசு: சிரிக்காமல் என்ன செய்வது? நாம் இரண்டு நாட்களோ, இரண்டு வாரமோ அங்கு சென்று சுற்றிவருவதில் எந்தப் பயனும் இல்லை. இரண்டு ஆண்டுகளோ அதற்கு மேற்பட்டோ அங்கேயே தங்கி வாழ வேண்டும்.

செல்வம்: அதற்கு என்ன செய்ய வேண்டும்?

அரசு: அங்கு போய்க் கல்வி கற்க வேண்டும். அதற்கென்று நாளையே சர்டிபி கேட்டு வாங்கிக் கொண்டு அங்குள்ள பள்ளியில் சேரப் போகிறேன் என்றால் வீட்டில் விட மாட்டார்கள். இங்குள்ள படிப்பையெல்லாம் முடித்துக் கொண்டு கல்லூரிப் படிப்புக்கென்று சென்னை செல்ல வேண்டும். அங்குள்ள ஒரு நல்ல கல்லூரியில் சேர்ந்து மாணவர் விடுதியில் தங்கிப் படித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? படிப்பையும் கவனித்துக் கொண்டு மூலைமுடுக்கெல்லாம் அலைந்து புதியன எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாமே.

செல்வம்: ஆமாம். நீ சொல்வதும் நன்றாகத்தான் இருக்கிறது.

அரசு: நீ ஊர் மட்டுமல்ல, உலகமும் சுற்ற வேண்டும். இன்னும் மேல் படிப்புக்காக மேல் நாடுகளுக்குச் சென்று வர வேண்டும். உனக்குத்தான் சினிமா என்றால் கரும்பாயிற்றே! இரவில் வீட்டில் யாருக்

கும் தெரியாமல் 20, 30 மைல் சென்று சினிமா பார்த்துவிட்டு வருகிறாயே. சினிமாத் தொழிலில் மிகவும் முன்னேறியுள்ள இடம் அமெரிக்காவில் உள்ள ஹாலிவுட் நகரமாம். அதை ஒரு முறையாவது பார்த்துவிட்டு வரவேண்டாமா? மேலும் பணம் இல்லாத படித்த ஏழைகள் கூட மேல் நாடுகள் சென்று வருவதைக் கேள்விப்பட்டதில்லையா?

செல்வம்: யார் அப்படிப் போயிருக்கிறார்கள்?

அரசு: உனக்கு ஒன்றுமே தெரியாதா? நம் பக்கத்து ஊரிலிருந்து - அதுவும் சிற்றூரிலிருந்து இரண்டு பேர் நம் பள்ளியில் படித்தவர்கள் மேல் நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். நல்ல எண்கள் வாங்கிப் படித்தவர்கள். அரசாங்கம் பண உதவி செய்து அவர்களை மேல் படிப்புக்கு அனுப்பி வைத்தது. மிகவும் வசதியுள்ள நீ மேல்நாடுகளுக்குச் சென்றுவருகிறேன் என்று கூறினால் உன் வீட்டார் "நம் சொத்து கட்டாது" என்பார்கள். உயர்ந்த சொத்து சாதிக்காததை ஏழையின் படிப்பு சாதிக்கிறது; பார்த்தாயா? இன்னும் கேள். அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன்போன்ற, முன்னேறியுள்ள நாடுகள். முன்னேற்றத்தின் முழுப் பயனையும் அனுபவிக்க வேண்டுமானால் மற்ற நாடுகளும் ஓரளவுக்காவது முன்னேறி வந்தால் தான் நல்லது என்று கருதி மற்ற நாடுகளுக்கு உதவ வேண்டும்; தொழிலியல், அறிவியல் முறைகளைக் கற்றுத்தர வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்களாம். உங்கள் வீட்டில் வருஷத்திற்கு ஒரு நாள் ஊரிலுள்ள பிச்சைக்காரர்களையெல்லாம் அழைத்து உணவளித்து. 'தர்மம்' செய்கிறீர்களல்லவா? அதுபோல அந்நாடுகள் தொழிலியல் அறிவியல் தர்மங்களை ஆண்டு முழுவதும் செய்கின்றன. அவர்கள் செலவில் இங்கிருந்து மாணவர்களைத் தங்கள் நாட்டிற்கு அழைத்து உயர்தரக் கல்வி கற்பித்து அனுப்பி வைக்கிறார்கள். நம் அரசாங்கத்தார் வளர்ந்து வரும் நம்நாடு பல துறைகளிலும் முன்னேற வேண்டமெனக் கருதி மாணவர்களை, மேல் நாடுகளுக்கு தொழில் முறைகளைக் கற்றுவர அனுப்பி வைக்கின்றனர். இத்தகைய ஏற்பாடுகளினால் ஆண்டு ஒன்றுக்கு நிறைய மாணவர்கள் வெளிநாடுகள் சென்று வருகின்றனர். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு கருதாது நல்ல எண்கள் வாங்கியுள்ள ஆர்வமிக்கவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவற்றை நம் ஆசிரியர் வகுப்பில் எடுத்துச்சொல்லும்பொழுது எல்லோருமே ஆசைப்படுகின்றனர். பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி முதலியவற்றில் நல்ல எண்கள் வாங்கித் தேறி மேல்நாடு சென்று விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஒரு புதிய கண்டு பிடிப்புக்காண வேண்டுமென்ற ஆசை என்னை ஆட்டிப்படைக்கிறது.

செல்வம்: அரசு, நீ சொல்லச் சொல்ல என் உள்ளத்தில் படித்தே ஆக வேண்டும் என்ற ஆசை பொங்கி எழுகிறது.

அரசு: ஆசை மட்டும் போதாது. வகையான முயற்சியும் தேவை.

செல்வம்: நீ எப்படிப் படிக்கிறாய் என்பதைச் சொல்.

அரசு: இன்று நடந்த பாடங்களை இன்றிரவே படித்து முடிப்பேன். நாளை நடக்கப் போவதையும் ஒரு முறைக்கு மூன்று முறை படித்துப் பார்க்கிறேன். நானாகப் புரிந்தது போகப் புரியாதனவற்றைப்பற்றிச் சிந்தித்துப் பார்ப்பேன். புரியாது. மறு நாள் வகுப்பிற்குச் சென்றதும் இதைப் பற்றிய சிந்தனைதான் இருக்கும். ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார் என்ற ஆர்வத்தோடு இருப்பேன். நீ கூட ஒவ்வொரு தடவை வகுப்பில் பேசும்பொழுது அடக்கிவிட்டுக் கவனமாக ஆசிரியர் சொல்வதையே கேட்பேன். ஆசிரியர் சுலபமாக விளக்கிச் சொல்லும்பொழுது எனக்கு உடனே பதிந்து விடும். இல்லையென்றால் சந்தேகத்தை ஆசிரியரையே கேட்பேன். பின்னர் புரிவதற்கென்ன? மீண்டும் இரவில் படிக்கும்பொழுது நன்றாகப் பதிந்து விடும். நான் முன் கூட்டியே படித்து சந்தேகங்களை மனதில் வைத்துக்கொள்வதால் வகுப்பில் சிந்தனை சிதறுவதில்லை. அதாவது நாம் வகுப்பில் உட்கார்ந்திருக்கும் பொழுது எண்ணங்கள் மட்டும் எங்கெங்கோ பறந்து செல்கின்றனல்லவா? அந்த நிலையை முறியடிக்கத்தான் இந்த ஏற்பாடு. அப்படியும் மீறினால் ஆசிரியர் போடும் கேள்விகளினால் என் வயத்திற்கு வந்து விடுவேன். இரவில் தூக்கம் வந்தால் கணக்குகளைப் போட முற்படுவேன் புதிய புதிய கணக்குகளை நானே போட்டுப் பார்ப்பேன். ஒரு நாள் ஆசிரியர் வகுப்பில் ஒரு கணக்கைப் போட்டதில் சரியான விடை வரவில்லை. நான் வேறு ஒரு வழியைப் பயன்படுத்திப் போட்டதில் விடை சரியாக வந்து விட்டது. உடனே ஆசிரியர் தட்டிக்கொடுத்து நீ ஒரு ராமானுஜம் ஆகவேண்டும் என்று சொல்லி என்னைப்பாராட்டி மகிழ்ந்தாரே!

செல்வம்: நண்பா நீ எனக்குச் சிறந்த வழி காட்டி! என் வாழ்நாளில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி விட்டாய்! நான் படித்தே ஆக வேண்டும். நீ காட்டிய முறைகளைப் பின் பற்றுகிறேன்.

அரசு: ஆகாதது ஒன்றுமில்லை; முயன்று பார். வீடு செல்வோம்; வா.

Phone: 21752

Grams: 'BRILLIANT'

# DEPENDABLE HOUSE FOR QUALITY & ECONOMY

Misc. Hardware, Engineering & Wood working Tools, Agricultural Implements, Pipes & fittings, Rice Mill Stores, Foundry & workshop requirements etc.,

Specialists in supplyof Tools for Bifurcated Courses of Engineering & Agriculture.

A. M. HASSANALLY & CO.,
34, LINGHI CHETTY STREET,
MADRAS-1.

QUALITY BOOKS

SUITABLE FOR PRESCRIPTION AS TEXT BOOKS

for Standard VII

SEIMURAI GANITHAM by T. K. Ramanathan Pillai
SAMOOHA ARIVU NOOL by M. R. Srinivasan

for Standard VIII

SAMOOHA ARIVU NOOL by M. R. Srinivasan
PODU VIGNANAM by P. V. Ramaswami & T. P. Gopalakrishna

WARDHA HINDI BHARATI by S. T. Balaraman
MOOVAR TAMIL ILAKKIYA MALAI by Vidwan G. Vilvapathi & two others

MOOVAR TAMIL ILAKKANAM by Vidwan G. Vilvapathy
MANTHIRAKKULI by Vidwan G. Vilvapthy & T. R. Srinivasan

SEETHAK KATHIYUM SENTAMIL PULAVARUM by K. M. K. Abdul Kadir

Specimen copies will be sent on request
to prescribing authorities for perusal and patronage
For further particulars and detailed catalogue please write to:

WARDHA PUBLISHING HOUSE,
Educational Publishers,
POST BOX 420. :: TRIPLICANE :: MADRAS-5.

பள்ளி மாணவர்களுக்குத் தேவையான எல்லா
நோட் புஸ்தகங்களுக்கும்

எல்லாவிதமான உயர்தர அச்சு வேலைகளுக்கும்
சிறந்த இடம்.

# திரியெம் பிரிண்டர்ஸ்,

ஆபீஸ், காலேஜ் பைல்கள், அக்கவுண்ட் புக்ஸ், கவர்கள்
தயாரிப்பாளர்கள்.

★

உரிமையாளர்கள் :

## M. M. முகம்மது & கோ.,

32, அங்கப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ் – 1.

தந்தி: THREEYEM.  போன்: 25143.

# OXFORD PUBLISHING

*1478–1962*

THE OXFORD UNIVERSITY PRESS is a Department of the University of Oxford. It therefore has no shareholders and subserves no private interest. Its function is the output of scholarly and educational works, many of which are in their nature unremunerative.

FIVE DECADES AGO the Oxford University Press came to India (in 1912) since when the growth of the INDIAN BRANCH has been steady. There can hardly be any subject or language to which, through its many notable Indian authors, the INDIAN BRANCH has not made some contribution of worth. It now has the satisfcation of having sustained the high traditions and ideals of the Oxford University Press in India for half a century.

**OXFORD UNIVERSITY PRESS**



தபால் பெட்டி நெ. 15. போன் நெ. 56.

- ★ கல்யாண விசேஷங்களுக்கு
- ★ பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
- ★ பென்னி, மேட்டூர் மில் ஜவுளிகளுக்கு
- ★ சிறந்த இடம்

**T. P. வெங்கடாஜலம் & கோ,**

தெப்பக்குளத் தெரு,

திருச்செங்கோடு. (சேலம் ஜில்லா)

வியாபாரிகளுக்குரிய
சிட்டா, குறிப்பு, பேரேடுகளும்,
மாணவர்களுக்குரிய
புத்தகங்களும், நோட்டுகளும்,

கிடைக்குமிடம்:

**சிவலிங்க விலாஸ்,**

புத்தகசாலை,

ஈரோடு.

பொதுமக்களின் திருப்தியே! எங்களது மட்டற்ற மகிழ்ச்சி!!

பொதுமக்களின் விருப்பத்தை,
நிறைவு செய்யும் புகைப்படத்திற்கு
சிறந்த இடம்

**வெல்கம் போட்டோ ஸ்டுடியோ,**

தெற்குரத வீதி, திருச்செங்கோடு.

என்லார்ஜ்மெண்டுகள், கலர் படங்கள், குருப் போட்டோக்கள்,
கல்யாணம் மற்றும் எல்லா விசேடங்களுக்கும்,
போட்டோ எடுத்துக் கொடுக்கப்படும்.

# உழவனின் பெருமை.

தி. பி. கதிர்வேலு,
புதிய பத்தாம் வகுப்பு 'ஆ' பிரிவு.

காடும் மேடும் கழனிக ளாக்கி,
கழனி செழிக்க நீரினைத் தேக்கி,
நாடு செழிகக நீயுழைத் தாயே
நன்மை யடைய வழிகண் டாயே.
[காடும் மேடும்......]

உண்ணும் உணவை நீயளித் தாயே
உலகில் மக்கள் உயிர்வளர்த் தாயே
மண்ணைப் பொன்னா யாக்கிடு வாயே
மக்க ளுயிர்க்கு வாழ்வளித் தாயே.
[காடும் மேடும்......]

உழவும் தொழிலும் நீசெய் தாயே
உரிமை யடைய வழிகண் டாயே
செழிப்பு ஓங்கப் பாடுபட் டாயே
சீரும் சிறப்பும் வாய்க்கப் பெற்றாயே.
[காடும் மேடும்......]

அன்பு வாழ்க்கை நீகொண் டாயே
அகிலம் செழிக்கப் பாடுபட் டாயே
இன்னல் பலவும் நீஅடைந் தாயே
இன்பம் யாவும் இனியடை வாயே.
[காடும் மேடும்......]

# வேண்டும்.

தி. ந. சிவகுமார்,
10-ஆம் வகுப்பு பி. பிரிவு.

பள்ளியிலே பலபேரும் பயில வேண்டும்;
பள்ளியிலே பலகலைகள் பெருக வேண்டும்;
பள்ளியிலே பலமொழிகள் முழங்க வேண்டும்;
பள்ளியிலே படிப்பவர்கள் நிறைய வேண்டும்;
பள்ளியிலே அறிவொழுக்கம் வளர வேண்டும்;
பள்ளியிலே படிப்பகங்கள் இருக்க வேண்டும்;
பள்ளிகளே தமிழ்நாட்டில் விளங்க வேண்டும்;
பள்ளியினால் அறியாமை ஒழிய வேண்டும்;

# முன்னேற்றப் பாதையில் … … நமது இந்தியா!

**தி. கா. இராசேசுவரன்,**
பத்தாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.

நம் நாடு சுதந்திர மடைந்த பின்பு தான்………

புதிய ஆலைகள்! புதுமை தரும் தொழில்கள்! எங்கும் எழுந்தன; எழுகின்றன!

வறுமையை விரட்டி, வளமனைத்தும் திரட்டி வளப்புமிகு நாடாய் நமது நாட்டை ஆக்க. சலிப்பில்லை, செயலாற்ற; அலுப்பில்லை, தொண்டாற்ற; அயர்வில்லை, அல்லும் பகலும் உழைக்க! - எனக் கூறி நம தரசாங்கம் பணி ஆற்றுகிறது.

அன்று அடிமையாய் நாமிருந்தோம். ஆண்டையாய் ஆங்கிலேயன் இருந்தான். அரிசியிலிருந்து ஆறு மாதக் குழந்தை விளையாடும் விளையாட்டுச் சாமான்கள் வரை எதிர்பார்த்து ஏங்கியிருந்த காலம், ஒன்றிருந்தது. நம்மவரைக் கருப்பன் என்றே இகழ்ந்தான்.

"Fleecy locks and black complexion
Cannot forfeit nature's claim
Skin may differ, but affection
Dwells in white and black the same.''

என்ற கவிதைதான் நமக்காறுதல். நாம் 10 ஆண்டுகளாய் இன்னல் பல பெற்றும், உழைத்ததின் பலன்:-

**அன்றும்**

1. பள்ளி சென்று பயின்ற மாணவர்களின் தொகை 21 லட்சம்.
2. ஆரம்பப்பள்ளிகள் 15,800.
3. உயர்நிலைப்பள்ளிகள் 631.
4. கலைக்கல்லூரிகள் 28
5. தொழிற் பள்ளிகள் 6

**இன்றும்**

1. பள்ளி சென்று கற்கும் மாணவர்களின் தொகை 40 லட்சம்.
2. ஆரம்பப் பள்ளிகள் 27,000.
3. உயர்நிலைப் பள்ளிகள் 1361
4. கலைக் கல்லூரிகள் 56
5. தொழிற் பள்ளிகள் 24

''ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம்
செய்வோம்;
ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள்
வைப்போம்;
ஓயுதல் செய்யோம்; தலை சாயுதல்
செய்யோம்.''

-என்ற கவியின் வாக்கு.

பெரம்பூரில் கட்டப்பட்ட வண்டிகள் தண்டவாளத்தின் மீது 'கட,கட' என்று ஓடும் போது, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரியை வெட்டி எடுக்கும் போது ஏற்படும் பேரிரைச்சலைக் கேட்கும் போதும், வண்டலூரில் தயாரிக்கப்படும் மோட்டார் கார்கள் 'வழ, வழ'ப்பான தார் ரோடில் சத்தமின்றி ஊர்ந்து செல்லும் போதும் செயல்படுவதைக் காண்கிறோம். தென்னகத்தின் 'மான்செஸ்ட்டர்' எனப்படும் கோவையைக் காணும்போதெல்லாம் நம் காதினிலே ஒலிப்பது ஓர் இன்ப கீதம்- அதுதான் நம் முன்னேற்றத்தின் இனிய நாதம்.

# வங்கம் தந்த வானொளி.

இரா. காளியண்ணன்.

பத்தாம் வகுப்பு 'ஆ' பிரிவு.

நம் இந்திய நாடு பண்பட்ட மக்களையும், பயனற்ற பதர்களையும் பெற்றது. பண்பட்ட மக்கள் பிறந்த நாட்டிற்குப் புகழைத் தேடி வழங்கினர். அப்பண்பட்ட மக்களினும் மேலான மக்கள் பிறந்த நாட்டிற்கேயன்றிப் பிற நாடுகளுக்கும் தம் உழைப்பை வழங்கினர். அம்மேலான மக்களுள் தாகூரும் ஒருவர். கவிஞர் தாகூர் அண்மைக் காலத்தில் வாழ்ந்த இந்தியக் கவிஞர்களுள் தலை சிறந்த ஒருவர் என்பது நாடறிந்த உண்மை. செல்வக் குடியில் பிறந்தவராயினும், செல்வச் செருக்குறாது, மக்களனைவரையும் ஏழை, செல்வர் என்ற வேறுபாடின்றி நடத்தினார். வைதீகமும் பழமையும் மேலிட்டிருந்த காலத்திலும் மக்களிடையே தோன்றிய அம்மாபெரும் வீரர் குறுகிய மனப்பான்மைகளுக்கு இடந்தராமல், சில வேளைகளிற் செருக்குற்ற தம் காலத்தவரோடு இகலி, அன்பினாலும் கருணையுள்ளத்தாலும் தம் கால எல்லைக்குட்படாது நடந்தார்.

நம் நாட்டில் பல்வேறு மக்கள் வாழும் பகுதிகளின் இன்பப் பெயர்களையும், ஆறுகளின் இயல்பையும், மலைகளின் பெருமையையும் பாடி, நாம் அவற்றை என்றும் மறவாது, எண்ணி எண்ணிச் செருக்குறுமாறு செய்தவர் தாகூர் ஆவார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும், கணியன் பூங்குன்றனாரின் கொள்கையை மனத்திலிருத்தி, உலகிற்கே பொதுவான, மக்களினத்தை வாழவைக்கும் வண்ணம் வகை வகையான கருத்துக்களை நமது தாகூர் வழங்கிச் சென்றார். வீண் ஆரவார நாட்டுப்பற்று உலகினை அழித்துப் போர்க்களமாக்கிவிடும் என்று தாகூர் உலக மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். நாட்டுப்பற்றே கூடாது என்று அவர் கூறவில்லை. நாட்டுப்பற்று வேண்டும். ஆனால் அந்நாட்டுப்பற்று மக்கள் சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைய வேண்டும் என்பது இவரது கருத்து. தாகூர் தாய்மொழிப்பற்று இல்லாதவன் மூடன் என்றார். அவர் காலத்தில் மக்கள் ஆங்கிலத்தின் மீது மோகங்கொண்டிருந்தபோது, எல்லோரும் தாய் மொழியிலேயே பேச வேண்டும் என்றார். ஒரு சமயம் மதுரைமாநகர்க்குச் சென்றிருந்தார். அங்கு மக்கள் இவருக்கு ஆங்கிலத்தில் வரவேற்புரை வழங்கினர். இதைக் கேட்டு ஆற்றாது, ஒரு அருமையான எடுத்துக்காட்டினைக் கூறி மக்கள் மனதை மாற்றினார். அஃதாவது குயிலானது தனக்குரிய குரலிலேயே கூவ வேண்டும். பிற பறவைகளைப் போல் கூவ முயற்சித்தல் அறியாமையிலும் அறியாமை என்றார். எனவே தாகூர் மொழிப்பற்று மிகுந்தவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதன்றோ!

தாகூர் கீழ்நிலையிலிருக்கின்ற நமது நாடும் உலக முன்னணியில் திகழ வேண்டும் என விரும்பினார். நமது நாடுகளின் மீது பரிவு காட்டிய அவரது உள்ளம் உலக நாடுகள் அனைத்தின் மேலும் பரிவு காட்டியது. அன்பு, அறம், ஆத்மிகக் கொள்கை முதலியவற்றிலேயே அவரது உள்ளம் தோய்ந்து கிடந்தது. உலகப் பொது மகனாக வாழ்வதே அவருடைய நோக்கமாகும். பல நாட்டினரும் இவரை வரவேற்றனர். அளவளாவி மகிழ்ந்தனர். அவருடைய கருத்துக்களைப் போற்றினர். இவருடைய கருத்துக்கள் காந்தக் கல்லைப் போல் மக்களின் உள்ளங்களைத் தன்பால் ஈர்த்தன.

தாகூர் கல்வித் துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். உலக மக்களனைவரும் ஒரு குடும்பம் என்ற அடிப்படையில் வின்மீகத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் கல்வியே ஒவ்வொரு நாட்டிலும் மேற்

கொள்ளப்பட வேண்டும் என்றார். பல்கலைக் கழகங்கள் உலகப் பொது நிலையங்களாக அமைய வேண்டும். அங்கு மாணவர்களின் மனவியல்பிற்கேற்பக் கல்வியும் கலைகளும் போதிக்கப்பட வேண்டும் என்றார். இக் கொள்கைகளை நிலைநாட்டும் பொருட்டு "விசுவபாரதி" என்ற பல்கலைக் கழகத்தை அமைத்தார். எனவே எண்ணரியதைச் செய்யும் ஆற்றல் பெற்றவர் தாகூர்.

கவிஞர் தாகூர் மக்கள் இனத்திற்காக வாழ்ந்தார். தனக்காக வாழவில்லை. உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகளே தாகூரைப் போற்றினார் என்றால், தாகூரின் பெருமைக்கு வேறு விளக்கங்கள் வேண்டப்படுவதில்லை. தாம் கண்ட கருத்துக்களைக் கவிதைகளாகப் பாடிப் பாடி மகிழ்ந்தார். புதுமையில் விருப்பம் கொண்டவரெனினும், பழமையையும் போற்றினார். அவரது பாக்கள் உயரப் பறக்கும் உள்ளத்தில் பூத்துக் காய்ந்தவை. தாகூரின் பெருமையை உணர்ந்து நோபல் பரிசு வழங்கப்பட்டது. இலக்கிய நெறியில் மறுமலர்ச்சியை உண்டாக்கிய பெருமை அவரையே சாரும். அவரது படைப்புக்கள் உலகில் உள்ள மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

தாகூர் சமயத்தில் கொண்ட பங்கு போற்றற்குரியது. சமயத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். உருவ வழிபாட்டை வெறுத்தார். கடவுள் வெறும் கற்பனைப் பொருள் அல்ல; அவரை நாம் நேரடியாக அடைய முடியும் என்றார். அவர் தாம் விரும்பிய மதத்தில் பலபுதிய கருத்துக்களைப் புகுத்தினார். மனிதத் தன்மையே தெய்வீகத் தன்மை என்றார். 'சோனர் தாரி' என்ற கவிதையில் "நான் கடவுளுக்குப் படைக்கும் எதையும் மனிதனுக்குப் படைக்கின்றேன்; மனிதனுக்குக் கொடுப்பதையே கடவுளுக்கும் கொடுக்கிறேன் கடவுளை மனிதனுக்குகிறேன்" என்றார். மனித சமயம் எந்தக் கோட்பாட்டுக்கும் கொள்கைக்கும் பணிவதில்லை. எந்தக் குழுவையும் கூட்டத்தையும் சார்ந்ததல்ல. இது காலை ஒளியின் நிறைவையும் தன்மையும் போன்றது. மனித சமயம் மனிதத் தன்மையைப் பெறுகின்றது என்பதை நமக்கு நாமே அறிந்து கொள்ளலாம். முக்கியத்துவம் நிலையற்ற மனிதரைக் காண்பதில்தான் அமைகிறது. தன்னுடைய சமயம், மேம்பட்ட மனிதனையும், சாதாரண மனித ஆன்மாவையும் என்னுள் ஒன்று சேர்ப்பது தான் என்று கூறுகிறார். இரவீந்திரர் தன்னுடைய தத்துவத்தில் மனிதனுக்கு ஓர் உயர்ந்த இடத்தை அளிக்கிறார்.

வழியும், மக்களும்.

சுயப்பாதுகாப்புக்கு அடுத்தவனைக் கொல்லும் சக்தி தேவையில்லை. தானே இறத்தற்குரிய சக்தி தான் தேவை. ஒருவன் இறப்பதற்குத் தயாராய் இருப்பானேயானால் ஹிம்சையைப் பிரயோகிக்க வேண்டுமென்ற விருப்பம்கூட அவனுக்கு உண்டாகாது.

*

முதலில் உண்மையைத் தான் தேடிக் காணவேண்டும். அற்புறம் அழகும் நலனும் உங்களுக்குத் தாமே கிட்டும். இந்த உண்மையையும் அழகையும் தான் நான் விரும்புகிறேன். இவற்றிற்காகவே வாழ்கிறேன். இவற்றிற்காகவே சாவேன்.

—காந்தியார்.

கவிஞர் தாகூர் ஓவியக்கலையிலும் ஒப்புயர்வற்று விளங்கினார். சுவர்களின் மேற்புறத்தே ஓதம் பாய்ந்து, பூசப்பெற்ற சுண்ணாம்பு பட்டைபட்டையாக உதிர்ந்து கேலிச் சித்திரங்களைப் போன்ற உருவங்களைக் கொண்டு விளங்கும். குருதேவருடைய கண்கள் இதைப் பார்க்கும். கால்கள் இல்லத்திற்குச் செல்லும். கைகள் சுவரில் பார்த்ததைப் போலவே இன்னும் அழகுபடக் கலைத் திறன் ஒளிர வரைந்து விடும். என் தாகூரின் கலைத்திறனை என்னென்பது! தாகூரின் ஓவியங்கள் கருத்துக்களைக் குறிப்பால் உணர்த்துமேயன்றி வெளிப்படையாக அறிவிப்பன அல்ல. இவ்வாறு தாகூர் பல கலைகளிலும் சிறந்து விளங்கியதால், "வங்கம் தந்த வானொளி" எனப் போற்றப் படுகின்றார்.

# காடும் நாடும்

தி. மு. அப்பாவு பி. ஏ.,

## முன்னுரை.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய திருச்செங்கோட்டின் சுற்றுப் புறங்கள் இருந்த நிலைக்கும் இப்போது உள்ள நிலைக்கும் எவ்வளவோ மாறுதல்கள் இருக்கின்றன. இன்று இக்கட்டுரையை வரைய ஆரம்பித்தபோது, 20 ஆண்டுகளுக்கு முன், திருக்கொடிமாடச் செங்குன்றூர் மலை தான் என் முன் நினைவுக்கு வந்தது. அக்குன்றில் பல வகை மரங்கள் பச்சைப்பசேல் என்று செழித்து வளர்ந்து இருக்க, அங்கு வீசும் காற்று அவற்றை அசைத்து மெல்லிய சலசலப்பு ஒலியை உண்டாக்கும். அது காண்போரை மகிழ்வித்து, ஒலியைக் கேட்போருக்கு மன அமைதியைக் கொடுத்துக் கொண்டிருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சி. அருகே சென்று நோக்கினால் குளுமையான காற்றும், என்றும் பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற தரையும், இலைகள் மீது முத்துக்களைக் கோத்ததுபோலத் தூங்கும் பனித் துளிகளும், ஊற்றெடுத்து சலசல என ஓடும் ஓடைகளும், குன்றின் இடத்திலே அலைமோதி நிற்கும் பால் போன்ற தெளிந்த நீர்ச்சுனைகளும், அச்சுனைகளிலிருந்து ஊற்றாக ஓடி வரும் தண்ணீரை ஊர் மக்கள் சுமந்து செல்வதும் கண் முன் வந்து நிற்கின்றன.

என் பள்ளித் தோழர்களுடன் குதித்தோடும் தெள்ளிய ஓடைகளில் கரை கட்டி விளையாடியதும், நீர்த் தேக்கங்களில் நீச்சல் கற்றுக்கொண்டதும், அங்கே கேளிக்கை உணவுகள் உண்டு இனிமையாகக் காலங் கழித்ததும் ஆகிய அந்த நாட்கள் அடிக்கடி என் கண்முன் தோன்றி மறைகின்றன. அங்கே பாழிகளைச் சுற்றியுள்ள புங்கன் மர நிழல்களின் சுகத்தை அனுபவியாதவர்கள் யாவர் உளர்? குன்றினிடத்தே நிலையாக உள்ள சுனைகளில் தேங்கி இருக்கும் மூலிகைச் சத்து உள்ள நீரில் குளித்து உடல் நலனுடனும் உள்ளக் களிப்புடனும் இருந்தது நினைவுக்கு வருகின்றது. ஆவினங்கள் குன்றிலே பசும் புற்களையும் சக்தி தரும் மூலிகைகளையும் தின்று கொழுமையாக வளர்ந்த காட்சியே தனிக் காட்சியாக இருக்கும். பழங்களைப் பறிக்கும் மந்திகளும், இரீச்சிடும் வண்டினங்களும், ரீங்காரமிடும் தேனீக்களும் சுறுசுறுப்புடன் திரியும் அணில்களும் பல வண்ணப் புள்ளினங்களும் ஒருங்கே வாழ்ந்து அருமையான சூழ்நிலையைத்

தந்து கொண்டிருந்ததை யாரால் மறக்க முடியும்? இன்று பொன் விழாக் கொண்டாடும் இதே பள்ளியின் மைய மன்றத்தின் மருங்கே நின்று நோக்கினால் தென் புறத்தே வற்றாத அம்மன் குளம் எனப்படும் நீர்த் தேக்கமும், அதன் ஊடே பிரதி பலிக்கும் பச்சைக் குன்றும் நினைவில் நிறைந்து நிற்கின்றன.

ஆனால் இன்று அவைகளை யான் காணவில்லை. 20 ஆண்டுகளுக்கு முன் கண்டன எல்லாம் கனவாகவே தோன்றுகின்றன. அடர்ந்த காட்டுப் பகுதிகளில் கிரீச்சிடும் வண்டினங்கள், கூவும் குயில்கள், சலசல என்று துள்ளிக் குதித்தோடும் நீரோடைகள் பால் போலத் தேங்கி நிற்கும் நீர்ச்சுனைகள் கண்ணுக்குக் குளிர் தரும் பசுமை நிறம், பலவகை மிருகங்களின் ஒலி ஆகிய இவைகள் யாவுமே காணப்படவில்லை. அதற்கு மாறாக வெறுமையாக்கப்பட்ட பாறைகளுள்ளன. அப்பாறைகள் கதிரவனால் சூடாக்கப்பட்டு வெளி விடும் அனல் காற்று வீசுகிறது. தூர்ந்து போன சுனைகளும் நீர்த்தேக்கங்களும் தண்ணீருக்காக அல்லல்படும் மக்களின் சோர்ந்த முகமும்தான் இன்று காணப் படுகின்றன.

இந்நிலைக்குக் காரணம் பொதுமக்களுக்குப் புரிவது கடினம். நான் காட்டியல் கல்லூரி (**Forest College**) க்குச் செல்லும் வரையில் விளங்காத புதிராகவே இருந்தது. அங்கு சென்று 2 ஆண்டுகள் பெற்ற பயிற்சியில், இந்தியா முழுவதும் உள்ள காடுகளைக் காணும் வாய்ப்புப் பெற்றதனாலுமே காட்டின் செல்வம் எத்தகையது என்பதை அறிய முடிந்தது. காடு இயற்கையால் நமக்குக் கொடுக்கப்பட்ட வரப் பிரசாதம். மனிதனின் உடலும் உயிரும்போலக் காடும் நாடும் ஒருங்கே இருக்க வேண்டியவை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தான் இதன் முக்கியத்துவத்தைப் பெரிதும் உணர்ந்த அரசாங்கம் மக்களிடையேயும் இந்த உணர்வைப் புகுத்த முயற்சிகள் எடுத்துக் கொண்டுள்ளது. நாமும் அதன் முக்கியத்துவத்தைச் சிறிது தெரிந்து கொள்ளுதல் நலமாகும்.

★ ★ ★

காடு நாட்டின் செல்வமாகும். ஒரு நாடு சகல செல்வமும் பொருந்தி உள்ளது என்றால் அந்நாட்டில் மற்ற எல்லா வளங்களுடன் காட்டு வளமும் நிறைந்துள்ளது என்று பொருளாகும். நாட்டில் பருவ நிலைகள் மாறாமலும் மழைவளம் குன்றாமலும் இருக்கக் காடுகள் மிகவும் அவசியம். காடு இல்லையேல் மழை இல்லை. மழை இல்லையேல் நீர் இல்லை. நீர் இல்லையேல் வரப்புயர்வு இல்லை. வரப்புயர்வு இல்லையேல் நல் வாழ்வு இல்லை. ஒரு நாட்டில் காடு மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றது.

ஒரு நாட்டில் பொருளாதார நிலை குன்றாமல் இருக்க, அந்நாட்டின் நிலப்பரப்பில் $\frac{1}{3}$ பாகமாவது செழுமையான மரங்கள் அடர்ந்த காடாக இருத்தல் வேண்டும். இல்லையேல் நாட்டின் செல்வம் பூர்த்தி அடைந்ததாக முடியாது. தற்போது தமிழகத்தில் காடு இந்த அளவுக்குக் குறைவாகவே உள்ளது.

தமிழகத்தின் நிலப்பரப்பு 60188.71 சதுர மைல்களாகும். இப்பரப்பில் 8642 சதுர மைல்கள்தான் காடாக உள்ளன. இவ்வாறு குறைந்த அளவு காடு இருப்பதால்தான் அரசாங்கத்தாருக்குச் சொந்தமான பலதரப்பட்ட நிலங்களையும், ஏரிகளையும் கிராமங்களுக்கு அருகில் உள்ள மேய்ச்சல் நிலங்களையும் காடுகளாக்க அவ்வரசாங்கத்தார் முனைந்துள்ளனர். காடுகளைப் போற்றும் எண்ணம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சங்க காலங்களிலிருந்தே காட்டின் மதிப்பை மக்கள் உணர்ந்துள்ளனர் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள்

இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன. உதாரணமாக புறநானூற்றில் பாரியின் பறம்பு மலையை மூவேந்தர்கள் சூழ்ந்த போது புலவர் ஒருவர் பாரியின் நாடு வெளியிலிருந்து வரும் உணவை எதிர்நோக்காது தானே தன்னகத்துள்ள காட்டுச் செல்வம் அளிக்கும் உணவுப் பொருள்களாகிய தேன், தினை, கனிகள் கிழங்குகள் ஆகியவை மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதைப் பல பாக்களின் வாயிலாகக் கூறுவதைக் காண்கிறோம். காடுகள் அழிவதையும் அக்காலத்தில் மக்களோ அரசர்களோ பொறுக்க மாட்டார்கள் என்பதையும் இலக்கிய வாயிலாகக் காண்கின்றோம். ஒரு பகையரசன் மற்றொரு அரசனைப் போருக்கு இழுக்க வேண்டுமானால் அந்நாட்டு ஆவினங்களைக் கவர்வதுடன் அந்நாட்டுக் காடுகளையும் அழித்து மரங்களை வெட்டுவது வழக்ககாக இருந்துள்ளது. பாதுகாப்பு அரணாகவும் அக்காலத்தில் மரங்களை வளர்த்துள்ளனர். அக்காலங்களிலேயே மக்கள் காட்டைப் பெரிதும் போற்றியுள்ளனர் என்றால் இக்காலத்தில் அதன் மதிப்பு எவ்வளவு முக்கியமானதாகும் என்பது நன்றாக விளங்கும். மற்றும் பெரும் வேதாந்திகள் கண்ட கருத்துக்கள் காட்டினூடேதான் பிறந்துள்ளன. துறவிகள் அமைதியையும் அறிவையும் நாடிக்காட்டிற்குத்தான் சென்றனர்.

இவ்வாறு அக்காலத்திலும் இக்காலத்திலும் எக்காலத்திலும் முக்கியத்துவத்துடன் விளங்கும் காடு எவ்வகையில் பலன் தருகின்றது என்பதைக் காண்போம்.

காடு அழியுமானால் வான நிலை திரியும். மழை மேகங்கள் தடுத்து நிறுத்தப்படாமல் பறந்து ஓடும். குளிர் காற்றின்றி மழைத் துளிகள் இல்லை. இதனால் மழை மாறும், நில அரிப்பு ஏற்படும், மலையினின்று தொடங்கும் நீர் ஊற்றுக்கள் வற்றி விடும், நீர் நிலைகள் வண்டல் மண்ணால் மூடப்பட்டுச் சுற்றுப்புற மக்களுக்குத் தண்ணீர் ஆண்டு முழுதும் கிடைக்காமல் போய் விடும்.

காடு இருக்குமானால் பெரும் மழையை நிலத்தில் நேரடியாகத் தாக்க விடாமல் மரம் செடி கொடிகள் இவைகளின் இலைகள், தாக்கும் சக்தியை குறைத்துப்பூமியில் மெதுவாக விழச் செய்கின்றன. விழும் நீர்த்துளிகளைத் தன்னகத்தே உறிஞ்சிக்கொள்ளப் போதுமான அவகாசம் பூமிக்குக் கிடைக்கின்றது. மேலும் கீழே விழுந்து கிடக்கும் மெத்தை போன்ற இலைகள் தண்ணீரின் ஓட்டத்தை தடுக்கின்றன. வேகத்தைக் குறைக்கின்றன. சீராக ஓடச் செய்கின்றன. இதனால் தண்ணீரினால் ஏற்படும் நில அரிப்புத் தடுக்கப் படுகின்றது. மேலும் நிலத்தில் உறிஞ்சப்படும் தண்ணீர் வலை போல நெருங்கிய வேர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டு, சீராக ஊற்றுக்களாகவும், நீர் ஓடைகளாகவும் அமைய வழி கிடைத்த இடங்களில் ஆண்டு முழுதும் தண்ணீர் பூமியினின்று வெளிவர வசதி செய்கின்றது. வானம் கொடுத்த மழை அமுதத்தை நீராவியாக விடாமல் காக்கின்றது. இது போலத் தண்ணீர் சீராகப் பூமியிலிருந்து வருவதால் நீர் நிலைகள் என்றும் தண்ணீர் உடையவைகளாகி, மக்களுக்குக் குடி நீராகும். வயல்களுக்குப் பாயும் தண்ணீராகவும் உதவுகின்றது. நீர் நிலைகள் நிறைந்திருந்து அருகே மரமும் இருந்தால் எண்ணற்ற புள்ளினங்கள் இசை பாடும். அவைகளின் கழிவுகள் தண்ணீரில் விழுவதால் தண்ணீர் எரு நிறைந்ததாக ஆகிப் பயிருக்குப் பெரும் பயனளிக்கின்றன. உதாரணமாக வேடந்தாங்கல் என்ற ஏரி ஒன்று செங்கல்பட்டிலிருந்து சுமார் 15 மைல் தூரத்தில் உள்ளது. அந்த ஏரிக்கு ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான பறவைகள் வருகின்றன. அவைகள் அங்கு தங்குவதால் அவைகள் விடும் கழிவுப் பொருள்கள் கலந்த அந்த ஏரித் தண்ணீரைப் பயிர்களுக்குப் பாய்ச்சுவதால் பயிர்கள் எருவின்றியே வளர்கின்றன. இதிலிருந்து காட்டின் உதவியால் ஏற்படும் தன்மைகள் நன்றாக விளங்கும்.

காடு அழிக்கப்படுமேயானால் சிறிதளவு மழையும் பெரு வெள்ளமாக மாறும், நீர்த்துளிகள் நிலத்தைத் தாக்கும் சக்தி அதிகரிக்கும். அடங்கி உள்ள மண் தண்ணீர்த்துளிகளினால் பெயர்க்கப்பட்டு மிகவும் வளம் பொருந்திய மேல் மண் தண்ணீருடன் கலக்கும். தண்ணீர் வழிந்தோடும் வேகத்

தை தடுக்க சக்தி இல்லாமையால் வேகம் அதிகரிக்கும். ஓடும் இடமெல்லாம் மண் அரிப்பு ஏற்படும். நீர் நிலைகளில் மண் நிரம்பும், நீர் நிலைகள் மூடப்படும். பின்பு அவைகளில் தங்க வேண்டிய நீர் பெரு வெள்ளமாக மாறிச் சேதம் விளைவிக்கும். இதுபோன்ற வெள்ளங்களை நாம் பெரிதும் காண்கின்றோம். காவிரி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்திற்கும் ஒரு விதத்தில் காடுகள் சில பகுதிகளில் அழிக்கப்பட்டதே காரண மாகும். இப்படி வெள்ளம் ஏற்பட்டு மண் அரிப்பு ஏற்படுவதால் பின்னால் செடி கொடி கள் வளர வாய்ப்பு இல்லாமல் வெறும் பாறைகளாகவே நிலம் காட்சி அளிக்கும். வெப்பம் மிகுதியாகும். தண்ணீர் வசதி குன்றும் பின்பு மழையைக் காண்பதே அரிதாகிவிடும். இன்று திருச் செங்கோடும் இந்நிலையைத்தான் அடைந் துள்ளது. இப்படியே நீடிக்குமானால் சுற்றுப்புறங்களில் பாலை நிலம் உண்டாக வாய்ப்பு ஏற்படும்.

உதாரணமாக, ராஜஸ்தான் என்ற ஒரு மாநிலம் வட இந்தியாவில் உள்ளது. இதன் பெரும்பாலான நிலப்பரப்பு மழை நிழல் பகுதியாகும். இங்கு ஆண்டு தோறும் பெய்யும் மழை மிகக் குறைவு. ஆயினும் இயற்கையின் கருணையால் நல்லதொரு காடு. இதிகாசக் காலங்களில் அப்பகுதி களில் இருந்திருக்கின்றது. அங்குள்ள தாவரங்களை மனிதன் வெட்ட ஆரம்பித் தான். மழை பொய்த்தது. அதன் விளை வாக ஒரு பாலைவனமே உருவாகி விட்டது. அதைச் சீரமைக்க இப்போது அரசாங்கம் பெரும் முயற்சிகள் செய்து வருகின்றது. இது நடந்தது காட்டின் நன்மைகளைப்பற்றி அறியாத அக்காலத்தில். இப்போது அது போல நல்ல இடங்களைப் பாலையாக்குவது மிகவும் வருந்தத் தக்கது.

இதே போல காட்டினால் நாட்டிற்கு ஏற் படும் நன்மைகள் எண்ணற்றவையாகும். சில பின்வருமாறு, காட்டினால் ஏற்படும் நன்மைகளை இரண்டு பகுதிகளாகப் பிரிக்க லாம். ஒன்று நேர்முகமாகக் கொடுக்கும் நன்மைகள், இரண்டாவது மறைமுகமாகக் கொடுக்கும் நன்மைகள். இவைகளில் பின் னதை முன்னாலேயே கண்டோம் அதாவது மழை கொணர்தல், பருவ நிலையைத் தவ றாது காத்தல். அடுத்து பனியைத் தண்ணீ ராக்கித் துளிகளாக ஆக்கிப் பயிர்களுக்கு வழங்குதல் முதலியவையாகும்.

நேர் முகமாக தரும் பயன்கள் எரி பொருளும், மரச் சாமான்களும் வயலைச் செழுமையாக்க வேண்டிய தழை உரமும் ஆகும். மற்றும் விவசாயத்திற்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் காட்டில் வளரும் மரங்களிலிருந்தே கிடைக்கின்றன. கால் நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாகக் காடு பயன்படுகின்றது. நல்ல காடு உண்டானால் நல்ல வேட்டைக்கு இருப்பிடமாகும். அருகே உள்ள சுனைகளில் மீன் பிடிக்கலாம். குடிசைத் தொழிலுக்காக உபயோகிக்கப் படும் மூங்கில்கள், பட்டைகள், பிரம்புகள் வேர்கள், தேன், மெழுகு, அரக்கு, பழங்கள் போன்றவை காடுகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன, முக்கிய மூலிகையின் நிறைவினால் அண்டையிடங்களில் நோயற்ற நல்லதொரு சூழ் நிலையும் ஏற்படும். மக்கள் நலமே வாழ வழி அமையும், அகில், சந்த னம் முதலிய வாசனைப் பொருள்கள் பெரி தும் காடுகளிலிருந்தே கிடைக்கின்றன. தீப் பெட்டித்தொழிலுக்கானவையும்கிடைக்கும். ஒட்டுப்பலகையினால் நவநாகரிகப் புதுமை யான பல பொருள்களும் செய்யப்படுகின் றன. அவைகள் யாவும் காடுகள் உதவும் மரங்களைக் கொண்டே செய்யப்படுகின்றன.

இத்தகைய உயரிய நோக்கத்தோடு இறைவனால் அருளப்பட்ட ஒரு அரிய செல் வம் காடு. அதை முறையாகப் பாதுகாத்து அதனால் வரும் நன்மைகளை அடைவது நமது கடமையாகும். இதுவரை காட்டின் மகத்துவம் தெரியாமல் அதன் அழிவையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வந் திருப்பினும் இனியும் காலம் கடந்து விடவில்லை. இனிமேலாகிலும் காட்டிற்கு அழிவைத் தேடாமல் வளர்க்க முன் வர வேண்டும். வெற்றிடமாகக் கிடக்கும் நிலங் கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்திற்குச் சொந்த மாக இருந்தாலும் சரி, அல்லது தேவஸ் தானத்திற்குச் சொந்தமானதாக இருப் பினும் சரி. அந்நிலங்களில் மரங்களும்

செடிகளும் பயிர் செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நம் ஊரை எடுத்துக்கொண்டால் நமது குன்றும் அதைச் சுற்றி உள்ள இடங்களும் மற்றும் சிறுசிறு காடுகளும் காடுகளும் சோலைகளைத் தாங்கி நிற்கச் செய்ய வேண்டும். இவ் வேலையில் ஊராண்மைக் கழகமும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு இதன் முக்கியத்துவங்களைப் பற்றி அறிவுறுத்துதல் வேண்டும். பள்ளி மாணவர்களும் மற்றும் ஊர்மக்களும் இவ்வேலைகளை மேற்கொள்ளச் செய்யலாம். எல்லா இடங்களிலும் ஒரே மூச்சில் செய்து முடித்தல் முடியாத காரியமாகும். சிறிது சிறிதாக 20 ஆண்டு அல்லது 30 ஆண்டுகளில் பெரும் காட்டைச் சுற்றுப்புறங்களில் உண்டாக்கலாம். இது முடியுமா? பலன் தருமா? என்ற எண்ணங்கள் எல்லோரிடையேயும் எழும். அவற்றிற்கு எண்ணற்ற மேற்கோள்களைக் கொடுக்கலாம்.

திருச்சிக்கு அருகே சுமார் 500 ஏகர்களில் இருந்த காடு வெகுநாட்களுக்கு முன் அழிக்கப் பட்டது. மழை அற்றுப்போயிற்று. பின்பு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் அவ்வைந்நூறு ஏகர்களும் காடாக்கப்பட்டன. அற்றுப்போன மழை நன்ருகப்பெய்ய தொடங்கியது. இதே போல ஹைதராபாத்தில் செம்மண் மேடுகள் மரங்களற்றுப் போய், காற்றடித்தால் செம்மண்ணை வாரி வாரி இறைத்தன. பத்து ஆண்டுகளுக்கு முன் அவ்விடங்களைக் காடாக்கத தொடங்கினர்கள். அவ்வரசாங்கத்தினர். அதன் பலனுகத் தண்ணீரின் வசதி பெருகி அண்டைக் கிராமங்கள் பயனடைந்தன. சிறிது சிறிதாகப் பட்சிகள் குடியேறின. இப்போது மிருகங்களும் அங்கே வாழ ஆரம்பித்துள்ளன. பரப்பா என்ற ஒரு இடம் காடுண்டாக்கப்பட்ட காரணத்தால் பனித்துளி நீரிஞல் மட்டும் பெருமளவு பயனடைந்துள்ளது. இமயமலைச் சாரல்களில், சரிந்து விழும் நிலப்பகுதிகள் நல்ல காடுகள் உண்டாக்கப்பட்டு அரிப்புக்கள் நிறுத்தப் பட்டுள்ளன. முசவுரி, நைனிடால் பகுதிகளில் காட்டின் உதவி கொண்டு மழைக் காலங்களில் பெருக்கெடுக்கும் வெள்ளங்களைக் கட்டுப் படுத்தியுள்ளனர். காடு உண்டாக்கும் மேற்கண்ட வேலைகளைக் கண்ணுறும்போது ஏன் நம்மூரிலும் இது போன்ற வேலைகளைச் செய்து பலன் அடையக் கூடாது என்று தோன்றுகின்றது.

காட்டிஞல் மேற்கண்ட பலன்களுடன் இன்னும் எவ்வளவோ கண்ணுக்கும் மனதுக்கும் களிப்பைக் கொடுக்கும் இயற்கைக் காட்சிகள் நிறைய அடையலாம். மலைகளில் நீர்வீழ்ச்சிகளைக் கண்டு மகிழலாம்.

நமது நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக வன மகோத்சவம் என்று ஒன்றை நடைமுறையில் கொண்டு வந்துள்ளனர். அதில் பொதுமக்கள் பெரும் பங்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இது ஒரு நன்மை பயக்கும் நல்லதிட்டம். மேலும் வளப்பகுதிகளை அதிகமாக்கவேண்டி வனப் பண்ணை என்ற திட்டம் ஒன்றையும், அரசாங்கம் ஒவ்வொரு வட்டார வளர்ச்சிக் கழகம் தோறும் நடைமுறையில் கொண்டு வந்துள்ளது. அதற்கும் மக்கள் பெரும் ஆதரவுகளைக் கொடுப்பதுடன் பலன் உண்டாகச் செய்ய வேண்டும்.

நம் ஊரைப் பொறுத்த வரையில் குன்றில் வளரும் செடிகளை எவ்விதத்திலும் அழிக்க விடாமல் மக்களைக் கட்டுப்படுத்துதல் வேண்டும். நல்ல காட்டை உண்டாக்குதல் வேண்டும். கூடுமான வரையில் தூர்ந்துபோன நீர்த்தேக்கங்கள் ஆகியவைகள் தோண்டப்படுதல் வேண்டும். அப்போதுதான் நல்ல மழை கிடைக்கும். ஊரும் நல்ல காட்சி அளிக்கும். இது உடனடியாக ஊராண்மைக்கழகம் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய செயலாகும்.

ஆகவே, காடும் நாடும் இணைபிரியாதவைகளாகும், முன்னது குன்றின் பின்னது தானுகக் குன்றும். இது இயற்கையின் விதி. அதைப் பாதுகாக்க ஊர் மக்கள் பெரிதும் பாடுபடுதல் வேண்டும்.

காடுகள் தேய்விலாத திருவின் இருப்பிடம். தோண்டத் தோண்டக் கொடுக்கும் பாத்திரம். அதன் பாதுகாப்பின் மூலம் ஊருக்கு நல்லது செய்ய இப்பொன்விழா நாளில் காடு வளர்ப்போம்! ஊர் வளம் பெருக்குவோம்! என்ற உறுதிமொழியை எடுத்துக் கொண்டு ஆவன செய்வோமாக!

# யார் ஞானி?

E.S. ரத்தினம்

"கைகால் நுடங்கியும் கண் பஞ்சடைந்தும் ஈ, காகம் கொத்த
மெய்தான் அழுகியும் மாள்வோரைக் கண்டு........."

ஆம் நாமெல்லாம் போற்றிப் புகழும் மனித உடலின் அந்திம கட்டத்தைச் சித்திரிக்கும் பாட்டின் சிரிய அடிகள். தென்றல் சுமந்து வந்து செவிக்கு ஞான விருந்தளிக்கின்றது. ஆனால் எங்கிருந்து வருகிறது?

கரையோரம். நதியின் கரையோரம். நுங்கும் நுரையுமாகப் பதுங்கிப் பதுங்கி நெளிந்து சுழிந்தோடும் நீரின் கரையோரம். ஓங்கி வளர்ந்த மரக்கூட்டம். அவற்றை இறுக்கித் தழுவி அணைக்கும் நீள் பசுங் கொடிகள். இத்தகைய பச்சைச் சூழ்நிலையில் வண்ண வண்ணப் புள்ளினங்கள் வஞ்சமிலாக் குரல்களில் பாடிக்களிக்கின்றன:

"சித்தத்திலே சிவம் நாடுவார்—இங்கு
சேர்ந்து களித்துலகாளுவார்."

பறவைகளுக்குங் கூட ஞானமா?

இந்த நதியைப்போல் நாமும் ஏன் வாழக் கூடாது? எதையும் எதிர்ப்பதில்லை. யாரிடமும் எதையும் எதிர்பார்ப்பதுமில்லை. கீதையில் கண்ணன் அருளியவாறு, 'நிஷ்காம்யமாய்' சேவை செய்கிறது. தன்னிடத்து வருவன யாவற்றையும் ஏற்றுக்கொள்ளுகிறது, நல்லன தீயன தெரியாத நிலை. என்றும் தாழ்மையாகத் தாழ்வான இடத்தையே தன் பாதையாகக் கொண்டு எப்போதும் சுறுசுறுப்பாக ஓட்டம் ஒன்றே தன் கடமையென்ற உணர்ச்சியோடு ஓடிக்கொண்டேயிருக்கிறது ஓய்வின்றி. மக்களின் இகழ்ச்சி புகழ்ச்சிகளுக்குச் செவி சாய்ப்பதில்லை. வேண்டுவோர் வேண்டியபடி தன்னைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கிறது. சிறுமீனின் வெள்ளித் துள்ளலையும் சீறும் புயலின் கொடூரக் கர்ஜனையையும் ஒன்றாக எண்ணும் உள்ளம் படைத்தது. தன் போக்கைத் தடுத்துக் கரைபோடும் மனிதனுக்கும் தன்னையே அர்ப்பணித்து அவன் வயலை, ஏன் வாழ்வையே வளமாக்குகிறது. சுத்த அசுத்தங்கள் இதற்குக் கிடையாது. ஒருவரிடமும் பறைசாற்றாமல் அடக்கமாக ஞான வாழ்வு வாழ்கிறது. இதனிடத்துக்காணும் பேருண்மைகளை அறவுரைகளாகக் கொண்டு மனிதன் என்றேனும் வாழ முயற்சிப்பானா?

இத்தகைய இயற்கைச் சூழ்நிலையில் இயற்கையும் செயற்கையும் சேர்ந்து உருவாக்கிய ஒரு சின்னஞ்சிறு குடில். முற்றுந் துறந்த ஒருவன் வாழ்கின்ற இடம்போல் தெரிகிறது. அதைச் சாலை—பர்ணசாலை என்றும் கூறலாம். விட்டமில்லை, சட்டமில்லை, மரங்களினூடே படரும் கொடிகளின் துணை கொண்டு நாணப்புற்களால் மூடப்பட்ட கூரையைக் கொண்டது. அதுவும் திட்டமாய் வேயப்பட்டதல்ல. அக்கறையின்றி இங்கொன்றும் அங்கொன்றுமாய்ப் போட்டு வேயப்பட்டிருந்தது. அழியா வீடுபெறத் தவம்புரியும் மாமகன் அழியும் வீட்டிலா சிந்தையைச் செலுத்தி வாழ்வான்?

'கைகால் நுடங்கியும் கண் பஞ்சடைந்தும்......! ஆம். அதே பாட்டுத்தான். இச்

சிறு குடிலுக்கிள்ளிருந்துதான் வெளிவருகிறது. மெய்மறந்து பாடிக் கொண்டிருக்கிறான். பசும்பொன் மேனி. களையான முகம். அருள் பூத்த கண்கள். காவியுடுக்கவில்லை. உடையைக் காவியாக்காது உள்ளத்தைத்தான் காவியாக்க வேண்டுமென்ற கருத்துச் செறிந்த செம்மல். தாழ்சடை கூட விரிக்கவில்லையே! உடல் துறவியல்ல உள்ளத் துறவி. மெய்ஞான உதயம் கொண்டிருந்தான். தன்னைமறந்த நிலையிலே 'உள்ளத்தே உண்டகள்ளால் உண்டான களியிலே' ஆனந்தாதிசய வெறி மூண்டவன். விருப்ப வெறுப்பற்ற நிலை. கட்டான உடல். உடலைப்போல் உள்ளமும் அவ்வாறே. இது அவனுடைய இன்றைய நிலை.

இனி, பழங்கதையைப் பார்ப்போம். "உனக்கு மரண தண்டனை விதித்திருக்கிறேன்" மன்னன் மருத பாண்டியனின் நெஞ்சில் உதித்த சொற்கள் நாவில் ஆணையாக அரசவையெல்லாம் நடுங்க ஒலித்தது.

நெஞ்சில் வைரம். சொல்லில் உரம். தெய்வம் காக்கும் என்ற தளராத தன்னம்பிக்கை. இவற்றையே உறுதுணையாகக் கொண்டு மன்னனின் மன்றத்தில் அடங்கி ஒடுங்கி, பயத்தால் அல்ல மரியாதையால், ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. மென்மையான பெண்மை உருவம்தான் அது. அரண்மனைப் பணிப் பெண்களில் ஒருத்திதான் அவள்.

"காத்து ரட்சிக்கும் கருணைக்காவலா! பெருங்கருணைகூர்ந்து என்னை மன்னித்தால் தகாதா?" பணிப் பெண்ணுக்கு என்ன துணிச்சல். அரசனையா கேட்கிறாள்?

"சற்றும் அச்சமின்றி மன்னனின் ஆணைக்கு மாற்றுத் தேடும் இவளைச் சித்திரவதை செய்யுங்கள். பின் மரண தண்டனை விதிக்கலாம்." கோபக்கனலைக் கொப்பளித்தான் மன்னவன்.

மண்பதை காக்கும் மன்னவா! உலகில் பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு என்பதை நான் நன்கறிவேன், குணங்களின் குரூரச் செயல்களுக்கு இரையாகி மனிதன் வாழ்ந்தும் வாழாதவனாய் மாண்டொழிகிறான். ஒருவன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முடிவல்ல. காலத்தை எப்படி வாழ்ந்தான் என்பதே முடிவு. சாவுக்காக நான் அஞ்சவில்லை. சிறு பிழை பொறுக்கும் தகைமையின்றி ஒரு பணிப் பெண்ணைச் சிரச்சேதம் செய்தனன் ஒரு நாட்டின் காவலன் என்ற பழிச்சொல் தங்களைச் சூழும் என்பது குறித்து என் நெஞ்சம் கலங்குகிறது. இதுபரியந்தம் என் வாழ்வை உங்கள் அரணில் இனிதே கழித்தேன். கடமையில் குன்றாமணியாய் என் கடமையை வழுவாது செய்து வந்தேன். காலத்தின் சோதனையோ, விதியின் வலிமையோ என்னைத் தவறச் செய்து விட்டது. மன்னனே மக்கள் உயிரின் அமுதசுரபி. மீண்டும் கெஞ்சுகிறேன் மன்னவா! எளியவளைக் காக்க வேண்டுகிறேன்."

இவள் செய்த குற்றம்தான் என்ன? அன்று முழுமதி நாள். வட்டமதி தன்னுள்ளே களங்கத்தை ஒளித்து வைத்துக் கொண்டிருந்தாலும் உலகத்திற்குத் தண்ணொளிப் பறவைதானே! வானவெளிப் பயணத்தைத் துவங்கிவிட்டான். அரசன் மருதபாண்டியன் பாராளுமன்றத்தில் காலத்தையும் நேரத்தையும் கணக்கிட்டுப்பாராமல் சில முக்கிய காரியங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது பணிப்பெண் வாசவி இளமையிலேயே தன் தாய்தந்தையரை இழந்தவள். அரச குடும்பத்தின் அரவணைப்பால் தாய்தந்தையர் பிரிவின் சோகத்தையும் மறந்து அரண்மனையில் பணிபுரிந்து வந்தாள். காலை மாலை நீராடுவது. மன்னனின் பூசையறையைப் பெருக்குதல், மெழுகுதல், கோலமிடுதல், நந்தவனப் பூக்களை நானாவித மலர்மாலையாகத்தொடுத்தல், அரசன் தொழும் தெய்வச் சிலைகளை அவற்றைக் கொண்டு அலங்கரித்தல், தூப தீபம் போட்டு அறையை மணமாகவும் ஒளியாகவும் வைத்திருத்தல், மன்னனின் பள்ளியறையைச் சீர்படுத்திப் பட்டுப்பஞ்சணையின் பேரில் மணமான மல்லிகை மலர்களைப் பரப்புதல், இவையே வாசவியின் அன்றாட வேலை.

அன்று பூசையறைவேலையை முடித்துக் கொண்டு, பள்ளியறைக்குச் சென்றாள். கடைசி வேலையாக அரச குடும்பத்தினர்

மஞ்சத்தைச் சீர்படுத்தும் பணியைத் தொடங்கினாள் பணிப்பெண் வாசவி. தந்தக் கட்டில், பஞ்சு மெத்தைகள், பட்டுத் தலையணைகள், ரம்மியமான விரிப்புக்கள், ஒவ்வொன்றாக எடுத்து முறைப்படி படுக்கையைச் சீராக்கினாள். கடைசியாக வாசனைத் திரவியக் கலவையைத் தெளித்து நல் மல்லிகை மலர்களைப் படுக்கையில் தூவினாள். சாளரத்தைத் திறந்து வைத்தாள். பட்டொளி வீசி வானில் பவனி வரும் சந்திரிகை அரசனின் பள்ளியறைச் சாளரத்தின் வழியே எட்டிப் பார்த்தாள். இன்று மன்னனுக்குப் பாராளு மன்றத்தில் அதிக காரியங்களுண்டு. மாளிகை திரும்ப நேரமாகும். சற்றே அந்தப் பஞ்சணையில் படுத்துப் பார்த்தால் என்ன? வாசவிக்கு இத்தகைய எண்ணம் வந்தது. எண்ணம் முறுகிச் செயல்படத் தொடங்கியது. வட்ட மதியைப் பார்த்த வண்ணம் சற்றே படுத்தாள். செயற்கை மணமும் இயற்கை எழிலுமாகச் சேர்ந்து அனந்தலின் அலைப்புக்குப் பாத்திரமானாள்.

உழைப்பின் அயர்ச்சியால் களைத்துச் சோர்ந்த மன்னன் தன் மனைவி மக்களுடன் பள்ளியறைக்கு வந்தான். தன் கண்களைத் தன்னால் நம்ப முடியவில்லை. என்ன இது? பணிப்பெண்ணுக்கு இவ்வளவு ஆணவமா? "யாரது அங்கே? இவளை விலங்கிட்டு இழுத்துச் சென்று சிறைப்படுத்துங்கள். விடிந்ததும் நீதி மன்றத்திற்குக் கொண்டு வந்து நிறுத்துங்கள்?" இதுதான் வாசவி முன்னிரவு செய்த தவறு.

'தன்னுளே திரைத் தெழும் தரங்க
வெண்தடம் தடங்கள்

தன்னுளே திரைத்தெழுந்தடங்குகின்ற
தன்மைபோல்'

"அறியாமையால் எளியவள் செய்த குற்றத்தை மன்னித்து, தாங்கள் ஒங்கு சினம்காத்து என்னை உய்விக்க வேண்டும். எத்தனையோ போர்க்களங்களில் வெஞ்சமர் புரிந்து எதிரிகளைப் புறங்காட்டச் செய்து வெற்றி வாகை சூழ வந்திருக்கிறீர்கள். ஆனால் புற எதிரிகளை வெல்லுவது மாத்திரம் உண்மையான வெற்றியல்ல. அகத்தேயுள்ள எதிரிகளை வெல்லவேண்டும். அரசன் வீரனாயிருக்க வேண்டும். ஆனால் போக்கிரியாய்விடக் கூடாது. சினம் சீரழிக்கும். அது முதலில் தன்னைச் சுட்டுவிட்டுத்தான் பின் பிறரைச் சுடச் செல்லுகிறது. சினத்தால் அறிவு மயங்குகிறது. அதனால் விளையும் விபரீதங்கள் ஏராளம்."

"நிறுத்து உன் உபதேசத்தை, கண்கள் கனல்கக்கக் கர்ஜிக்கிறான் காவலன். இவளை முக்கோணத்தில் கட்டிக் கசையடி கொடுங்கள். பெண் பாவம் வந்தாலும் வரட்டும். ஆணவத்தாலும் அகங்காரத்தாலும் தலை விரித்தாடுகின்றாள். அரண்மனைச் சோறு இவளை அகங்காரியாக்கி விட்டது."

பளீர். பளீர். "ஐயோ! தாங்க முடியவில்லையே. இருப்பினும் ஒன்றுகேள் கொற்றவா! என் உடலைத்தான் நீ அடிக்கின்றாய். உள்ளத்தை அடிக்க உன்னால் கூடுமோ? 'மணிவெளுக்கச் சாணையுண்டு. உன் மனம் வெளுக்க மாற்றில்லையா!' சுடு சொற்கள், காய்ச்சிய ஈயம்போல் மன்னன் காதுகளில் நுழைந்தன. வெஞ்சினத்தால் வெகுண்டான. கலக்கமுற்றான். நெஞ்சில் அனல் கொண்டான். மெய் வெயர்த்தான். குமுறினான். "அடியுங்கள் அடியுங்கள் கூடுமட்டும் அடியுங்கள். ஆவி கூடுவிட்டுப் பிரியும்வரை அடியுங்கள்."

பளீர். பளீர். பளீர். ரத்தம் சொட்டுகிறது. ஹிஹிஹி. ஹிஹிஹி. அஹ்ஹஹ்ஹா பணிப்பெண் சிரிக்கிறாள். என்ன விந்தை! அதோ, மேலும் - ஹிஹிஹி - சிரிக்கிறாளே!! துன்பத்திலும் கேளிக்கையா?

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா-
நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா!

வாசவியா பாடுகிறாள். ஆம். அவளேதான். எப்படியோ முற்கால வாசவி பிற்கால பாரதி பாட்டைத்தான் பாடுகிறாள்.

"இவளுக்குப் பித்தேறியிருக்கிறது. சூர் கொலாம் தீண்டி விட்டது. ரத்தம் பீறிட அடித்தும் சிரித்துப் பாடுகின்றாளே! உம்.

நிறுத்தாது அடித்துப் பிய்த்துப் பருந்துக்கு இரையிடுங்கள் இவளை!''

அம்மம்மா, ஹிஹிஹி என்ன இது! மீண்டும் மீண்டும் பேய்ச் சிரிப்பல்லவா சிரிக்கிறாள். சற்றே நிதானியுங்கள். ''ஏ பேதைப் பெண்ணே! இவ்வளவு துன்பத்திலும் நீ இடைவிடாது சிரிப்பதன் காரணமென்ன?''

''காரணமா கேட்கிறாய், காவலா? நன்று கேட்டாய்! கூறுகிறேன். கூர்ந்து கேள். அலையில்லாக் கடலும் அல்லல் இல்லா ஆன்மாவும் இவ்வுலகில் இல்லை. அலையில்லாவிட்டால் அது கடலாகாது. அல்லல் இல்லாவிட்டால் ஆன்ம முன்னேற்றம் கிட்டாது. உனக்கு நேரப்போகும் துன்பத்தை எண்ணிப் பார்த்தால் என் துன்பம் எனக்குத் துன்பமாகப் படவில்லை. ஒருசில மணி நேரம் உன் பஞ்சணை மஞ்சத்தில் உறங்கியதற்கு எனக்கு இவ்வளவு தண்டனை கிடைத்தால் நாள்தோறும் பல மணி நேரம் ஆயுளெல்லாம் மனைவி மக்களுடன் கூடி உறங்கும் உனக்கு எவ்வளவு தண்டனை கிடைக்கும் என்பதை நினைக்கும்போது எனக்கு ஆறுதலாயிருக்கிறது. திருப்தியுடன்தான் சிரிக்கிறேன். தவறொன்றுமில்லையே!''

மன்னனின் மனம் சூறுவளியாகச் சுழன்றது. பின் தெளிவு பிறந்தது. சோகத்தின் விளைவா? உருக்கத்தின் உணர்வா? ஒன்றும் புரியவில்லையே! ''வாசவி! என் அகக்கண் திறந்த அருள் தெய்வம் நீ. அரண்மனைத் தாதியல்ல.''

'சேற்றிலே தாமரையும் சிறுடைமீன்
வயிற்றில்
போற்றும் ஒளி முத்தும் புறப்படுதல்
கேட்டிலீரோ.''

எனப் பாடிக்கொண்டே மன்னன் அரச போகங்களைத் துறந்த ஆண்டியானான்.

துன்பத்திலே இன்பங்கண்ட வாசவி ஞானியா? இன்பங்களைத் துறந்து ஆண்டியான மருதபாண்டியன் ஞானியா?

'எத்திசையின் எம்மொழியில் எவர்
வாய்ச் சொல்லில்
எப்படியாய் வருங்கதைகள் எதுவானாலும்
சத்தியத்தின் வழிகாட்டும் அதிவை
யெல்லாம்
தனதாக்கிக் கலைவளர்த்தல் தமிழன்
பண்பாம்.'

★ ★ ★

தர்மசக்கரம்.

பெரிய கப்பல் ஒன்றைச் சுக்கான் என்னும் சிறிய கருவியால் எந்த திசையிலும் செலுத்தலாம். அதுபோல நாவடக்கத்தின் மூலம் நமது வாழ்வை எப்படி வேண்டுமானாலும் திருப்பலாம்.

★

நாம் செய்யும் செயல்கள் எவையும் தன்னளவில் நல்லதும் கெட்டதும் ஆவதில்லை. செய்கிறவன் கொண்டுள்ள நோக்கத்துக்கு ஏற்பவே அவை நல்லவையென்றும், கெட்டவையென்றும் மாறுகின்றன.

★

உன் மகன் உனக்கு எம்முறையில் பணிவிடை செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ, அம்முறையில் நீ உன் தந்தைக்குப் பணிவிடை செய்.



# கூட்டுறவுத்துறையில் பெருந்தொழில்கள்

K. A. காசிவிஸ்வநாத முதலியார்

உபதலைவர்: தமிழ்நாடு (சென்னை இராஜ்ய) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், சென்னை.

ஆசிய நாடுகளில், நம்நாடு கூட்டுறவுத் துறையில் முன்னணியில் நிற்கிறதென்பதை அறிவோம். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கம் பல துறைகளில் வளர்ந்து மக்களுக்குப் பணியாற்றி வருகிறதென்பதும், அது மேலும் வளர்ந்து பரவுவதற்குப் பாடுபட வேண்டுமென்பதும் நமது அரசாங்கத்தின் குறிக்கோள்களாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விவசாயிகளின் கடன் பளுவைக் குறைப்பதற்கும், அவர்களுக்குக் குறைந்த வட்டியில் பணம் கிடைப்பதற்கும், சர்க்கார் உதவியுடன் கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்பட்டன. இவைகள் மூலம் விவசாயிகள் குறைந்த வட்டிக்குத் தங்களுக்குத் தேவையான கடனை அவ்வப்பொழுது வாங்க முடிந்ததுடன் தங்களது விளை பொருட்களைச் சேமித்து வைத்திருந்து நல்ல விலைக்கு விற்பதற்குப் பயனுடையதாய் அமைந்தது. மேலும் விவசாயிகளுக்கு உதவியளிக்கும் பொருட்டு கூட்டுறவு மத்திய பாங்கும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், நிறுவப்பட்டன. கூட்டுறவு மத்திய பாங்கி ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கும், விற்பனைச் சங்கங்களுக்கும் கடனுதவி செய்வதன் மூலம் விவசாயிகள் தங்களது உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை நல்ல விலைக்கு விற்பதற்கும் விற்பனைச் சங்கங்கள் பயன்படுகின்றன. பொது ஜனங்களின் நன்மையைக் கருதிக் "கூட்டுறவுப் பண்டக சாலைகளும்", பள்ளி மாணவர்களின் தேவைகளுக்கு "மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை" களும் நிறுவப்பட்டுள்ளன. கரும்பு சாகுபடி செய்வோருக்குச் சர்க்கரை ஆலைகள் மிகவும் பயன்படுகின்றன என்பதை அறிவோம். நமது சர்க்காரும் விவசாயிகளின் நன்மையைக் கருதிக் கரும்பு சாகுபடி செய்யும் பகுதிகளில் பெரும் கரும்பாலைகளை நிறுவி நம் நாட்டுக்குத் தேவையான சர்க்கரையையும், வெளி நாட்டுக்குத் தேவையான ஏற்றுமதிசெய்யத் தேவையான சர்க்கரையையும் உற்பத்தி செய்கிறார்கள் என்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையில் உதவியதுபோலவே நமது அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களின் ஊதியத்தையும், அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த, கைத்தறிகள் அதிகம் உள்ள பகுதிகளில் கைத்தறி உற்பத்தி விற்பனைச் சங்கங்களை நிறுவி, அவர்களது துணிக்கு நல்ல கூலி கிடைக்கவும்,

அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்கவும், தேவையான மூலப் பொருள்களை வாங்கிக் கொடுக்கவும், சென்னையில் ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தோற்றுவித்து உதவி புரிந்து வருகிறது.

இரண்டாவது யுத்த காலத்தின் போதும் அதன் பின்னரும், கைத்தறித் தொழிலுக்குத் தேவையான நூல் போதாத காரணத்தால் நூலின் விலை பல சமயங்களில் மிக உயர்ந்து விட்டது. நெய்வதற்குத் தேவையான நூல் கிடைக்காததால் நெசவாளர் தங்களது தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள் இல்லாமல் சில சமயங்களில் மிகவும் அவதிப்பட்டனர். நூலாலைகளில் பஞ்சு இருப்புக் குறைவாக இருந்த பொழுதும் மழையின்மை காரணமாக மின்வெட்டு ஏற்பட்ட காலங்களிலும் நூலின் விலை அபரிமிதமாக உயர்ந்தது. அதன் காரணமாக நெசவாளர் தாங்கள் தொழில் செய்வதற்கு வேண்டிய நூல் கிடைக்காமல் மிகவும் அவதியுற்றனர்.

நெசவாளர்களின் அவதியைப் போக்குவதற்குத் தேவையான நூல் குறைந்த விலையில் உற்பத்தி செய்து கொடுப்பதற்காகத் தற்பொழுது கூட்டுறவு நூற்பு ஆலைகள் அரசாங்கத்தார் பங்குத் தொகை உதவியுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குகளையும், தனியார் செலுத்திய பங்குகளையும் கொண்டு நிறுவப்பட்ட ஸ்தாபனமாகும். கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஒருவர் எவ்வளவு பங்குத் தொகை செலுத்தினாலும் அவருக்கு ஒரு ஓட்டுத்தான் உண்டு. ஆனால் நூற்பு ஆலைகளில் அவரவர் செலுத்திய மூலதனத்திற்குத் தகுந்தாற்போல் ஓட்டுகள் வித்தியாசப்படும். அவசியத்தை முன்னிட்டுக் கூட்டுறவுத் தத்துவத்திற்குச் சிறிது மாறுபட்டு இருப்பினும் இம்முறை கூட்டுறவு நூற்பு ஆலைகளில் அனுசரிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களே அதிக பங்குகள் எடுக்க வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளதில் தனியார் ஆதிக்கம் மேம்பட்டு நிற்க வழியில்லை.

இந்தியாவிலேயே முதன்முதலாக நம் ராஜ்யத்தில்தான் இத்தகைய நூலாலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு நூற்பு ஆலை 16,000 கதிர்களுடனும் இராமநாதபுரம் ஜில்லாவில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு ஆலையும் நன்கு வேலை செய்து வருகின்றன. இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்குப் புனர் வாழ்வளிக்க நாஸரத் என்ற இடத்தில் ஒரு நூற்பு ஆலை நிறுவப்பட்டு வருகிறது. சேலத்தில் ஒரு நூற்பு ஆலை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்து வருகின்றன. இவைகள் கூடிய சீக்கிரம் யந்திரங்களை நிறுவி வேலை துவங்க முனைந்து விடும். தற்பொழுது திருநெல்வேலி நூற்பு ஆலையில் 20s நூலும், 40s நூலும் உற்பத்தியாகின்றன. இங்கு உற்பத்தியாகும் நூல் குறைந்த விலையில் பிரதம நெசவாளர் சங்கங்களுக்கு விற்கப்படுகின்றன. நமது தமிழ்நாடு அரசாங்கம் மாவட்டம் ஒன்றுக்கு ஒரு நூற்பு ஆலை விதம் நிறுவத் திட்டமிட்டுள்ளது. இவைகள் நிறுவப்பட்டு வேலை செய்யும் காலத்து நெசவாளர்களின் பிரதம சங்கங்களுக்குத் தேவையான நூல் மலிவான விலையில் கிடைப்பதுடன் உயர்ந்த ரக நூலும், வேண்டிய அளவு கிடைக்கும். தமிழ் நாட்டில் கூட்டுறவுத் துறையில் பெருந் தொழில்கள் வெற்றிகரமாக நடந்து வருவதையும், கூட்டுறவுத் துறையில் நம் தமிழ்நாடு முன்னணியில் நிற்பதையும், மற்ற ராஜ்யங்கள் புகழ்ந்து பாராட்டுவதையறிந்து நாம் பெருமைப்படுகின்றோம்.

# நெசவாளர் மத்தியில் கூட்டுறவு

எம். பி. நாச்சிமுத்து. B.A., B.L.,

தலைவர்: தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.
உறுப்பினர்: அகில இந்திய கைத்தறி போர்டு.

பரம்பரையில் வந்துள்ள பல சமூக அமைப்புக்கள் போல இன்றைய கூட்டுறவு அமைப்பும் பொதுமக்களின் ஆதரவில் பிறந்த மக்கள் இயக்கமாகும். மனித சமூகத்தின் பொருளாதார அமைப்பில் அவ்வப்போது எழுந்த இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவும், விடுதலையடையவும், மேம்பாடு பெறவும் ஏற்ற கருவியாய்க் கூட்டுறவு அமைப்பு அன்றும், இன்றும் இருந்து வந்துள்ளது.

உற்பத்தி செய்பவர்களுக்கும், வாங்குபவர்களுக்கும் இடையேயுள்ள தரகர்களின் சுரண்டலை எதிர்த்து, தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முயன்ற முயற்சிகளே முதன்முதலில் தோன்றிய கூட்டுறவுச் சங்கங்களாகும்.

வர்த்தகப் பொருளாதார விரிவாலும், இயந்திரத் தொழில் முன்னேற்றத்தாலும் நெசவு போன்ற குடிசைத் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவித்தனர்.

இங்கிலாந்தில் ராச்டேல் கூட்டுறவு நிறுவனத்தை முதலில் துவக்கிய நெசவாளிகள் தங்களுக்குள்ளேயே கூட்டுறவு முறையில் உற்பத்தி, உழைப்பு, விற்பனை இவை யாவும் நடக்கவல்ல தன்னிறைவுச் சமுதாயங்களை அமைக்கத் திட்டமிட்டது இங்குச் சிறப்பாகக் குறிப்பிடுவதற்குரியதாகும்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்தான் பல வேறு இதர துறைகளிலும் பரவி, இன்றைக்குக் கூட்டுறவு இயக்கம் தழுவாத தொழிலே இல்லையென்ற முறையில் வளர்ந்திருக்கிறது.

ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது - பலர் ஒருமித்துக் கூடிக் காரியங்களைச் செய்வது என்கின்ற மனித இயல்பும் சமூக மரபும், "கூடி வாழ்தலே கோடி நன்மை" என்றதோர் கோட்பாடாக உருவாகிக் கூட்டுறவு இயக்கமாக மலர்ந்தது. கூட்டுறவு என்பது பொருளாதாரத் துறையில் புதிய அமைப்புக்களைக் காண எழுந்த ஓர் இயக்கமட்டுமல்லாது மக்கள் சமூகத்திலே புதியதோர் உறவு முறையையும் புதியதோர் சமுதாயக் கொள்கையையும் நிலைநாட்ட வந்த ஒரு புனித இயக்கமுமாகும்.

நமது பிரதம மந்திரி நேருஜி அவர்கள், "கூட்டுறவுத் தத்துவம் கடன் கொடுப்பதற்காகவும், உற்பத்தியான

பொருள்களை விற்பனை செய்வதற்காகவும் ஏற்பட்ட ஒரு சாதனம் மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை நெறி. கூட்டுறவை நாம் ஒரு வாழ்க்கை நெறியாக ஏற்றுக்கொண்டால்தான் நம் நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதோடு உலகத்திலுள்ள சிக்கல்களுக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும்'' என்று கூறியிருப்பது, இன்றைய உலகில் தலைசிறந்து விளங்கும் சிந்தனையாளர்கள் கூட்டுறவு இயக்கம் குறித்துக் கொண்டிருக்கும் கருத்தின் பிரதிபலிப்பேயாகும்.

நெசவாளர்கள், கூட்டுறவு இயக்கத்தைப் போற்றி வளர்த்து, அதனால் பெரிதும் பயனடைந்து வருவது இயற்கையேயாகும். தனித்தனியே நின்று அவரவர் கருத்திற்கேற்ப அவரவர் கைவண்ணம் காட்டி நெய்து, தனித்தனியே இயங்கி வந்த நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் வந்தபோது அவர்கள் கைவண்ணமும் திறமையும் உற்பத்திச் சக்தியும் அதிகரித்தன. ஒருவன் எவ்வளவுதான் திறமையாக நெய்தாலும் கட்டுப்பாடான ஒரு போட்டியைத் தனித்து நின்று சமாளிக்க இயலாது. எனவேதான் நெசவாளர்கள் ஒன்றுகூடிக் கூட்டுறவின் அடிப்படையில் சங்கம் காண வேண்டியதாயிற்று.

நெசவாளர்களின் திறமையை ஒரு நோக்கில் செயல்படுத்த, ஆலைத்தொழிலுக்கு இணையாகத் தரத்திலும், ரகத்திலும், ஏன் விலையிலுங் கூட, இணையான ஆடைகளை உற்பத்தி செய்து ஆலைகளின் போட்டியைச் சமாளிப்பதன் மூலம் கைத்தறித் தொழிலுக்குள்ள இடர்களையும் இன்னல்களையும் நீக்குவதற்கு ஒரே வழி கூட்டுறவுதான்.

தனிப்பட்டோரிடம் நெய்யும் நெசவாளியை விடக் கூட்டுறவு அமைப்பின் கீழ்ப்பணியாற்றும் நெசவாளிக்கு வசதியும் வாய்ப்பும் அதிகம். நெசவாளர் தம் வாழ்வின் வளமே கூட்டுறவில்தான் அடங்கியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து பணியாற்றினால் ஒரு நெசவாளிக்கு நெய்வதற்கு வேண்டிய நூலும், இதர சலுகைகளும் கிடைக்கின்றன. நெய்த சரக்கை விற்க வேண்டுமே, எங்கெங்கே அலைய வேண்டுமோ என்ற கவலை அவனுக்கில்லை. நெய்த சரக்கைக் கூட்டுறவுச் சங்கம் வாங்கி, நியாய விலைக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்கிறது. நியாயமான கூலியும், தொடர்ந்து வேலை வாய்ப்பும் கூட்டுறவில் சேர்ந்த நெசவாளிக்குக் கிடைக்கின்றன. குடியிருப்பு மனைகள், மற்ற சுகாதார வசதிகள் ஆகியவற்றை அவன் சார்ந்திருக்கும் கூட்டுறவுச் சங்கம் அவனுக்குத் தேடித் தருகிறது.

நம் நாட்டில் 28 லட்சம் தறிகள் உள்ளன. நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தத் தொழிலில் ஒன்றரைச் கோடி மக்கள் ஈடுபட்டுள்ளனர் தனித்தனியே நின்று இவர்கள் செயல்பட்டிருந்தால் இவர்கள் வாழ்வு எப்படியெல்லாமோ சீரழிக்கப்பட்டுப் போயிருக்கும்

ஆனால் அவர்களில் பலர் கூட்டுறவு அமைப்பின் கீழ் நின்று செயலாற்றுவதால்தான் அவர்களுக்காகப் பல்வேறு திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. நெசவாளர்கள் பிரிக்கப்பட்ட மூட்டையிலிருந்து சிதறிப்போகும் நெல்லிக்காய்களைப் போலிருந்தால், நெசவாளர் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் வெற்றிகரமாகச் சமாளிக்க வேண்டுமென்ற நினைப்போ, எண்ணமோ யாருக்கும் இந்த அளவு தோன்றியிராது. ஆனால்

இந்நாட்டின் இருபெரும் தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில், கூட்டுறவு அமைப்பின் கீழ் மாபெரும் சக்தியாக இயங்குவதால்தான் கைத்தறித் தொழிலில் சிக்கலும், நெருக்கடியும் ஏற்பட்ட நேரங்களில் கூட்டுறவாளர்களும், அரசாங்கங்களும் கூட்டுறவு நெசவாளர்கள் நிலையைச் சீராக்க விரைந்து முன் வருகின்றனர்.

தமிழ் நாட்டில் உள்ள 4.66 லட்சம் கைத்தறிகளில் ஏறக்குறைய 2.14 லட்சம் தறிகள் கூட்டுறவின் கீழ்ச்செயல்பட்டு வருகின்றன. ஏறக்குறைய ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரதம நெசவாளர் சங்கங்களை இணைத்து, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாட்டில் நெசவாளர்களுக்காக மாபெரும் தலைச் சங்கமாக கடந்த 26 ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.


இத்தலைமைச் சங்கம், நெசவாளர்களுக்காக மூன்று முக்கிய பணிகளை ஆற்றி வருகிறது. அவை, இணைக்கப்பட்ட பிரதம சங்கங்களுக்குத் தேவையான நூல், சாயம், இதர கச்சாப் பொருள்களை வாங்கி, நியாய விலைக்கு விநியோகித்தல்; பிரதம சங்கங்களில் உற்பத்தியாகும் சரக்குகளின் தரத்தைக் கண்காணித்தல்; பிரதம சங்கங்களில் உற்பத்தியாகும் சரக்குகளை வாங்கி, விற்பனைக்கு வழிவகை செய்தல் ஆகியவையே.

மேற்கூறிய மூன்று அலுவல்களையும் திறம்படச் செய்வதன் மூலம் தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு இத்தலைமைச் சங்கம் நல்வாழ்வு அளித்து வருகிறது.

இதுவுமல்லாமல் சாயத் தொழிற்சாலைகள், நெசவுத் தொழிற்சாலைகள், கூட்டுறவு நெசவுக் கேந்திரங்கள், நூல், துணி பதனிடும் சாலை ஆகியவற்றைக் கூட்டுறவின் கீழ் பணியாற்றும் நெசவாளர்களுக்காக இச்சங்கம் நிறுவியுள்ளது.

எல்லாவற்றையும் விட, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்லரக நூல் குறைந்த நியாயமான விலையில் கிடைக்க வகை செய்ய திருநெல்வேலி பேட்டையில் 16,000 கதிர்கள் கொண்ட தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையை நிறுவியுள்ளது. ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு கூட்டுறவு நூற்பாலையும் இயங்கி வருகிறது. மேலும் 3 கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட இருக்கின்றன. அதோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு நூற்பாலையாவது கூட்டுறவுத் துறையின் கீழ் நிறுவப்பட வேண்டுமென்பதில் அரசாங்கம் மிகவும் அக்கறை காட்டி அதற்கான ஆயத்த வேலைகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறது. இப்படி, கூட்டுறவு நூற்பாலைகள் பெருகுமானால் நெசவாளர்களுக்குத் தேவையான நூல் போதுமான அளவுக்குக் கிடைக்க வழி ஏற்படும். அதனால் நெசவாளர்களின் நூல் பற்றாக்குறைப் பிரச்னை தீர்ந்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

இப்படிப் பல வழிகளிலும் இந்நாட்டு நெசவாளர்களின் வாழ்வு வளம்பெறக் கூட்டுறவின் மூலம் பணியாற்றப்பட்டு வருகிறது ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும், உழைக்க வேண்டும் என்னும் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் இந்நாட்டு நெசவாளர்கள் மட்டுமின்றி இதர தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களும் பணியாற்றிப் பயன் பெற வேண்டும்.



# காலைப் பொழுது.

வித்துவான் மா. கணபதி,
தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு.

காலை மலர்ந்ததடி — விரைந்தே
கங்குல் மறைந்ததடி
சோலையிற் பைங்கிளியும் — கீச்சிட்டே
துள்ளிப் பறந்ததடி.

தேமலர்ப் பூம்பொழில்வாய் — அன்னமும்
சேர்ந்து குலாவுதடி
மாமணிப் பொய்கைதனில் — வண்டினம்
வந்து உலாவுதடி.

வெள்ளை வெளேரெனவே — கிழக்கும்
வெண்ணிறங் கொண்டதடி
கள்ளவிழ் தாமரையும் — ஞாயிற்றைக்
காணவே விண்டதடி.

பொங்கிடும் செங்கதிர்கள் — எங்கணும்
பொன்னொளி பூத்ததடி
கொங்கலர் பைங்குமுதம் — குவிந்துதன்
கோலத்தை நீத்ததடி.

கோயில் மணியோசை — விழித்தெழக்
கூவி யழைக்குதடி
நாயகன் சேவடியைத் — தொழுதால்
நன்மை தழைக்குமடி.

## திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

**No. S. 523, திருச்செங்கோடு.**

### எங்களிடம்

நவீன டிசைன்களில் தயாராகும் கோட்டிங் & சர்ட்டிங் பீஸ்கள், $20^s$, $30^s$, & $40^s$ வேஷ்டிகள், காடா பீஸ்கள், கண்கவர் வனப்புமிக்க கைத்தறிச் சீட்டி இரகங்கள், கைத்தறி வாயில்கள், 6, 7, 8 கெஜங்களில் சுங்குடிச் சேலைகள், துண்டு ரகங்கள், பெட்சீட்கள், ஆகியவை கிடைக்கும்.

எங்கள் சங்கத்தின் சரக்குகள் மாநில சங்கத்தின் எல்லா (கோ-ஆப்டெக்ஸ்) விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

**K. A. காசிவிஸ்வநாதன்,**
தலைவர்.

*With the best compliments from:*

**P. M. SUNDARAMOORTHI,**

PREFFERENTIAL DEALERS FOR CROMTON &
G. E. C. MOTORS & ACCESSARIES

★

SARASWATHI NILAYAM,

POST BOX NO. 41.

KOMARAPALAYAM P. O. :: (ERODE S. RY.)

*With the best compliments from:*

**BHARATH PUBLISHERS**

12, FRANCIS JOSEPH STREET,

POST BOX NO. 26. :: MADRAS-1.

S. KRISHNASWAMY NAIDU,
PROPRIETOR.

உ

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

நமது தர்மத்தையும், ஸ்ரீ காமாக்ஷியின் உபாசனையையும் ஸ்ரீ காஞ்சி
காமகோடி பீடாதிபதிகளின் வரலாற்றையும், உபதேசங்களையும்,
விளக்கும் ஒரு **மாதப் பத்திரிகை.**

ஆசிரியர்: **K. பாலசுப்ரமண்ய அய்யர்**, B.A., B.L., M.L.C.

(பிலவஹ மாசிமாத இதழ் முதல் மூன்றும் ஆண்டு ஆரம்பம்)
தர்ம சாஸ்திரம், மத விஷயங்களில் ஆர்வம் ஊட்டக்கூடிய பல ரசமான
கட்டுரைகள் வெளியாகின்றன. தாங்களும் நண்பர்களும் சந்தாதாரர்
களாகச் சேரவேண்டும் என்பது எங்கள் அவா.

ஆபீஸ்: 4, பிரான்ஸிஸ் ஜோசப் தெரு, சென்னை-1.

**வருடச் சந்தா ரூ. 5.**
**தனிப்பிரதி 50 ந.பை.**

H. O. KUMARAMANGALAM. உ

# THE NAGARAJA PRINTING MILLS,

(PROPS: E. SIDDHANATHA MUDALIAR & SONS.)

"JOTHI FABRICS"

HAND LOOM CLOTH CHINTZ MANUFACTURERS, **ERODE.**

எங்களிடம் கண்ணைக்கவரும் பல நவீன டிசைன்களில், பல கலர்களில் சாய உத்திரவாதததுடன் 20s, 30s, 40s நீர் கைத்தறி திடமான துணியில் சொந்த ஆட்களைக்கொண்டு சீட்டி, ஷர்ட்டிங், வாயில், பாடர் சீட்டி, டிப்டாப் சிந்தாமணி, நப்தால் செகப்பு, பிளைன் கலர், வெள்ளை லாங்கிளாத், கலர் லாங்கிளாத் E. S. 1961 திடம் நயம் மல் பீஸ்களும், மேலும் பலரகம் தயார் செய்து வருகிறோம். குறைந்த விலையில் நீடித்த உழைப்பிற்கு "ஜோதி பேப்ரிக்ஸ்" துணியையே கேட்டு வாங்கி உபயோகியுங்கள். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

இப்படிக்கு,

**தி. நாகராஜா பிரிண்டிங் மில்ஸ்,**
**E. சித்தநாத முதலியார் & சன்ஸ்,**
**ஈரோடு.**

## பள்ளிகளுக்கான எங்கள் பாடப் புத்தகங்கள்.

**புதிய ஏழாம் வகுப்புக்கு**

பாலர் கணிதம்:- திரு. கே. ராமச்சந்திரன், B.A., B.T., திரு. டி. சுவாமிநாதன் ,, திரு. வி. வி. ரங்கநாதன், ,,

சிறுவர் அறிவுக்கலை:- திருமதி. என். கௌரி, B.A., L.T., திரு. டி. ஆர். நாகராசன், B.Sc., B.T.,

**புதிய எட்டாம் வகுப்புக்கு**

தமிழ் பூஞ்சோலை:- வித்வான் நா. துரைசாமி, எம். ஏ., வித்வான் ந. வெங்கரனர்.

செல்வி செந்தமிழ் இலக்கணம்:- வித்வான் ந. சுந்தரராசனர். வித்வான் பெ. இராமச்சந்திரன்.

மாணவர் அறிவுக்கலை:- திரு. கே. எஸ். அனந்தகிருஷ்ணன், B.A. B.T. திரு. டி. ஆர் நாகராஜன், B.Sc., B.T.

**தமிழ்த் துணைப் பாடங்கள்**

**புதிய ஆறும் வகுப்புக்கு**

வாழ்வளித்த மூவர்:- புலவர் குழந்தையம்மாள், எம். எல். ஏ.

# தி புக் செண்டர்,

பாட நூல் பதிப்பாளர்கள்,

ராஜ வீதி, :: கோயமுத்தூர் - 1.



# திருச்செங்கோடு கோ-ஆப்ரேடிவ் ஸ்டோர்ஸ் லிமிடெட்,

நெ. எஸ். 642.

வடக்குரத வீதி, திருச்செங்கோடு.

*உயர்ந்த ரகம்!* *குறைந்த விலை!*

எங்களிடம் மிகச்சிறந்த கோடம்பாக்கம், அம்மாப் பேட்டை ஸ்பன் சேலைகள், காஞ்சீபுரம் பட்டுச் சேலைகள், ஜரிகை வேட்டிகள், துண்டுகள், ஹோல்டால் டிரங்க் பெட்டி கள் கிடைக்கும்.

மில் ஜவுளியில் காடா, மல். உயர்ந்த ரக வேஷ்டிகள் வாயில், சீட்டி, சூட்டிங் & சர்ட்டிங் மற்றும் பல கலர்கள் ல டெர்லின் துணிகள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**S.** பச்சையண்ணன், காரியதரிசி.

**M. P. R.** அர்த்தநாரி முதலியார், தலைவர்.

# பள்ளிகளில் இன வேற்றுமை?

சு. வெ. கி. நேதாஜி,
(புதிய பத்தாம் வகுப்பு (அ) பிரிவு.)
பள்ளி மாணவத் தலைவன்,

ஆப்பிரிக்காவிலே நிற வெறி! இங்கே சாதி வெறி! ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளிலே ஏகாதிபத்திய வெறி!

ஆதியிலே இல்லாத சாதி, பாதியிலே வந்து பாதகம் விளைவிப்பதன் காரணத்தை ஆராயாமல் அதை ஒழிக்க நாம் முற்பட வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு நாகரீகத்தின் இமயம் போலும் காட்சியளித்த தமிழ்நாடு, சாதியை வெறுத்தது; பேதம் வளர்வதை மறுத்தது!

'சாதியிரண்டொழிய வேறில்லை' என்றார் ஔவையார். 'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்' என்றார் வள்ளுவர். 'சாதிப் பிரிவினிலே தீ மூட்டுவோம்' என்ற பாம்பாட்டிச் சித்தர் முதல், 'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே, ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்! அலைந்தலைந்து நீர் அழிதல் அழகலவே' என்ற வடலூர் வள்ளலார் வரை, பலர் சாதி ஒழிப்பில் தீவிரங் காட்டினார்கள்.

ஓடும் உதிரத்தில்-வழிந்தொழுகும் கண்ணீரில், தேடிப் பார்த்தாலும் சாதிகள் தெரிவதில்லை, எனப் பாடிய தேசிக விநாயகம் பிள்ளையும், சாதிகள் இல்லையடி பாப்பா.........எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம்; எல்லோரும் இந்திய மக்கள்; எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் விலை; எல்லோரும் இந்நாட்டு மன்னர் எனப் புரட்சி முழக்கமிட்ட பாரதியாரும் சாதியொழிந்த சமத்துவ சமுதாயத்திற்காகச் சேவை செய்தவர்களாம்.

பிறப்பிலே பேதத்தைப் போதிக்காதீர்! சாதிப் பிரிவைத் தோற்றுவிக்காதீர்! எனப் பல அறநூல்கள் கூறுகின்றன. மகான்களெல்லாம் அறிவுரை கூறுகின்றனர்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக் கல்.

என்று தமிழ் மறை கூறுகிறது.

Casts were not determined by birth but by Guna and Karma—என்று பகவத் கீதை பகர்கிறது. அதாவது சாதிகள் பிறப்பால் பெறப்படுவது அல்ல; ஒருவனுடைய பண்பாலும் பணியாலும் உண்டாவது என்று கூறுகிறது.

தொடக்க காலத்தில் சாதிகள் உயர்ந்த நோக்கத்தோடு பிறந்திருக்கலாம். தேசத்தின் தொழில்கள் செம்மையாய் நடைபெற அறிவு புகட்டும் ஆசானை அந்தணனாகவும், மறவுணர்ச்சியை வளர்த்து, மதியாத பிற நாட்டாரைச் செரு முனையில் சந்தித்து, சேனைகள் சிந்தும் குருதி வெள்ளத்தில், நீச்சடிக்கும் மறவரை க்ஷத்திரியராகவும், 'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி பிறவும் தம்போற் செயின்' என்பதற்கு இலக்கானவரை வைசியராகவும், பிற தொழில் செய்வோர் — செய்ய விரும்புவோர் சூத்திரராகவும் பிரித்தார்கள். உயர்ந்த கருத்தில் உதித்த இந்தப் பிரிவு நாளடைவில் இழிந்த — மிகச் சீரழிந்த தன்மையில் சாதிச் சண்டைகள் உண்டாக்குமளவு தரங்கெட்டு விட்டது.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. இச்சாதிகளின் பேயாட்டத்தைக் கண்டு, உள்ளம் நொந்து, உள்ளிரல் [illegible]ந்து இறைவனிடம் முறையிட்டழுகின்றார்.

பிறப்பிலே சாதி, மதத்திலே சாதி,
பேசிடும் மொழியிலே சாதி,
நிறத்திலே சாதி, நாட்டிலே சாதி,
நீதியில் நிறையினில் சாதி,
அறத்திலே சாதி, ஆலயம் சாதி,
அழுகிய பிணத்திலுஞ் சாதி,
புறத்தகம் சாதி நாற்றமே எங்கும்
புங்கவ அழித்தல் நிற்கரிதோ!

ஆகவே தேவையில்லாச் சாதிப் பாகுபாட்டைத் தீர்ப்பதற்கு மனமாற்றம் தேவை. சாதியை ஒழிக்க வேண்டுமெனில் மக்கள்

மனம் மாற வேண்டும். மாந்தரில் உயர்வு தாழ்வு கற்பிப்போர் வேத வித்தகரேயாயினும் சமுதாயம் அவர்களை வரவேற்கக் கூடாது. கலப்பு மணத்தால் சாதியை நிச்சயமாக ஒழிக்கலாம். இரத்தக் கலப்பினால் சுற்ற உணர்ச்சி-சகோதர உணர்ச்சியுண்டாகும். சகோதர உணர்ச்சி தோன்றுதவரை வேற்றுமை உணர்ச்சி இருந்து கொண்டுதானிருக்கும். இந்தியர்களுள்ளே கலப்பு மணம் மிகவும் சக்தியுடையதாயிருக்கும். சமூக, இன அம்சங்களினால் நன்கு இணைக்கப்பட்டிருந்தால் திருமணம் ஒரு சரியான வழியாகும். ஆகவே சாதியை ஒழிக்க உண்மையான வழி கலப்புமணமே. வேறு எதனாலும் சாதி ஒழியாது.

சமுதாய முறைகளிலே தலைசிறந்த மாற்றம் கண்டாக வேண்டும்; சாதியைக் காக்கும் சாதனங்கள் அத்தனையும் ஒழிக்கப்பட வேண்டும். ஆண்டான்—அடிமை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்று பண்டை நாள் தொட்டே பெரியவர்கள் கூறி வந்ததும், 'மாரிதான் சிலரை வரைந்து-பெய்யுமோ? காற்றும் சிலரை நீக்கி வீசுமோ? மாந்தர்கள் சாதிப் பாகுபாடு பார்ப்பது நியாயமா?

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர்கள் அடிமைத் தொழில் செய்யும் சாதியிலே பிறந்து விட்டார் என்பதால் சாதிப் பிரிவுகள் பரவிய நாட்களில் கூட ஒதுக்கிவைத்தது கிடையாது. நந்தனார், திருவள்ளுவர், திருப்பாணாழ்வார் போன்ற பலர் சாதியிலே தாழ்ந்தவர்கள் எனினும் சிறப்பின் சிகரங்களாய்—வழிபடும் தெய்வங்களாய் இன்றும் திகழ்கிறார்கள். ஆனால் இடைக் காலத்திலிருந்து இதுநாள் வரை சாதி வெறி தலைவிரித்தாடியது போல என்றுமிருந்திருக்காது.

சாதிகளை ஒழிக்க ஒவ்வொரு மாணவனும் முன் வர வேண்டும். பணக்காரன்—ஏழை என்ற பாகுபாடுகளைப் பார்க்காது ஒவ்வொருவரும் சகோதர உணர்ச்சியுடன் சாதியை ஒழிக்க முன் வாருங்கள். மாணவ உலகத்தில் இந்தச் சாதி ஒழிப்புக் கருத்து வளர்ந்தால்தான், அது நாட்டில் உள்ள சாதிகளை ஒழிக்க ஏதுவாகும். மாணவர்கள் நான் இந்த சாதி, நீ இந்த சாதி என்று வேறுபடுத்தக் கூடாது. "எல்லாரும் ஓரினம்; எல்லாரும் ஓர் குலம்" என்று ஒவ்வொரு மாணவனும் எண்ண வேண்டும். எண்ணினால் மட்டும் போதாது. செயல் முறைகளிலும் சாதியை ஒழிக்க முற்பட வேண்டும்.

மாணவச் சகோதரர்களே!

சாதிக்கோர் சாவுமணி அடியுங்கள்!!

சாதியை ஒழியுங்கள்!!!

★ ★ ★

"கோபத்தை எப்படி என்னால் அடக்க முடிந்தது?" என்று கேட்டால் அது பயனற்ற கேள்வி. ஒரு பழக்கமாக வைத்துக் கொண்டு அடிக்கடி பயிற்சி செய்வதன் மூலமே அதில் சித்திபெறவேண்டும்.

★

நம் தவறுகளுக்காக நாம் வருந்துவதற்கும், இன்றைய நிலையை விட மேலான, பரிசுத்தமான நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.

—காந்தியார்.

★

சேம நிதி.

ஆபத்துக் காலத்துக்கு உதவிப் பணம் சேமிக்க வேண்டும் என்று ஒருவன் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினானால், அநேகமாய் அதுவே ஓர் ஆபத்துக் காலமாய்த்தான் இருக்கும்.

—எக்ஸ்பேண்டிங் ஸர்க்கிள் மகஸீன்.